சுடர்

திரு.வி.க. மலர்

2081



13821

Aykan

மலர் 11

விலை 40 ந.பை.

தில்லித் தமிழ் சங்கம்

A. & F. HARVEY LTD.,

MADURAI.

•

MANAGING AGENTS

FOR

MADURA MILLS CO., LTD.,

COTTON YARNS OF ALL DESCRIPTION
TYRE CORD WARP SHEET AND OTHER INDUSTRIAL PRODUCTS

PUNALUR PAPER MILLS LTD.,

ALL VARIETIES OF PAPER

THE INDIAN TEXTILE PAPER TUBE CO., LTD.,

ALL TYPES OF PAPER CONES, TUBES, ETC., FOR TEXTILE INDUSTRY
ALL TYPES OF PAPER CONTAINER

FENNER, COCKILL LIMITED.

V-BELTS, TEXTILE RUBBER ACCESSORIES
OIL SEALS 'O' RINGS ETC., ETC.

GEMINI STUDIOS . MOVIELAND . MADRAS - 6.

WHITE

CRYSTAL

SUGAR

from

THIRU AROORAN SUGARS LTD.

VADAPATHIMANGALAM,

(TANJORE DISTRICT)

★

MANAGING AGENTS :

VENKATESA THYAGARAJAN (PRIVATE) LTD.

EXPRESS ESTATES, MOUNT ROAD,

MADRAS - 2.

Phone : 32396 Grams : " NECKLACE "

WITH COMPLIMENTS

FROM

BAPALAL & CO.,

- Diamond Merchants
- Manufacturing Jewellers
- Goldmiths and Silversmiths

★

Foremost in the field for over a half a Centuary
Appointed Valuers of Jewellery by Govt. of India.

Rattan Bazaar, Madras - 3.

சுடர்

சுபகிருது-ஹூ] மலர் 11 [1962

பொருளடக்கம்

சமர்ப்பணம்	... ஆசிரியர்	... 5
வாழ்த்து	... பாரதிதாசன்	... 6
வாழ்வும் படிப்பினையும்	... மயிலை சிவமுத்து	... 8
அமரர் திரு. வி. க.	... கி. வா. ஜகந்நாதன்	... 16
நூலாசிரியர்	... ச. சச்சிதானந்நம் பிள்ளை	... 23
திரு. வி. க.	... 'கல்கி'	... 28
திரு. வி. க. வும் தமிழர் கல்விச் சங்கமும்	... பெ. நா. அப்புஸ்வாமி	... 33
அரிய பெருந்தன்மை	... மு. வரதராசன்	... 39
திரு. வி. க. வின் தமிழ்த் தொண்டு	எஸ். சீனிவாசன்	... 46
தமிழ் முனிவர்	... வே. சாமிநாத சர்மா	... 49
என் நெஞ்சில் நிலைத்தவர்	... நாரண. துரைக்கண்ணன்	... 57
மனமாற்றம்	... சியாமளா ராகவன்	... 65
பாரதிக் கண்ணன்	... நா. வேணுகோபால நாயகர்	71
அத்புத்	... 'தூன்'	... 81
வாழ்க்கை ஒரு யோகம்	... தி. சா. ராஜு	... 89
துறவும் பாசமும்	... எஸ். கிருஷ்ணமூர்த்தி	... 93
திருவிளக்கு	... சொக்கு சுப்பிரமணியன்	... 106
பாசம்	... 'மாயாவி'	... 107
சிரித்ததாம்!	... 'மதி ஒளி'	... 126
ஈழம் வழங்கும் தமிழ்	... கனகசவுந்தரி இளந்திரையன்	127
காகம்	... 'வண்ணை முத்து'	... 134
தூரத்துப் பச்சை	... ராஜம் ராமச்சந்திரன்	... 135
பாரதியின் கவிதை	... எஸ். மைதிலி	... 143
அமரத்வம்!	... மஞ்சேரி எஸ். ஈசுவரன்	... 149
பரதன் ஏந்திய பாதுகை	... ஏ. வி. குப்புஸ்வாமி	... 155
திருமறம்	...பாலூர் கண்ணப்பமுதலியார்	161
எல்லோரா எழில்!	... ஹா. கி. வாலம்	... 182

Edited and Published by Sri T. G. Anantaswami, for *Delhi Tamil Sangam, New Delhi*. Printed by T.N.Veeraraghavan, at *The Thara Press, Nagapattinam*.

Wrapper Printed at *Gnanodayam Press*, Madras-1.

உலகநாதரும் கலியாணசுந்தரனாரும்
இரட்டையர் போலவே வாழ்ந்து வந்தார்கள்.

தாயார் சின்னம்மாள் மூத்தவரை பெரியசாமி என்றும், இளையவரைச் சின்னசாமி என்றும் அருமையுடன் அழைப்பது வழக்கம்... பெரியசாமி குடும்பத் தலைவர் ஆயினும் அவர் சின்னசாமியின் சொல்லைத் தட்டியதே யில்லை.

சமர்ப்பணம்

திரு. வி. கலியாணசுந்தரனுர்

தோற்றம் : *26-8-1883.* மறைவு : *17-9-1953.*

தமிழ் உரைநடைக்கு புதுவழி காட்டித் தந்து,
தமிழ் பத்திரிகை உலகில் புரட்சி செய்த
'ராயப்பேட்டை முனிவர்' மறைந்து
ஒன்பதாண்டுகள் ஆகின்றன.

❖❖❖

அவருடைய நினைவாக
தில்லித் தமிழ்ச் சங்கத்தின் அஞ்சலியாக
இந்த மலர் வெளிவருகிறது.

வாழ்த்து

மலிஇரு பத்தைந் தாண்டாய்
    வண்டமிழ் நாட்டி லேகம்
கலியாண சுந்த ரர்தம்
    தொண்டுகள் கண்டு வந்தேன்
எலி,எனப் புலவர்; வீட்டில்
    இருக்கையில் சுந்த ரர்தாம்
புலிஎன வெளியிற் போந்தார்
    முதன்முதல் அரசியற்கே! (1)

தமிழறி விலாதார் செய்தித்
    தாள்எழு திடுவ தற்கும்,
தமிழுளார் எழுது தற்கும்,
    வேற்றுமை இருந்த தன்மை
தமிழ்நாடு கண்ட தந்நாள்;
    தமிழ்காணுர் மீன்க டைக்குள்
தமிழறி கலியா ணத்தார்
    தமிழேடு முல்லைக் காடே. (2)

துடித்திடு தேச பக்தச்
    செய்தித்தாள் தொடக்கம் செய்தார்,
பிடித்தன ஓட்டம் மற்றைப்
    பெரும்பெருந் தாளக ளெல்லாம்.
படுத்தநம் செந்த மிழ்த்தாய்
    படிசிலம் படிபெ யர்த்தே
எடுத்ததை அந்நாள் கண்டேன்;
    எழிற்கூத்திந் நாள்காண் கின்றேன். (3)

திரு.வி.கலி யாணசுந் தரனரின்
    செந்தமிழ்க்கட் டுரைகள் என்னும்
அருவிகளில் ஆடியநல லறிஞர்களும்
    அறிவுபெற்றார்; இளையசுட்டுக்
குருவிகளும் தமிழ்க்காதல் தலைக்கேறிக்
    குதித்தனவே; பிறசொல் லின்கைக்
கருவிகளும் தனித்தமிழின் கனிச்சுவையைக்
    கண்டுகளித் தனவே யன்றோ? (4)

உணர்வெழுப்ப மெய்ப்பாடும் உடனிசையும்
மொழிச் சுரப்பும் ஒன்ருய்த் தோன்றிக்
கணகணெனக் கவிதையொளி செயும்என்பர்;
அஃதேபோல் மொழி பெயர்ப்பும்
துணைநூலும் இல்லாமே தனிநூல்கள்,
கட்டுரைகள், புணர்ப்பார் தம்மில்
மணவழகர் தமக்குநிகர் மணவழக
ரேஎன்பேன் இந்நூற் ருண்டில்! (5)

காய்ச்சிவைத்த பசும்பாலில் கழுநீரைக்
கலந்ததுபோல் நன்றில் தீதைப்
பாய்ச்சிவைத்துப் பிழைப்பாரும், பாழ்பட்ட
தமிழர்களும் வாழும் நாட்டில்,
பேச்சுவைத்த தோடுகனி பிழிந்துவைத்துச்
சுந்தரர்வாய் பேச வைத்து
மூச்சுவைத்துத் தமிழர்களை முடுக்கியஇத்
தலைமுறையை வாழ்த்து கின்றேன். (6)

புதுவையிலே கலியாண சுந்தரனுர்
ஆற்றியசொற் பொழிவில், தூய
மதுவையள்ளி மலர்தேக்கி வண்டுகட்கு
விருந்தாக்கி மயக்கு தல்போல்
பொதுவினர்க்குச் சிலப்பதிகா ரச்சுவையை
நடையழகைப் புகலும் போதில்
இதுவையா பேச்சென்பேன்; பாரதியார்
கைகொட்டி எழுவார், வீழ்வார். (7)

இத்துயர்கொள் தமிழ்நாட்டில்எனை மகிழச்
செய்தனவாய் இருப்ப வற்றுள்
முத்தமிழ்வாய், உழைப்பாளிக் குழைக்குந்தோள்.
அன்புள்ளம், தமிழெ ழுத்தை
வித்தியுயிர் விளைக்கும்விரல், தமிழருக்கோர்
தீமையெனில் விரைந்தோ டும்கால்,
இத்தனைகொள் கலியாண சுந்தரனுர்
என்றபொதுச் சொத்தும் ஒன்றே (8)

— பாரதிதாசன்

வாழ்வும் படிப்பினையும்

பேராசிரியர் மயிலை. சிவமுத்து அவர்கள்

சென்னை மாணவர் மன்றத் தலைவர் பேராசிரியர் மயிலை. சிவமுத்து அவர்கள் இயற்றிய '**திரு.வி.க. வாழ்வும் படிப்பினையும்**' என்னும் நூலின் ஒரு பகுதி. சென்னை மாணவர் மன்ற இசைவுபெற்று வெளியிடப்பெற்றது.

"ஆறுவது பிள்ளை ஆனை கட்டி வாழ்வான்" என்பர். பெரியார் திரு. வி. க. தம் தந்தைக்கு ஆறுவது குழந்தையாக, 188௩-ஆம் ஆண்டு ஆகஸ்ட் இருபத்தாறும் நாளில் தோன்றினர். அவர் தம் தமையனார் திரு. வி. உலகநாதர் என்பவர் இரண்டாண்டு மூத்தவர் எனினும் தம் தம்பியையே தமையன் போன்று நினைந்து ஒழுகியவர். தமையனாரும் தம்பியாரும் அன்பில் ஒருவரையொருவர் விஞ்சியவராகவே தோன்றினர்கள். எனினும் கருத்தில் மாறுபட்டவராகவே இருந்தார்கள். தமையனர் உலகநாதர் அமைதியே குறிக்கோளாகக் கொண்ட அறிஞர்; பழங்கால பழக்கவழக்கங்களையே போற்றி பாதுகாக்கும் பண்பினர்; சிறுகக் கட்டிப் பெருக வாழ்தல் வேண்டும் என்னும் கோட்பாடுடையவர். நம் பெரியாரோ எதையும் அறிவுக் கண்கொண்டு பகுத்துப் பார்க்கும் பேரறிஞர்; ஏற்றோர்க்கு இல்லையென்னாது ஈயும் இளகிய உள்ளம் வாய்ந்தவர்; "அறிவுடையார் எல்லாம் உடையார்"; என்னும் பண்பிலே இன்புற்று வாழ்ந்தவர். இவ்விதம் இவர்கள் கருத்து வேறுபாடுடையவர்கள்போல் காணப்படினும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் உளப்பான்மை வாய்ந்தவர்கள்.

பெரியார் கலியாணசுந்தரனாரின் வாழ்க்கைநெறி மேடு பள்ளங்கள் நிறைந்தது. அவர்தம் இளம் பருவ வாழ்விலேயே பலப்பல இன்னல்கள் அவரை நிலைகலங்கச் செய்தன. தமக்கு உற்றதுணையாக இருந்தோர்க்கு நேர்ந்த இன்னல்கள், பொருள் முட்டுப்பாடு, உடல்நலக் குறைவு முதலிய பலவும் சேர்ந்து வாழ்க்கை முன்னேற்றத்தைத் தடைசெய்து நிறுத்தின. பெரிய புரட்சி வீரராகத் திகழ வேண்டிய நம்

பெரியார் அவர்களை இத் தகைய இன்னல்களே அவர் தம் முற்போக்குச் சக்தி யினைத் தடுத்துச் சிந்தனைசக்தி யினைத் தூண்டி, அமைதி யான வழியில் புகச் செய் தன. அவர் தம் உயரிய எண் ணங்களெல்லாம் எழிலோவி யங்களாக உள்ளத்தே ஒடுங்கியிருந்து பிற்காலத்தே எழுந்த காவியங்களிலே திகழலாயின.

முதல் வகுப்பிலிருந்து நான்காம் வகுப்பு வரையில் ஒவ்வொரு பாடத்திலும் நம் முதலியார் முதன்மை பெற்றே விளங்கினார். எனி னும், அந்தோ, அவர் தம் எண்ணமெல்லாம் மண்ணில் மறைய, அவருக்கு எதிர்பா ராத வகையில் முடக்குவாத நோய் கண்டது. அந்நோ யினால் நம் பெரியார் இரண்டு ஆண்டுகள் துன்புற்றார் எனில் அப்போது அவர் தம் மனநிலை எவ்வாறிருந்திருக் கும் என்பதை நாமே நினைந்து பார்த்தல் வேண்டும்.

பலப்பல சிகிச்சைகளின் முடிவில் நம் பெரியாரின் உடல் ஒருவாறு நன்னிலை யினை அடைந்தது. ஆதலின் பெற்றோர் அவரை மீண்டும் பள்ளிக்கு அனுப்ப உன்னி னர். அதற்குள் பலப்பல இன்னல்கள் அவர்தம் குடும் பத்தில் தோன்றலாயின. முதலில் அவர் தம் தந்தை யார் விக்குள் நோய் கண்டு பாயில் படுத்தனர். பிறகு அவர் தம் அன்னையார் வயிற்று நோயால் துன்புற்று மருத்துவ நிலையம் அடைந்த னர். இந்நிலையில் பாட்டனார் பரனடி சேர்ந்தனர். இவை கட்கிடையில் மேலும் பலப் பல தொல்லைகள் நேர்ந்தன. இவைகளால் பொருள்முடை நேர்ந்தது. பொருள் முடை யால் தமையனார் கல்வியும் நின்றது. தம்பியாரைக் கவனிப்போர் யாவர்? அவர், தம் மனம் போனவண்ணம் சுற்றித் திரிந்தார். அப் போது அவர், குதிரைப் பந்த யம், மாட்டுப் பந்தயம், சிலம் பப் பயிற்சி முதலியவைகளில் ஈடுபடலானார். தமையனார் ஓர் அச்சு நிலையத்தில் வேலைக் கமர்ந்தார். அவரால் சிறிது ஊதியமும் வந்தது.

பெரியார் திரு. வி. க. அவர்கட்கு சுமார் வயது பதினைந்து இருக்கலாம். அப் போது குடும்பம் சிறிது சீர் பட்டிருந்தது. ஆதலின் அவர் பெற்றோர் அவரை மீண்டும் பள்ளியில் அமர்த்தினர். அவர் அப்போது சென்னை இராயப்பேட்டையில் உள்ள வெஸ்லியன் மிஷன் கல்லூரி யில் நான்காம் வகுப்பில் சேர்ந்து படிக்கத்துவங்கினார். நம் பெரியாருக்கு மீண்டும் ஊக்கம் பிறந்தது. பாடங் களைக் கருத்துடன் கற்று நம் பெரியார் ஒவ்வொரு பகுதியிலும் முதன்மை

பெற்றுத் திகழ்ந்தார். அதனுல் பல பரிசுகளும் பெற்ருர். பாடசாலை நிருவாகிகள் நம் பெரியாரின் அறிவின் திறனை வியந்து அவருக்கு உபகாரச் சம்பளமும் அளித்து வந்தனர். இவ்விதம் அவர் ஒன்பதாம் வகுப்பு வரையில் ஒழுங்குபெறப் படித்துத் தேர்ந்து பத்தாம் வகுப்பினை அடைந்தார். பெரியாரின் வாழ்க்கை நெறி மறுபடியும் வழுக்கத் துவங்கியது.

நம் கலியாணசுந்தரனுர் பத்தாம் வகுப்பைப்பெருமையோடு அடைந்தபோது யாழ்ப்பாணம் நா. கதிரைவேல் பிள்ளை என்னும் மாபெரும் புலவர் அக் கல்லூரியில் தமிழாசிரியராக வந்து அமர்ந்தார். அந்த ஆசிரியர் ஒருநாள் நம் பெரியார் வகுப்புக்கு வந்து பாடம் கற்பிக்கலாயினர். அப்போது அவர் தம் தோற்றப் பொலிவையும் பேச்சு வன்மையையும், தமிழ் புலமையையும், எவர்க்கும் அஞ்சாத தன்மையையும் கண்ட பெரியார் பெரிதும் வியப்பெய்தி நின்றனர். அப் புலவரின் குணநலன்கள் நம் பெரியாரின் உள்ளத்தைக் கவர்ந்தன. அன்று முதல் நம் பெரியாருக்குத் தமிழின் மீது பேரார்வம் பிறந்து விட்டது. தாமும் அவர் போல் தமிழ்ப் புலமை பெற்றுத் திகழ்தல் வேண்டும் எனத் திரு. வி. க. தீர்மானித்து விட்டார். அப்போது அப் பேராசிரியர் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் இயற்றிய அருட்பாவைக் குறித்துக் குற்றங் கூறிக் கொண்டிருந்தார். அதன் காரணமாக நீதி மன்றத்திலே அந்தப் புலவர்மீது பெரிய வழக்கு நடந்து கொண்டிருந்தது. அரசாங்கத் தேர்வுக்குச் செல்ல வேண்டிய நம் பெரியார் அத் தேர்வினையும் பொருட்படுத்தாது அவ்வழக்கில் தாமும் ஈடுபடத் துவங்கினுர்.

தமிழின் மீதும், தமிழாசிரியரின் மீதும், பொதுநலத் தொண்டுகளின் மீதும் இருந்த பேரவாவினுலும் மற்றும் சில எதிர்பாராத இடையூறுகளினுலும் அவர்தம் பள்ளிப் படிப்பு அதனேடு நிற்க வேண்டிய நிலையை அடைந்தது.

சில மாணவர்கள் இத்தகைய வீழ்ச்சிகளில் தம் வாழ்க்கையினையே பாழ்படுத்திக் கொள்வார்கள். நம் பெரியார் அவ்விதம் புரியாமல் "இனி நான் என்செய்தல் வேண்டும்?" என எண்ணமிடலாயினுர். தாமும் தம் தமையனுரைப் போல் பொருள் ஈட்டுதல் வேண்டும் என்னும் முடிவுக்கு வந்தார். அதற்குச் சில தகுதிகள் வேண்டும். அத் தகுதியினைப் பெற நம் பெரியார்

உள்ளம் உந்தியது. அக்காலத்தே இராயப்பேட்டையிலே கமர்ஷியல் பள்ளி என்று ஒன்று இருந்தது. நம் முதலியார் அந்த நிலையத்தில் சேர்ந்து 'புக்கீப்பிங்' என்னும் பகுதியை ஊக்கத்துடன் படித்து அரசாங்கத் தேர்வில் தேர்ச்சிபெற்று 'ஸ்பென்ஸர்' என்னும் பெயர் வாய்ந்த ஓர் ஆங்கிலக் கம்பெனியில் வேலையில் அமர்ந்தார். அவ்வேலையில் சுமார் இரண்டாண்டுகள் ஒழுங்கு பெறத் தொழில் புரிந்துகொண்டு ஒழிந்த வேளைகளில் தாய்மொழியைக் கற்றலிலும் சமய நூல் ஆராய்ச்சி செய்வதிலும் தம் காலத்தைக் கழித்து வந்தார். அந்தக் காலத்தே நம் நாட்டில் சமயச் சண்டைகள் மிகுதியாக இருந்தன. சைவ வைணவச் சண்டை, வேதாந்த சித்தாந்தச் சண்டை, ஜைன புத்த மதச் சண்டை, கிறிஸ்துவ மதச் சண்டை, ஆத்திக நாத்திக வாதம் முதலிய பலப்பல நிகழ்ந்து வந்தன. நம் பெரியார் அந்தக் கூட்டங்களுக்கெல்லாம் தவறுமல் சென்று வந்தார். எனினும் எந்தக் கட்சியிலும் சாராமல் அவைகளில் உள்ள சிறந்தகருத்துகளைத்தெரிந்து கொள்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார்.

அதே காலத்தில் நம் நாட்டிலே மற்றுமொரு கிளர்ச்சி கொழுந்து விட்டுத் தோன்றத் துவங்கியது. "ஓர் அயல் நாட்டினன் நம்மை அடக்கி ஆள்வதா? நாம் அந்த வெள்ளையனுக்கு அடிமையாக இருந்து உழல்வதா? இந்த இழிவினை நாம் போக்கிக்கொள்ளுதல் வேண்டாமா? நம்மை ஏமாற்றி நம்மை அடிமையாக்கிய அந்த வெள்ளையனை விரட்டி அடித்தல் வேண்டாமா?" என்பன போன்ற கருத்துக்கள் கொண்ட அந்தக் கிளர்ச்சியே நம் நாட்டு மக்களின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது.

நம் பெரியார் ஸ்பென்ஸர் கம்பெனியிலே உத்தியோகம் செய்துகொண்டிருந்தபோது வடநாட்டிலிருந்து வந்த விபினசந்திர பாலர் என்னும் பெரிய பேச்சாளர் சென்னைக் கடற்கரையிலே சொற்பொழிவாற்றினர். நாட்டு விடுதலை காரணமாக அந்தச் சொற்பொழிவு எல்லாப் பத்திரிகைகளிலும் விளக்கமாக வெளிவந்தது. நம் பெரியார் அந்தச் சொற்பொழிவை நேரில் கேட்டும் பத்திரிகையில் படித்தும் பெருமகிழ்ச்சி கொண்டனர். அதனோடு நில்லாது அந்தப் பத்திரிகையை வைத்துக் கொண்டு அந்தக் கம்பெனியில் தொழில் புரிந்து கொண்டு வந்த அலுவலக நண்பர்களிடம் படித்துக்

காட்டிப் பாராட்டிப் பேசிக் கொண்டு வந்தார். இச் செய்தி அந்தக் கம்பெனியின் தலைவரான வெள்ளையருக்கு எட்ட அவர் அச் செயலைக் கண்டிக்கத் தொடங்கினர். நம் பெரியார் அதன் காரண மாக உடனேவேலையைவிட்டு வெளியேறி விட்டார்.

தம் குடும்ப நிலையினையும் பொருட்படுத்தாது தம் முடைய கொள்கையையே பெரிதாக எண்ணி வெளி வந்த பெரியாரது செயலைக் குறித்து அவர் தமையனுர் சிறிதும் கடிந்து கொள்ள வில்லை. எனினும் ஊதியம் பெறுதற்கு வேறு வழி என்ன என்று இருவரும் சிந்திக்கத் துவங்கினர். உலகநாதர் தம் நண்பர் ஒருவரைத் துணை யாகக்கொண்டு கூட்டுமுறை யில் அச்சகம் வைத்துத் தம் தம்பியை நூல்கள் எழுதி வெளியிடுமாறு தூண்டினுர். நம் பெரியார் அதற்கு இணங் கிப் **பெரிய புராணம், திரு மந்திரம்** முதலிய நூல்களைக் குறிப்புரைகளோடு வெளி யிட்டார். எனினும் போதிய ஆதரவு இன்மையால் அச்ச கத்திற்குப் பொருள் முட்டுப் பாடு ஏற்பட அந்தக் கூட்டு முயற்சியும் அதனேடு நின்றது.

நம் பெரியார், இனி என் செய்வது என எண்ணமிட லானுர். பிறருக்கு அடங்கா மல் பெருமதிப்போடு புரியக் கூடிய வேறு தொழில் உள் ளதா என்று ஆய்ந்து பார்த்தார். அப்போது ஆசிரியத் தொழிலே தமக்கு ஏற்றது என உணர்ந்து ஆயிரம்விளக்கிற்கு அருகிலே யிருந்த வெஸ்லியன் பள்ளி யில் ஆசிரியராக அமர்ந்தார். அங்கே அவர் ஆறு ஆண்டு கள் தொழில் புரிந்து வந் தார். அந்த ஆறு ஆண்டு களும் அவர்தம் வாழ்க்கைச் சரிதத்தில் குறிப்பிடத் தக்கவை. அப்போது அவர் தம் தமிழறிவை மேலும் வளர்த்துக் கொள்வதற்கு விரும்பினுர். தமக்கு ஆசிரி யராக இருந்த கதிரைவேல் பிள்ளை இறந்துபட்டமையி ஞல் மயிலையிலேயிருந்த மகா வித்வான் தணிகாசல முதலி யாரிடம் தமிழ் நூல்களையும் சைவ சாத்திரங்களையும் பாடங்கேட்கத் தொடங்கி னுர். அதனேடு நில்லாமல் வடமொழியிலும் புலமை பெறவேண்டி வடமொழியில் வல்ல அறிஞர்களிடம் சென்று பகவத்கீதை, வால் மீகி இராமாயணம் முதலிய சொற்பொழிவுகளைக் கேட்டு வந்தார்; தாம் ஆசிரியராக வேலைபார்த்து வந்த பள்ளி யின் தலைமை ஆசிரியரான திரு. ஜான் இரத்தினம் பிள்ளை என்பவர் மூலமாகக் கிறித்துவ மதக் கொள்கை களை நன்ருக உணர்ந்தார். அன்றியும் ஒழிவு நேர்ந்த போது அறிஞர் திரு. சிங்கார

வேலு செட்டியார், பி. ஏ., பி.எல்., என்பவரிடம் டார்வின் கொள்கையினையும், புத்த மதக் கொள்கையினையும், பொது உடைமைக் கொள்கையினையும் விளக்கமாகத் தெரிந்துகொண்டார். ஜைனமதம், முகம்மதிய மதம் முதலிய மதங்களிலுள்ள கொள்கைகளையும் அந்தக் காலத்திலே நன்ருகக் கேட்டுத் தெரிந்து கொண்டார். இவையல்லாமல் பல திறப்பட்ட சிறந்த ஆங்கில நூல்களையெல்லாம் இரவும் பகலுமாகக் கண்விழித்து நம் பெரியார் படித்திருக்கின்ருர்.

பெரியார் கலியாண சுந்தரனர் சென்னையிலே சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பிலே துவங்கப் பெற்ற பால சைவசபை என்னும் இளைஞர் சங்கத்திலே பெரிதும் ஈடுபாடுடையவராய் இருந்த காலமும், திருவல்லிக்கேணியிலே சீர்திருத்தக் கொள்கையுடன் பெரியபுராணப் பிரசங்கம் செய்துவந்த காலமும், சைவசித்தாந்த சமாஜத்திலே தொடர்பு கொண்டு தென்னுடெங்கும் சென்று சைவச் சொற்பொழிவு ஆற்றிவந்த காலமும் இதுவேயாகும். இப் பெரியாரோடு திரு. சச்சிதானந்தம் பிள்ளை, திரு. மணி. திருநாவுக்கரசு முதலியார் முதலிய சிறந்த பேச்சாளர்களும் சேர்ந்து தொண்டாற்றி வந்த அருஞ்செயலை அந்தக் காலத்தே போற்ருதார் இலர். மறைமலையடிகளார் தொடர்பும், திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகளின் தொடர்பும் இவருக்கு ஏற்பட்ட காலமும் இதுவேயாகும். நம் பெரியார் அவர்கள், தம் கருத்திற்கு இசைந்த வாழ்க்கைத் துணையாகக் கமலாம்பிகை என்னும் அம்மையை மணந்து இல்லறவாழ்க்கை நடத்திவந்த காலமும் இந்தச் சிறந்த காலமேயாகும். நம் அம்மையாருக்கு முதலில் ஓர் ஆண் குழந்தையும் அதன் பிறகு ஒரு பெண் குழந்தையும் பிறந்து மறைந்த காலமும் இதுவே.

ஆயிரம் விளக்குப் பள்ளியில் ஆசிரியராய் இருந்த நம் பெரியார் பிறகு இராயப்பேட்டையில் இருந்த வெஸ்லியின் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராய் அமர்ந்து சுமார் ஒன்றரை ஆண்டுகள் தமிழ்த் தொண்டாற்றி வந்தார். அப்போது பெசன்ட் அம்மையார், அறிஞர் அருண்டேல், வாடியா ஆகிய இம் மூவரும் சுய ஆட்சிக் கிளர்ச்சி காரணமாக அரசாங்கத்தாரால் காவலில் வைக்கப்பட்டனர். இதை அறிந்த நம் பெரியார் உடனே தம் ஆசிரியர் பதவியையும் துறந்து தேசியத்

தொண்டாற்ற முன் வந் தார். அப்போது அவர் சொற்பொழிவு ஆற்றுவ தோடு நில்லாமல் "தேச பக்தன்" என்னும் பத்திரி கைக்கு ஆசிரியராகவும் இருந்து சுமார் இரண்டரை ஆண்டுகள் அருந்தொண் டாற்றி வந்தார். அந்தக் காலத்திலே தமிழ்ப் பத்திரி கைகளின் உரைநடை சிறி தும் நன்ருக இராது. தூய தமிழ் மொழியில் நமது பெரியார் நடத்திய தேச பக்தன் பத்திரிகையைக் கண் ணுற்ற பின்னரே பிற பத் திரிகைகள் திருந்தின என்று கூறுவது மிகையாகாது.

நம் பெரியாரின் சரிதத்தி லேயே மிகவும் சிறப்பாகத் தோன்றும் இந்தக் காலத் தில் நம் நாட்டில் மற்று மொரு பெருங்கிளர்ச்சி தோன்ற ஆரம்பித்தது. அதுவே தொழிலாளர் இயக் கம் என்பது. இவ்வியக்கத் துக்கு மிகவும் முக்கியமான வர் அறிஞர் வாடியா என்ப வரே. எனினும் நமது பெரி யார் திரு. வி. க. அவர்கள் இயற்றிய தொண்டுகளே மிகப் பெரியன என்பதை எவரும் மறுத்துரைக்கத் துணியார். ஜஸ்டிஸ் கட்சி யார் செல்வர்களையும் நடுத் தர வகுப்பினரையும் அதிக மாக ஆதரிக்க வேண்டிய நிலையில் இருந்தபோது காங் கிரஸ் கட்சியில் இருந்த நம் பெரியார் தொழிலாளர் கூட் டத்தைத் தம் கட்சியில் சேர்த்துக் கொள்ள முயன்ற அரசியல் தத்துவமுறை பெரிதும் பாராட்டத்தக்கது. தொழிலாளர் இயக்கம் காங் கிரசுக்கு ஆதரவு தந்ததற்கு நம் பெரியாரின் பேரு ழைப்பே பெருங் காரணம் ஆகும். இவ்விதம் நம் பெரி யார் ஒருபுறம் வெள்ளையர் ஆட்சியையும், பிறிதோர் புறம் நீதிக்கட்சியினரையும் பகைத்துக்கொண்டு பேரா வேசத்துடன் கட்டுரைகள் எழுதும்போது அவருக் கிருந்த போற்றுதலை விடத் தூற்றுதலே அதிகமாக இருந் தது. எனினும் தம் கொள் கையில் சிறிதும் வழுவாமல் காந்தியடிகளார் காட்டிய வழியையே பெருந் துணை யாகப் பற்றி நம் பெரியார் 'தேசபக்தன்' இதழில்ஆசிரிய ராக இருந்து பணியாற்றி வந்தபோது அவருக்கு அர சாங்கத்தாரின் எச்சரிக்கை மிக அதிகமாக இருந்தது.

ADDRESS FOR

Service of notices, marriage invitations and despatch of horoscopes of lonely hearts

(South Indian Brahmin bachelors employed in Northern India)

T. G. ANANTASWAMI,

Regd. Trade Marks Agent,

38/Vth Trust Cross St., Madras 28-.

'தேச பக்தன்' இதழுக்கு நம் பெரியார் இரண்டரை ஆண்டுகளே ஆசிரியராக இருந்தார். பிறகு அவர் தொழிலாளர்களின் பேரா தரவினுல் சாது அச்சுக்கூடம் என்னும் அச்சு நிலையத்தை நிறுவி "நவசக்தி" என்னும் வார இதழைத் துவங்கினர். அப்போது நம் பெரியாரின் வாழ்க்கை நெறியிலே ஒரு பெரும் புயல் வீசத் துவங்கியது. அவர்தம் ஆருயிர்த் துணைவியாரராய கமலாம்பிகை அம்மையார் மறைந்த துயரச் செய்தியேஅப்பெரும் புயல் ஆகும். அவ்வம்மையார் சுமார் ஆறு ஆண்டுகள் தம் கணவரோடு போற்றற் குரிய வகையிலே இல்லறம் நடத்தி வந்தனர் என்பதை நம் பெரியார் எழுதியுள்ள சரிதையின் வாயிலாக நாம் நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

நம் பெரியாருக்கு அடுத்து அடுத்து வரும் மாபெருந் துன்பங்களையும், அத்துன்பங்களிலே ஆழ்ந்து தம் வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்ளாமல் நம் பெரியார் மேலும் துணிவு கொண்டு தம் கடமையை ஆற்றிவந்த தன்மையினையும் இளைஞர்கள் ஊன்றிக் கவனித்தல் வேண்டும். தாம் நீடு நினைந்து முடிவு செய்து ஆற்றத் துவங்கும் எண்ணங்களுக்கு மாறுபட்ட கொள்கைகளை இறைவனே நேரில் வந்து இயம்பினுலும் நம் பெரியார் ஏற்றுக் கொள்ள மாட்டார் என்பதையும் இளைஞர்கள் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். காங்கிரஸில் பெரும்புரட்சியோடு எழுந்த திலகர் கட்சியை நீத்து, அமைதியோடு தோன்றிய சத்தியாக்கிரக நெறியினையே நம் பெரியார் ஆதரித்தார். ஜாதிமத வேறுபாடு ஒழிதல் வேண்டும் என்னும் கொள்கை நம் பெரியாருக்குப் பெரிதும் பிடித்தமானதாக இருந்தும், நீதிக் கட்சி வெள்ளையர் ஆட்சியை ஆதரிக்கின்றது என்னும் காரணத்தாலும் ஒரு வகுப்பார் மீதே அளவுமீறிக் குற்றஞ் சாட்டுகின்றது என்னும் எண்ணத்தாலும் பலப்பல எதிர்ப்புகளுக்கும் ஈடு கொடுத்துக் கொண்டே அவர் அந்தக் கட்சியை வன்மையாகக் கண்டித்தார். தம் தொண்டு நாட்டுக்கு இன்றியமையாதது என்று தோன்றியபோது நம் பெரியார் தம் குடும்ப நிலையினையும் பொருட்படுத்தாது, தாம் ஆற்றிவந்த தமிழாசிரியர் பதவியை உடனே துறந்து தொண்டாற்ற முன்வந்தது நம் நாட்டு இளைஞர்கட்கு ஓர் எடுத்துக்காட்டாக இலங்குகின்றது.

அமரர் திரு. வி. க.

கி. வா. ஜகந்நாதன்

சேலம் மாவட்டத்தில் சேந்தமங்கலம் என்று ஓர் ஊர் அங்கே சில காலம் என் இளமையில் நான் இருந்தேன். அங்குள்ள உடையார்கள் சேர்ந்து ஒரு பெரிய மாநாடு நடத்தினர்கள். அதற்குத் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் தலைவர். பல பேரறிஞர்கள் வந்து பேசினர்களாம். அப்படிப் பேசினவர்களில் திரு. வி. க. வும் ஒருவர். அந்த மகாநாடு நடந்து சில மாதங்களுக்குப் பிறகு நான் அந்த ஊருக்குப் போய்ச் சேர்ந்தேன்.

யார் எது பேசினலும் மகாநாட்டைப் பற்றியே பேசினர்கள். ஞானியாரைப் பற்றிப் பேசினர்கள். திரு. வி. க. வைப் பற்றிப் பாராட்டினர்கள். தேசபக்தனிலும், நவசக்தியிலும் திரு வி. க. எழுதிய கட்டுரைகளைப் படித்து மோகம் கொண்ட இளைஞன் நான். அதனல் அவரைப் பற்றி அவர்கள் சொல்லச் சொல்லக் கேட்டு இன்புற்றேன். "அவர் எப்படி இருப்பார்? என்ன உண்பார்? என்ன செய்வார்?" என்று தூண்டித் துருவிக் கேட்டுப் பல செய்திகளை அறிந்துகொண்டேன். உணவு, உரை, நடை, செயல் எல்லாவற்றிலும் அடக்கமும் ஒழுங்கும் உடையவர் என்ற எண்ணமே அப்போது உண்டாயிற்று. அவருடைய எழுத்தில் உள்ள காதல் வளர்ந்தது.

பிறகு இறைவன் திருவருள் என்னைச் சென்னைக்கே கொண்டு வந்து சேர்த்தது. வந்த புதிதில் தமிழ்ப் பெருமலைச் சாரலில் ஒதுங்கித் தமிழ்ப் பயிற்சியிலே ஆழ்ந்திருந்தமையால் அடிக்கடி திரு. வி. க. வைச் சந்திக்கவில்லை. என்னுடைய ஆசிரியப் பிரானுடன் இருந்து தமிழ்ச் செல்வத்தை ஈட்டுவதிலும் தமிழ்ப் பணி செய்வதிலும் கண்ணுக இருந்தேன். இளமையில் சொற்பொழிவு செய்யும் பழக்கம் பெற்றிருந்தாலும் பயிற்சிக் காலத்தில் எல்லாவற்றையும் அடக்கி ஒடுக்கிக் கொண்டேன். அவ்வப்போது திரு. வி. க. வைப் பார்ப்பதுண்டு.

ஐயரவர்கள் காலத்துக்குப் பிறகு இலக்கிய மேடைகளிலும் சமய மேடைகளிலும் ஏறும் வாய்ப்புக் கிடைத்தது. நாளடைவில் மிகுதி ஆயிற்று அப்போது திரு. வி. க. வுடன் நெருங்கிப்

பழகவும், ஒரே மேடையில் சேரவும், அவர்கள் தலைமையில் சொல்லாற்றவும் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. ஏதேனும் அரிய கருத்தைப் பேசினால்,' இவற்றையெல்லாம் எழுதுங்கள்' என்று சொல்லுவார்.

அவருடைய பண்பு யாருடைய உள்ளத்தையும் பிணிக்கும். எல்லோருக்கும் இனியவராகப் பழகுவது முடியாது; ஆனால் பெரும்பாலானவர்களுக்கு இனியவராகப் பழகுவது சாத்தியமான காரியம், அந்தை அவரிடம் கண்டேன்.

அவரை முதலில் பார்த்த காட்சி எனக்கு நினைவுக்கு வரவில்லை. இறுதியாகப் பார்த்த காட்சி நன்றாக நினைவில் இருக்கிறது.

2

'கிழித்த நார் போலக் கிடக்கிறார்' என்று சொல்லுவார்கள். அப்படித்தான் படுக்கையில் கிடந்தார் அவர். கையிலும் காலிலும் வீக்கம் இருந்தது கன்னங்களிலும் வீக்கம். நான் உள்ளே புகுந்ததும் அவர் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தார். கண் ஒளியை இழந்திருந்தமையால், "யார்?" என்று கேட்டார். நானும் என் நண்பர் ஒருவரும் வந்திருப்பது தெரிந்து உட்காரச் சொன்னார்.

"பால சுப்ரமணிய பக்த ஜன சபை ஆண்டு விழாவில் பேச வந்திருக்கிறீர்களா ?" என்று கேட்டார்.

"ஆம்" என்றேன். அவர் உடம்பைப் பார்த்தபொழுது எனக்கு பயமாகவே இருந்தது. இறைவனுடைய அழைப்பு அணிமையில் இருக்கிறது என்பதை உணர்ந்தேன். ஆனாலும் "உடம்பு எப்படி இருக்கிறது!" என்று கேட்டேன்.

"நீங்களே பாருங்கள். வீக்கம் இருக்கிறது. இறுதிக் காலத்தில் இந்த நோய் வருவது எங்கள் குடும்பத்தினருக்கு வழக்கம். என் தமையனுருக்கு இந்த நோயதான் கடைசிக் காலத்தில் வந்தது. அப்பொழுது நீங்கள் சொன்னது என் நினைவில் இருக்கிறது மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்கும் இந்த நோய்தான் இறுதியில் வந்ததென்று சொன்னீர்கள்" என்றார் அப் பெரியார்.

நான் எப்போது கூறினேன் என்பது என் நினைவில் இல்லை அவர் அதை நினைவில் வைத்திருந்தார். இடையிலே அதை மறந்திருக்கலாம். இப்போது நினைவுக்குக் கொண்டுவந்திருந்தார். நோய்வாய்ப்பட்டவர்கள் தம்முடைய நோயைப் பற்றியும், அதே நோயால் வருந்தியவர்களைப் பற்றியும் உள்ள செய்திகளைச் சேர்த்து நினைப்பது இயல்பு. அதுவும் ஆண்டு முதிர்ந்து நெடும் பயணத்துக்குக் காலம் பார்த்து நிற்பவர்களுக்கு இறந்துபோனவர்களைப் பற்றிய நினைப்பே மிகுதியாக இருக்கும் என்று சொல்வார்கள். ஆகவே, பாண்டு என்னும் நோயால் இறந்தவர்களையெல்லாம் அவர் நினைவுக்குக் கொண்டு வந்ததில் வியப்பும் ஒன்றும் இல்லை.

"சென்ற ஆண்டு விழாவுக்கு நான் வந்திருந்தேன். உங்கள் பேச்சு மிக நன்ருக இருந்தது. இப்போது வரமுடியவில்லை. இந்தக் காலத்துக்கு உங்கள் பேச்சு இன்றியமையாதது. கடவுள் உணர்ச்சியை மக்கள் உள்ளத்தில் வளர்க்கும் கூட்டங்கள் நாட்டில் மூலைக்கு மூலை நிகழ வேண்டும். தெய்வ பக்திப் பிரசாரந்தான் எங்கும் நடக்கவேண்டும். அதையும், நன்ருகப் படித்தவர்கள் செய்யவேண்டும்" என்று அவர் சொல்லிக்கொண்டே போனுர்.

"இப்போது முன்பைவிட வெளியூர்களில் தெய்வபக்தி மிகுதியாக இருக்கிறது. பெரியவர்கள் பக்தியை வற்புறுத்தி பேசுகிருர்கள்" என்று இடையில் நான் கூறினேன்.

"ஆம், சங்கராசாரிய சுவாமிகள் செய்துவரும் செயல் மிகவும் பாராட்டுவதற்கு உரியது. சைவத்தையும் வைணவத்தையும் பிணைத்துத் திருவெம்பாவை திருப்பாவை மகாநாடுகள் கூட்டித் தெய்வபக்தியை வளர்க்கத் தொடங்கியிருப்பது நல்ல காலத்துக்கு அறிகுறி எனக்கு உடல் வன்மையிருந்தால் இத்தகைய தொண்டிலே ஈடுபடுவேன்......"

சிறிது பேச்சு நின்றது. அவர் கற்பனைக் காட்சியில் ஈடுபட்டிருக்க வேண்டும். பிறகு, "நல்லவற்றைச் சொல்லுங்கள். உடல் நலத்தைப் பார்த்துக்கொள்ளுங்கள்" என்ருர்.

பல செய்திகளைப் பேசிக்கொண்டிருந்தோம். கண் ஒளி மழுங்கிய பிறகு செய்யுள் நூல்களை இயற்றி வந்தார் அவர். இரவெல்லாம் சிந்தித்து வைத்துப் பகலில் அவற்றைச் சொல்ல, அவற்றை எழுதிக்கொள்வார் அன்பர் நாராயணசாமி. இப்படி அவர் இறுதிக் காலத்தில் சில செய்யுள் நூல்களை இயற்றியிருக்கிருர். "முன்பெல்லாம் இரவு நேரங்களில்தான் நான் எழுதுவது வழக்கம். பகலெல்லாம் பலர் வந்து பேசிக்கொண்டிருப்பதால் எழுத முடிகிறதில்லை. இரவில் நெடுநேரம் கண் விழித்து எழுதியதனுல் தான் என் உடல்நலம் கெட்டுவிட்டது. இப்போது என்னுல் எழுத முடியாது. உரை நடை நூல்களைச் சொல்லி எழுதுவிப்பது எளிதன்று. என் கருத்துக்களைச் செய்யுளாகச் சொல்வது இப்போது எளிதாக இருக்கிறது. எதுகை, மோனை, ஓசை இவற்றின் துணைகொண்டு, பாட்டின் அடிகளை மனதில் வைத்துக்கொள்ள முடிகிறது. அவற்றைப் பகலில் சொல்கிறேன்; நாராயணசாமி எழுதிக் கொள்கிருன்."

அதிக நேரம் அவரோடு பேசினுல் உடம்புக்கு இளைப்பு உண்டாகும் என்று எண்ணி மெல்ல விடைபெற்றுக்கொண்டேன்.

அவருக்குத் தம்முடைய வாழ்க்கையின் இறுதி அணுகிக் கொண்டிருக்கிறது என்பது நன்ருகத் தெரியும். "இனியும் வாழ வேண்டும்" என்ற அவா அவருக்கு இல்லை. இறப்பைக் கண்டு

அவர் அஞ்சவில்லை. வேறு ஊருக்குச் செல்ல விரும்புகிறவர் அதற்கு ஆவனவற்றை முன்பே செய்துகொண்டு காத்திருப்பதைப் போல அவர் அமைதியோடு காத்திருந்தார். நான் இறுதியாகப் பார்த்த பிறகு இரண்டு மாதங்களில் அவருடைய வாழ்க்கை நிறைவுற்றது. 1953–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17–ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 7–45 க்குத் திரு. வி. க. தம் உடம்புச் சிறையினின்றும் விடுதலை பெற்றார்.

3

திரு. வி. க. விடம் தமிழர்களுக்குள்ள பெருமதிப்பையும் அன்பையும் அவருடைய மணி விழாவில் உலகம் நன்கு அறிந்தது. பல்வேறு கட்சிக்காரர்களும், பல சமயத்தினரும் அவருடைய மணி விழாவைக் கொண்டாடினர்கள். ஒவ்வொரு துறையிலும் அவர் ஆற்றிவந்த அருஞ் செயல்களை அப்போது அன்பர்கள் எடுத்துப் பாராட்டினர்கள். அவர் தம்முடைய 70-ஆம் பிராயம் நிரம்பி 71-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் உலக வாழ்வை நீத்தார் அந்தப் பிரிவைத் தாங்காமல் தமிழுலகம் புலம்பியது. அதில் ஆண் குரலும், பெண் குரலும், தொழிலாளர் குரலும், கலைஞர் குரலும் காங்கிரசார் குரலும், சுயமரியாதைக்காரர் குரலும், ஆஸ்திகர் குரலும், நாஸ்திகர் குரலும் கலந்து கேட்டன. இந்தக் கலப்பு, புரியாத புதிராகத் தோன்றலாம், ஆனல் திரு. வி. க. வை உணர்ந்தவர்களுக்கு இதுதான் திரு. வி. க. வின சிறப்பு என்பது தெரியும்.

இணையாதவற்றையெல்லாம் இணைத்தவர் திரு. வி க. அவர் சைவ வேளாள குலத்தில் உதித்தவர். தமிழ்ப் பயிற்சி மிக்கவர். தமிழாசிரியராகச் சிலகாலம் பணியாற்றியவர். ஆனல் அவருடைய தொண்டுக்கு இந்தக் குலமும் சமயமும் தொழிலும் கரைபோட்டுத் தடுக்கவில்லை. ஆளைப் பார்த்தால் ஒல்லியாய் உச்சிக குடுமியும் கதராடையும் துலங்க நெற்றியில் திருநீறு நிலவ ஒரு வைதிகப் பிச்சுப் போல இருப்பார். அனல் அவர் பேசிய பேச்சிலும் எழுதிய எழுத்திலும் வைரம் பாய்ந்திருந்தது. அவர் உள்ளம் சீர்திருத்தத்தை விரும்பியது. சமய சமரசத்தை அவர் தம்முடைய வாழ்நாளில் மேற்கொண்டு ஒழுகினர்.

கடவுள் இல்லையென்று கூறும் கம்யூனிஸ நூல்களை நிறையப் படித்தார்; ஆராய்ச்சி செய்தார்; ஆழ்ந்தார். மார்க்ஸீயத்தில் அவருக்கு நல்ல பற்று உண்டு. ஆனல் அவர் நாஸ்திகர் அல்ல. கடவுள் உணர்ச்சியைக் கணந்தோறும் வற்புறுத்திய காந்திய நெறியில் நின்றவர் அவர். மார்க்ஸீயமும் காந்தீயமும் கலந்து இணைந்தால் இந்தியா முன்னேற அந்த இணைப்பு மிகுதியாக உதவும் என்று அடிக்கடி அவர் சொல்லுவதுண்டு.

அவருடைய உள்ளம் கலைஞனது உள்ளம்; கவிஞனது உள்ளம். எந்தப் பொருளையும் அழகுபட அவர் சொல்லும்போது

ஒரு தனிச்சுவை தோன்றும். மேடைப் பேச்சில் பல பேரறிஞர் களுடைய கருத்தையும் கவிஞர்களின் கருத்தையும் மிகுதியாக எடுத்துச் சொல்வார். அந்தக் கவிகளை எடுத்து ஒப்பிப்பதில்லை. ஆயினும் அவர் பேச்சு முழுவதுமே கவிதையைப் போல் இருக்கும். இயற்கையோடு இணைந்த வாழ்வைப் பற்றி அவர் பேசும் சமயங் களில் அவர் வெறும் சொற்பொழிவாளராகவா இருப்பார்? அவருடைய பேச்சு முழுவதும் கவிதையே ஆகிவிடும். காதல் வாழ்வைப் பற்றிப் பேசும் போதும், இறைவன் பெருமையை எடுத்துரைக்கும்போதும் கேட்பவர்கள் தம்மை மறந்து ஏதோ அமுதமயமான உலகத்தில் இருப்பவர்களைப் போல் ஆகிவிடுவார் கள். படிப்படியாக, எடுத்துக்கொண்ட பொருளை விளக்கும் போது, கேட்பவர்மனம் அந்தப் பேச்சின் வழியே நழுவி நழுவி உள் ஆழ்ந்து போகும். பிறரைக் காரசாரமாகக் கண்டித்துக் கைதட்டச் செய்வதும், நகைச்சுவையை நீட்டி எல்லோரையும் நகைக்கச் செய்வதும் அவர் அறியாதவை; அறிந்தும் வேண்டாம் என்று ஒதுக்கியவை என்று சொல்வது பொருத்தமாக இருக்கும்.

சிலருடைய பேச்சில் உணர்ச்சி இருக்கும்; எழுத்தில் அது செத்துப் போய்விடும். சிலர் அற்புதமாக எழுதுவார்கள். ஆனால் அவர்கள் பேச்சுச் சுவையாய் இராது. சிலர் பேசுவதும் நன்றாக இருக்கும்; எழுதுவதும் நன்றாக இருக்கும். ஆனால், பேசும் நடை தனியாகவும் எழுதும் நடை வேறாகவும் இருக்கும். திரு.வி.க.விடம் அந்த இரண்டும் ஒரே மாதிரி அழகுடையனவாக இருக்கும். எழுத்தில் மாத்திரம் எழுதலாம் என்று பலர் எண்ணும் பல தொடர்கள் அவர் பேச்சிலே இயற்கையாக இழைந்து வந்தன. "யாண்டும், என்னை, சிந்திக்கற்பாலது, காழ்ப்பு, கழிபேருவகை, சான்று" என்பன போன்றவற்றைத் திரி சொற்களாக எண்ணி அவற்றை எழுதக்கூட அஞ்சுகிறவர்கள் உண்டு. ஆனால் இத்தகைய பல சொற்களையும் தொடர்களையும் தம் பேச்சினிடையே வரவழைத்து, சிறிதும் இடர்ப்பாடின்றி, கேட்பவர்கள் தெளியும்படி செய்த பெருமை திரு. வி. க. வுக்கே உரியது. அவருடைய எழுத்தும் நடையும் பேச்சு நடையும் ஒத்தே இருக்கும்; பேசும்போது இடக்கை ஆட்காட்டி விரலை உயர்த்திக் கையை அசைத்துப் பேசுவார். எடுத்துக்கொண்ட பொருளைத் தெளிவாகச் சொல்லி விட்டு, அதை முடிக்கும்போது உணர்ச்சி விஞ்ச வேகமாகப் பேசுவார், கடைசியிலே முத்தாய்ப்பாக ஒரு தொடரை மூன்று முறை சொல்லி முடிப்பார். "சிந்திக்கற் பாற்று, சிந்திக்கற் பாற்று சிந்திக்கற் பாற்று" என்றோ, "பெண்ணுரிமை பேணுக, பேணுக, பேணுக" என்றோ முடிப்பது அவர் வழக்கம். சொற்பொழிவின் முடிவிலே தாம் பேசிய அனைத்தையும் மாலை தொடுப்பது போல வைத்துத் தொகுப்புரை கூறும் அருமை கேட்டவர்களுக்குத் தெரியும். அவர் பேச்சை அப்படியே எழுதிப்படிக்கலாம். அழகும் உணர்ச்சியும் கெடாமல் இருக்கும்.

சமரசத்தை வற்புறுத்தியவர் திரு. வி. க. இராமலிங்க சுவாமி களுக்கு அடுத்தபடி சமரச சன்மார்க்கத்தை நிலைநிறுத்தப் பாடு பட்ட பெருந் தலைவர் திரு. வி. க. வள்ளலார் பொதுமக்களிடையே சென்று தொண்டாற்றவில்லை. அன்பர்கள் அவரை நாடி வந்தனர். ஆனால் அவருடைய பாடல்கள் மக்கள் உள்ளத்தே புகுந்து சமரச சன்மார்க்கத்தை விதைத்தன. திரு. வி. க. தொழிலாளர்களிடையே சென்றார்; நாட்டு மக்களிடையே சென்றார்; பேச்சாலும் எழுத் தாலும் பாட்டாலும் சமரசத்தைப் பரப்பினார். தொழிலாளர் களின் முரட்டுத் தனத்தை மாற்றிக் கலைப் பண்பில் ஊறுவதற்கு அவர்களுக்குக் கை கொடுத்து மேலே தூக்கினார். கடுமையான வாதங்களிலே சிக்கிப் பகைமை உணர்ச்சியை உண்டாக்கிய சமய வாதிகளைக் கீழே இழுத்து அமைதிபெறச் செய்தார். இப்படி இரு வகையிலும் சமரசத் தொண்டு செய்ய அவரால் இயன்றது. காரணம் அவர் நடுநிலையில் நின்றதுதான்.

சமரச மனப்பாங்கினால் அவர் எதிலும் உள்ள நல்லதையே எடுத்துச் சொன்னார். மற்றவற்றைக் கண்டித்துப் பேசுவதென்பது அவர் இயல்புக்குப் பொருந்தாது. எதைப் பற்றியும் காரசாரமாக சொல்லவேண்டுமென்று விரும்பும் கட்சி வாதக்காரர்களுக்கு இது பிடிப்பதில்லை. இந்தச் சமரச ஞானத்தை 'விளக்கெண்ணெய் வாதம்' என்று எள்ளி நகையாடுவார்கள். பிறர் குற்றத்தைக் கண்டு கண்டிப்பதுதான் புலமைக்கும் தலைமைக்கும் அடையாளம் என்று வந்துவிட்ட இந்த அரசியல் யுகத்தில் பிறர் குறையை நினைக்காமல் குணங்களை உயர்வாக எடுத்துச் சொல்வது மிக மிக அரிது. அந்த நிலையைத் தக்க சான்றோர்களிடந்தான் காண முடியும். "பிறர் தீமை சொல்லா நலத்தது சால்பு" என்ற வள்ளு வர் வாய்மொழிப்படி சால்புடைய செம்மையாளர் திரு. வி. க.

அவர் தம் மனைவியோடு வாழ்ந்த காலம் சில ஆண்டுகளே. தம் வாழ்க்கையின் பெரும் பகுதியை அவர் அகத் துறவியாகவே கழித்தார். உலகை விட்டு ஓடும் துறவை அவர் விரும்பவில்லை; சில சமயங்களில் அதை வன்மையாகக் கண்டிப்பதும் உண்டு. ஒழுக்கத்திலே சிறந்து நின்ற பெரியார் அவர். அவரிடம் பெண்மை குணம் வரவர மலிந்தது. அச்சமும் கோழைத்தனமும் பெண்மை ஆகா. அடக்கமும் அமைதியும் கலைப் பண்புமே பெண்மையின் மலர்ச்சிக்கு அடையாளம். திரு. வி. க. பெண்மையின் உயர்வைப் பேசப் பிறந்தவர் என்றே சொல்லலாம். அவரைப் போல ஆற்ற லும் தெளிவுமுடைய நடையில் பெண் உரிமையை வற்புறுத்தி யவர்கள் இல்லை; அப்படிச் செய்ய பெண்களாலேயே இயலாது. அவர் எழுதிய "பெண் உரிமை"யைப் போன்ற நூல் முன்னும் இல்லை; பின்னும் வரப்போவதில்லை, ஒருவனும் ஒருத்தியும் காதல் உள்ளம் கொண்டு இல்லறம் நடத்தவேண்டும் என்பதை அவர் தம் நூல்களில் வலியுறுத்தியிருக்கிறார்.

திரு. வி. க. சிறந்த சிந்தனையாளர். நுட்பமான கருத்துக்களைக் குறித்துப் பல பக்கங்கள் சுவையாக எழுதும் ஆற்றலுள்ளவர். 'பெண்ணின் பெருமை', 'இளமை விருந்து', 'உள்ளொளி' முதலிய நூல்கள் அவர் எத்தகைய சிந்தனைச் செல்வர் என்பதற்கு சான்று பகரும்.

4

திரு. வி. க. திருக்குறளில் சில அதிகாரங்களுக்கு விரிவுரை எழுதியிருக்கிறார் பெரியபுராணத்தைக் குறிப்புரையுடன் வெளியிட்டிருக்கிறார். பல கவிதை நூல்களை வழங்கியிருக்கிறார். பத்திரிகைகளை நடத்தியிருக்கிறார். அவர் எழுத்துக்கள் யாவுமே இலக்கியச் சுவை உடையவை.

எந்த நிலையில் அவர் இருந்தாலும், எதை எழுதினாலும் எதைப் பேசினாலும் அவர் உள்ளம் அன்பும் அருளும் இணைந்ததாய் உரமும் கவர்ச்சியும் உடையதாய் விளங்கியது. அவர் பேசியது அன்பு; அவர் எழுதியது அன்பு; அவர் வாழ்க்கையே அன்பின் உருவம். அந்த அன்போடு கலந்த அவர் நினைவு அவருடன் பழகியவர்களுக்கு என்றும் பசுமையாக இருக்கும். தமிழுலகத்தில் பிறந்து இறந்தும் இறவாத அமரர்களில் முன்னணியில் நிற்கும் இருபதாம் நூற்றாண்டுச் சான்றோர்களில் அவர் ஒருவர். ●

GRADED No. 1
by DGS & D
Govt. of India

Designed for
Greater
Efficiency

MOTOR DRIVEN
PRECISION
LATHES

with automatic change Gear box, quick acting controls. All geared and cone pulley type.



MANUFACTURERS:
CHANANA BROS.
26, OKHLA INDUSTRIAL ESTATE
NEW DELHI-20. PHONE: 72832

SOLE SELLING AGENTS

CHANANA SALES CORPN.
53, HANUMAN ROAD, NEW DELHI
Phone 44538

பலர் அவரைப்போல் பேசவும் எழுதவும் முயன்றனர். தமது 18 வது வயதுமுதல் பல்வகைக் கூட்டங்களில் திரு. வி. க. செய்த சொற்பொழிவுகளிற் பல தமிழன்னைக்குப் புத்தணி களாய் விளங்கின. **தமிழ்ச்சோலை, இளமை விருந்து, தமிழ்த்தென்றல்** என்னும் தொகுதி நூல்களில் இவற்றைக் காணலாம்.

திரு. வி. க. தாமே இயற்றிய புது நூல்களிற் பல சிறப்பு வகையாற் பாராட்டப் பெறுவன. அவை **மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், பெண்ணின் பெருமை, முருகன் அல்லது அழகு, உள்ளொளி** முதலியவை. **திருக்குறள் முதற் பத்து அதிகாரங்கட்கு** அவர் எழுதி யுள்ள **உரையும்** புத்தம் புதிய கருத்துக்கள் பல கொண்ட தனிச் சிறப்புடையது. சில ஆண்டுகளாக, நவயுகம் போற் றும் நற்பெருங் கருத்துக்களைக் கொண்ட புதிய பாடல்கள் பல பாடி வெளியிட்டுள்ளார். இவைகளால் அவர் தமிழன் னைக்குச் செய்துள்ள தொண்டு சாலச் சிறந்தது.

இவர் இளமைதொட்டே, பிறப்பால் உயர்வு இழிவு காட்டும் பேதமையையும் கொடுமையையும் கண்டித்து வந் துளளார்; தமது நண்பர்களுடன் சேரிகட்குச் சென்று ஒழுக்கத்தையும் தெய்வ பக்தியையும் பற்றி ஆர்வத்துடன் பேசிவந்தார். இயற்கையின் எழிலையும் பெண்ணினத்தை யும் இழித்துரைக்கும் இடைக்காலக் கொள்கையை வன்மை யாய் மறுததுள்ளார். இவரது "**பெண்ணின் பெருமை**" என்னும் நூல் தமிழகததுப் பெண்ணுலகில் ஒரு புனிதப் பேருணர்ச்சியை உண்டுபண்ணியுள்ளது. பெண்ணினம் இவரைத் தன் அன்பார் தந்தை என்று போற்றுகிறது.

சமய உலகில், திரு. வி. க. முதலில் அழுத்தமான சித் தாந்த சைவராய்த் தோன்றினர். நீதிபதி சதாசிவ ஐயர், ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள், ஸ்ரீபாம்பன் சுவாமிகள் என்னும் சான்றோர்கள் தொடர்பு வலுத்தது. மேல்நாட்டு நல்லறிஞர்களின் கருத்துக்கள் பலவற்றையும் அறிந்தார். பின்பு, 'வாதமும் சமயபேதமும் கடந்த' சமரச சைவராய் எம்மதமும் சம்மதம் என்ற பரந்த நோக்குடையவராய் விளங்கினர். உண்மைச் சைவம் இந்நிலையில் இருப்பதே என்பதைத் தம் **சைவத்தின் சமரசம்** என்னும் நூலில் விளக்கியிருக்கின்றார். **திருமால் அருள்வேட்டல், முருகன் அருள்வேட்டல், கிறிஸ்துவின் அருள்வேட்டல், புதுமை வேட்டல், பொதுமை வேட்டல், சிவனருள் வேட்டல்**

என்னுமிவர் செய்யுள் நூல்களில் இவரது முதிர்ந்த கருத்துக்களைச் சிறப்பாகக் காணலாம். சிவனருள் வேட்டலிலும் உள்ளொளியிலும் புலனாகும் தத்துவங்கள் மிகவும் உயர்ந்தவை. கிறிஸ்துநாதர் மலைப்பொழிவும், அவர் அருளுரைகள் வேறுசிலவும் இவர் சமரசப் பார்வையில் பெரிதும் போற்றற்குரியனவாய்ப் புலப்படுகின்றன.

திரு. வி. க. தமது வாழ்க்கையின் கடைசி ஏழு ஆண்டுகளில் செய்யுள் வடிவ நூல்கள் எட்டு இயற்றியுள்ளார். அவற்றுள் முதலாவது **கிறிஸ்து மொழிக்குரல்**. சென்னைப் பஞ்சாலைத் தொழிலாளர் வேலை நிறுத்தம் நிகழ்ந்தபோது, அவர் வீட்டை விட்டு வெளியேறலாகாது என்று அரசாங்க உத்தரவு ஒன்று பிறந்தது. அவ்வாறு ஒருமாதம் வீட்டுக் காப்பில் இருந்தபோது அந்நூல் யாக்கப்பட்டது. **" ஏசு மொழியும இனிய திருவாசகமும் நேச அருட்பாவும் என் நெஞ்சு "** என்று, அதனாசிரியர் முன்னுரை தொடங்குகிறது.

அவர்செய்த பல்வகைத் தொண்டுகளில் நூலியற்றும் தொண்டினைப் பகலில் செய்ய முடியவில்லை; அவர் அதனை இரவில்தான் புரிய இயன்றது. இதனால், முதுமைப் பருவத்தில் உறக்கம் அவரை அணுகாதொழிந்தது. நாளடைவில் அது அவர் உடல்வளத்தைக் குறைத்தது; உள்ளுறுப்புக்கள் மெலிவுற்றன; கண்களையும் படலம் மறைத்தது. இவ்வாறு உடல்மெலிவு புறக்கண் பார்வையை மறைத்ததெனினும், அது அவர் அகக்கண்ணை, உள்ளொளியை மறைக்கவில்லை. " இந்நிலையில் சிந்தனைசக்தி பெருகுவதை யான் உணரலானேன் " என்கின்றார். இப்படிப் படுக்கையிலிருந்து கொண்டே தமது 67 ஆம் ஆண்டில் முதலில் அருளப்பட்ட நூல் **இருளில் ஒளி** என்பது. இதன் வாயிலாக மார்க்ஸிய உடலில் காந்திய உயிர் கலக்க வேண்டும் என்றும், தேவைக்கு மேல் பொருள் திரட்டாமையும் அகிம்சையும் பரமதர்மமென்றும், இதற்கு நெறி ஆத்மார்த்தம் என்றும் கடவுள்நெறி என்றும் அறிவுறுத்துகின்றார். பின்னர், **இருமையும் ஒருமையும்** என்னும் நூல் பாடப்பெற்றது. உலகம் பொல்லாததன்று, மனித உளந்தான் பொல்லாதது என்றும், ஒருமைக்கடவுள் உலகப் பன்மையில் கலந்திருப்பது புலனாயின், வேற்றுமையுணர்ச்சிகள் மாயும்; " மக்களெல்லாம் ஒக்கலாவர், மற்ற உயிர்களும் சுற்றமாகும் " என்றும் கூறுகின்றார்.

திரு. வி. க. வின் 68 ஆம் வயதில் தோன்றியது **அருகன் அருகே** என்னும் அரிய நூல். மார்க்ஸியத்தின் அடிப்படையில் அகிம்சையும், ஆத்மார்த்தமும் இல்லாத குறையுளதென்றும் காந்திய மார்க்ஸியத்திற்குத் தாயகம் விருஷபதேவர் போதித்த அகிம்சையும், மிகுபொருள் உவவாமையும் என்றும் காட்டுகின்றார்.

அடுத்த ஆண்டில் **சித்தந்திருத்தல்** என்னும் நூல் முதலில் வெளிவந்தது. உயிரின் விடுதலைக்குரிய வழிகளுள் சித்தம் திருத்தல் ஒன்றென்று அது விளக்குகின்றது. அதை அடுத்து, **முதுமை உளறல்** என்னும் அறிவுசால் அரு நூலை நம் ஆன்மீகக் கவிஞர் உலகுக்களித்தார். இதில் சாதிமத உணர்ச்சி வெறிகளை வன்மையாய்க் கண்டிக்கின்றார். உலக ஒருமைக்காக உழைக்க வேண்டுமென்றும், "மனிதக் குறிக்கோள் புனித அகிம்சை. அகிம்சாதர்மம் அகிலம் ஆக. அகிம்சை வெல்க. அகிம்சை வெல்க." என்று முடிக்கின்றார்.

மூதறிஞர் திரு. வி. க. தமது மரணப் படுக்கையினின்றும் அருளிய இறுதி நூல் **வளர்ச்சியும் வாழ்க்கையும் அல்லது படுக்கைப் பிதற்றல்** என்பது. அவர் பருவுடல்

Phone : 51388.

Grams : MURSOKS

REGD NO 141241.

WHITE HORSE SOAP

వైట్‌హార్స్ సాబూను

A Superfine Soap
For Silk and Linen Wash

MANUFACTURERS

D. BANGARU CHETTY,
NATIONAL INDUSTRIES,
220, T. H. Road, Madras - 21.

Stockists required in oiher States, wherever unrepresented.

நாளுக்கு நாள் மெலிவுற்று வந்தும், உணர்ச்சியின் எழுச்சி மட்டும் குன்றவில்லை. அந்நிலையில், வளர்ச்சி தத்துவத்தை விளக்க இந்நூலைப் பாடியருளினர். அதன் முன்னுரையை அவர் எழுதுவித்தது 26–8–53 ல்; அதாவது, தமது 70 ஆம் ஆண்டின் நிறைவு நாளில்.

இந்நூலில் 16 தலைப்புக்கள் உள. இறுதித் தலைப்பு அந்நூல் விளக்கும் தத்துவங்களைத் தொகுத்துக் கூறுவது. பதினைந்தாம் தலைப்பாக முறையீடு என்பதமைந்துள்ளது. அதன் இறுதிப் பத்து அடிகள் பின்வருமாறு :

"இறைவனை மறந்தால் உறுதலை ஓர்க
ஓர்ந்தே ஓர்ந்து சார்பு பெறுக
குறைகளை முறையிட் டிறைவனை நினைக்க;
குறைகளை அகம்புறம் முறையிடல் வீரம்
அந்த வீரம் சிந்தை ஈரமாம்
ஈர நெஞ்சில் கோரம் படியுமோ ?
பாவம் பறக்கும் : ஆவி நலமுறும்,
குறைகளை முறையிடல் கரைபுரண் டோடின்
உலகம், தெய்வ உலக மாகும்.
வையம் வளர்க தெய்வம் வாழ்க."

இவர் போல் "மனிதரில் தலையாய மனிதர்"கள் உலகில் அபூர்வமாகத்தான் அவதரிக்கின்றனர்கள். நம் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. தமிழகமட்டிற்கும் உரியவரல்லர். பாரதநாடு முழுவதுமே அவர் சரிதத்தையும், தொண்டுகளை யும், அவர்தம் விழுமிய கருத்துக்களையும் அறிதல் அவசியம். ஆங்கிலம், இந்தி, பிறஇந்திய மொழிகள் இவற்றிலும் இவர் பெருமை பரப்பப்பட்டால், நாட்டிற்கு நன்மை பெருகும். இத் தமிழ் முனிவரைத் தற்காலத் திருவள்ளுவரென்றும் தமிழ்நாட்டுக் காந்தியடிகள் என்றும், பாரதநாட்டின் மணி விளக்கென்றும், வருங்கால ஒருகுடும்ப உலகிற்கு வழிகாட்டி என்றும், உலக மதிப்பிற்குரிய உத்தமரென்றும் கூறுதல் மிகையாகாது. "உண்டாலம்ம இவ்வுலகம் .... தமக்கென முயலா நோன்றாள் பிறர்க்கென முயலுநர் உண்மையானே" "தனக்கென வாழப் பிறர்க்குரியாளன், இன்பச் செவ்வி மன்பதை எய்த அருளறம் பூண்ட ஒருபெரும் பூட்கையன்" "யாதும் ஊரே, யாவரும் கேளிர்," "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற சங்ககாலத் தமிழ்ச் சான்றோர்கள் திருவாக்குகட்கு இன்றைச் சான்றாக இலகுகின்றார் நம் திரு. வி. க.

திரு. வி. க.

கல்கி

சரியாக இருபது வருஷங்களுக்கு முன்னுள் ஒரு நாள் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் என்னைக் கூப்பிட்டு அனுப்பினுர்.

"நீ முன்னுக்கு வரவேண்டியவன்"........என்ருர். முன்னுல் போவதற்கு இடம் இல்லாதபடியால் நின்ற இடத்திலேயே நின்றேன்.

'உனக்கு ஒரு கடிதாசி தருகிறேன்" என்ருர்

யாருக்கு? எதற்கு? – என்று சிந்தனை செய்தேன்

"திரு. வி. கலியாண சுந்தர முதலியாருக்குக் கடிதம் தருகிறேன். அதை எடுத்துக் கொண்டு போய் அவரைப் பார் மெதுவாக 'நவ சக்தி' பத்திரிகையில் சேர்ந்து கொள். பத்திரிகைத் தொழிலில் முன்னுக்கு வருவாய்" என்ருர்.

எனக்கு மூர்ச்சை போட்டு விடும் போலிருந்தது. எனினும் சமாளித்து நின்று கடிதத்தை வாங்கிக் கொண்டேன்.

ஆனுல், கடிதத்துடன் உடனே போய்த் திரு. வி. க. வைப் பார்க்கவில்லை. ஏனெனில், அது வீண் வேலை – நடக்காத காரியம் – என்று தோன்றியது. தமிழ்ப் பேரறிஞர் திரு வி. க. வின் பத்திரிகையிலாவது, நாம் சேருவதாவது ?

* * *

ஸ்ரீ திரு. வி. கலியாண சுந்தரனுரின் இரண்டாவது பத்திரிகை "நவ சக்தி"; அவர் நடத்திய முதல் பத்திரிகை "தேச பக்தன்."

"தேச பக்தன்" தினசரிப் பத்திரிகை. இரண்டரை வருஷ காலந்தான் நடந்தது. ஆனுலும் தற்காலத் தமிழ் நாட்டின் சரித்திரப் பெருமையில் அதற்கு ஒரு முக்கியமான பங்கு உண்டு.

டாக்டர் பெஸண்டு அம்மையாரின் 'ஹோம்ரூல் இயக்கம் தீவிரமாக நடந்த காலத்தில் "தேச பக்தன்" தோன்றியது. திரு. வி. கலியாண சுந்தரனுர் அதன் ஆசிரியர் ஆனுர்.

வெஸ்லி கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் அவர் வேலையை விட்டு விட்டுத் "தேச பக்தன்" பத்திரிகாசிரியர் ஆனுர் என்று அறிந்தபோது தமிழ் நாட்டார் அடைந்த வியப்புக்கு அளவே இல்லை.

"தமிழ்ப் பண்டிதர்" என்றால் அப்போதெல்லாம் "கமலாம்பாள் சரித்திர"த்தில் வரும் அம்மையப்ப பிள்ளை தான் கண்ணெதிரே நிற்பார்.

படித்த சமூகத்துக்குள்ளே ஒடுக்கப் பட்டவர்களும், தாழ்த்தப்பட்டவர்களும், தீண்டப் படாதவர்களும், பார்க்கப்படாத வர்களும் தமிழ்ப் பண்டிதர்கள்.

அப்பேர்ப்பட்ட தமிழ்ப் பண்டிதர்களில் ஒருவர் ஓர் அரசியல் தினசரிப் பத்திரிகைக்கு ஆசிரியராக வந்திருக்கிறார் என்றால், ஒரே வியப்பும் திகைப்பும் உண்டாவது இயல்பே யல்லவா?

பின்னர் "தேச பக்தன்" இதழ்களைப் பார்க்கப் பார்க்க "என்ன துணிச்சல்! என்ன ஆர்வம்! எத்தகைய அரசியல் நுட்பம்? எவ்வளவு தீவிர தேசபக்தி, என்ன தமிழ்!" என்று தமிழ் நாடே வியந்து கொண்டிருந்தது.

அரசியல் விஷயங்களைப் பற்றித் தமிழிலே பேச முடியாது – எழுத முடியாது–என்று கருதப் பட்டு வந்த அந்தக் காலத்தில், மிகவும் சிக்கலான அரசியல் விஷயங்களெல்லாம் 'தேச பக்த'னில் தூய தமிழில் எழுதப் பட்டு வந்தன; உணர்ச்சியோடும் ஆர்வத்தோடும் எழுதப்பட்டு வந்தன. தமிழ்நாடு திகைப்பும் வியப்பும் அடைந்ததில் ஆச்சரியம் என்ன?

1917–1919 இல் தீவிர தேச பக்தி கொண்ட ஒரு கூட்டத்தார் தமிழ் நாட்டில் அரசியல் உலகில் பிரவேசம் செய்தனர். காங்கிரஸ் ஸ்தாபனத்தைக் கைப்பற்றி, அதன் மூலம் தமிழ் நாட்டைத் தேசிய இயக்கத்தின் முன்னணியில் கொண்டு வந்து நிறுத்த அவர்கள் திட்டம் போட்டுக் கொண்டு வேலை செய்யத் தொடங்கினார்கள். பூரண தேச பக்தர்கள் ஆனபடியால், அவர்களுக்குத் தாய் மொழிப் பற்றும் இருந்தது. ஆனால் அதுவரையில் அரசியல் காரியங்கள் எல்லாம் ஆங்கில பாஷையிலேயே நடந்து வந்த படியால், தமிழை முன்னணிக்குக் கொண்டு வருவது சுலபமான காரியமாயில்லை. தமிழில் சிலர் பேசவும் எழுதவும் அப்போது ஆரம்பித்திருந்த போதிலும், கொச்சைத் தமிழில் ஏதோ காமா, சோமாவென்று காரியத்தை ஒப்பேற்றுவதாகவே கருதப்பட்டு வந்தது.

ஸ்ரீ திரு. வி. கலியாண சுந்தர முதலியார் தமிழ் நாட்டு அரசியலில் பிரவேசித்த பிறகுதான், தமிழ் மொழி சுய மதிப்புடன் தலை நிமிர்ந்து நிற்கத் தொடங்கியது.

"தேச பக்தன்" பத்திரிகையில் தூய செந்தமிழ் நடையில் அவர் எழுதியதோடில்லை; பத்திரிகையில் எழுதுவது போலவே, பொதுக் கூட்டங்களிலும் பேசினார். அவருடைய சொற்பொழிவைச் சுருக்கெழுத்தில் எடுத்துப் பார்த்தால், "தேச பக்தன்" தலையங்கம் மாதிரியே யிருக்கும்.

இதனாலெல்லாம் தமிழ்நாட்டின் அரசியல் தலைவர்கள் – தொண்டர்கள் – அனைவருக்கும் ஸ்ரீ திரு வி. கலியாண சுந்தர முதலியாரிடம் வேறு யாரிடமும் இல்லாத ஒரு தனி மதிப்பு ஏற்பட்டிருந்தது. காங்கிரஸ் காரியங்களில் பாஷை சம்பந்தமாக எந்தப் பிரச்னை வந்தாலும்

"திரு. வி. க. வைக் கேளுங்கள்!" என்று சொல்வது வழக்கமாயிருந்தது.

தமிழ் நாட்டின் பிரபல காங்கிரஸ் தலைவர்கள் எல்லாரும் திரு. வி. க. விடம் வைத்திருந்த நன்மதிப்பை நான் அறிந்திருந்தேன். நானே "தேச பக்தன்" "நவ சக்தி" பத்திரிகைகளைப் படித்து அவரிடம் பயபக்தி கொண்டிருந்தேன். ஆனால் என்னுடைய பக்தியானது தூரத்திலேயே—துவஜ ஸ்தம்பத்தினடியிலேயே—நின்று செலுத்தக்கூடிய பக்தியாயிருந்தது. அருகில் செல்வதற்குரியவனாகவே என்னை நான் கருதவில்லை.

ஆகையினாலேதான், டாக்டர் ராஜனுடைய கடிதத்தை உடனே நான் பயன்படுத்தவில்லை. "நவ சக்தி" ஆசிரியர் எங்கே ? நாம் எங்கே ? அவருடைய தூய செந்தமிழ் நடை எங்கே? நம்முடைய சாமான்யத் தமிழ் எங்கே?—என்று எண்ணிச் சும்மா இருந்து விட்டேன்.

நான் சும்மா இருந்தாலும் விதி சும்மா இருக்கவில்லை. ஏதோ ஒரு மகா நாட்டுக்காகவோ, கமிட்டிக் கூட்டத்துக்காகவோ, திரு. வி. க. திருச்சிக்கு வந்தார். அச்சமயம் அவர் என்னை அழைத்து, "உன்னைப் பற்றி டாக்டர் ராஜன் சொன்னார்" என்றார். "ஆமாம், கடிதம்கூடக் கொடுத்திருக்கிறார்" என்றேன். "இதுவரையில் ஏதாவது தமிழில் எழுதியிருக்கிறாயா?" என்று கேட்டார். சில அச்சிட்ட துண்டுப் பிரசுரங்களைக் கொண்டு வந்து கொடுத்தேன். அவற்றில், மகாத்மா காந்தி கட்டுரை ஒன்றின் மொழி பெயர்ப்பைப் படித்துவிட்டு, "தமிழ் நடை பிழையில்லாமல் இருக்கிறது" என்றார். பிறகு "சென்னைக்குப் போய்க் கடிதம் எழுதுகிறேன்" என்று சொல்லி விட்டுச் சென்றார்.

பிழையில்லாமல் தமிழ் எழுதுவதாகச் சொன்னதை ஒரு பாராட்டுதலாக நான் கருதவில்லை. பின்னால் தான் திரு வி. க. விடம் அந்தப் பாராட்டுதலைப் பெறுவது எவ்வளவு பெரிய காரியம் என்பதை அறிந்தேன். அப்போது, அவரிடமிருந்து கடிதம் வரும் என்பதாக நான் எதிர்பார்க்கவேயில்லை.

திடீரென்று ஒரு நாள் மாகாண காங்கிரஸ் காரியதரிசி ஸ்ரீ எஸ். ராமநாதனுக்கு ஒரு தபால் கார்டு வந்தது. அதில், "திரு. ரா. கி......யாண்டுள்ளார்? அவருக்கு "நவ சக்தி"யில் தொண்டாற்ற விருப்பமிருப்பின், இதுபோழ்து இவண் வரலாம்" என்று ஸ்ரீ திரு. வி. க. எழுதியிருந்தார்.

இரண்டே வாக்கியங்கள் கொண்ட இந்தக் கடிதம் எனக்கு எவ்வளவு பெருமையையும் குதூகலத்தையும் அளித்தது என்பதை இப்போது விவரிக்க முடியாது.

ஸ்ரீ திரு. வி. கலியாண சுந்தர முதலியார் 1921 ஆம் ஆண்டில் "தேச பக்தன்" பத்திரிகையிலிருந்து நீங்கினார். பிறகு "நவ சக்தி" என்னும் வாரப் பத்திரிகையைச் சொந்தமாகவே ஆரம்பித்து நடத்திவந்தார் 1923 ஆம் ஆண்டில் ஒத்துழையாமைக் கட்சியின் பிரசாரத்துக்காக

"நவ சக்தி" வாரம் மும்முறை யாக மாறியது. இந்த வாரம் மும்முறை "நவ சக்தி"யில் தொண்டாற்றுவதற்குத் தான் நான் சென்றேன். எட்டு மாத காலம் "நவ சக்தி" வாரம் மும் முறையாக நடந்தது. பிறகு, பழையபடி வாரப் பத்திரிகை யாக மாறியது. ஏறக்குறைய நாலு ஆண்டுகள் "நவ சக்தி" யில் தொண்டாற்றினேன். அப்போது ஸ்ரீ. திரு. வி. க. அவர்களிடம் நெருங்கிப்பழகும் பேறு எனக்குக் கிடைத்தது. அவருடைய தூய இலட்சிய வாழ்க்கையைப் பற்றியும், அவருடைய சிறந்த குணங்களைப் பற்றியும் அறிந்து கொள்ள முடிந்தது.

திரு. வி. க. வுக்கு அரசியலைக் காட்டிலும் அதிக ஆர்வத்தை ஊட்டிய இரண்டு இலட்சியங்கள் இயற்கை வாழ்வும், பெண்ணின் பெருமையும். "பழந் தமிழர்கள் இயற்கையோடியைந்த வாழ்வு நடத்தினர்கள்; பெண்களைப் போற்றினர்கள். இக்காலத் தமிழர்கள் பழம் பெருமையை அடைய வேண்டுமானல் அந்த இயற்கை வாழ்வுக்குத் திரும்பவேண்டும்; பெண் குலத்தைப் போற்ற வேண்டும்" என்பது அவருடைய ஆழ்ந்த நம்பிக்கை. காந்தியடிகள் மீது திரு. வி. க வுக்கு உள்ள அபார பக்திக்கு ஒரு முக்கிய காரணம், மகாத்மா இயற்கையோடியைந்த வாழ்வை ஆதரிப்பதே யாகும்.

"பெண் தெய்வங்கள்" என்ற சொற்றொடரை முதன் முதலில் திரு. வி. க. தான் உபயோகப் படுத்தினர் என்று நினைக் கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள அத்தனை பெண்களையும் திரு. வி. க. அத்தனை தெய்வங்களாகவே கண்டார்.

திரு. வி. க. வின் 'பெண் தெய்வங்கள்' சம்பந்தமாக யாராவது பரிகாசம் செய்தாலும் அவர் அதைப் பொருட்படுத்துவதில்லை. அவர்களுடைய பரிகாசத்துக்கு எதிராக, "எனக்குப் பெண்ணியற்கை உண்டு; என் உள்ளம் பெண் உள்ளம்" என்று அடிக்கடி கூறுவார். இம்மாதிரியே, அவரைப் பற்றிச் சிலர் "முதலியாரா? பரம சாது!" என்று சொல்லுவதுண்டு. இதை முன்னிட்டே அவர் புதிதாக அச்சுக்கூடம் தொடங்கிய போது, "சாது அச்சுக்கூடம்" என்று பெயரிட்டார்.

"நவசக்தி"யில் நான் தொண்டாற்றிய காலத்தில் சில சமயம் சூளையில் நடந்த தொழிலாளர் கூட்டங்களுக்குச் சென்றிருக்கிறேன். தொழிலாளர் கூட்டந்தானே என்பதற்காகத் திரு. வி. க தமது பிரசங்கத்தின் நடையை மாற்றிக் கொள்வதில்லை. வழக்கம் போலவே தான் சொற்பொழிவு ஆற்றுவார். திரு. வி. க. கடல்மடை திறந்தது போல் பொழிந்த அரிய கருத்துக்களை அவர்கள் உணர்ந்தார்களோ, இல்லையோ. "இதோ நமது அருமைத் தோழர் ஒருவர் பேசுகிருர்!" என்பதை மட்டும் அவர்கள் பரிபூரணமாக உணர்ந்திருந்தார்கள்.

* * *

"நவசக்தி"யிலிருந்து நான் விலகிக்கொள்ள விரும்புவதாகத் திரு. வி. க. விடம் தெரிவித்த

போது அவரால் அதை நம்ப முடியவே இல்லை. வியப்பும் வருத்தமும்கூட அடைந்தார். விலகிக் கொள்ள விரும்புவதற்குக் காரணம் கேட்டதுடன், "இங்கு ஏதாவது குறை உண்டா?" என்றும் விசாரித்தார்.

உண்மை யென்னவென்றால், "நவசக்தி" காரியாலயத்தில் எனக்கு ஒரு குறையும் இருக்கவில்லை. எந்தப் பத்திரிகாலயத்திலும் ஓர் உதவி ஆசிரியருக்கு அவ்வளவு உரிமையும் மரியாதையும் அளிக்க மாட்டார்கள் என்பதை நன்கு அறிந்திருந்தேன். "நவசக்தி"யில் நான் செய்த தொண்டு எனக்கே அவ்வளவு திருப்தி யளிக்காததுதான் நான் விலகிக்கொள்ள விரும்பியதற்குக் காரணம். பெரும்பாலும் மொழி பெயர்ப்பு வேலைதான் "நவசக்தி"யில் நான் செய்ய நேர்ந்தது. திரு. வி. க. வின் தமிழ் நடையை என்னால் கையாள முடியவில்லை. என்னுடைய நடையில் நான் சொந்தமாக எழுத முயன்ற விஷயங்கள் "நவசக்தி"க்குப் பொருத்தமாக அமையவில்லை. இதனால் என் மனம் அமைதியை இழந்துவிட்டது. வேலையில் ஊக்கம் இல்லாமல் போய்விட்டது.

இதையெல்லாம் இவ்வளவு பட்டவர்த்தனமாக அப்போது திரு. வி. க. விடம் சொல்லவும் முடியவில்லை. "என்னமோ, மனம் அமைதியிழந்திருக்கிறது. ஆகையினால்தான் விலக விரும்புகிறேன். வேறு ஒரு குறையும் கிடையாது" என்று வற்புறுத்திக் கூறினேன்.

சில தினங்கள் இவ்விதம் விவாதம் நடந்த பிறகு கடைசியாக ஒரு நாள் திரு. வி. க. கூறினார்:—

"இதோ பார்! உன்னைப் போகச்சொல்ல எனக்கு விருப்பமில்லை. நீயோ பிடிவாதம் பிடிக்கிறாய். உன்னுடைய ஸ்தானத்தை இன்னும் ஆறு மாதத்திற்குக் காலியாக வைத்திருக்கிறேன். இந்த ஆறு மாதத்திற்குள் நீ எப்போது வேண்டுமானாலும் திரும்ப வந்து சேர்ந்து கொள்ளலாம். ஆறு மாதத்திற்குப் பிறகு உன்னைக் கேட்டுவிட்டு அப்புறம் வேறொருவரை நியமித்துக் கொள்கிறேன்."

திரு. வி. க. வின் இந்தப் பேரன்பும் பெருந்தன்மையும் என்னைப் பேச்சு மூச்சில்லாமல் அடித்துவிட்டன. உள்ளம் உருகிக் கண்ணீரும் துளித்துவிட்டது. ஒருகணம், "நான் போகவே இல்லை" என்று சொல்லி விடலாமென்று தோன்றியது. பிறகு, "பார்த்துக் கொள்ளலாம்; ஆறு மாதத் தவணைதான் கொடுத்திருக்கிறாரே?" என்று தீர்மானித்தேன். அவருக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து விடை பெற்றுக் கொண்டேன்.

திரு. வி. க வைப் பற்றிய என்னுடைய அனுபவங்களையெல்லாம் ஞாபகப்படுத்தி "அவர் எப்பேர்ப்பட்ட மனிதர்?" என்று சிந்தனை செய்தேன். அவருடைய குணாதிசயங்களுக்குள்ளே என் ஞாபகத்தில் மேலோங்கி நிற்பது, "அவர் எவ்வளவு நல்லவர்!" என்பதேயாகும்.

திரு. வி. க. வும் தமிழர் கல்விச் சங்கமும்

பெ. நா. அப்புஸ்வாமி

ஒருவரைப் பற்றி நினைவுக் குறிப்புக்களைப் பொதுவாக இரண்டு வகையாக எழுதலாம். ஒரு நடுநிலையில் நின்று ஒருவரை தராசில் வைத்து நிறுத்து, மதிப்பிடலாம். அல்லது, ஒருவரது சார்பாக இருந்து, அவரோடு உள்ள தொடர்பையும் அதன் காரணத்தையும் கூறி, எழுதுபவருடைய மன நிலையையும் அவர் பெற்ற பயனையும் வெளியிட்டுக் கூறலாம். திரு வி.க. என்னைவிட வயதில் மூத்தவர். தமிழ் அறிவில் பன்மடங்கு பெரியவர். ஆதலால், இங்கே நான் இரண்டாவது வகையையே பின்பற்றியிருக்கிறேன்.

திரு. வி. க. வோடு நான் நெருங்கிப் பழகத் தொடங்கியது சுமார் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் – திருத்தமாகக் கூறினல், 1917–ஆம் ஆண்டில். அப்பொழுது நான் கல்லூரிப் படிப்பை முடித்து, வக்கீல் தொழிலில் இறங்கியிருந்தேன். அத் தொழிலில் முன்னேற வேண்டும் என்று பலருக்கும் உள்ளதுபோல் எனக்கும் இருந்த ஆசையைத் தவிர, வேறு இரண்டு ஆசைகளையும் நான் கொண்டிருந்தேன். தமிழ் இலக்கியத்தை நன்கு அமைத்துப் பிற நாட்டினருக்கும் அதை அறிவுறுத்த வேண்டும் என்பது ஓர் ஆசை; விஞ்ஞானத்தை நன்கு கற்றுத் தமிழில் தெளிவாக வெளியிடவேண்டும் என்பது மற்ருேர் ஆசை.

எனது முதலாவது ஆசையை நிறைவேற்றிக் கொள்ள எனக்குச் சில வாய்ப்புக்கள் இருந்தன. என் குடும்பத்தினருக்குத் தமிழில் பற்றும் திறமையும் இருந்ததும், என் வீட்டில் தமிழ் நூல்கள் பல இருந்ததும், தமிழ்ப் பெரும் புலவரோடு பழக எனக்குப் பல வாய்ப்புக்கள் கிடைத்ததும், ஆங்கிலத்தையும் வட மொழியையும் நல்ல அறிஞர்க்ளிடம் கற்க நேர்ந்ததும் – என்று அவற்றைக் கூறலாம்.

எனது இரண்டாவது ஆசையை நிறைவேற்றிக் கொள்ளவும் அவ்வாறே எனக்குச் சில வாய்ப்புக்கள் இருந்தன. என் தந்தையார் டாக்டராக இருந்ததுப்; விஞ்ஞானத்தைத் தெளிவாக விளக்கிக் கூறவல்ல ஆசிரியர்களிடமும் பேராசிரியர்களிடமும்

With the Best Compliments

of

M/s JAYANT PAPER BOX FACTORY

30, WESTERN INDIA HOUSE,

FORT, BOMBAY - I

JAYANT, A LEADING NAME

IN

PACKAGING.

நான் கற்றதும்; எனது உறவினர்களும் நண்பர்களும் பூதத்துவம், தாவர நூல், விலங்கு நூல் முதலியவற்றில் மிக்க தேர்ச்சி உடையவர்களாக இருந்ததும்; தாங்கள் படித்துவந்த நூல்களைப் புரட்ட எனக்கு வாய்ப்பையும் ஊக்கத்தையும் அவர்கள் அளித்ததும்; எனது பேராசிரியர் தமது சோதனைச்சாலையில் உள்ள இரசாயனப் பொருள்களை இரண்டரை ஆண்டுக் காலம் வீணாக்கித் தம்மிடம் நான் கற்ற இரசாயனத்தைக் கைவிட்டதற்காக என்னைக் கடிந்து பேசியதும்; வக்கீல் தொழிலை கற்கத் தொடங்கியபோது எனது குருவின் வீட்டில் ஏராளமான வான சாத்திர நூல்களும், டெலஸ்கோப்பும் இருந்ததும்; 'தமிழர் கல்விச் சங்கம்' நிறுவப்பட்டதும் **தமிழர் நேசன்** பத்திரிகை தொடங்கப்பட்டதும்; — என்று சொல்லலாம்.

1917-ஆம் ஆண்டில், என்து சிறிய தகப்பனாராகிய அ. மாதவையர், நீதிபதி சதாசிவ ஐயர், வக்கீல் வேங்கடராம சாஸ்திரியார், பத்திரிகாசிரியர் அ. அரங்கசாமி ஐயங்கார், போலீசு அதிகாரி ச. பவானந்தம் பிள்ளை, வக்கீல்கள் டி. வி. கோபாலசுவாமி முதலியார், எஸ். முத்தையா முதலியார், பேராசிரியர்கள் கே. பி. இராமநாத ஐயர், டி. எஸ். சுப்பிரமணிய ஐயர், முதலிய பல அறிஞர்கள் 'தமிழர் கல்விச் சங்கம்' என்னும் சங்கத்தைச் சென்னையில் தொடங்கிவைத்தார்கள். தமிழ் நாட்டாருக்குத் தமிழ் மொழியின் வாயிலாகப் புதிய அறிவைப் (முக்கியமாக விஞ்ஞானத்தைப்) பரவச் செய்வதே அதன் முக்கிய நோக்கம். அந் நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு, அச் சங்கம் சில பொதுக் கூட்டங்களை நடத்தி வந்தது; **தமிழர் நேசன்** என்னும் பத்திரிகையையும் வெளியிட்டு வந்தது. நீதிபதி சதாசிவையர் அச் சங்கத்தின் தலைவர்; டி வி. கோபாலசுவாமி முதலியார் அதன் செயலாளர்; அ. மாதவையர் அப் பத்திரிகையின் ஆசிரியர். சில காலத்துக்குப் பின் துணைச் செயலாளராகவும் துணைப் பத்திராதிபராகவும் இருந்து பணிபுரியும் வாய்ப்பு எனக்கு அளிக்கப்பட்டது. பின்னர் செயலாளராகவும் ஆசிரியராகவும் நான் பணி ஏற்க வேண்டியதாயிற்று.

அக்காலத்தில் கனம் நீதிபதி சதாசிவ ஐயரோடு திரு வி. க. வுக்கு மிக்க தொடர்பு இருந்தது. இருவரும் தமிழில் பேராவல் உடையவர்கள்; நாட்டின்மீது மிக்க பற்றுடையவர்கள். ஏழை, எளியவர், தாழ்ந்தோர், தாழ்த்தப்பட்டோர், முதலியவர்களின்மீது இரக்கம் உள்ளவர்கள்; அவ்வாறு வருந்துபவர்களுடைய ஏங்கிய நிலையை மாற்றி, அவர்களை உயர்த்த முயன்றவர்கள்; தங்கள் தங்கள் முறையில் தலைசிறந்த தெய்வபக்தி உடையவர்கள்; தெய்வ பக்தியை வளர்க்கத் தொண்டு ஆற்றி வந்தவர்கள்; சமரச மனப்பான்மை கொண்ட 'தியசாபிகல் சொசைடி' உறுப்பினர்கள்; இனிய குணமும் சிரித்த முகமும் உடையவர்கள். சதாசிவ ஐயர் எனது தந்தையின் நண்பர்; எனது நண்பரின் தந்தையுங்கூட;

என்னைக் குழந்தைப் பருவம் முதல் தெரிந்தவர்; பின்னர் உறவினராகவும் ஆக நேர்ந்தது. அவரோடு நான் மிக நெருங்கிப் பழகி வந்த காரணத்தால், எனக்குத் திரு. வி. க. வோடும் நல்ல பழக்கம் ஏற்பட்டது.

அக்காலத்தில் திரு. வி. க. **தேச பக்தன்** பத்திரிகையைத் திறமையோடும், ஆர்வத்தோடும், இணையற்ற முறையில் நடத்தி வந்தார். நாட்டின்மீது மட்டே இல்லாப் பற்ருேடு, பிழையே இல்லாத தமிழில் தம் கருத்துக்களையும், பிறருடைய கருத்துக்களையும், செய்திகளையும், நிகழ்ச்சிகளையும், வெளியிட்டு வந்தார். தமிழை வளம்படுத்தி அரசியல் துறையில் பயன்படுத்தலாம் என்று வாய் மூலமாக மட்டும் அன்றிச் செயல் மூலமாகவும் வழிகாட்டி வந்தார். அப் பத்திரிகையின் முதல் பக்கத்தில் சிறந்த கருத்துக்கள் நிரம்பியவையும் பத்திரிகையின் போக்கில் பொருத்தமானவையுமான எளிய பகுதிகளை அவர் சங்க நூல் முதலிய பழந் தமிழ் நூல்களிலிருந்தும் எடுத்து வெளியிட்டு வந்தார். ஓர் உதாரணமாக

நெல்லும் உயிர் அன்றே; நீரும் உயிர் அன்றே;
மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகம்;
அதனால், யான் உயிர் என்பது அறிகை
வேல் மிகு தானை வேந்தர்க்குக் கடனே.

என்னும் அடிகளைக் கூறலாம். இந் நான்கு அடிகளே புறநானூற்றின் 186-ஆம் பாடலாக அமைந்துள்ளன.

இவ்வாறு பணிபுரிந்த திரு. வி. க. அவர்களை நான் எங்கள் சங்கத்தின் பொருட்டும், எங்கள் பத்திரிகையின் பொருட்டும் அடிக்கடி கண்டு, நெருங்கிப் பேசி, ஐயங்களைத் தீர்த்துக் கொண்டதுண்டு. சொற்களை அமைப்பதற்கும், கருத்துக்களை வெளியிடுவதற்கும், அவரது துணையைப் பல முறை நாடியதுண்டு. அவர்களிடமிருந்து பல செய்திகளை அவ்வப்போது தெரிந்து கொண்டதுண்டு.

மக்களின் நலனை மேம்படுத்துவதற்கு இரண்டு உறுப்புக்கள் உறுதுணையாக உள்ளன. ஒன்று சீரிய வாய்ப்புக்களை உடைய உடல்-நிலை; மற்ருென்று பண்பட்ட அறிவை உடைய மன-நிலை. சுவர் இல்லாமல் சித்திரம் இல்லை. உடலுக்கு உறுதியையும் வலிமையையும் அளிப்பது விஞ்ஞானம்; மனத்துக்குத் தெளிவையும் அமைதியையும் அளிப்பது சமயம். இவ்விரண்டும் மக்களுக்கு இரண்டு கண்கள் போன்றவை; இரு கைகளும் கால்களும் போன்றவை. இவை இன்றிச் சீராகக் காணமுடியாது, முன்னேறிச் செல்ல முடியாது, செயல் புரியவும் முடியாது.

திரு. வி. க. அவர்களுக்குத் தமிழ் நாட்டில் விஞ்ஞானம் வளர வேண்டும் என்பதிலும் கருத்து இருந்தது. விஞ்ஞானத்தை அவர்

ஒரு சிறிதும் தெரிந்துகொண்டும் இருந்தார். திரு. வி. க. அவர்கள் ஓரிடத்தில் எழுதியிருப்பதைப் பாருங்கள். "உடல் ஒருவித விளக்கு. இதை "மாயாதனு விளக்கு" என்றனர் ஆன்றோர். உயிர் அறியாமை இருளில் மூழ்கிக்கிடப்பது. படிப்படியே அதன் இருளைப் போக்கி, அறிவை விளக்கம் செய்வது உடல். அதனால் உடல் "விளக்கு" என்று சொல்லப்பட்டது. உயிர், பலதிற உடல்களில் ஒன்ற ஒன்ற, அதனிடை அறிவு விளக்கம் பெருகிப் பெருகி வளர்கிறது. இவ் வளர்ச்சிக்குத் துணை புரியும் பண்பு இயற்கையில் இருக்கிறது. இது நம் முன்னோரால் காணப்பட்டதே. இதன் உண்மையில் இக்கால அறிஞர்க்கு ஐயப்பாடு விளைந்துவந்தது. இனி அவ்வையப்பாட்டுக்கு இடம் இராது. அறிஞர் ஹெக்கல், டார்வின், முதலியோர் விஞ்ஞான வழியில் நிகழ்த்திய ஆராய்ச்சிகள் வெளிவந்துள்ளன. அவை இக்கால அறிஞரின் ஐயப்பாடுகளைக் களையவல்லன.

'உடல்வாயிலாக உயிர் பெற்றுவரும் விளக்கம் (வளர்ச்சி) உள்ளது சிறத்தல் என்பது. உள்ளது சிறத்தலைக் கூர்தல் என்பர் தொல்காப்பியனார். கூர்தலறம் (evolution) உலகை வளர்த்து வருகிறது. உலக வளர்ச்சிக்கென்று கூர்தலறம் இயற்கையில் அமைந்துள்ளது.'

அறிவு வளர்ச்சிக்கு ஏற்ற சிறந்த நூல்கள்...

புதிய வெளியீடுகள்

குடியரசும் மக்களும் – அமைச்சர் எம். பக்தவத்சலம்	ரூ. 2–50
மாபெரும் எழுச்சி – ஜான் ஸ்டிரேச்சி	... 3–50
கவியரசரின் திக்விஜயம் – ஸ்ரீ ஜோதிஷ் சந்திர கோஷ் தமிழாக்கம்: சு. கிருஷ்ணமூர்த்தி, M.A.,	3–00
நாமும் நமது உலகமும் – டி. என். ராமச்சந்திரன்	... 2–00
எறும்பும் மனிதனும் ,,	... 1–50
உடலும் உயிரும் ,,	... 1–50
அறிவியல் மேதை எம்.என். ராய் – வை. சாம்பசிவம்	2–00
ஆல்பிரெட் நோபெல் – அ. சிங்காரவேலு	... 2–50
கல்வியில் வளம்பெற... ,,	... 1–25

- பள்ளிக்கூட பாட நூல்கள் வெளியிடுவோர்
- நூல்நிலையங்கட்கு புத்தகங்கள் வழங்குவோர்

இமயப் பதிப்பகம்

நாகப்பட்டினம் :: சென்னை - 1.

எங்கள் சங்கத்தில் சிறு கூட்டங்கள் நிகழும் போது, சிற்சில வேளைகளில், அவர் வருவதுண்டு. அவற்றில் கலந்து கொள்வதும் உண்டு. மேலும், குறிப்பாக, அச் சங்கத்தின் முதலாவது ஆண்டுக் கூட்டம் 21-3-1918 இல் நடைபெற்றபோது, அவர் அதில் சிறப்பான ஒரு விரிவுரை நிகழ்த்தினார். பலரும் அதைக் கேட்டுச் சுவைத்தார்கள். அதைப் பற்றித் **தமிழர் நேசன்** பத்திரிகையின் முதலாவது தொகுதியில் பின்வரும் செய்தி வெளிவந்தது.

காரியாந்தக் கூட்டம் முடிந்தவுடன், பகிரங்கமான பொதுக் கூட்டம் ஆரம்பித்தது. "தேச பக்தன்" பத்திராதிபரான பண்டிதர் டி. வி. கலியாண சுந்தர முதலியாரின் பிரசங்கம் முதலில் நடைபெற்றது. அவர், பண்டைத் தமிழர்களையும், அவர்களின் கல்வி முறை இலக்கிய முறைகளையும், தற்காலத்தில் இப்படிப்பட்ட சங்கங்களின் அவசியத்தையும், '**தமிழர் நேசன்** பத்திரிகை செய்து வரும் நல்ல வேலையையும் பற்றி விவரமாக எடுத்துப் பேசினர்.

அவரோடு நான் கொண்ட நட்பு, பழகப் பழக, வளர்ந்து வந்தது. சதாசிவ ஐயர் காலமான பிறகும், மக்களின் ஆதரவின்மையால் **தமிழர் நேசன்** நின்று போன பின்பும், நாங்கள் ஒருவரை ஒருவர் காண அத்தனை வாய்ப்புக்கள் ஏற்படவில்லை. பல ஆண்டுகளுக்குப் பின்னர் (1932 இல்) '**சுதேசமித்திரன் பொன் விழா**' நடைபெற்ற போது, பி. சம்பந்த முதலியாரும், பி. சிவராவும், நானும், அதன் செயலாளர்களாக இருந்தபோதும், அதற்குப் பின்னர், **தமிழ் அன்பர் மகாநாட்டின்** செயலாளரில் ஒருவனாக நான் பணி புரிந்தபோதும், அவரைச் சற்றே அடிக்கடி காணக் கிடைத்தது.

என்னுடைய தமிழ்ப்பற்றை - முக்கியமாகச் சங்க இலக்கியத் துறையில்—தூண்டியவர்களுள் அவர் ஒருவர். தமிழைப் பிழையற எழுதுவதும், தமிழ்த் தெய்வத்தைச் சிறப்புறச் செய்வதும், தமிழரின் மறக்கொணாக் கடமைகள் என்று கூறி, அவற்றுக்கு வழியும் வகுத்துக் காட்டியவர்களுள்ளும் அவர் ஒருவர். அவரை நினைத்து நினைத்துப் பலகாலும் நன்றி செலுத்தியதுண்டு. இப்போதும் அவருக்கு என் அஞ்சலியைச் செலுத்துகிறேன்.

ஒரே உலகம்

இப்பொழுது உலகம் ஒன்றுபடுதல் வேண்டும் என்றும் கிளர்ச்சி யாண்டும் தோன்றியுள்ளது. கிளர்ச்சிக்கு அடிகோலிய பெருமை தமிழ்நாட்டுக்கு உண்டு. பழந்தமிழ், உலகம் உலகம் உலகம் என்றே நினைந்து, என்றே பேசி, என்றே கொள்கை ஆற்றினன். அந்நினைவும், பேச்சும், செய்கையும் உலகில் கருக்கொண்டு, உருக்கொண்டுள்ளன. இனி உலகம் முழுவதும் ஒருகுலமாதல் ஒருதலை.

— திரு. வி. க.

அரிய பெருந்தன்மை

டாக்டர் மு. வரதராசன்

ஆசைகளில் அழுந்திப் புலன்களுக்கு விருந்து அளித்துப் பிறகு துன்பங்களுக்கும் ஆளாகி வருந்தும்வகையில் இல்வாழ்க்கை நடத்துவது எளிது; அல்லது, துறவுக்கோலம் பூண்டு ஒரு மடத்தையோ அதுபோன்ற அமைப்பையோ சார்ந்து தவறு செய்தோ செய்யாமலோ துறவு வாழ்க்கை நடத்துவதும் எளிது. முன்னது, நாவிற்குச் சுவையானவற்றை விருப்பம்போல் உண்டு நோய் வந்தபோது வருந்தி, மருந்துட்கொள்வது போன்றது. பின்னது பட்டினி நோன்பை மேற்கொண்டு வாயோடும் வயிற்றோடும் போராடுவது போன்றது. இந்த இரண்டும் எளியவை; ஆனால், குடும்பத்தில் இருந்தபடியே, உலகத்தொடர்புகள் மேற்கொண்டபடியே, பற்றற வாழ்க்கை நடத்துவது அரியது ஆகும். திரு. வி. க. சில ஆண்டுகள் மனைவியோடு வாழ்ந்தார். மனைவியார் இறந்தார். தமையனாரின் குடும்பத்தில் பிரியாமல் நின்றார்; அந்தக் குடும்பத்தின் காரணமாக எல்லாத் தொடர்புகளையும் மேற்கொண்டார். ஆனால் எதிலும் பற்றுக் கொள்ளாமல் துறவு நெஞ்சத்தோடு வாழ்ந்தார். உற்றார் உறவினர் வந்து போயினர்; பேசி உறவு கொண்டாடினர். அவர்களைத் திரு. வி. க. ஒதுக்கவில்லை; வெறுக்கவில்லை. ஆனால் அந்தத் தொடர்புகள் எல்லாம் பரந்த உலகத்தின் ஒரு பகுதியாகவே அவருக்கு அமைந்தன; குறுகிய சிறு எல்லைப் பற்றாக அவை கட்டுப்படுத்தவில்லை. அவருடைய பற்றற்ற துறவு வாழ்க்கையைக் கண்ட துறவியர் ஒரு சிலர், "நீங்கள் இப்படி ஒரு பற்றும் இல்லாமல் இங்கே வாழ்வதைவிட, எங்களைப்போல் காவி உடுத்து வெளியே வந்துவிடலாமே, கவலை இல்லாமல் இருக்கலாமே" என்றார்கள். அவர்களின் வேண்டுகோளுக்கு அவர் செவிசாய்க்கவில்லை. புன்முறுவல்பூத்து, "இருக்கட்டும் சாமி" என்றார் ஒருமுறை. மற்றும் சிலரோடு பேசிக் கொண்டிருந்த போது, "என் தமையனாரும் மற்றவர்களும் என்ன தீங்கு செய்தார்கள்? இந்த அச்சகமும் பத்திரிகையும் என்ன தீங்கு செய்தன? இவற்றை வெறுத்து ஏன் ஓட வேண்டும். இந்த வெள்ளை வேட்டியின் பெருமையைக் காப்பாற்றிவிட்டு மாள்வேன்" என்றார். மனைவி மக்களோடு இருந்து

With the compliments of :

Makers of :

NEI

Power & Distribution Transformers
Electric Motors
Motorised Grinders & Polishers
Monoblock Pumps

and its subsidiary

Makers of :

CISCO

Metal Cutting Hydraulic Band Saw Machines
Planitor Surface Grinders
Double Action Precision Vices
Quality Ferrous & Non-ferrous Castings

NATIONAL ELECTRICAL INDUSTRIES LTD.,
Head office & Works: Industrial Estate, Lalbaug, Bombay - 12.

CRESCENT IRON & STEEL CORPORATION LTD.,
Head office : Industrial Estate, Lalbaug, Bombay - 12.
Works : Goregaon, Bombay - 62.

TEXTOOL

Manufacturers of :

- COMPLETE RANGE OF TEXTILE SPINNING MACHINERY
- DIESEL ENGINES
- MACHINE TOOLS
- RAILWAY SIGNALLING EQUIPMENTS (In Collaboration with Nippan Signal Co. Ltd., Japan)
- SPECIAL STEELS

For Particulars please Contact :

TEXTOOL COMPANY LTD.,

GANAPATHY P. O. :: COIMBATORE.

Grams: "TEXTOLCO" Phone: 2131 & 2132

இன்ப துன்பங்களை ஏற்று வாழும் சூழ் இல்லாத ஒருவர் துறவியாகவும் ஆகாமல், பற்றற்ற தூய வாழ்க்கை நடத்துதல் என்பது எளிது அன்று. திரு. வி. க. அத்தகைய அரிய வாழ்வைப் பல ஆண்டுகள் வாழ்ந்து காட்டிய சான்றோர்.

'பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்ற பொய்யாமொழிக் கருத்தை பல முறை பலர்க்கும் எடுத்துச் சொன்னவர் திரு.வி.க. பொருள் வருவாய்க்கு நன்கு உதவி செய்யும் பத்திரிகை ஆசிரியர் தொழிலில் பல ஆண்டுகள் இருந்தவர் அவர்; சாது அச்சுக்கூடம் என்னும் அச்சுக்கூடத்தின் உரிமையாளராகவும் இருந்தவர்; அன்றாடம் பொருளின் தேவையை உணர்ந்துவாடும் தொழிலாளர்களைத் திரட்டி தொழிலாளர் சங்கம் அமைத்துப் பெருங்கூட்டங்கள் கூட்டி ஊர்வலங்கள் அமைத்து வேலை நிறுத்தங்களும் நடத்தியவர் அவர். (இந்தியாவில் முதல் முதலாகத் தொழிலாளர் சங்கம் அமைத்து உதவிய இருவருள் அவர் ஒருவர் என்பதை இங்கே கருதல் வேண்டும்.) வேலை நிறுத்தங்களின் போது பணம் பெருந்தொகையாக அவர்முன் வந்து வந்து எட்டிப் பார்த்தது. அந்தப் பெருந்தொகைகளை வரவேற்று, தொழிலாளர்களைக் காட்டிக் கொடுத்து முதலாளிகளை மகிழ்விக்கும் கீழ்த்தன்மை அவர் கனவிலும் அறியாத ஒன்று. பலருடைய பணத்தின் ஆற்றலை எல்லாம் துரும்பாக மதித்தார். தொழிலாளர் சங்கத்தில் புரண்ட பணத்திலும் அவருடைய மென்மையான கை படவில்லை; அச்சகத்து வருவாயையும் அவருடைய கை தொடவில்லை. பணத்தைக் கையில் எடுத்தாண்டு, அதனால் ஊக்கம் பெற்றுக்கடமைகளில் ஈடுபடல் எளியது; அல்லது பணத்தைப் பற்றிக் கவலைப்படாமல் எந்தச் சங்கம் முதலான தொடர்பும் இல்லாமல் முழுதும் ஒதுங்கித் தனியே வாழ்தலும் எளியது. ஆனால் அச்சகத்திலும் மற்ற அமைப்புக் களிலும் நல்ல தொடர்பு வைத்துக்கொண்டே பணத்திலும் வருவாயிலும் நோக்கம் இல்லாமல் வாழ்ந்த அவருடைய வாழ்வு அருமைப்பாடு உடையதேயாகும். பணத்தைக் கையால் தொடுவதில்லை என்ற நோன்பு கொண்ட துறவிகளும் உள்ளனர். திரு. வி. க. அத்தகைய நோன்பும் கொள்ளவில்லை. வீட்டிலிருந்து தொழிற் சங்கத்துக்கோ வேறு இடங்களுக்கோ வெளியே புறப்படும் போது, அச்சகத்தில் வந்து நிற்பார்; தலைவர் ஒரு ரூபாய் அல்லது இரண்டு ரூபாய் தருவார். அதைக் கையில் வாங்கி சட்டைப் பையில் போட்டுக் கொள்வார். திரும்பி வந்தபின், அந்தப் பையில் சில அணுக்கள் எஞ்சியிருக்கும். அச்சகத்து வேலையாள் ஒருவனை அழைத்து எஞ்சியசில்லறையைக்கொடுத்து விட்டு, சட்டைப் பையின் கனத்தைப் போக்கிக் கொள்வார். சட்டைப் பை தவிர, வேறு பணப்பை (மணிபர்ஸ்) வைத்து அறியாமல் பல ஆண்டுகள் வாழ்க்கை நடத்தினர். தமக்கு என்று, தம் பொருளுக்கு என்று ஒரு பெட்டியும் வைத்துக் கொள்ளவில்லை; பெட்டி

இல்லாத காரணத்தால் பூட்டும் சாவியும் தேவையற்ற நிலையில் வாழ்க்கை நடத்தினார். எல்லாத் தொடர்பும் கொண்டு வாழ்ந்த ஒருவர், சாவியின் தொடர்பு இல்லாமல் எப்படி வாழ முடிந்தது என்பது நினைந்து வியக்கத் தக்கதாக உள்ளது.

ஒரு மதத்தில் பற்று கொண்டு மற்ற மதங்களையும் மற்ற மத நூல்களையும் வெறுப்பது எளிது; ஆனால் ஒருவர் தாம் பிறந்து வளர்ந்த மதத்தில் உண்மைகள் இருப்பது போலவே மற்ற மதங்களிலும் உண்மைகள் உண்டு என்று நம்பிக்கை கொண்டு சமரசத்தைப் போற்றி வாழ்வது அரிது; மிக அரிது. ஒரு திருவள்ளுவர் அப்படி வாழ்ந்தார்; ஓர் இராமலிங்க சுவாமிகள் வாழ்ந்தார்; ஓர் இராமகிருஷ்ண பரமஹம்சர் வாழ்ந்தார்; ஒரு காந்தியடிகள் வாழ்ந்தார் என்று ஒரு சிலரையே அப்படிப்பட்ட அரிய வாழ்வு வாழ்ந்தவர்கள் என்று சொல்லமுடிகிறது. திரு. வி. க. சைவராகப் பிறந்தார்; வளர்ந்தார்; பிற சமயங்களைப் பழிக்கும் அளவுக்குச் சைவத்தில் பற்று மிகுந்தவராகவும் இருந்தார். ஆனால் வளர வளர பிறசமயத்தாரோடு பழகப்பழக, மற்ற மதக்கொள்கைகளிலும் நல்லவை இருத்தலை உணர்ந்தார். மனத்தில் குறுகல் தீர்ந்தது; கோணல் தீர்ந்தது. நாயன்மாரின் பாடல்களைப் படித்தது போலவே ஆழ்வார்களின் பாடல்களையும் படித்தார்; சமணர் நூல்களையும் கற்றார். கிறிஸ்துவின் மொழிகளையும் பயின்றார். கடவுள் ஒருவரே, எல்லா மதத்தார்க்கும் பொது வானவரே கடவுள் என்ற தெளிவைப் பெற்றார். அதன்பிறகு சமரசம் சமரசம் என்று முழங்கினார்; பொதுமை வேட்டல் பாடினார்; சிவனருள் வேட்டல், திருமால் அருள் வேட்டல், கிருஸ்து அருள் வேட்டல், அருகன் அருகே என எல்லாம் பாடினார். எல்லா மதத்தாரையும் நண்பராகக் கொண்டார்; எல்லா மதக் கூட்டங்களுக்கும் சென்றார்; எங்கும் உண்மை இருத்தலை எடுத்தோதினார். பிறந்த சமயம் அவருடைய உள்ளத்தின் வளர்ச்சிக்குத் தடை செய்யவில்லை; உறுதுணையே செய்தது. உலக மனிதரானார்; 'மனிதம்' என்ற சொல்லைப் படைத்து இதன் பெருமையை நிலைநாட்டினார்.

அரசியலில் ஈடுபடாமலே 'இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன' என்று ஒதுங்கியிருத்தல் எளிது. அல்லது, ஒரு கட்சியில் ஈடுபட்டுப் பற்றுக் கொண்டு மற்றக் கட்சிகளைப் பழித்து வெறுத்தலும் எளிது. ஆனால் தன் கட்சியில் சில உண்மைகள் இருத்தல்போலவே மாற்றுக் கட்சியிலும் வேறு சில வகையில் உண்மைகள் இருத்தல் கூடும் என்று எண்ணிப் பார்ப்பதும் அரிதே ஆகும். திரு. வி. க. தேசியக் கட்சியைச் சார்ந்து, தமிழ்நாட்டுக் காங்கிரசின் தலைவராகவும் விளங்கி பல மேடைகளில் பேசியவர்; பல வீர மொழிகள் எழுதியவர்; பல ஊர்களுக்குத் திரிந்து பணி பல புரிந்தவர். ஆனால் வேறு சில துறையில் மற்றக்கட்சியின்

உழைப்பிலும் உண்மை உள்ளது என்ற ஒளி அவருடைய உள்ளத்தில் வீசியபிறகு, தாம் பிடித்ததே பிடி என்று பழைய போக்கினை விடாமல் பற்றுக் கொண்டு ஆணவத்தோடு திரியவில்லை; மற்றக் கட்சியைப் பழிப்பதை விட்டு, அடக்கத்தோடு தொண்டு புரியத் தலைப்பட்டார். கட்சியாட்களின் போக்கில் தவறுகள் இருத்தலால், கட்சிக் கொள்கைகள் எல்லாமே குற்றம் என்று எண்ண அவர் நெஞ்சம் இடம் தரவில்லை. அரசியலிலும் நடுநிலைமைப் போக்கை மேற்கொண்டு, எங்கிருந்தாலும் உண்மைக்குத் தலைவணங்கும் அஞ்சாமை உடையவரானார். இந்நிலையில் அவருடைய உண்மையும் உயர்வும் அறியாத சிலர் அவரைப் பழித்தார்கள்; பகைத்தார்கள். பழித்தவர்கள் போற்றும் காலம் வந்தது; பகைத்தவர்கள் உறவு கொண்டாடும் காலமும் வந்தது. 'தொடர்ந்து ஒரே கட்சியில் உறுதியாக இருந்திருந்தால், திரு. வி. க. உயர்ந்த பதவிகள் பெற்றிருக்கலாம்; மற்றக் கட்சியாருடன்சேராமல் வெறுத்திருந்தால், இன்று ஒப்பற்ற கட்சித் தலைமை பெற்றிருக்கலாம்' என்று சிலர் முணுமுணுத்தார்கள். ஆனால் ஒரு சில பதவியின் ஆசை காரணமாக, உணர்ந்த உண்மைகளை உதறித் தள்ளல் அவரால் முடியவில்லை. உண்மைகளை உரைக்க வந்த கட்சிகளை விட உண்மைகள் உயர்ந்தவை என்று அவர் நடுநிலைமையை – திருவள்ளுவர் போற்றிய 'செப்பம்' என்னும் பண்பை – கைவிடாதவராக விளங்கினார். எல்லாரும் செல்லும் வழி எளிய வழி என்று தேய்ந்த பாதையை நாடி அவருடைய மனம் குறுகித் தேங்கவில்லை; ஒரு சிலர் செல்லும் வழியாக இருந்தாலும்–எவருமே நாடாத வழியாக இருந்தாலும்–உண்மை விளங்கும் வழியையே போற்றுவேன் என்று உயர்ந்த நெறியில் நடந்தார். காந்தியடிகளே ஒரு காலத்தில் 'நான் நாலணா செலுத்தும் காங்கிரஸ் உறுப்பினனும் அல்ல; நாட்டுக்கு உழைக்கும் ஒரு பொதுத் தொண்டன்' என்று சொன்ன பிறகே, திரு வி.க. வைப் பழித்த ஒரு சிலர் 'இந்த வழியும் ஒரு வழிதான்' என்று மெல்ல உணர்ந்தார்கள்.

கண்ணால் காணத்தக்க–புலன்களுக்கு எட்டும் பொருள்களை வெறுப்பதும் விரும்புவதும் எளிது. புலன்களுக்கு எட்டாமல் அறிவுக்கு மட்டும் எட்டும் கருத்துக்களையும் கொள்கைகளையும் வெறுப்பதும் விரும்புவதும் அரிது, மனித மனம் விருப்பு வெறுப்புக்களால் வளர்ந்தது. இளமை முதல் சிலரை விரும்புவதும் சிலரை வெறுப்பதுமே மனத்தின் இயல்பாகி விட்டது. அதனால் ஆட்களைப் பொறுத்த வரையில் விருப்பு வெறுப்பு இல்லாமல் எல்லாரிடத்திலும் பொதுவான அன்பு செலுத்துதல் உயர்ந்த படியாக உள்ளது; பலர்க்கு எட்டாத அரிய படியாக உள்ளது. புத்தர், கிறிஸ்து, காந்தி போன்ற பெருமக்கள் ஒருசிலராலேயே அது முடியும். அவர்கள் சில கருத்துக்களை – சில எண்ணங்களை – சில மனப்பான்

ண்மைகளை வெறுப்பார்களே அல்லாமல், அவற்றை உடைய ஆட்களை வெறுக்கமாட்டார்கள். திரு. வி. க.வின் வாழ்வில் இந்த அரிய பண்பு இயல்பாகக் காணப்பட்டது. அவருக்குச் சில உயர்ந்த நெறிகள் மிக விருப்பமானவை; புலாலுணவு, புகை பிடித்தல், கள்குடித்தல், விபசாரம், மிகுபொருள் விரும்பல், தொழிலாளரைச் சுரண்டல், கொள்ளை வியாபாரம், லஞ்சம் வாங்குதல் முதலியவை அவர் மிக மிக வெறுப்பவை. ஆனால் அவற்றை வெறுத்தாரே அல்லாமல், ஆட்களை வெறுக்கவில்லை. தம் கொள்கைகளுக்கு நேர் மாறான கொள்கை உடையவர்களையும் அவர் வெறுத்தொதுக்காமல் பழகினார். ஆட்களை வெறுத்தலும் பழித்தலும் எல்லார்க்கும் எளிமையாயிருக்க, அத்தகைய இயல்பான குணத்தை அவர் கடந்தார்; வென்றார்; எல்லா ஆட்களிடமும் அன்பு செலுத்தும் அரிய பண்பு உடையவராய், தீயோரை வெறுக்காமல் தீமையை மட்டும் வெறுக்கும் சான்றோராக விளங்கினார்.

சிலர் பழமை பழமை என்று எதிலும் பழமையைப் போற்றுவார்கள்; தங்கள் பழைய காலமே பொற்காலம் என்பார்கள்; தாங்கள் கற்ற நூல்கள், தங்கள் ஆசிரியர்கள், தங்கள் பழைய பழக்க வழக்கங்கள் எல்லாமே நல்லவை என்று கழிந்து போனவற்றை நினைந்து இரங்கிக் கொட்டாவி விடுவார்கள். தன்னம்பிக்கைக் குறைவாலோ வேறு காரணத்தாலோ அவர்கள் புதுமையான ஒன்றையும் விரும்ப மாட்டார்கள். பழையபாட்டு, பழைய உணவுக் கடை, பழைய உடை, பழைய நடிகர் என்று எல்லா வகையிலும் பழமையே பாராட்டுவார்கள். புதிய காலம் கெட்டுவிட்டது என்பார்கள்; இளைஞர்களின் புதிய பழக்க வழக்கங்களை எல்லாம் அடியோடு உதவாதவை என்று பழிப்பார்கள் தன் முனைப்பு மிகுதியாலோ வேறு காரணத்தாலோ, இன்னும் சிலர் பழமையை அடியோடு வெறுப்பார்கள். பழைய இலக்கியம், பழைய வழக்கம் எதையுமே காட்டு மிராண்டிக் காலத்தது என்று கண்மூடிப் பழிப்பார்கள். பழங்காலத்தில் ஒன்றுமே உயர்ந்தது இருந்ததில்லை என்று வெறிகொண்டு முழங்குவார்கள். இந்தப் போக்கும் எளியது; அந்தப் போக்கும் எளியது. ஆனால் சீர்தூக்கும் மனப்பான்மையோடு நல்லது எங்கே இருந்தாலும் அதைத் தேர்ந்து போற்றும் போக்கு எளியது அன்று; அது மிக மிக அரியது.

திரு. வி. க. உச்சிக்குடுமிக்காரர்; ஆனால் இளைஞர்களின் கிராப்பைப் போற்றினார். திரு.வி.க. நான்கு முழம் உடுத்தியவர்; அதனால் இளைஞர்களின் புதுவகை உடைகளைப் பழிக்கவில்லை. நெற்றியில் நீறு அணிந்தவர்; அதனால் நெற்றியில் ஒன்றும் அணியாதவர்களைப் பழிக்கவில்லை. பழைய கல்வி முறையில் நன்மை பல கண்டவர்; அதனால் புதிய கல்வி முறை சத்து அற்றது என்று பழிக்கவில்லை. பழைய தலைவர்களோடும் பழைய அறிஞர்களோடும்

பழைய புலவர்களோடும் நன்கு பழகியவர். அதனுல் புதிய அரசியல் தலைவர்களையும் புதிய அறிஞர்களையும் புதிய புலவர்களையும் மதிக்காமல் ஒதுக்கவில்லை. புதிய இளைஞர்களுக்கு மட்டற்ற ஊக்கம் தந்து தட்டிக்கொடுத்துப் போற்றுவார். 'இந்தக் காலம் மட்டமான காலம், எங்கள் காலம் பொற்காலம்' என்று பழமைப் பாட்டையும் அவர் வாய் பாடியதில்லை. 'பழங்காலம் இருள் சூழ்ந்தது; இந்தக் காலத்தில்தான் ஞாயிறு எழுந்தது' என்று புதுமை ஆரவாரத்தையும் அவர் வாய் எழுப்பியதில்லை. பழைய இலக்கியத்தை நன்கு கற்றுத் தேர்ந்த அவர், இன்றைய கவிஞர்களின் புதிய பாடல்களையும் வாயாரப் போற்றிப் பாராட்டினுர். பழைய தமிழ் நடையின் செழுமையிலே திளைத்த அவருடைய உள்ளத்திலிருந்து பிறந்த உணர்ச்சி, அவருடைய சொல்லிலும் எழுத்திலும் புதிய நடையாக உருக்கொண்டு தமிழுக்கே அணிகலன்களாகத் திகழ்ந்து வருகின்றன. புதிய போக்கில், புதிய தேவைகளுக்காகச் செய்தித்தாள் நடத்திய அவருடைய எழுதுகோல், பழைய தமிழை என்றும் பழித்தது இல்லை. அது ஒரு காலத்திற்குத் தேவையாக இருந்த அழகிய நடை என்று அதைப் போற்றி, இந்தக் காலத்திற்குத் தேவையான புதிய மொழிநடை என்று இதையும் போற்றிய அரிய பெருந்தன்மை அவருடையது. "நூலுக்கு ஏற்ற நடை பற்றி எழுதுவதும், இடத்துக்கு ஏற்ற நடை பற்றிப் பேசுவதும் எனது வழக்கம் என்பது நேயர்கட்குத் தெரியும்'' என்று 'இந்தியாவும் விடுதலையும்' என்ற நூலின் முன்னுரையில் அவர் குறித்துள்ளதும் காணலாம்.

இளமையில், முதிய சான்ருேர் பலருடைய அன்புக்கும் பாராட்டுக்கும் உரியவராய் விளங்கினுர் திரு. வி. க. இது அவர் எழுதிய 'வாழ்க்கைக் குறிப்புக்கள்' அறிவிக்கும் உண்மையாகும். அவரே முதுமையுற்ற காலத்தில் இளைஞர் பலருடைய - இளைஞர் எல்லாருடைய அன்புக்கும் மதிப்புக்கும் உரிய கிழவராக விளங்கினுர். இது அவர் காலத்து இளைஞர்கள் எல்லோருடைய உள்ளமும் உணர்ந்த உண்மை, இதுவும் அந்த அரிய பெருந்தன்மையையே விளக்குவதாகும்.

அமைதி

நானும் என்னென்னவோ செய்து உடம்பைக் காப்பாற்ற வேண்டும் என்று எண்ணினேன்; எழுதினேன்; சொன்னேன். இப்போதெல்லாம் என் மனம் மாறிவிட்டது. மற்றவர்களைப்போல் வாழ்ந்து மற்றவர்களுக்காக வாழ்ந்து செத்துப் போவதில்தான் உண்மையான அமைதி இருக்கிறது. அதுதான் உண்மையான வாழ்க்கை.

— திரு. வி. க.

திரு. வி. க. வின் தமிழ்த் தொண்டு

S. ஸ்ரீனிவாசன்

1917-ஆம் ஆண்டு. அப்போது திரு. வி. க. வுக்கு 34 வயது. 'சுயாட்சிக் கிளர்ச்சி'காரணமாக அன்னி பெசண்ட், அருண்டேல், வாடியா ஆகிய மூவரும் பாதுகாப்புக் கைதிகளாக வைக்கப்பட்டனர். அதுபற்றி நாட்டில் ஒரு பெரும் எழுச்சி யுண்டாயிற்று. 'சென்னை மாகாணச் சங்கம்' என்பது அப்போது தோன்றியது. அச்சங்க அமைச்சரில் கலியாண சுந்தரனுர் ஒருவர். அதன் ஆதரவில் கோகலே மண்டபத்தில்கேசவப்பிள்ளை தலைமையில் நடந்த கூட்டத்தில் நமது சுந்தரனுர் முதன் முதலாகப் பேசினுர். அதுவே அவருடைய அரசியல் கன்னிப் பேச்சு. பின்னர் தமிழ் நாட்டு அரசியல் உலகத்திலேயே ஒரு தலைசிறந்த பேச்சாளராக முதலியார் திகழ்ந்தார். அவர் உணர்ச்சியோடு பேசத் தொடங்கி விடுவாராஞல் அதனை நாம் பொழுது போவது தெரியாமல் நாள் முழுவதும் கேட்டுக்கொண்டிருக்கலாம். ஊக்கம் பிறக்கும். நாம் புது மனிதராய் விடுவோம். அவருடைய பேச்சுக்கு அத்தகைய சக்தி உண்டு.

1917 ஆம் ஆண்டு டிசம்பரில் சுந்தரனுர் 'தேசபக்தன்' பத்திரிகையின் ஆசிரிய பீடத்திலமர்ந்துஇரண்டரை யாண்டுகள் ஆற்றிய இணையிலாத் தொண்டினைத் தமிழுலகம் நன்கு அறியும். 'தேசபக்தன்' மூலம் பலருக்கும் அரசியல் உணர்ச்சியையூட்டினுர். 'தமிழ் தெரியாது' என்று கூறிப் பெருமிதங் கொண்டிருந்த பல தலைவர்களையும் தமிழில் பேசச் செய்தார்.

சுந்தரனுர் தமிழைப் பல வழிகளிலும் வளர்த்தார். தமிழில் உணர்ச்சியுடன் எழுத முடியும்: உலையா ஊக்கத்தை உண்டாக்க முடியும் என்பதைத் தம் எழுத்துக்களால் மெய்ப்பித்தார். தமிழில் தனித்ததோர் அழகிய, விழுமிய, தெள்ளிய நடை

யினைக் கண்டார். இன்று தமிழ்ப் பத்திரிகை உலகில் மிளிரும் மணிகள் பலர் அவரிடம் தயாரானவர்களே. சுருங்கச் சொல்ல வேண்டுமானால், சுந்தரனாரின் உரைநடை, தமிழில் ஒரு தனி நடையினை உண்டாக்கித் தமிழ் உரைநடையினை வளம்படுத்தியது எனலாம். 'தேசபக்தன்' மீது வாங்கியிருந்த முதல் ஈடுகாணத்தை அரசியலார் பறிமுதல் செய்தனர். அக்காலை சுந்தரனார் அது பற்றி எழுதிய தலையங்கங்கள் தமிழ் நாட்டில் ஒரு பெரும்புரட்சியை உண்டாக்கின. 'தேசபக்தன்' வாயிலாக அவர் தமிழ் நாட்டில் பல தலைவர்களையும் தொண்டர்களையும் உண்டாக்கினார்.

சுந்தரனார் அவர்கள் சுமார் இருபதாண்டுகள் தொடர்ந்து நடத்திய உயர் தனித் தாளாகிய 'நவசக்தி' பெரும் பல்கலைக்கழகமாக நின்று நிலவியது. தமிழ், சமயம், சமூகம், அரசியல், பொருளியல், தொழிலியல், சீர்திருத்தம், பெண்ணுலகு முதலிய பல துறைகளையும் 'நவசக்தி' பண்படுத்தியது; பாவலர் பலரை உண்டாக்கியது. சிறப்பாக 'நவசக்தி' தமிழ்வளர்ச்சி கருதிச் செய்த தொண்டு ஈடும் எடுப்பும் இல்லாதது. திரு. வி. க. வின் எழுத்தும்பேச்சும் அவருக்கே உரிய தனி நடையில் அமைந்தவை. அவருடைய மேடைத் தமிழ் தூய செந்தமிழாய் கேட்போர் உள்ளம் கவரும் இனிமையும் எளிமையும் அமைந்ததாக இருந்தது. அரசியல் முதல் சமயம் வரை பலதுறைப் பேச்சும் தனி நயத்துடன் அமைந்து விளங்கிற்று.

சுந்தரனாரின் எழுத்தும் அத்தகையதே. பெரிய புராணத்திற்கும், 'காரைக்கால் அம்மையார் திருமுறைக்கும் குறிப்புரையும்; திருக்குறளின் முதல் பத்து அதிகாரங்களுக்கு விரிவுரையும் எழுதியுள்ளார்.

தமிழ்ச்சோலை அல்லது கட்டுரைத் திரட்டு, தமிழ்த் தென்றல் அல்லது தலைமைச் சொற்பொழிவு, சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து, முடியா காதலா சீர்திருத்தமா, இந்தியாவும் விடுதலையும், என்னும் நூல்கள் அவ்வக்கால நிகழ்ச்சிகள் பற்றி அமைந்தவை ஆயினும் நிலைபெற்ற உரைநடை இலக்கியங்களாக உள்ளன.

முருகன் அல்லது அழகு, மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், பெண்ணின் பெருமைஅல்லதுவாழ்க்கைத் துணை, பரம்பொருள் அல்லது வாழ்க்கை வழி, உள்ளொளி என்பவை இந்த நூற்றாண்டு நூல்களில் சிறப்பிடம் பெற்றவையாகும்.

இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம், சைவத்தின் சமரசம், சைவத் திறவு, சன்மார்க்க போதமும் திறவும், சமரச சன்மார்க்கத் திறவு, தமிழ் நாடும் நம்மாழ்வாரும், இமயமலை அல்லது தியானம், கடவுள் காட்சியும் தாயுமானரும், சித்த மார்க்கம், தமிழ் நூல்களில் பௌத்தம், நினைப்பவர் மனம், சைவ சமய சாரம் முதலிய நூல்கள் அவருடைய சமயக் கொள்கையையும், சமரச சன்மார்க்கம் என்னும் பரந்த பொது நோக்கையும் தெளிவாக்குவன.

பொதுமை வேட்டல் என்னும் செய்யுள் நூலும் அத்தகையதாகும். முருகன் அருள் வேட்டல், திருமால் அருள் வேட்டல், சிவன் அருள் வேட்டல், கிறிஸ்து வின் அருள் வேட்டல் என்பன பக்திப் பாடல்களாகும்.

கிறிஸ்து மொழிக்குறள், இருமையும் ஒருமையும், அருகன் அருகே அல்லது விடுதலை வழி, பொருளும் அருளும் அல்லது மார்க்ஸியமும் காந்தியமும் என்னும் நூல்கள் சிறந்த பல உண்மைகளை விளக்குவன.

இருளில் ஒளி, சித்தத் திருத்தல் அல்லது செத்துப் பிறத்தல், முதுமை உளறல், வளர்ச்சியும் வாழ்வும் அல்லது படுக்கைப் பிதற்றல் ஆகிய நூல்கள் அவர் உடல் தளர்ந்து சோர்ந்த பிறகும், கண் பார்வை இழந்த பிறகும், நோய்வாய்ப்பட்டு வருந்திய போதும் பிறர்க்குச் சொல்லி எழுதச் செய்து வெளியிட்ட நூல்களாகும்.

நமது சுந்தரனுர் எந்தத் துறையில் ஈடுபட்டுத் தொண்டு செய்த போதிலும், எளிமையும் தூய்மையும் பொதுமையுமே அவருடைய வாழ்வில் விளங்கின. அவரது நடை, உடை, பழக்கம் முதலியவற்றில் இருந்த எளிமை தமிழகம் முழுதும் மூலை முடுக்கில் உள்ள இளைஞர், முதியோர், தொழிலாளர் முதலிய பலத் திறத்தாரையும், பிணித்தது. ‘உள்ளத்தில் ஒளியுண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாம்’ என்பதற்கேற்ப அவரது தூய்மை அவருக்கு எந்தத் துறையிலும் உண்மை துலங்கச் செய்தது. அவர் உள்ளத்தின் பொதுமை, காலம், இடம், மதம், கட்சி கருத்து முதலிய பல வேறுபாடுகளையும் கடந்து, பலரிடத்தும் அன்பு செலுத்தவும், உலகை ஒரு குடும்பமாக உணர்ந்து வாழவும் செய்தது.

தமிழ் முனிவர்

வெ. சாமிநாத சர்மா

திரு. வி. க. என்பர் பலர். கலியாண சுந்தரனார் என்பர் சிலர். யார் எப்படி வேண்டுமானாலும் அழைத்துக் கொள்ளட்டும்; எனக்கென்னவோ அவர் முதலியார் தான்; நான் அவருக்கு சர்மாதான். முதலியார் என்று சொல்லாமல், திரு. வி. க. என்றோ, வேறு விதமாகவோ நான் சொன்னால், அவர் சேய்மையில் இருக்கிற மாதிரி யாரோ அந்நியரை அழைக்கிற மாதிரி எனக்குப் படுகிறது. முதலியார் என்றால்தான் அவர் என் அண்மையில் இருக்கிற மாதிரி, நெருங்கிய உறவினர் ஒருவரை அழைக்கிற மாதிரி எனக்குத் திருப்தி உண்டாகிறது. உண்மையில் அவர் அண்மையில் கூட இல்லை; என் உள்ளத்திலேயே இருக்கிறார்; இந்தக் காற்றடைத்த பை கட்டவிழ்கிற வரையில் அங்கேயே இருப்பார்.

முதலியாரை நான் முதல் முதலாகப் பார்த்தது 1917-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள்; நாள் நினைவில்லை. அவரைப் பார்த்தது எந்நாளோ அந்த நாளே நான் எழுத்தாளனாகப் பிறந்த நாள். அதற்கு முந்தி நான் எழுதியிருக்கிறேன்; ஓரிரண்டு நூல்களும் வெளியிட்டிருக்கிறேன். ஆனால் எழுதுவதையே என் வாழ்நாள் பணியாக மேற்கொண்டது அன்றைய தினத்திலிருந்துதான். எனவே அந்த முதல் சந்திப்பு என் வாழ்க்கையிலே ஒரு திருப்பத்தைக் காட்டிக் கொடுத்தது. அதுகாறும் என் உள்ளத்தில் பொங்கிக் கொண்டிருந்த உணர்ச்சிகள் ஒருமுகப்பட்டு ஓட ஒரு வாய்க்காலை அமைத்துக் கொடுத்தது. ஆனால் திருப்பம் என்றும் வாய்க்கால் என்றும் இப்பொழுதுதான் சொல்கிறேன். அப்பொழுது ஒன்றும் தெரியாது. முதலியாரைக் கண்டேன். ஆட்கொண்டார்; ஆட்பட்டேன். அவ்வளவுதான் தெரியும். அந்த நிலையில் நாளும் கிழமையும் மறந்து நின்றேன். இன்னமும் நினைவுக்கு வரவில்லை. வராததற்காக வருத்தமுமில்லை.

உச்சிக் குடுமி. நெற்றியிலே பூசிய திருநீறு; முகத்திலே பூத்த புன்முறுவல்; உடம்பிலே சாம்பல் நிற வர்ணமுள்ள முழுக்கை பிளானல் ஷர்ட்; இடுப்பிலே நான்கு முழ வெள்ளை

வேஷ்டி; இந்தக் கோலத்தில்தான் முதல் முதலாக முதலியாரைக் கண்டேன்.

நான் அப்பொழுது அரசாங்க ஊழியனாக இருந்தேன். அதை நான் ஓர் அடிமைத் தளையாகக் கருதி வந்ததையும் வேண்டா வெறுப்புடன்தான் அதில் இருந்து வந்தேன் என்பதையும், என் உள்ளமெல்லாம் இலக்கியத்திலும், அரசியலிலும், பத்திரிகை உலகத்திலும் ஈடுபட்டிருந்ததென்பதையும் என் நண்பர் வாசுதேவ ஐயர் நன்கு அறிந்து கொண்டிருந்தார். ஒருநாள் காலை அவர் என்னிடம் வந்து 'எனது நண்பர் கலியாண சுந்தர முதலியார் **தேசபக்தன்** என்ற ஒரு தினசரிப் பத்திரிகையை நடத்தப் போகிறார் என்று அறிகிறேன். அப்பத்திரிகையில் சேர்ந்து பணியாற்ற உனக்கு விருப்பம் இருக்குமாயின் அவரிடம் உன்னைக் கூட்டிக் கொண்டு போகிறேன்' என்றார். திருவருள் கூட்டி வைப்பதாகக் கருதி உளம்பூரித்து உடன்பட்டேன். மறுநாளோ, அதற்கு மறுநாளோ வாசுதேவ ஐயரும் நானும் ராயப்பேட்டை சென்று முதலியாரைக் கண்டோம். வாசுதேவ ஐயர் என்னை அறிமுகப்படுத்தி வைத்து, நான் வந்திருப்பதன் நோக்கத்தையும் சுருக்கமாகத் தெரிவித்தார். தேசபக்தன் தொடங்கு நாள் எந்நாளோ அந்த நாளே தொடங்கி தாங்கள் அதில் சேர்ந்து பணியாற்றலாம் என்று முதலியார் என்னைப் பார்த்துக் கூறினார். என்ன ஆச்சரியம்! என்னை முன் பின் தெரியாது; என்னுடைய தகுதியைச் சிறிதுகூட பரிசீலனை செய்து பார்க்கவில்லை; இருந்தும் என்னை ஏற்றுக்கொண்டார். திருவருள் கூட்டி வைத்ததென்று சொல்லாமல் வேறு என்ன சொல்வது?

* **தேசபக்தனில்** சேர்ந்துகொண்ட மூன்றாவது நாளே வட மொழி கலவாத தூய தமிழில் எனக்கு எழுதத் தெரியும் என்பதை முதலியார் தெரிந்துகொண்டார். இப்படித்தான் எழுதவேண்டும் நமது பத்திரிகைக்கு ஏற்ற நடை' என்று கூறி என்னைப் பாராட்டினார். அன்றைய தினத்திலிருந்து அவருடைய அன்புக்கும் நம்பிக்கைக்கும் உரியவனானேன்.

நான் வேகமாக எழுதுவேன். தினசரிப் பத்திரிகையில் நின்று நிதானமாக எழுதிக்கொண்டிருந்தால் முடியுமா? மொழி பெயர்ப்பாயினும் சரி, கட்டுரைகளாயினும் சரி, வெகு சீக்கிரத்தில் எழுதி முடிப்பேன். இதற்குக் காரணம் ஏதோ அபூர்வமான சக்தி அமைந்திருந்த தென்பதல்ல; எழுதவேண்டுமென்பதிலே எனக்கு இருந்த ஆர்வமும் உற்சாகமும் தான். இதனால் என் வேலை அதிகப் பட்டது. ஆனால் நான் சலிப்புக் கொள்வதேயில்லை. முதலியாருக்கு இது நன்கு தெரியும். என்மீது அவர் கொண்டிருந்த அன்பு பெருகுவதற்கு இதுவும் ஒரு காரணமாக இருந்தது.

---

* தேசபக்தன் 7-12-1917 இல் தொடங்கப்பெற்றது.

மகாநாடுகள், பொதுக்கூட்டங்கள் முதலியவை காரணமாக முதலியார் அடிக்கடி வெளியூர் செல்லும்படியாயிருக்கும். அந்தக் காலங்களில், பத்திரிகையின் தலையங்கங்களை எழுதும் பொறுப்பு பெரும்பாலும் என்னிடமே வந்து சேரும். **தேசபக்தன், நவசக்தி** இரண்டிலும் இப்படித்தான். இரண்டிலும் நான் சேவை செய்தவன் என்பதை அறிமுகப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். ஆசிரியக் குறிப்புக்களை எழுதுகிறபோது, முதலியாருடைய நடையையே பின்பற்றுவேன். அவர் எழுதியதா, நான் எழுதியதா என்று வித்தியாசம் கண்டுபிடிக்க முடியாதபடிகூட இருக்கும். ஒரு பத்திரிகையின் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கும் பகுதி எல்லா வகையிலும் ஆசிரியருடையதாகவே இருக்க வேண்டும் என்பது என் கொள்கை. இதை நான் கண்டிப்பாகப் பின்பற்றி வந்தேன். இது சம்பந்தமாக ருசிகரமான ஒரு செய்தியைக் கூறுகிறேன்.

1919-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் கடைசி வாரத்தில் திருச்சியில் சென்னை மாகாண அரசியல் மகாநாடு, ராமநாதபுரம் ராஜா தலைமையில் கூடியது. இதற்கு முதலியார் சென்றிருந்தார். மகாநாட்டின் தொடக்க நாளன்று, தேசபக்தனில் தலைவருடைய பேருரையும் அதைப் பற்றிய தலையங்கமும் வெளியாயின. தலையங்கத்தை எழுதியவன் நானே. அதில் தலைமையுரையின் சில பகுதிகள் கண்டிக்கப்பட்டிருந்தன. முதலியாரே அந்தத் தலையங்கத்தை எழுதியிருப்பதாக சேதுபதி மன்னர் கருதிக்கொண்டு விட்டார். மகாநாட்டில் இரண்டாவது நாள் பிற்பகல் நடவடிக்கைகள் துவக்கமாவதற்கு முன்னர், சேதுபதி மன்னர் தலையங்கத்தைப் படித்துவிட்டு, முதலியாரைப் பார்த்து, 'என்ன முதலியார்வாள், என்னை இப்படித் தாக்கியிருக்கிறீர்களே' என்று கேட்டார். முதலியாருக்கு ஒன்றும் புரியவில்லை ஏனென்றால் அவர் அதுவரை பத்திரிகையைப் பார்க்கவில்லை. இந்த நிலையில் அவர் என்ன பதில் கூறுவார்? புன் சிரிப்போடு மௌனம் சாதித்துவிட்டார். பிறகு வேறொருவர் அன்பரிடமிருந்து பத்திரிகையை இரவல் வாங்கிப் படித்த பிறகுதான் தலையங்கத்தில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்று தெரிந்து கொண்டார். மகாநாட்டிலிருந்து திரும்பி வந்த பிறகு முதலியார், இந்த சம்பவத்தை நிரம்பச் சுவையுடன் பிரஸ்தாபித்தார். 'என்னுடைய நடையைப்போல உங்கள் நடை இருப்பதனால் எனக்கல்லவோ ஆபத்தாகயிருக்கிறது' என்று சிரித்துக்கொண்டே கூறினார்.

* * *

முதலியாரும் நானும் பத்திரிகை அலுவல் முடிந்ததும், மாலை நேரங்களில் கடற்கரை செல்லுவோம். பெரும்பாலும் லாயிட்ஸ் ரோட்தான் எங்கள் வழியாக அமையும். கடற்கரையில் அதிக ஜனநாட்டமில்லாத இடத்தில் அமர்ந்து நாங்கள் எவ்வளவு பேசினோம்! என்னென்ன விஷயங்களைப்பற்றியெல்லாம் பேசினோம்! அநேகமாக முதலியாரைப் பேச விட்டுவிட்டு நான்

கேட்டுக்கொண்டிருப்பேன். இந்தக் காலத்தில் அவரிடமிருந்து நான் பெற்ற கேள்விச் செல்வம் மிக அதிகம்.

எங்கள் இருவருடைய மாலை நடை தினந்தோறும் நடை பெற்றதென்று சொல்ல முடியாது. அநேக நாட்களில் முதலியார் பொதுக்கூட்டங்களுக்குச் சென்றுவிடுவார். அல்லது வெளியூர் களுக்கு மகாநாடு போன்றவைகள் நிமித்தம் சென்றுவிடுவார். இவைகளினால் மாலை நடை தடைபடுகிறதேயென்று அவர் அடிக்கடி வருத்தப்படுவார். ஆனால் இதற்காகப் பொதுப்பணியை புறக்கணிக்கமாட்டார். அஃது எவ்வளவு சிறிய பணியாயிருப் பினும், யார் வாயிலாக வரினும், முகஞ் சிணுங்காமல் தன்னலத் தைச் சிறிதுகூடப் பொருட்படுத்தாமல் ஏற்றுக்கொண்டு திருந்தச் செய்வார்.

முதலியார் மனத்துக்கண் மாசிலர். வைதாரையும் வாழ்த்து வார். யாரிடத்தும் பகைமை பாராட்டியது கிடையாது. அரசிய லில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு கருத்தொன்று நாட வாயென்று பேசும் என்று சொல்வார்கள் அல்லவா, அதை முதலியாரிடத்தில் காண முடியாது. அரசியலிலோ, சமயத் துறையிலோ, பிறவற் றிலோ, தம்மினும் மாறுபட்டார் யார் வரினும், எப்பொழுது வரினும், அவரிடம் நகை முகம் கொடுத்துப் பேசுவார். அவர்கள் எரிமலையென சொற்களை வீசி எறிவார்கள். முதலியாரோ இமய மலையென இருந்து இரண்டொரு வார்த்தைகளில் பதில் சொல்வார். அவர்கள் சீற்றம் தணியும். முகம் மலரும். அம் மலர்ச்சி கண்டு முதலியாரின் அகம் குளிரும். இதைப் பலதடவை நான் பார்த்திருக் கிறேன் இது மட்டுமல்ல மாறுபட்டார் யார் வந்து எந்தவிதமான உதவி கோரினாலும் அவர்களுக்குத் தம்மாலியன்றதைச் செய்யச் சிறிதும் தயங்கமாட்டார்.

ஏழை எளியவர்களிடத்தில் அவர் காட்டிய பரிவு மிக அதிகம். சில சந்தர்ப்பங்களில் அளவுக்கு மிஞ்சியும் காட்டுவார். இதனைப் பலர் துர் உபயோகப்படுத்திக் கொண்டுமிருக்கிறார்கள். ஆனால் அதைப் பற்றி முதலியார் கவலைப்படுவதே இல்லை. அவருக்குத் தெரியாதென்பதல்ல; 'போனால் போகிறார்கள். இல்லாமையினால் தானே இப்படிச் செய்கிறார்கள்' என்று தம்மை அன்பு முறையில் கண்டிக்கிறவர்களுக்குப் பதில் கூறுவார்.

முதலியார் செல்வத்தைச் சிறிதும் பேணாதவர். அவர் நாவையோ, தலையையோ அசைத்திருந்தால் ஆயிரக்கணக்கில் குவித்திருக்கலாம். உரிமைச் சக்திகள் சில, பணப்பையைக் காட்டி அவரைத் தங்கள் வசப்படுத்தப் பார்த்தன. ஆனால் பணத்திற்கு அடிமைப்பட்டவரன்றோ இவர்களுக்கு இரையாவார்? முதலியார், பணத்தை அடிமையாகக் கொண்டவர் என்பதை நான் பல வழி யிலும் அறிந்திருக்கிறேன். யானறிந்த வரையில் அவர் சிறு 'பர்ஸ்' பணப்பை கூட வைத்துக்கொண்டதில்லை.

Grams : "FAITH" Estd. 1924 Phone : 2213

THE PREMIER JEWELLERY HOUSE
who first introduced the
GUARANTEE SYSTEM IN MADURAI

A. S. S. M.
SOMASUNDARAM CHETTIAR & CO.
MFG. JEWELLERS, GOLD & SILVERSMITHS
No. 124, SOUTH AVANIMOOLA STREET,
MADURAI - I (S. I.)

REGD. **M. S.** **SEAL**

GUARANTEE

மனிதத் தன்மையென்று சொன்னால் சீலமுடைமையே குறிக்கும். இதனை மனிதம் என்று புதுப்பெயர் கொடுத்து அழைத்திருக்கிறார் முதலியார். இங்ஙனம் மனிதம் என்ற சொல்லை ஆக்கிக் கொடுத்ததுமட்டுமல்ல; மனிதமாகவே வாழ்ந்தார் அவர். இதனால் தான் அவர் அரசியலில் வெற்றிகாணவில்லை; தோல்வி கண்டாரென்றே சொல்லவேண்டும். ஆனால் இந்தத் தோல்வியே அவருக்கு மனிதத் தன்மையின் வெற்றியை வாங்கிக் கொடுத்தது என்று திண்ணமாகச் சொல்லலாம்.

முதலியாரின் சீலத்திற்கு அச்சாணிபோல் விளங்கியது, பெண்மைக்கு அவர் செலுத்திவந்த பக்தி. பெண் மக்கள் யாரேனும் காரியாலயத்திற்கு வந்தால் அவர்களை எழுந்து நின்றே வரவேற்பார். அவர்களை உட்காரச் செய்துவிட்டே தாம் உட்காருவார்கள். அவர்களும் என்ன சொல்லிக்கொள்ள வேண்டும் என்று வருகிறார்களோ, அதை, தந்தையிடம் மகள் சொல்லிக் கொள்வதைப் போல் சொல்லிக் கொள்வார்கள். முதலியாரின் சில வார்த்தைகளைக் கேட்டதும் மனக்குறை அகன்றவர்களாகவோ, மனநிறைவு பெற்றவர்களாகவோ திரும்பிச் செல்வார்கள். சுருக்கமாக அவர் பெண்மையை இறைமையாகப் போற்றினார்.

உலகத்து உயிர்களத்தனையையும் கட்டிக் காத்து நிற்கின்ற பரம்பொருள் ஒன்றேயென்ற பேருண்மையைத் தெளிவுற

உணர்ந்தவர், முதலியார். இங்ஙனமே உலகத்தில் நிலவும் சமயங்கள் பலவாயினும் அவை போதிக்கும் உண்மையொன்றே யென்பதை யும் நன்கு அறிந்தவர். "யான் முதல் முதல் குமரனை வழிபட்டேன் அவ்வழிபாடு கண்ணன், கிறிஸ்து, புத்தர் முதலியனவும் குமர னுகவே உணர்த்திற்று. இப்பொழுது குமரன், கண்ணன், கிறிஸ்து புத்தர் முதலியவரெல்லாம் எனக்கு ஒருவராகவே மிளிர்கிருர். அவர்தம் போதனைகளிலுள்ள ஒருமைப்பாடும் எனக்குச் செவ்வனே புலனுகிறது' என்று தமது வாழ்க்கைக் குறிப்புகளில் கூறியிருக்கிருர்.

பண்பாடு என்ற ஒரு சொல்லை இதுபோழ்து பலரும் பல பொருள்களில் கையாண்டு வருகிருர்கள். இந்தப் பல பொருள் களில் ஒன்று பிறர் உணர்ச்சியை மதித்து நடத்தல் என்பதாகும். பிறர் உணர்ச்சியை மதித்து நடப்பதில், முதலியார் மிக வல்லவர். அவ்வரைக் காண வருவோர் பல மாதிரியாகப் பேசுவர்; பல நிலைகளிலிருந்து பேசுவர்; உரிமையோடு பேசுவர் சிலர்; உறுதி யோடு பேசுவர் சிலர். தங் கருத்தை லேசாகத் தெரிவித்து அதன் மீது முதலியார் கொள்ளும் கருத்து யாதென அறிய விழைவோர் சிலர். இந்தப் பலதரத்தவருக்கும் முதலியார் இன்முகத்தின ராகவே காட்சியளிப்பார். பதற்றமில்லாமல் பேசுவார்; உண்மை யில், பிறர் மனம் நோக அவருக்குப் பேசவே தெரியாது. எல்லாரையும் திருப்தி செய்ய முயலுவார். இதனுல் ஒரு சிலருடைய அதிருப்திக் காளான சந்தர்ப்பங்களும் உண்டு.

முதலியாரை சாது முதலியார் என்று பலரும் சொல்லிக் கேட்டிருக்கிறேன். எந்தப் பொருளில் இப்படிக் கூறினர் என்பதையும் நான் அறிவேன். 'அரசியலில் செல்வாக்கிழந்து விட்டதால் சாதுவாகி விட்டார்' என்பர் சிலர். 'செயலாற்றும் திறனிழந்து விட்டபடியால் சாதுவாகி விட்டார்' என்பர் சிலர். ஏளனமும் அலட்சியமும் கலந்த தோரணையிலேயே இவர்கள் இப்படிப் பேசினர். அவரைச் சரிவர அறிந்துகொள்ளாமையி னுலேயே, அறிந்துகொள்ளும் மனப்பாங்கும், அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலும் இல்லாமையினுலேயே இப்படிப் பேசினர் என்றுதான் நான் கொள்கிறேன்.

அவர் எப்போதுமே செயலற்ற சாதுவாக இருக்கவில்லை. கடைசி காலத்தில் கண்ணொளி இழந்திருந்த வேளையில்கூட நூல்கள் பல ஆக்கித் தந்து கொண்டிருந்தார்; தொழிலாளர் நலனில் எப்பொழுதும்போல அக்கறை செலுத்தி வந்தார். ஓய்வு என்று சொல்லி அவர் செயலற்று இருக்கவில்லை.

பம்பரம் வேகமாகச் சுற்றுகிறபொழுது நின்ற நிலையில் இருப்பதுபோலவே தோன்றும். அதுபோலவே மேலோர்களின் செயலும் இருக்கும். அவர்கள் வெளிப்பார்வைக்கு ஓய்வு பெற் றிருப்பவர்கள் போலத் தோன்றுவார்கள். ஆனுல் உண்மையில்

அவர்கள்தான் சலியாமல் உழைக்கிறவர்கள். பொதுவாக பேச்சிலே வல்லவர் எழுத்திலே வல்லவராக இருப்பதில்லை. ஒரு சிலரே இரண்டிலும் வல்லவராயிருப்பர். இந்த ஒரு சிலரில் தலைசிறந்தவரா யிருந்தார் முதலியார். அதிலும் பேசுவதைப் போலவே எழுது வார்; எழுதுவதைப் போலவே பேசுவார். இரண்டுக்கும் வேற்றுமை தெரியாது. பேசுகையில் எடுத்துக்கொண்ட பொருளை யொட்டியே பேசுவார். சிறிதுகூட விஷயத்திற்குப் புறம்பாகச் சொல்லமாட்டார். பேசவேண்டிய பொருளைப் பற்றிச் சில குறிப்புக்களைத் தயாரித்துக் கொண்டுதான் பேச்சு மேடைக்குச் செல்வார். அவருடைய பேச்சிலே அமைந்த தனிச் சிறப்பு, பேச்சின் முடிவுரையேயாகும். சுமார் ஒரு மணி நேரம் பேசினல், கடைசிப் பத்து நிமிஷம், அதுகாறும் பேசியதையெல்லாம் திரட்டி சொல்வது மிக அழகாயிருக்கும். இங்ஙனம் திரட்டிச் சொல்வது எல்லோர் மனதிலும் நன்கு பதிந்துவிடும்.

பேசத் தொடங்கிவிட்டால் கர்ச்சனை செய்யும் சிங்கமாகக் காட்சியளிப்பார். தனிப்பட்ட முறையில் அவருடன் சம்பாஷித்துக் கொண்டிருக்கிறபோது, கொஞ்சும் குழந்தையாகக் காட்சியளிப் பார்; உண்மையில் சாதுவாகவே திகழ்வார். அவர் சடலத்தை முதுமை மூடிக்கொண்டிருந்தபோழ்தும் உள்ளத்தைக் குழந்தை மையே ஆட்கொண்டிருந்தது.

முதலியார் புறத்துறவு பூரண்டவரல்லர்; ஆனல் அகத் துறவு பூண்டவர். அகத்துறவு இல்லாத புறத்துறவை அவர் வெறுக்கவும் செய்தார். "உலக வாழ்வு கடவுள் கொடை யென் பதும், அதைத் துறத்தல் கூடாது என்பதும்" அவரது கோட்பாடா யிருந்தது. அவர் பழமையின் பிரதிநிதி; ஆனல் புதுமையின் சங்கநாதம். ஆண்மைக்கு அணிகலன்; பெண்மைக்கு விளக்கம். சாந்தத்தின் வடிவம்; ஆனல் வீரத்தின் ஊற்றுக்களம். அவர் தமிழனகப் பிறந்தார்; இந்தியனக வாழ்ந்தார். அவர் நாமம் வாழ்க!

ஆசிரியருடைய " நான் கண்ட நால்வர் " என்ற நூலிலிருந்து எடுத்தது.

பத்திரிகை ஆசிரியர்

ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அலங் கரித்தபத்திராசிரியர்ஸ்தானத்தில் உட்காருவதற்கு எனக்கு அச்சமாக இருக்கிறது. அவரது சொல்வன்மையும் தீரமும் நேர்மையும் கலங்காமையும் பாரபக்ஷமின்மையும் அவசியம் நேர்ந்தபோது காட்டிய நிர்த்தாக்ஷிண்யமும் பத்திராசிரியர் தொழிலுக்கே பூஷணங்களாக விளங்கின.

— வ. வே. சு. ஐயர்.

With the

Compliments of

MAHINDRA & MAHINDRA LTD.

BOMBAY · CALCUTTA · DELHI · MADRAS.

என் நெஞ்சில் நிலைத்தவர்!

நாரண. துரைக்கண்ணன்

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்து ஏழாம் ஆண்டு என்று நினைக்கிறேன். சுயமரியாதை இயக்கம் சூறுவளி வேகத்தில் தமிழ்நாடு எங்கணும் பரவி வந்து கொண்டிருந்த காலம் அது. சுயமரியாதைக்காரர்களின் நாத்திகப் பிரசாரம் ஆத்திகர்கள் பெரும்பாலாரை அச்ச முற வைக்கலாயிற்று. ஊழிக்காலம் ஏற்பட்டாலும் எங்கள் சமயத்தை அணுவளவும் அசைக்க முடியாது என்ற பெருமித நினைப்பில் 'யோக' நிலையில் ஆழ்ந்திருந்த சைவ, வைணவ சமயிகள்கூடத் துடித்துப் பதைத்து எழுந்து தத்தம் மதங் களைக் காப்பாற்ற முனைந்தனர். மாநாடுகள் பல கூட்டினர்; முடிவுகள் பல எடுத்தனர்.

அக்காலத்தில் சைவ சமயத்தைப் பாதுகாத்துவளர்க்க, **சைவ சித்தாந்த மகா சமாஜம்** என்ற ஓர் அமைப்பு இயங்கிக்கொண்டிருந்தது. அச் சமாஜ நிர்வாகிகள் சுயமரி யாதைக்காரர்களின் நாத்திகப் பிரசாரத்தைத் தடுக்கும் நோக்குடன் திருநெல்வேலியில் 'சைவப் பெரியார் மாநாடு' என்று ஒன்றைக் கூட்டினர். தேசபக்தர் வ. உ. சிதம்பரம் பிள்ளை, பொ. திரிகூடசுந்தரம் பிள்ளை ஆகிய அறிஞர்கள்கூட, அச்சமயம் சுயமரியாதைச் சூழலில் சிக்குண்டு இருந்தார் களாதலால், அவ்விரு பேரறிஞர்களும் மேற்படி மாநாட்டில் தலைமை வகித்த சச்சிதானந்தம் பிள்ளையவர்களைக் கேள்வி பல கேட்டு, சைவப் பெரியார்களை மருண்டு ஓட வைத்தனர்.

ஆனாலும், சைவ சித்தாந்த மகா சமாஜ நிர்வாகிகள் சளைக்கவில்லை. சைவ மெய்யன்பர்கள் மட்டுமல்லாமல், சுயமரியாதை இயக்க அன்பர்களும் மதித்துப் போற்றிவந்த **தமிழ்மலை மறைமலையடிகளைத்** தலைவராகப் போட்டு, திருப்பாதிரிப் புலியூரில் 'சைவர் மாநாடு' ஒன்றை அடுத்த

SERVING THE NATION
FROM 1932

Union Dairy Farm (REGD)

97. BAIRD ROAD-NEW DELHI

Leading Manufacturers of

BUTTER & GHEE
FROM
FRESH CREAM

PURITY AND FRESHNESS GUARANTEED

HOME DELIVERY UNDERTAKEN

Phone No. 45263

தில்லியில்

உயர்தர வெண்ணெய், நெய்,

புத்தம் புது 'கிரீம்'

தயாரிப்பாளர்கள்

யூனியன் பால் பண்ணை,

97, பேர்டு ரோடு, புதுதில்லி.

Certified by :

The Hon'ble Minister for Food & Agriculture, Government of India (1952), Commanders-in-Chief of Indian Army & The Navy, Royal Houses, High Government Officials, Embassies, Clubs, Hotels & Schools.

சில மாதங்களில் நடத்தலாயினர். இம்மாநாடு வெற்றியுடன் நடக்க, திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் சுவாமிகள் உடனிருந்து உதவினர். இம் மாநாட்டுக்குச் சமய வாதிகளே யன்றிச் சுயமரியாதைக்காரர்களும், அரசியல் வாதிகளும் வந்திருந்தனர்.

சரித்திரப் பிரசித்தி பெற்ற இம்மாநாட்டில்தான் சைவப் பேரறிஞர்கள், 'சைவ சமயக் கொள்கைகளையும் தேவார திருவாசகங்களையும் ஏற்று சைவ நெறி வழுவாது ஒழுகுபவர்கள் யாராயிருந்தாலும் வைணவர் முதலிய அகப் புறச் சமயிகளேயல்லாமல், கிறித்தவர், முகம்மதியர் போன்ற புறச் சமயிகள் கூடச் சைவராவர் என்ற சிறந்த தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த சைவர் மாநாட்டில்தான் மூன்ரும்நாள் மாலை ஏறக்குறைய ஐம்பது வயதுடைய பேரறிஞரொருவர் சைவசமய ஆசாரியர்களில் முதல்வரான திருஞான சம்பந்த சுவாமிகள் பாடியுள்ள 'தோடுடைய செவியன்' என்ற பாடல் குறித்து ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். இவருடைய பேச்சின் போக்கே தனித்தன்மை வாய்ந்ததாய் இருந்தது. மேற்படி பாடலிலுள்ள கடவுள் தத்துவத்தையும் உண்மையையும் அவர் விளக்குகையில் ''திருஞான சம்பந்தர் தம் தந்தைக்குச் சுட்டிக் காட்டிக் கூறும் முறையில் தம் இனிய பாடலில் அழகிய ஓவியமாகத் தீட்டிக் காட்டியுள்ள சிவபெருமானின் திருவுருவத்தை நான் இதோ என்முன் காணப்படும் செக்கர் வானத்தில் காண்கிறேன். இதோ காட்சியளிக்கிருன் என் அப்பன். அவன் பக்கத்தில் திகழ்கிருள் என் அம்மை. மாலைச் செஞ் ஞாயிற்றின் பேரொளிதான் சிவபிரானின் செம்மேனி. நீல வானம்தான் பார்வதி தேவியின் பசுமைத் தோற்றம். வெண் மேகம்தான் ஆண்டவன் ஆரோகணித்து வரும் ரிஷபம்' என்றெல்லாம் எங்கும் நீக்கமற நிறைந்துள்ள இறைவன் இயற்கைக் காட்சிகளிலும் பொருள்களிலும் இரண்டறக் கலந்திருக்கும் தன்மையை அழகுபட எடுத்து ஓதினர்.

இயற்கையில் இறைவன் உறைந்திருப்பதை இவ்வளவு இனிமையாகத் தெளிவுபடுத்திய இப்பேரறிஞரின் இனிய சொற்பொழிவு என் இளம் உள்ளத்தை மிகவும் கவர்ந்தது.

With compliments from

DGL PRIVATE LIMITED

Manufacturers of

Complete range of Fire Fighting Equipment and Appliances, including Fire Engines – Centralised Lubrication Equipment – Aircraft Refuellers – Garage Service Station Equipment & Light Engineering Stores.

Registered Office :

M-14, CONNAUGHT CIRCUS,
NEW DELHI-1.

Telephone : 45028 - 29 Grams: GARAGE, New Delhi.

BRANCH

10, SHAHNAJAF ROAD, HAZRATGANJ,
LUCKNOW.

Telephone ; 5253 Grams : GROWMORE

ஆனால், சிவ பக்தர் சிலருக்கு இப்பேச்சு சிறிதும் பிடிக்க வில்லை.

'அங்கிங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்தது'

என்றும்,

'பூதங்கள் ஐந்தாகிப் புலனாகிப் பொருளாகிப்
பேதங்கள் அனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையன்'

என்றும்,

'வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்
கோனாகி யான் எனது என்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாய்'

என்றும்,

'அட்டமூர்த்தி'

என்று எல்லாம் சைவர் பலர் பாடிப் பரவசப்பட்டாலும், 'சிவபெருமான் திருக்கயிலாயத்தில்தான் இருப்பவன் ஆலயங்களில் இருப்பவை அவனது மூர்த்தங்களாகும்' என்று குருட்டு நம்பிக்கை கொண்டிருப்பவர்கள்; ஆதலால், இயற்கைக் காட்சிகள் அனைத்தும் இறைவன் திருநடம் புரியும் இடம் என்பதும், தோடுடைய செவியனை இதோ நான் என் கண்முன் காண்கிறேன்' என்பதும் அவர்களுக்குப் புதிராகத் தோன்றியது. எனவே, அவர்கள் 'இது என்ன! நீலவானிடை சிவபார்வதி திகழ்வதை நீங்களும் பாருங்கள் என்கிறாரே! இவர் செப்பிடுவித்தை காட்டுகிறாரா? என்ன! எனப் பல வாறு பேசி அங்கலாய்த்தனர்.

நாத்திகப் பெரும்புயலை அடக்குவதற்காக நடந்த சைவர் மாநாட்டில் இது போன்று புதுமையான கருத்து ஒன்றை வெளியிட்டுச் சைவர்களிடையே சிந்தனைப் புயலை எழுப்பிய இப்பேரறிஞர் யார்? மழித்த தலையில் நாலைந்து மயிர்களே பறக்கும் உச்சிக் குடுமி; சிந்தனை ரேகைகள் படர்ந்த அகன்ற நெற்றி; அடிக்கடி இமைக்கும் இமைகள்; கூரிய நோக்குடைய கண்கள்; எடுப்பான மூக்கு முதலாய், மெலிந்த தோள்கள்; ஏறக்குறைய ஐந்தரை அடி உயரமுள்ள கபில நிறம் வாய்ந்த நலிந்த உடம்பு; ஒல்லியான இவ்வுருவத்தை ஓரளவு எடுத்துக் காட்டியது. அவர் தரித்திருந்த தூய கதராடை; நாலு முழ வேட்டி; சாதாரண

ELGI URACA

We now manufacture in India Service Station Equipment in collaboration with Messrs. Pumpenfabrik Urach, West Germany, whose fifty years experience and technical know-how are available to us.

OUR SERVICE STATION EQUIPMENT

Assure you :

HIGH STANDARD OF QUALITY
TECHNICAL PERFECTION
AFTER SALES SERVICE

MANUFACTURERS :

ELGI EQUIPMENTS (PRIVATE) LTD.,

INDIA HOUSE TRICHY ROAD COIMBATORE

Grams : " HYDRAULICS " Phone : 3311

SOLE SELLING AGENTS :

ASSOCIATED TRADERS
Tool House,
7/3, Patullos Road,
MADRAS - 2.

சட்டை; அதன் மேல் நாலரை முழத்துண்டு; இவ்விதம் எளிமையாகத் தோற்றமளித்த இவர்தான் **தமிழ்ப் பெரியார் திரு. வி. கலியாணசுந்தரனார்**. இவ்வளவு மெலிந்த தேகமுடைய மனிதரிடம் எவ்வளவு பேராற்றல் அமைந்திருக்கிறது? எவ்வளவு பெரிய தத்துவங்களை எவ்வளவு தெளிவாக எளிதாக—எடுத்துச் சொல்லுகிறார் என்று எண்ணி நான் வியப்புற்றேன்.

இந்நிகழ்ச்சிக்குப் பிறகு, எங்கு திரு. வி. க.வின் சொற்பொழிவு நிகழ்ந்தாலும் நான் கேட்கப் பெரும்பாலும் தவறுவதில்லை. சமயச் சொற்பொழிவாயிருந்தாலும், கலை இலக்கியப் பேச்சாயிருந்தாலும், அரசியல் பிரசங்கமாயிருந்தாலும் எல்லாவற்றிலும் அவர் இயற்கைச் செந்நெறி பற்றி ஒரு வார்த்தையேனும் கூறாமல் இருக்க மாட்டார். இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழுமாறு வற்புறுத்தாமல் இருக்க மாட்டார். இதிலிருந்து நான் அவரை ஓர் இயற்கைப் பிரசாரகர், இயற்கையின் பிரதிநிதி என்று மதித்துப் போற்றலானேன்.

திரு. வி. க.வின் இயற்கையுணர்வும் வழிபாடும் என்னை முற்றுங் கவர்ந்து விட்டது. அவர்பால் காணப்பட்ட பெரும் புலமை, நாவன்மை, எழுத்தாற்றல், உலகானுபவம், அரசியல் ஞானம் முதலியவை மட்டும் என்னைக் கவர்ந்து விடவில்லை, எப்பொருள் பற்றியும் தெளிந்த அறிவும், எப்படிப்பட்ட பொருளையும் கேட்போருக்கு நன்கு புரியும்படியாகப் பேசும் தெளிவான பேச்சுமே என்னைப் பெரிதும் கவர்ந்தன.

என் வாழ்நாளில் எனக்கு ஏற்பட்டுள்ள ஓரளவு உலக அனுபவத்தில் தமிழ்ப் பேரறிஞர் பலரைப் பார்த்திருக்கிறேன். பலருடைய சொற்பொழிவுகளைக் கேட்டிருக்கிறேன். பலர் எழுதியுள்ள அறிவு நூல்களைப் படித்திருக்கிறேன். பலருடன் நெருங்கிப் பழகும் பேறு எனக்குக் கிடைத்திருக்கிறது. ஆனால், திரு. வி. க. போன்று தெளிந்த அறிவும், சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் ஆற்றலும், எப்பொருளையும் யாருக்கும் புரியும்படியாக எழுதும் திறமையும் வாய்ந்தவர்கள் மிகச் சிலரையே என்னால் காண முடிந்தது. அத்துடன், திரு. வி. க. விடம் இயற்கையாக அமைந்துள்ள பரந்த அறிவும் விரிந்த மனோபாவமும் பெரும்பாலான

அறிஞர்பால் காண்பது அருமை என்பதையும் இங்கு அவசியம் குறிப்பிடவேண்டும்.

திரு. வி. க.வின் வடிவத்தில் அமைதி கொலு வீற்றிருக்கும். ஆனால் அவருடைய இதயத்தில் புரட்சிக் கொள்கைகள் பொங்கிக் கொண்டிருக்கும். அவர் இனிக்கத்தான் எப்போதும் பேசுவார். ஆனால் அவை அனைத்தும் உணர்ச்சிப் புயலாயிருக்கும். அவரது பேச்சும் எழுத்தும் இனிய, எளிய, தூய நடையை உடையனவாயினும், அவை கேட்பவர், படிப்பவர் உள்ளங்களில் அறிவுப் புரட்சியை – அறப் புரட்சியை உண்டு பண்ணும் உணர்ச்சி கொண்டனவாகும்.

ஆடம்பரமோ, படாடோபமோ, பகட்டுப் பேச்சோ இல்லாத திரு. வி. க. கண்டாரைக் கவர்ச்சி செய்யும் மோகன சக்தியை இயற்கையாகவே பெற்றிருந்தார். எதிரிகளையும் தம் வசப்படுத்திக் கொள்ளும் வசீகர சக்தி அவர்பால் அமைந்திருந்தது. திரு. வி. க.விடம் அமைந்திருந்த பழுத்த தமிழ்ப் புலமை, பரந்த உலக ஞானம், உயரிய கொள்கை, நாவன்மை, எழுத்துவன்மை முதலியவை மட்டும் மேற்குறித்தவாறு மற்றவர்களை அவர்பால் ஈர்ப்பதாக நான் எண்ணவில்லை. அவருடைய தூய உள்ளத்தில் வீசும் உண்மையொளியே யாவரையும் கவருகின்றது என்று நான் அவருடன் நெருங்கிப் பழகத் தொடங்கியதிலிருந்து உணரலானேன்.

நான் திரு. வி. க.வுடன் நட்பு பூண்டது சுவை மிக்க கதையாகும். முதல் சந்திப்பிலேயே அப்பெரியாரும் நானும் நீண்ட காலம் பழகி வந்தவர்கள் போன்ற உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது. ஆதலால் அவருடன் அணுக்கமாகப் பழகி அளவளாவி வரலானேன். அறிவாலும் சீலத்தாலும் வயதாலும் மிகப் பெரியாராகிய அவர் மிக இளைஞனை என்னை அவரது வயதொத்த தோழனைப் போலவே மதித்து வந்தார். நான் மறைமலையடிகளிடம் தமிழ் இலக்கியங்களைப் பாடங் கேட்டது போல், திரு. வி. க.விடம் கேட்காவிடினும், அவரை என் ஆசிரியர்களில் குறிப்பிடத்தக்க ஒருவராக மதித்தே போற்றி வணங்கி வந்தேன். திரு.வி.க. நம்மைவிட்டு மறைந்து பல்லாண்டுகளானலும், அவர் என் நெஞ்சில் பசுமையான நினைவுகளை உண்டுபண்ணி நிலைத்திருக்கிறார். இவ்விதமே அவரை நன்குணர்ந்த நண்பர்கள் உள்ளங்களில் நிறைந்திருப்பார் என்பது திண்ணம்.

மன மாற்றம்

சியாமளா ராகவன்

"கமலா, என்ன இது கட்டு கை விரலில்! என்ன காயம்?'' என்று பதறினன் ராமு.

"ஹும்! ஒன்றும் இல்லே. காய் நறுக்கும் போது சிறிது கத்தி கீறி விட்டது. இதற்கு இவ்வளவு பிரமாதப் படுத்துவானேன்?'' என்று ஓர் அலட்சிய பாவத்துடன் கூறி முகத்தைத் திருப்பிக்கொண்டாள் கமலா.

"ஸெப்டிக் ஆய்விட்டால் கஷ்டம்'' என்று கூறிக் கொண்டே, ஓடி, டிங்சர், போரிக் பௌடர் முதலியவைகளைக் கொண்டு வந்து ஓர் கட்டுப் போட்டான் ராமு.

ராமுவின் பரிவுக்கு எதிராக வேண்டா வெறுப்புடன் தான் தன் கையை நீட்டினுள் கமலா.

இது ஒரு நாள் சம்பவம். இது போல் ராமு — கமலா வாழ்க்கையில் நடந்தவை பல. மணமாகி வருடம் ஒன்ருகியும் கமலா தன் பூரண அன்பை ராமுவிடம் காட்டிப் பழகியதே இல்லே. மன மார்ந்த உள்ளன்போடு பழகிய ராமுவுக்கு இது புரியாப் புதிராகவேயிருந்தது.

கமலா மிக்க அழகி. தந்தப் பதுமை போல் இருப்பாள் கலாசாலேப் படிப்பும் சேர்ந்தது. மணமாகும் முன் அவளுடைய கற்பனேயுலகில் தன் அழகிற்கேற்ற ஓர் இலட்சிய புருஷனேயே கணவனுக வரித்திருந்தாள். காரியத்தில் கைகூடுவது அது சிறிது கடினமாகவே யிருந்தது. அவளுடைய தகப்பனுர் லட்சிய புருஷனேத் தேடுவதில் பல வருடங்களே வீணுக்கிக் கடைசியாக ராமுவையே வரனுகத் தேர்ந்தெடுத்தார்.

ராமு B.E. பாஸ் செய்து எலக்டிரிகல் இன்ஜினீயராக இருந்தான். ஒரு பந்தமும் இல்லாமல் தனியாகச் சம்பாதித்துக் கொண்டிருந்தான். சொத்தும் சுமாராக இருந்தது. ஆனுல் கறுப்பு, சிறிது குட்டையும் கூட. முகத்தில் அம்மை வடுக்கள் ஆழமாகத் தோன்றியிருந்தன. ஆண்களேப் பொறுத்த

வரை குரூபி என்று தீர்மானிப்பது கஷ்டம். கமலாவும் அச்சமயம் தன் சம்மதத்தைத் தெரிவித்து விட்டாள்.

ஆனால் விவாகத்தின் போது அவள் காதில்பட்ட வார்த்தைகள்! ஜானுவாஸம் — மாப்பிள்ளை அழைப்பு — ஆகி அன்று ராத்திரி சற்று ஓய்வு பெற வேண்டி கமலா தன் அறையில் உட்கார்ந்திருந்தாள். வெளியில் படுத்திருந்த உறவினர்கள் தம்மிடையே பேசிக் கொண்டது "ஆமாம் — ஒருத்தருக்கு எல்லாம் நிறைந்திருக்குமோ? ஆண்டவன் அதைத் தானே செய்வதில்லை! விமலாவின் புருஷனைப் பார்த்தாயோ — ராஜாவாட்டம்! அக்கா கறுப்பு - அத்திம்பேர் ராஜ களை. இருந்தாலும் கமலாவுக்கு இப்படி வாய்த்திருக்க வேண்டாம், காட்டில் பிடித்து வந்த மாதிரி"–மேற்கொண்டு அவளால் வார்த்தைகளைக் காது கொண்டு கேட்க முடியவில்லை. அவள் மனம் தன் அக்கா விமலாவின் கணவரையும் தனக்கு மறுநாள் மாலையிடப் போகும் புருஷரையும் எடை போடத் தொடங்கியது. அன்றும் அவள் அக்காவின் கல்யாணத்தின் போது அதே உறவினர்கள் "இந்தக் கறுப்பைக் கண்டு தாலி கட்ட எப்படி இந்த மன்மதன் தீர்மானித்தான்" என்று பல முறை கூறி ஆச்சரியப்பட்டார்கள். இன்றோ! "நான் எவ்வளவு துர்ப்பாக்கியசாலி" என்று பெரு மூச்சு விட்டாள். அவள் மனம் ஸ்தம்பித்து விட்டது. விவாகத்தின் பொழுது பொம்மை போல் எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டாள்.

மறு மாதமே சென்னையில் குடித்தனம் வைத்தாய் விட்டது. ராமு, கமலாவின் மனப் போக்கை அறியாமல் திண்டாடினான். அவளைப் பல வகையிலும் சந்தோஷப் படுத்த அவன் பட்ட பிரயத்தனங்கள் வீணாயின. ஒரு நாள் மிகுந்த வற்புறுத்தலின் மேல் ராமுவுடன் சினிமா ஒன்றிற்குச் சென்றிருந்தாள். அங்கு வெகு நாளைக்குப் பின் சந்தித்த தன் பள்ளித்தோழி "இவரா! உன் கணவர்?" என்று சாதாரணமாகக் கேட்டதைக் கேலி செய்வதாகத் தப்பர்த்தம் செய்து கொண்டு மனம் புண்பட்டாள். இப்படிப் பல விஷயங்கள் அவளுடைய தாழ்ந்த மனப்பான்மையைக் கிளறி விட்டுக் கொண்டே யிருந்தன.

மாலை ஆபீஸிலிருந்து திரும்பிய ராமு, வீட்டில் பெட்டி படுக்கைகளுடன் ரயிலுக்குப் புறப்பட கமலா தயாராயிருப்பதைக் கண்டான். "என்ன, கமலா! எங்கு புறப்பாடு? என்னிடம்

காலையில் ஒன்றும் சொல்ல வில்லையே.''

''உம், அக்காவிற்கு உடம்பு சரியில்லையாம். அவள் வெகு நாட்களாகவே என்னை வரும்படி கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறாள். இன்று இரவு ரயிலுக்குப் புறப்படணும்''— இதுதான் கமலாவின் பதில்.

''ஆம். உனக்கும் ஊர் மாற்றம் நல்லது.'' என்றான் ராமு. இதையும் நேராக எடுத்துக் கொள்ள அவள் மனம் மறுத்தது. ரயிலேற்றி விட்டு, பல முறை கடிதம் எழுதுமாறு வேண்டி வீடு திரும்பினான் ராமு.

விளையாட்டுப் போல் அவள் விமலாவிடம் வந்து ஒரு வாரம் ஆகிவிட்டது. அன்று வாசலில் அக்காவின் குழந்தையை வைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தாள். அவள் அங்கும் மன நிம்மதியைக் காண வில்லை. திடீரென்று சமையல் அறையில் தடார் புடார் என்று சப்தம் கேட்டது. உள்ளே சென்றாள். தன் அத்திம்பேர் எச்சில் கையை உதறிக் கொண்டு வந்து கொண்டிருந்தார். முகத்தில் கடுகடுப்பு — எள்ளும் கொள்ளும் வெடித்தது. உள்ளே, அக்கா கீழே சிதறியிருந்த சாதம், குழம்பு முதலியவற்றைச் சரி செய்து கொண்டிருந்தாள். அவளும் ஒரு வாரமாகக் கவனித்துக்

இன்ப நிலையம்

மயிலாப்பூர் :: சென்னை-4.

தொலைபேசி எண் :
நிலையம் : 72547
இல்லம் : 73351

★ தமிழகத்தின் பிரபல எழுத்தாளர்களான ம. பொ. சி., நாமக்கல் கவிஞர், ''லக்ஷ்மி'', தூமிலன், எஸ். கல்யாணி, பெ. தூரன், ''சோம லெ'' இன்னும் பலரின் நூல்களையும் பிறமொழி இலக்கியங்களை தமிழில் மொழி பெயர்த்து வெளியிடுவோர்..........

★ தமிழிலுள்ள எல்லா புத்தகங்களும் கிடைக்குமிடம்..........

★ தமிழகத்திலும் வெளியிடங்களிலும் உள்ள தமிழ் நூல் நிலையங்களுக்கு தொடர்ந்து புத்தகங்கள் வழங்குபவர்..........

இன்ப நிலையம் ! இன்ப நிலையம் !! இன்ப நிலையம்!!!

கொண்டுதான் வருகிறாள். அக்கா அத்திம்பேர் தாம் பத்ய உறவு சற்று கரடுமுற டான பாதையிலே தான் சென்று கொண்டிருந்தது. அத்திம்பேர் பெரிய முன் கோபி. சிறியதையெல்லாம் பெரியதாக்கி எப்போதும் மனைவியைத் தாக்கிக் கொண்டே சிடு சிடு என்று முகத்தை வைத்துக் கொள் வதே அவருடைய சுபாவ மாக இருந்தது. இவ்வள விற்கும் தன் அக்கா எப் போதும் புன்சிரிப்புடன் அவ ருக்குச் சேவை செய்வதை யும் அவள் கவனித்தாள். அன்று நேர்ந்த சம்பவத்திற் குக் காரணம் — ரசத்திற்கு உப்புப் போட அவசரத்தில் மறந்ததுதான். அதற்கு இவ் வளவு அமர்க்களம்.

"என் பேரில் தான் தப்பு. அவர் சுபாவம் அது. நீ ஒன்றும்நினைக்காதே கமலா" என்றாள் விமலா.

என்னதான் இருந்தாலும் அயலாள் ஒருத்தி எதிரில் அவ்வளவு அசம்பாவிதமாக நடக்க அம் மனிதன் "என்ன முரடன்" என்று எண்ண மிட்டது கமலாவின் மனம்.

தன் அரை குறை மனப் பான்மையையும் விட்டுக் கொடுத்துத் தன்னை உள்ளன் போடு புகழும் ராமுவையும் அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை. "நான் எவ்விதக் குறைகளோடு சமைத்தாலும் அவர் வாய் விட்டு ஒரு வார்த்தை கூறிய தில்லையே. எப்போதும் உணவைத் தேவார்மிதம் என்று புகழ்வாரே!" தன் நிலைமையையும், தன் சகோ தரியின் நிலையையும் மனம் சீர்தூக்கிப் பார்த்தது. புற அழகைவிட அக அழகே பிர தானம் என்று அவள் உள் ளுணர்ச்சி குத்திக் காட்டி யது. தான் இதுகாறும் செய்ததை நினைத்துத் தன் னையே நொந்து மனம் புழுங் கினாள்.

அன்று மாலை வீடு திரும் பிய ராமுவிற்கு ஒரே அதி சயம். கமலா புன் முறுவ லுடன் கையில் காப்பி டம்பளருடன் காட்சியளித் தாள்.

"என்ன கமலா! ஒரு மாதம் என்று போனவள் பத்தே நாளில் திரும்பி விட் டாய். கடிதம் போட்டிருந் தால் ஸ்டேஷனுக்கு வந்து அழைத்து வந்திருப்பேனே" என்றான் ராமு மூச்சுவிடாது.

"தனியாக உங்களை இங்கே விட்டு அங்கு என்ன எனக்கு அவ்வளவு முக்கிய வேலை. மனம் ஒரு நிலையில் இல்லை. — இந்தக் காப்பியைச் சீக்கிரம் குடியுங்களேன்" என்றாள்.

மனைவியின் இத்திடீர் மாறு தலின் காரணம் அறியாத ராமு வியப்போடு அவளைப் பார்த்தான்.

*



சிறுவர் உலகில் எப்போதும்
சிறக்கும் சொல் "நுட்ரின்!"

Nutrine
மிட்டாய்கள்

நுட்ரின் கன்பெக்ஷனரி கம்பெனி
பிரைவேட் லிமிடெட்,
சித்தூர், ஆந்திர பிரதேசம்.

தில்லித் தமிழ்ச் சங்கத்திற்கு
எங்கள் வாழ்த்துக்கள்

★

தி மேட்டூர் கெமிகல் அண்ட் இண்டஸ்டிரியல் கார்பொரேஷன் லிமிடெட்,
மேட்டூர் அணை. ஆர். எஸ்.
சேலம் ஜில்லா.

★

மேனேஜிங் ஏஜண்ட்ஸ்:
சேஷஸாயி பிரதர்ஸ் (பிரைவேட்) லிமிடெட்,
திருச்சிராப்பள்ளி.

★

தில்லி பிரதிநிதி;

ரா. சக்கரவர்த்தி, M.A., B.L.,
3/1, இராணி ஜான்ஸி ரோடு,
புது தில்லி - 1.

தொலைபேசி எண்: *40622*
தந்தி: *"காமதேனு"*

தபால் பெட்டி
எண்: *89.*

பாரதிக் கண்ணன்

நா. வேணுகோபால் நாயகர்

தமிழ்க் கவிகள் பழங்காலத்தில் பாடியதெல்லாம் பக்தியைப் பற்றியும் பகவானைப் பற்றியும்தான். ஏன்? சிறந்த கருத்துக்கள்தான் கவிகளின் விஷயமாக அமையும். **தெய்வமும் பக்தியுமே** மனிதனின் சிறந்த கருத்துக்கள். ஆயிரக்கணக்கான வருடங்களாக ஆராய்ச்சியில் தோய்ந்தவை இவை. சிறந்த அறிவாளிகளே கவிகளாக முடியும். எனவே, அறிவிற் சிறந்த பழங்காலத் தமிழர்கள் பக்தியையும் பகவானையும் பொருளாகக் கொண்டு கவிகள் செய்தார்கள். இது ஒரு கொள்கை.

மேற் கூறியதற்கு எதிர்ப்பான கொள்கையும் இருக்கின்றது! விஞ்ஞான ஆராய்ச்சியும் பகுத்தறிவும் விரிவு பெருத பழங்காலத்தில், கவிகளுக்கு வேறு விஷயம் அகப்படவில்லை. எனவே, 'செக்கு மாடு'களைப் போல், "பக்தி", "பகவான்" என்று திருப்பித் திருப்பிப் பாடி வைத்தார்கள்! இதில் எது உண்மை?

தற்காலத் தமிழ்க் கவிஞர்களைப் பார்க்கலாம். இவர்களில் மூவர் சிறந்தவர்களாக மதிக்கப்படுகின்றனர். சமீபத்தில் காலஞ் சென்ற தேசிக விநாயகம் பிள்ளை அவர்களைக் **கவிமணி** என்று தான் சொல்லவேண்டும். இது யாருக்கும் சந்தேகமில்லாத விஷயம்.

"பாட்டுக்கு யார்?' என்று கவிமணியைக் கேட்கலாம். அவர் "பாட்டுக்கா? பாட்டுக்கு ஒரே ஒரு புலவனைத் தானே சொல்லலாம்!" அது யாரா?

"பாட்டுக்கொரு புலவன் பாரதியடா"

என்று தீர்ப்பளிக்கிருர்.

பெருங்கிழவர் கூறியதை மற்றவர்கள் ஆதரிக்கின்ருர்களா? அரசாங்கத்தை நடத்துபவர்களுக்கு ஆளத் தெரியலாம், பாடத் தெரிய வேண்டியதில்லை. ஆனல் பாடத் தெரிந்தவர்களைப் பாராட்டத் தெரியவேண்டும். நமது அரசினரால் **'ஆஸ்தான கவி'** எனப் போற்றப்பட்டவர் நாமக்கல் கவிஞர் திரு. ராமலிங்கம் பிள்ளை அவர்கள்.

நாமக்கல் கவிஞரைப் புகழ்ந்தால், அவர் அந்தப் புகழை ஏற்க மறுக்கிருர்! தமக்கு வரும் புகழுக்குக் காரணம் சொல்கிருர்:

எங்கள் சேவை

உங்களுக்குத் தேவை

★

பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு பிரைவேட் லிமிடெட்

" பாலுஸேரி பில்டிங்ஸ் "

3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி

தபால் பெட்டி நெ. 414,

மதராஸ் – 5.

தந்தி: " EVERMANS " போன்: 85834

★

தில்லி கிளை அலுவலகங்கள் :

(1) " கான்ஸன் ஹவுஸ் "
1/24, அஸப் அலி ரோட், புது தில்லி-1.

(2) "பாலுஸேரி பில்டிங்"
14-A/4, W.E.A., கரோல் பாக்
புது தில்லி-5.

(3) 198, முதல் மாடி, ஜோர்பாக் நர்ஸரி,
புது தில்லி-3.

" நாரத கீத மென்ன்
நயந்திகழ் பாட லாலே
பாரத நாட்டை யென்றும்
பணிந்திடும் சுப்ரமணிய
பாரதி பாட்டைக் கண்ட
பழய இத் தமிழர் நாட்டில்
"யாரது ?" என்று கேட்க
யானுமிக் கவிகள் சொன்னேன்."

பாரதியார்தான் காரணமாம் ஆஸ்தான கவிஞர் உயர்தரமான பாடல்களைப் பாடுவதற்கு!

பகுத்தறிவின் வழியிலேயே நடக்க வேண்டும் என்ற கொள்கையைப் பிரசாரம் செய்து வருபவர்களால் **புரட்சிக் கவி** எனப் போற்றப்படுபவர் புதுவை திரு. கனக சுப்புரத்தினம் அவர்கள். பாரதியின் மீது ஏற்பட்ட பக்தியினால், தம் பெயரையே மறைத்துக் கொண்டு **பாரதி தாசனாகக்** காட்சியளிக்கின்றார் இவர்!

இம் முத்தமிழ் வாணரும் பணியும் பாரதியார் **தேசியக் கவி** என்றும், **விடுதலைக் கவி** என்றும் போற்றப்படுகிறார். இது, சமயசந்தர்ப்பத்தினால் ஏற்பட்ட ஒரு அம்சம்தான்! சுதந்திரப் போரின் நடுப் பகுதியில் வாழ்ந்த காரணத்தினால் பாரதியார் தேசியப் பாடல்களைப் பாட நேர்ந்தது. ஆனால் தற்போதிய சுதந்திர சகாப்தத்தில் வாழ்ந்திருந்தால், முழுக்க முழுக்க **பக்தியைப் பற்றியும் பகவானைப் பற்றியும்** தான் பாடியிருப்பார். துளிக்கூடச் சந்தேகம் வேண்டியதில்லை.

சுதந்திர தாகம் தணிய வேண்டுமென்றும், அடிமையில் மோகம் மடிய வேண்டுமென்றும் யாரிடம் வேண்டுகிறார்?

அன்றொரு பாரதம் ஆக்க வந்தோனே!

என்று கண்ணனிடம்தான்!

துரியோதனன் சபையில் திரௌபதிக்கும், தேர்த் தட்டில் அர்ச்சுனனுக்கும் "அஞ்சாதே!" என்று அபயம் தந்த கண்ணனின் அருட்செயல்கள் மனதில் தோன்றவும்,

அஞ்சலென்று அருள்செய்யும் கடமை இல்லாயோ!

ஆரிய! நீயும் நின் அறம் மறந்தாயோ!

என்று முறையிடுகிறார்!

பகவானாகிய கண்ணனிடம் பக்தி கொண்டு, பாரதியார் கண்ணனைப் பாடிய விதமே ஒரு தனி அழகு. பழமைக் கருத்து வைத்துப் புதுமைப் பாணியில் பாடியுள்ளார்.

நிர்குண அர்ச்சுனனுக்காகத் தேர்த் தட்டிலே நின்று சாரத்யம் செய்ததை ஒரு பெருமையாகக் கொண்டு **பார்த்தசாரதியாக** சேவை சாதிக்கின்றான் கண்ணன் திருவல்லிக்கேணியிலே!

இராமாயணத்தின் சிறப்பு "**சிறையிருந்தவள் ஏற்றம்**" என்று கூறுவார்கள் பெரியோர்கள். உலக மாதாவான லட்சுமி, தேவர்கள், ரிஷிகள் துயரம் தீர்ப்பதற்காக இராவணனுடைய அசோக வனச் சிறையில் இருந்ததுதான் ராமாயணத்தில் உள்ள சிறந்த அம்சம் என்பது பொருள். அதுபோலவே **தூது சென்றவனின் எளிமை** என்று மகாபாரதத்தின் பெருமையைப் பற்றிச் சொல்லுவார்கள். சர்வலோக நாயகனான திருமால் கண்ணனாக அவதாரம் செய்து, பாண்டவர்களுக்காகக் **கழுத்திலே ஓலை கட்டிக் கொண்டு** தூதுவனாக நடந்தானும்! லட்சம் சுலோகங்களையுடைய மகாபாரதக் காவியத்தில் சுவையான பாகம் இதுவே!

சிலப்பதிகாரம் பாடிய சமண முனிவரான **இளங்கோவடிகளும்** இறைவனது இந்தப் பரம எளிமைக்கு உருகிக் குரவை வாயிலாக,

> **"மடம் தாழும் நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்**
> **கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்**
> **படர்ந்து ஆரணம் முழங்கப் பஞ்சவர்க்குத் தூது**
> **நடந்தானை; ஏத்தாத நா என்ன நாவே!**
> **'நாராயணா!' என்னா நா என்ன நாவே?"**

என்று கேட்கிறார்.

ஆண்டவன் பக்தனுக்காகத் தன் உயர்வையும் மதியாமல் அடிமைப் படுவதை இன்னும் பல கதைகள் நமக்கு விளக்குகின்றன. இறைவனின் இப்பெருங் குணத்தில் ஈடுபடுகிறார் பாரதியாரும். தமக்கே உரிய புதிய பாணியிலே இதை வெளியிடுகிறார் 'கண்ணன் — என் சேவகன் என்ற மகுடமிட்டு.

கண்ணனை அனுபவிக்கு முன்பு, சேவகனைப் பற்றி நாம் சரியாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார் பாரதியார். சேவகன் என்றால், ஏதோ பழங்காலத்துச் சேவகன், சொன்னபடி நடப்பவன். அடக்கமே உருவம் என்றெல்லாம் நாம் நினைத்துவிடுவோம். அதற்காகப் பாரதியார் தற்காலச் சேவகனைப் பற்றிச் சரியாக விவரிக்கிறார்!

நமக்கும் சேவகனுக்கும் தொடர்பு ஏற்படுத்துவது கூலிதான்! நியாயமான கூலி நாமும் கொடுக்க வேணும்; சேவகரும் வாங்க வேணும். ஆனால் பாரதியார் கண்ட தற்காலச் சேவகர்:

> **"கூலி மிகக் கேட்பார்"**

அதன்படியே அள்ளித் தருகிறோம்; ஆனால்,

"கொடுத்ததெல்லாம் தாம் மறப்பார்",
வீட்டில் தலைபோகிற காரியம்; என்ன செய்வார்கள்?

"வேலை மிக வைத்திருந்தால் வீட்டில் தங்கிடுவார்"
வராததற்குக் காரணம் கேட்டால்; விந்தையாக இருக்கும் பதில்:

"பானையிலே தேளிருந்து பல்லால் கடித்ததென்பார்;
வீட்டிலே பெண்டாட்டிமேல் பூதம் வந்ததென்பார்;
பாட்டியார் செத்துவிட்ட பன்னிரண்டாம் நாளென்பார்",
பேச்சு இப்படி; நடத்தையோ, வயிற்றெறிச்சல்தான்!

"ஓயாமல் பொய்யுரைப்பார்
ஒன்றுரைக்க வேறு செய்வார்."
நமக்கு ஆகாதவர்களுடன் எப்படி நடந்து கொள்ளுவார்கள்?

"தாயாதியோடு தனியிடத்தே பேசிடுவார்;"
ரகசியமான சேதியா? சரி, சரி!

"உள்வீட்டுச் சேதியெல்லாம் ஊரம்பலத்துரைப்பார்
என் வீட்டில் இல்லையென்றால்"
கழுத்தில் டமாரத்தையே மாட்டிக் கொண்டு
"எங்கும் முரசறைவார்!"

பாரதியார் சேவகரால் பட்ட சிரமம் மிகவுண்டு. என்றாலும் அவருக்கு சேவகனில்லாவிடிலோ செய்கை நடக்கவில்லை. ஒரு தகுந்த வேலையாளைத் தேடிக் கொண்டிருந்தார்.

இப்படி இடர்மிகுந்து வாடுகையில், பாரதியாருடைய அதிர்ஷ்டத்தைப் பாருங்கள்!—அவனாகவே எங்கிருந்தோ வந்தான். வேலையும் கேட்டான்.

வேலைக்காரனுக்கு என்னவெல்லாம் தெரியுமென்று கேட்கிறீர்கள்? அவனே சொல்வதைக் கேளுங்கள்.

"மாடு கன்று மேய்த்திடுவேன்,
மக்களை நான் காத்திடுவேன்."
அதாவது, பகுத்தறிவுடையது இல்லாதது என்ற வித்தியாசமில்லை. அஃறிணை, உயர்திணை எல்லாவற்றையும் காக்க முடியுமாம்.

சின்னஞ் சிறு வேலைகளா?
"வீடு பெருக்கி விளக்கேற்றி வைத்திடுவேன்,"
அவன் கால்பட்டால் போதும் வீடு தூய்மையாகிவிடும்; ஒளிவீசும். இதில் சந்தேகப் படுகிறீர்களா?

"சொன்னபடி கேட்பேன்."
என்ன வேலையானாலும் கொடுங்கள் :

"துணிமணிகள் காத்திடுவேன்."
ஊளையிட்டு உயிரை வாங்கும் பாப்பா இருக்கிறதா?

"சின்னக் குழந்தைக்குச் சிங்காரப் பாட்டிசைத்தே
ஆட்டங்கள் காட்டி, அழாதபடி பார்த்திடுவேன்,"
எவர் அழுகையும், துக்கமும் போய்விடுமாம் அவனைக் கண்டால்! வீட்டில்தானா அவன் காப்பான்?

"காட்டு வழியானாலும் கள்ளர் பயமானாலும்," காப்பானாம்! வேலை நேரமும் கட்டுப்பாடும் கிடையதாம்!

"இரவிற் பகலிலே எந்நேர மானாலும்
சிரமத்தைப் பார்ப்பதில்லை, தேவரீர் தம்முடனே
சுற்றுவேன் தங்களுக்கோர் துன்பமுறாமற் காப்பேன்",

மிக்க வுரைபல சொல்லி விருதுபல சாற்றுகின்ற இந்த ஆள் ஆரம்பிக்கிறதே இப்படி இருக்கிறது! கூலிக்காகத் தான் அடி போடுகிறானோ?

அந்த சந்தேகத்திற்கும் பதில் கொடுக்கிறான்;

"ஐயனே!
தாலி கட்டும் பெண்டாட்டி சந்ததிகளேதுமில்லை" நானோர் தனியாள் ;

கடைசியில் பார்த்தால் அவன்தான் மிச்சம். ஒண்டிக்கட்டை தான்! எனவே, செலவுகள் கிடையாது.

இவன் வயதையும் பார்ப்போம் :

"நரை திரை தோன்றுவிடினும்
ஆன வயதிற் களவில்லை;"

சரி, வேலை செய்கிறவனுக்கு ஏதாவது கொடுக்கத்தானே வேணும். அப்படியானால்,

"தேவரீர்
ஆதரித்தாற் போதும் அடியேனை ;"

கூலி என்று கொடுக்கத் தேவையில்லையாம். பட்சமாக வைத்துக்கொண்டால் போதுமாம்! ஏன் இப்படிக் கேட்கிறான்?

"நெஞ்சிலுள்ள
காதல் பெரிதெனக்குக் காசு பெரிதில்லை" — என்றான்.

அவனிடம் அன்பு செலுத்திவிட்டால் போதும். ஐந்து ஐம்பது என்று கொடுக்க வேண்டியதில்லையாம்!

தற்காலச் சேவகர்களின் லட்சணத்தை மேலே பார்த்தோம். இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு வேலைக்காரனு? இவன் பண்டைக் காலத்துப் பயித்தியத்தில் ஒன்றெனவே கண்ட பாரதியாரும் களிப்புடனே ஆளாகக் கொண்டு விட்டார்!

அதற்குப் பிறகு அவன் எப்படி நடந்து கொண்டான்? பாரதியாரைத் தானே கேட்க வேணும்?

" அன்று முதற்கொண்டு நாளாக நாளாக,"
நம்மிடத்தே கண்ணனுக்குப் பற்று மிகுந்து வரல் பார்க்கின்றேன்.

கண்ணனுடைய பற்று மிகுந்ததால் என்ன பலன் கிடைத்தது சொல்லுங்கள்! கவிதா சாமர்த்தியம் நிறைந்த பாரதியார் ஒப்புக் கொள்கிருர்!

" கண்ணனுல்
பெற்றுவரும் நன்மையெல்லாம் பேசி முடியாது "
சரி எப்படித்தான் கண்ணன் வேலை செய்கிருன்?

" கண்ணை இமையிரண்டும் காப்பதுபோல் என்குடும்பம்
வண்ணமுறக் காக்கின்ருன்."

இமையிருக்கிறதால் விழிக்கு அபாயமில்லை; இவனிருக்கிறதால் கவிக்கும் அபாயமில்லையாம்!

அரசாங்கப் பணி புரிவோர்கள் பார்க்கப்பட வேணுமாம்; கேட்கப் படக்கூடாது. அதாவது, அவர்கள் பொது மக்கள் காணப் பணி புரிய வேணும்; பொது மேடைகளில் நின்று பேசக் கூடாது. மனமுவந்து வேலை செய்கிறவன்தான் வாயை மூடிக் கொண்டு காரியத்தைக் கவனிப்பான். பாரதியார் சொல்கிருர்:

" வாய் முணுத்தல் கண்டறியேன்;"

கேட்டறியேன் என்றல்லவா கூறவேண்டும்? சில சமயம் வேலைக்காரர்கள் பேசுவார்கள்; கேட்க முடியாது. கண்ணுல் பார்த்தால்தான் அவர்கள் உதடு அசைவது தெரியும். கண்ணன் வாய் முணுப்பைக் கண்ணுல் கூட காணவில்லையாம்! வாயை முணுத்தால்தானே!

சரி; கண்ணனைப் பற்றிக் கண்ணுல் காணுவதுதான் என்ன? அவன் வந்தபோது சொன்னபடி

" வீதி பெருக்குகிருன்; வீடு சுத்தமாக்குகிருன் "

தப்புக் கண்டுபிடித்தால், தமுக்கா போடுகிருன்?

" தாதியர் செய் குற்றமெல்லாம் தட்டி யடக்குகிருன்."
குழந்தைகளிடம் எப்படி?

பெரியவர்களுக்கு எல்லா வேலைகளையும் செய்யாமற் போனால் பாதகமில்லை. அவர்கள் பார்த்துக் கொள்ளுவார்கள். ஆனால் குழந்தைகள் விஷயம் அப்படியல்ல. அதனால்தான் கண்ணன்,

" மக்களுக்கு வாத்தி, வளர்ப்புத்தாய், வைத்தியனாய்
ஒக்கநயங் காட்டுகிறான் :"

பொருள்கள் என்றால் மிக அலட்சியம் வேலைக்காரர்களுக்கு. விலைவாசிகள் கஷ்டம் ஒன்றும் தெரியாது அவர்களுக்கு. கண்ணனே,

" ஒன்றுங் குறைவின்றிப்
பண்டமெல்லாம் சேர்த்துவைத்து, பால்வாங்கி மோர் வாங்கி " வைப்பான். இது மட்டுமல்ல. இந்தப் பொறுப்பைச் செய்ய வேண்டியவர்கள் வீட்டுப் பெண்மணிகள். சோம்பலும், அறியாமையும் போனால்தானே அவர்கள் இவைகளைக் கவனிப்பார்கள். அப்படியிருந்தும் கண்ணன்,

" பெண்டுகளைத் தாய்போல் பிரியமுற ஆதரித்து "
வீட்டில் எல்லோருக்கும் கண்ணன்.
" நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனுமாய் " விளங்குவான்.

பாரதியார் சந்தேகப்பட ஆரம்பித்தார். இவை சாதாரண மனித குணமல்ல. **தெய்வத் தன்மைதான் !** ஆனாலும் அவன்

FOR

CLEAN,

WHOLESOME,

DELICIOUS

NORTH AND SOUTH INDIAN DISHES

●

VISIT

MODERN COFFEE HOUSE,
41-M, CONNAUGHT CIRCUS,
NEW DELHI.

Telephone No. 48188

பார்க்கிற பார்வையைப் பார்த்தால் வேலைக்காரனாகவே தோன்று கிறான்.

"பண்பிலே தெய்வமாய்ப் பார்வையிலே சேவகனாய்"

எங்கிருந்தோ வந்த இவன், சந்தேகத்திற்கும் இடம் வைக்காமல், **இடைச் சாதி** என்று சொல்லிக் கொண்டான்.

இத்தகைய கண்ணனை அடைந்த பாரதியாருக்கு ஏற்படும் பெருமையைப் பாருங்கள்!

இங்கிவனை யான்பெறவே என்ன தவஞ் செய்துவிட்டேன்!"

"உண்ணுஞ் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம்
கண்ணன், எம்பெருமானென்றே கண்கள் மல்கி"

உருகினார் நம்மாழ்வார்.

"சேமநல் வீடும் பொருளும் தருமமும், சீரியநற்
காமமு மென்றிவை நான்கென்பர், நான்கினும் கண்ணனுக்கே
ஆமதுகாம மறம் பொருள் வீடிதற்கென்றுரைத்தான்
வாமனன் சீலன், இராமாநுசன் இந்த மண்மிசையே"

என்று சகல புருஷார்த்தங்களையும் கண்ணனுக்கே அர்ப்பணிக்க வேண்டுமென ஸ்ரீராமாநுஜர் உபதேசித்ததைத் திருவரங்கத்து அமுதனார் எடுத்துக் காட்டுகிறார்.

"நாம் பகவானிடம் அன்பு செலுத்த வேண்டும்; அவன் நம் வேலைகளை யெல்லாம் முடித்து வைப்பான் உடனிருந்தும், முன்னிருந்தும்," என்று மகான்கள் உபதேசித்த் பெரும் உண்மையைப் பாரதியார் புதுமை மெருகு கொடுத்து இப்படியெல்லாம் காட்டி வந்தார். மேலும்,

**"எண்ணம், விசாரம் எதுவுமவன் பொறுப்பாய்ச்
செல்வம், இளமாண்பு, சீர், சிறப்பு, நற் கீர்த்தி
கல்வி, அறிவு, கவிதை"**

முதலான ஒளிசேர் நலமனைத்தும் ஓங்கி வருமாம்!

"அருச்சுனா! சகல பற்றுக்களையும் விடுவாயாக! என்னையே சரணாகப் பற்றுவாயாக! நான் இரட்சிக்கிறேன்!" என்று கண்ணன் கீதையில் அருளியதைக் கடைப்பிடித்து,

**"கண்ணனை நான் ஆட்கொண்டேன்
கண் கொண்டேன்! கண் கொண்டேன்!
கண்ணனை ஆட்கொள்ளக் காரணமும் உள்ளனவே!"**

எனத் தம் களிப்பை வெளியிடுகிறார்!

நம் வேலைகள் எல்லாம் கண்ணனிடம் ஒப்படைத்தால், அவைகளை அவனே நடத்தி வைப்பான் என்ற மயர்வறும் மதிநலத்தைப் பெறுவோமாக!

குடும்பப் பத்திரிகைகள்

கலைமகள் – மணிக் கணக்காக உட்கார்ந்து சுவாரஸ்யமாகவும் உபயோகமாகவும் படிக்கக்கூடிய கதைகளும் கட்டுரைகளும் புதிய தொடர் கதைகளும் நிறைந்தது. தமிழர்கள் எங்கிருந்தாலும் தமிழ் மணத்தை அவர்களுக்கு வழங்கும் மாதப் பத்திரிகை.

வருஷ சந்தா, தீபாவளி மலர் உள்பட ரூ. 7/50

மஞ்சரி – நாட்டின் பல பாஷைகளில் வெளியாகும் நூற்றுக்கணக்கான பத்திரிகைகளிலிருந்து சிறந்த விஷயங்களைப் படித்து, ஆராய்ந்து, பற்பல ருசியும் பயனும் மிகுந்த கட்டுரைகளைத் தாங்கி வருகிறது. அநேகமாக ஒவ்வோர் இதழிலும் ஒரு முழுப் புத்தகச் சுருக்கமும் வருகிறது.

வருஷ சந்தா ரூ. 4/75

கண்ணன் – ஐந்து முதல் பதினைந்து வயது வரையுள்ள உங்கள் செல்வக்குழந்தைகளைக் களிப்பில் ஆழ்த்தும் கதைகளும் அறிவை வளர்க்கும் விசேஷப் பகுதிகளும் அவர்களுடைய திறமையைத் தூண்டும் அம்சங்களும் நிறைந்தது.

வருஷ சந்தா, தீபாவளி மலர் உள்பட ரூ. 5/50

மூன்று பத்திரிகைகளின் சந்தா, தீபாவளி மலர்கள் உள்பட ரூ. 17/75 ஆகிறது. மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தாவுக்கு ரூ. 15/75.

கலைமகள் காரியாலயம், சென்னை–4

அத்புத்

"தூன்"

"இன்னிக்கு என்ன டிபன் செய்கிறது?"

நான் முப்பது வயது வரையில் திருமணம் வேண்டாம் என்று ஒத்திப்போட்ட காரணமே இந்த மாதிரியாக தினசரிக் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியத்திலிருந்து தப்பிப் பிழைத்திருக்கத்தானே! இந்தக் காரணத்தைவிட, வேறு பல பலமான காரணங்களுக்காகக் கல்யாணம் செய்து கொள்ளவேண்டும் என்று எண்ணத் தூண்டியவர்களைச் சபித்துக் கொண்டே நல்ல டிபனை விட ருசியான குரலினிமையுடன் கேட்ட என் ரேணுவின் முகத்தை நோக்கினேன்.

நான் பதில் சொல்லத் திக்கு முக்காடுகிறேன் என்று என் முகக்களையிலிருந்து அகப்பொருளை அறிந்த அவள் "இன்னிக்குப் புதிசா ஒரு பட்சணம் செய்யப் போகிறேன்" என்று செவ்வாயால் செப்பினுள்.

'புதிய' என்றுலே யாருக்கும் ஒருவகை இனந்தெரியாத பயம் ஏற்படும். பழைய எஜமான் தொலையத் தேங்காய் உடைப்பதாய் வேண்டிக்கொண்டவர்கள் புதிய எஜமான் வரப் போகிருர் என்று கேட்டதும் இவர் மட்டும் பழையவரை நல்லவராக்கா விட்டால் இரண்டு பங்கு தேங்காய் உடைப்பதாய் வேண்டிக் கொள்வதில்லையா? பழைய கணவன் குறட்டை விடுவதால் தூக்கம் வரவில்லை என்று விவாக ரத்து வாங்கிக்கொண்டு புதிய கணவன் வந்ததும் அவன் விட்ட குறட்டையில் கூரையே இருவர் மேலும் இடிந்து விழுந்ததைத் தான் நாம் கேட்டதில்லையா? புதிய திண்பண்டம் எப்படியிருக்குமோ, என்ன பெயரோ என்று விசாரிப்போம் என்று வாயெடுக்குமுன் ஒரு வருஷப் பழைய கணவனுகி விட்ட என்னை விட்டுவிட்டுப் புதிய தின்பண்டம் தயாரிப்பதிலிருந்த உற்சாகத்தில் அவள் உள்ளே போய் விட்டாள்.

அவளைத் துரத்திக்கொண்டு ஓடலாம் என்ற முயற்சியை முறியடித்துக் கொண்டு, நாகமுத்து என் பெயரை அழைத்தபடி இடைகழியிலிருந்து உள்ளே தன்னை நுழைத்துக் கொண்டான்.

நாகமுத்து எட்டி வருவதை வாசல் வழியாகப் பார்த்தால் புறக்கடைப் புறமாக நான்

MY KINGDOM
FOR A
PACKAGE
OF...
Parle's Gluco
BISCUITS

நழுவி விடுவேன். நான் பட்டாளத்திலிருந்தபோது துப்பாக்கிகளுக்குப் பயந்து ஓடியதில்லை. ஆனல் நாகமுத்துவின் துளைப்பான, சளைக்காத நாவின் ஓயாத பேச்சுக்கு நான் கோட்டையை விட்டுப் புறங்காட்டி ஓடவே நேருகிறது. வெளியில் 112° வெயில். ஆளோ உள்ளே வந்து விட்டான்.

நாகமுத்து வழக்கம்போல் அணுகுண்டு அரசியல் முதல் ஐந்தரைப் பெட்டி சாமான்கள் உள்ளிட்டு பிர்மசூத்ரபாஷ்யம் வரையில் பேசிக்கொண்டிருந்தான். காது செய்த பாபம் நாகமுத்து என் நண்பனுனது என்ற விரக்தியுடன் அவனுடைய அரைகுறைக் கேள்வி ஞானத்தால் ஏற்பட்ட மேலெழுந்தவாரியான அறிவைக் காட்டிய ஆழமில்லாத பேச்சையெல்லாம் பிர்மார்ப்பணம் என்று அரை மணி நேரம் சகித்துக்கொண்டிருந்தேன். யாரோ வாசலில் கதவை மணிக்கட்டால் தட்டி உள்ளேவர அனுமதி கோருவது போல இருந்தது. தில்லியில்தான் முதல் வாரத்தில் கையிலொரு போலி ரசீதுப் புத்தகத்தைத் தூக்கிக் கொண்டு நெற்றியில் சந்தனம் குங்குமம் சாத்திக் கொண்டு தலையில் ஒரு கதர்க் குல்லாய் முத்திரையைப் பூட்டிக் கொண்டு, 'அனுதாச்சிரமம், கோசம் ரட்சணம்' என்று கூறிக் கொண்டு, ஆத்ம சம் ரட்சணத்துக்குச் சோம்பேறிகள் நம் தர்ம சிந்தனையைத் துஷ்பிரயோசனப் படுத்திக் கொள்ளப் புறப்பட்டு விடுகிருர்களா. ஆகையால் ஆள் யார் என்று பார்த்துவிட்டு அனுமதிக்கலாம் என்று எழுந்து போய்ப் பார்த்தேன்.

"அட, நீயாடா இந்த வீட்டில் இருக்கிருய்?" என்று டகாரப் பிரயோகப் பரிச்சயத்துடன் உறவு கொண்டாடிக்கொண்டே என் கையைக் குலுக்கினுன் நரமணி.

நரமணியின் குரலைக் கேட்டு நாகமுத்துவும் எழுந்துவந்தான்.

"நாகமுத்து உன்னைத் தேடிக் கொண்டு இங்கே வந்தது நல்ல தாய்ப் போச்சு. எத்தனையோ வருஷத்துக்குப் பிறகு இவனைப் பார்க்கிறேன்" என்ருன் நரமணி நாகமுத்துவிடம் உற்சாகமாக.

"வா, உள்ளே" என்றேன் நரமணியிடம் நான்.

"எதிர் சாரி நிழலில் டாக்ஸியில் என் 'ஒய்ப்' இருக்கிருள். அவளைப் போய் அழைத்துக் கொண்டு வந்து விடுகிறேன்" என்று சொல்லி விட்டு நரமணி டாக்ஸியிலிருந்து அவனுடைய மனைவியை இறக்கி அணைத்தாற் போல அன்புடன் அழைத்து வந்தான்.

"இவள் என் மனைவி சந்திரா" என்று சந்திராவை அறிமுகம் செய்வித்து விட்டு என்னை அவளுக்கு அறிமுகம் செய்வித்தான்.

எல்லோரும் உள்ளே சென்று இருந்த ஆசனங்களில் எங்களைப் பரிமாறிக் கொண்டோம்.

நான் உள்ளே சென்று மூன்று விருந்தினர் புதிய பட்சணத்துக்கு வந்திருப்பதாக முன் அறிவிப்புக் கொடுத்து விட்டு நரமணி தம்பதியும் நாகமுத்துவும் இருந்த அறைக்கு வந்தேன்.

"பம்பாயிலிருந்து காலம்பர வந்தேன். உன்னுடைய வீட்டுக்குப் போனேன், நாகமுத்து. கோடைக்குப் பயந்து கொண்டு உன் மனைவி ஊருக்குப் போய் விட்டாள் என்று வீட்டுக்காரன் சொன்னான். சந்திரா என்ன சொன்னாள் தெரியுமா?', என்று நரமணி நாகமுத்துவைக் கேட்டான்.

"உங்கள் பேச்சுத் தாங்க முடியாமல் கோடையைக் காரணமாக வைத்துக் கொண்டு கும்பகோணம் மௌனஸ்வாமி மடத்தில் போய் இருந்து விட்டு வரலாம் என்று போயிருப்பாள் என்றேன்" என்றாள் சந்திரா.

"நீ 12A/42ல் இருப்பாய் என்று உன் வீட்டுக்காரன் சொன்னான். இங்கே வந்தால் இவனைத் துளைத்துக் கொண்டிருக்கிறாய்" என்று கூறிவிட்டு, என்னை அவனுக்கு அஹமதாபாதிலிருந்து பத்தாண்டுகளுக்கு முன் எப்படித் தெரியும் என்று நாகமுத்துவுக்கு விவரித்தான் நரமணி.

ரேணு அவள் தயாரித்த புதிய தின்பண்டத்தைத் தட்டுகளில் வைத்து ஆளுக்கொரு தட்டாகக் குட்டி மேஜையில் வைத்தாள்.

சந்திராவையும், நரமணியையும் நான் ரேணுவுக்கு அறிமுகம் செய்வித்தேன்.

"சந்திரா என்பது யார் தெரியுமா? பத்திரிகைகளில் 'நளபாகினி' என்ற புனைப் பெயரில் சமையல் பக்குவங்களை எழுதுகிறாரே, அந்த நளபாகினி இந்த சந்திரா தான்" என்று நாகமுத்து, சந்திராவைப் பற்றி நானும் என் மனைவியும் அறிந்திராததை, எடுத்துக் கூறினான்.

"அப்படியா, இவரா நளபாகினி!" என்று அளவற்ற ஆச்சரியத்துடன், இத்தனை பெரிய பாக்யம் தனக்கு கிடைத்தது ஏதோ கடந்த பிறப்பில் செய்த தவப் பயன் தான் என்று கருதியவள் போல் சந்திராவை நோக்கினாள், ரேணு.

"இவரே தான்," என்றான் நாகமுத்து.

"புதிய புதிய பக்குவங்களைப் புனைந்து நீங்கள் எழுதுகிறீர்களே, வீட்டில் உணவு தயாரிப்பு 'லாபரட்டரி' ஒன்று வைத்துச் சோதனைகள் செய்து தானே எழுதுகிறீர்கள்?" என்று ரேணுகா கேட்டாள். சில பேர் எழுத்தாளர்களைக் கண்டுவிட்டு, 'நீங்கள் எப்படி எழுதுகிறீர்கள்?' என்று சங்கடமான, பதில் சொல்ல முடியாத, வினாவைப் போடுவது போல.

"நரமணி! உன் வயிறு பெரிய அதிர்ஷ்டசாலி — உலகத்துக்கே உணவுக் கலையை உபதேசிக்கப் பிறந்தவளை நீ மனைவியாகப் பெற்றிருக்கிறாயே!" என்றேன் நான் குறுக்கிட்டு.

"அவளுக்கு வீட்டில் சமைக்க நேரம் ஏது? உணவுகளைக் கற்பனை செய்வதற்குத் தான் நேரம் போதவில்லையே. ஒரு தாவர நெய் கம்பெனி தங்களுக்குப் புதிய பக்குவ நூல் ஒன்று எழுதிக் கொடுக்க மூவாயிரம் ரூபாய்க்குக் 'கண்டிராக்ட்' எழுதி வாங்கிக்கொண்டு

போய் விட்டார்கள். ஆகையால் இருவரும் "வனபோஜனம்"என்கிற ஓட்டலில் தான் பம்பாயில் சாப்பிடுகிறோம்," என்றான் நரமணி.

"இதையும் இதையும் இத்தனை அளவில் கலந்தால் இன்ன சுவையாக இருக்கும் என்று யோசித்து எழுதி விடுவேன். லாபரட்டரின்னு ஒண்ணும் கிடையாது" என்று என் மனைவியின் கேள்விக்கு சந்திரா பதிலளித்தாள்.

"அப்போது சந்திராவின் புதிய பக்குவங்களை நீங்கள் சாப்பிட்டதில்லையா?" என்று ரேணு நரமணியை வினவினாள்.

"ஹூம், ஹூம்" என்று தலையை ஆட்டினான் நரமணி.

"அப்படியானால் நளபாகினி எழுதிய புதிய பக்குவம் ஒன்றைத்தான் உங்கள் முன்னால் வைத்திருக்கிறேன்," என்றாள் ரேணு.

"அப்படியா?" என்று நரமணியும் சந்திராவும் ஆச்சரியத்துடன் கேட்டனர்.

"உங்கள் பக்குவத்தில் ஒரு இம்மி குறைச்சல் இல்லாமல் செய்முறைக் குற்றம் ஒன்றும் இல்லாமல் செய்திருக்கிறேன். இதுவரை நான் உங்கள் பக்குவங்கள் ஒன்றையும் செய்து பார்த்ததில்லை. இதன் பெயர் என்ன சொல்லுங்கள்" என்று ரேணு சந்திராவைக் கேட்டாள்.

"எனக்கே தெரியாது," என்றாள் அவள்.

FOR

NEWS PAPERS
PERIODICALS AND
BOOKS
IN SOUTH INDIAN LANGUAGES

PLEASE VISIT

OUR KAROLBAGH BRANCH,
15–A/55, W. E. A. New Delhi-5.
Telephone No. 57340.

★

CENTRAL NEWS AGENCY,
23/90, CONNAUGHT CIRCUS,
NEW DELHI - I.

"அவள் செய்து சாப்பிட்டிருந்தால்தானே!" என்றான் நரமணி.

"'அத்புத்' என்ற வாரப் பத்திரிகையில் போட்டிருந்தீர்களே"

"இது 'அத்புத்தா'?" என்று கேட்டாள் சந்திரா. கண் அகல, குரல் நீள, கழுத்தும் கூடச் சேர்ந்து நீள!

"என் முதல் பக்குவத்தைக் குரு தட்சிணை போல உங்களுக்கே அர்ப்பணம் செய்ய வாய்ப்புக் கிடைத்தது என் அதிர்ஷ்டம். சாப்பிடுங்கள். இன்னும் ஒரு ஈடு போட்டு எடுத்து கொஞ்சம் 'அத்புத்தும்' காபியும் கொண்டு வருகிறேன்" என்று குரு பக்தியுடன் கூறிவிட்டு ரேணு அடுக்களைக்குச் சென்றாள்.

ஆளுக்கொரு விள்ளல் 'அத்புத்தை' விண்டு வாயில் போட்டுக்கொண்டு விட்டோம். வயிறு உள்ளே சென்ற அத்புத்தை, நாம் வெள்ளைக்காரனை வெளியேற்றப் பிரயோகித்த ஸ்லோகம் போல 'வெளியேறு' என்று கலாட்டா செய்ய, அத்புத்தே நீ திரும்பி வந்தால் மறுபடி நாக்குச்சகியாது என்று தொண்டை அத்புத்தை உள்ளே பிடித்துத் தள்ள, கை மறு விள்ளலுக்கு முயற்சி செய்யாமல் நின்று விட்டது.

"அடே, மறந்தே போடுத்தே. 3–20க்கு மிஸஸ் ஜனார்த்தனத்துக்கு போன் செய்வதாகப் ப்ராமிஸ் செய்திருந்தேன். எக்ஸ்க்யூஸ் மீ, உங்கள் மனைவியிடம் நான் போய் விட்டதாகச் சொல்லுங்கள்" என்று கூறியபடி சந்திரா அவசரமாக எழுந்தாள்.

நான் என்ன சொல்லியும் கேட்காமல் அவள் வெளியேறி விட்டாள். மனைவியின் குறிப்பறிந்து கொண்டு நரமணியும் அவள் பின்னே நடையைக் கட்டினான். நாகமுத்துவும் அவர்களோடு டாக்ஸியில் ஏறிக் கொண்டான்.

'அத்புத்' எப்படியிருந்தது? அவர்கள் எல்லாம் எங்கே?" என்று கேட்டுக் கொண்டே அடுத்த ஈடு அத்புத்துடனும் காபியுடனும் ரேணு வந்தாள்.

"அத்புத் அத்புதமாக' இருந்தது. அவர்கள் போய் விட்டார்கள்" என்றேன் நான்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு என் மனைவி, நளபாகினி எழுதினாலும் சரி, பீமபாகினி எழுதினாலும் சரி புதிய பட்சணங்களைச் செய்யும் முயற்சியில் ஈடுபடுவதில்லை. என்னையும் என்ன டிபன் செய்ய என்று கேட்பதில்லை. நான்தான் சொல்லிவிடுவேனே 'அத்புத்' வேண்டுமானால் செய்யேன் என்று. எல்லாம் நல்லதற்குத்தான் போங்கள்!

தமிழன் தொண்டு

தமிழன் நிகழ்த்த வேண்டிய தொண்டுகள் பலப்பல; பலதிறத்தன. அவற்றுள் தலையாயது ஒன்றுள்ளது. அது திருவள்ளுவத்தை உலகுக்குப் பொதுமையாக்குவது.

— திரு. வி. க.

The house of the gay, colourful and brilliant handloom fabrics

handloom house

9-A, Connaught Place, New Delhi.
221, Dr. Dadabhai Navroji Road, Bombay - 1.
9, Ratan Bazar, Madras - 3.
2, Lindsay Street, Calcutta - 16.

Head Office : **All India Handloom Fabrics Marketing Co-operative Society Ltd.,**
Janmabhoomi Chambers, Fort Street, Bombay - 1.

Overseas Emporia At:
ADEN - KUALALUMPUR - COLOMBO - SINGAPORE.

★

With Best Compliments

of

THE EAST ASIATIC CO. (INDIA) PRIVATE LTD.,

BOMBAY - CALCUTTA - MADRAS - NEW DELHI.

★

வாழ்க்கை ஒரு யோகம்

தி. சா. ராஜு

அரும்பிறவிப் பயனடைந்த அருட்குரவன் கோயில்
அகிலமெலாம் நின்கோயில் அருட்சோதி அரசே !

யோகம் என்ற சொல் 'யுஜ்' என்ற வடமொழி மூலத்திலிருந்து பிறந்தது. 'யுஜ்' என்ற பதத்திற்கு இணைத்தல் என்பது பொருளாகும். வாழ்க்கை முறையையும், வாழ் நாட்களையும் ஒரு குறிப்பிட்ட செயலை நிறைவேற்ற வேண்டி இணைத்து விடுவதுதான் யோகம். துரதிருஷ்ட வசமாக அந்தச் சொல்லிடம் மக்களுக்குக் காரணமற்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. காரணம் அதைச் சுற்றியிருக்கும் 'தெய்வீக'ப் பொடிகள்.

'எல்லாத் தொழிலுமே யோகமா'? என்று கேட்டால் 'ஆமாம்' என்று விடையிறுக்கத்தான் தோன்றுகிறது. பத்துப் பீங்கான் தட்டுகள், கோப்பைகள், கரண்டிகள், கத்திகள் ஆகியவைகளை மாற்றி மாற்றி விசிறி விட்டு அவைகளை வரிசையாகத் தலைமேல் அடுக்கிக் கொள்ளுவதும் சாதனையின் விளைவுதான். ஆனல் அது எந்த நோக்கத்துடன் செய்யப்படுகிறது என்பது முக்கியம்.

ஃபிரான்சு தேசத்துச் சகோதரர் லாரன்ஸ், மடப்பள்ளியில் பாத்திரங்கள் கழுவுவதையும், குருமார்கள் உண்ட மேஜையைத் துடைப்பதையும் அவர்களுடைய உண் கலங்களை அலம்புவதையுமே வழிபாடாகக் கொண்டார். மேரிஅன்னையின் சிலை முன்பு தலைகீழாக நின்றுகொண்டு கால்களால் கத்தி எறியும் வேலையைச் செய்வதன் மூலம் தமக்குத் தெரிந்த ஒரே திருப்பணியை இறை உணர்வுக்குக் காணிக்கை ஆக்கினர். அன்னை மேரி தமது பீடத்தை விட்டு இறங்கித் தன் முன்றானையால் அவருடைய நெற்றி வியர்வையைத் துடைத்தார் என்பது வரலாறு.

'எத் தொழிலைச் செய்தாலும், ஏதவத்தைப் பட்டா லும் முத்தர் மனமிருக்கும் மோனத்தே' என்பது பெரியோர் வாக்கு. ஜனக மன்னர் குடும்ப வாழ்க்கை நடத்தினர்; மிதிலாபுரியை ஆண்டார். யாக்ஞவல்கியர் இரண்டு மனைவியருடன் இல்லறம் நடத்தினர். என்றாலும் அவர்கள் யோகிகள். தாம் செய்யும் செயல்கள் அனைத்தையும் சிரத்தையுடன் செய்தார்கள். அவற்றின் பலனை ஆண்டவ னுக்கு அர்ப்பணமாக்கினர்கள்.

'யோக: கர்மஸு கௌசலம்' என்கிறது வேதசாரம். செய்வன திருந்தச் செய்வதுதான் யோகம். பறவையின் கண்ணைக் குறிவைத்த அர்ஜுனன் தன்னைச் சுற்றியிருந்த சகலத்தையும் மறந்துவிட்டான். வேறெதுவும் அவனுடைய பார்வையில் படவில்லை. அவன் உள்ளத்தைத் தீண்டவில்லை. அத்தகைய ஒருமுனைப் பாங்கு ஒரு யோக சாதனை.

ஆரூர் கல்யாணசுந்தர முதலியார் அவர்கள் இளமையி லேயே மனைவியை இழந்தார். அதற்குப் பிறகு உள் நெறி காத்தார். பத்திரிகை நடத்தினர், நூல்கள் எழுதினர், பொதுக்கூட்டங்களில் சொற்பொழிவாற்றினர், தொழிற் சங்கம் நிறுவினர், தேசீய இயக்கத்தில் தீவிரமான பங்கு கொண்டார். ஆனல் எதையாவது வாழ்க்கையின் சிறப் பான தொழிலாகக் கொண்டாரா என்று வினவினல், எழுத்துப் பணி நம் கண்முன்பு முதன்மையாக நிற்கிறது.

'எனது புறப்படங்களில் என்னைப் பார்ப்பதைப் பார்க் கினும் எனது நூல் படங்களில் என்னைக் காணுமாறு வேண்டுகிறேன்' என்ற துணிவுடன் தமது வாழ்க்கைக் குறிப்புகளில் எழுதினர். இளமைக் காலத்தில் தென்றலாகத் தொடங்கிய அவருடைய எழுத்து தேசீயபோராட்ட நேரத் தில் புயலைப் போல் வீசியதுண்டு. என்றாலும் அவைகளி னூடே ஆழ்ந்த தத்துவம் இருந்தது. பின்னர் தாம் நடத்திய பத்திரிகைக்காக எழுதினர். காந்தி அடிகளைக் குறித்து முற்றிலும் புதியதொரு கோணத்தில் நின்று பெரிய நூல் ஒன்று வரைந்தார். கவிதைகள் பல யாத்தார். அரும் பெரும் ஆராய்ச்சி நூல்கள் எழுதினர். கண்பார்வை மங்கி விட்ட காலத்திலும் தடவித் தடவி எழுத முயன்றார். முற்றிலும் பார்வை இழந்துவிட்டபோது தாம் பேசுவதை எழுதிக்கொள்ளச் செய்தார். இவ்வாறு எழுத்து அவரு டைய வாழ்க்கைக்கு ஒரு முக்திசாதனமாக விளங்கிற்று.

ஆரூர் முனிவரிடம் நெருங்கிப் பழகியவர்கள் அவரை ஒரு வட்டத்திற்குள் பிடித்து வரையறுத்துவிட முடியாது என்று கூறுவதுண்டு. காந்தீயத்திடம் அவருக்கு எல்லையற்ற பற்று உண்டு. உண்மையான தேச பக்தர். கதரின் வளர்ச்சியிலே அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளவர். என்றாலும் தேசீயப் போராட்டத்தையும், கதரையும் ஏளனம் செய்த மறைமலை அடிகளிடம் அவருக்கு உறுதியான பக்தி. மார்க்ஸீயத்தின் கோட்பாடுகள் அவருக்குப் பிடிக்கும். கார்ல்மார்க்ஸை அவர் முனிவர் என்று போற்றினார். மார்க்ஸீயத்தை மெய்ஞ்ஞானம் என்று குறிப்பிட்டார். அவர் இந்தியத் தொழிற் சங்கத்தின் பிதாமகர் என்றாலும் மேலை நாட்டு வன்முறைச் செயல்களில் அவருக்கு நம்பிக்கை கிடையாது. மலைகள்தோறும் குடியிருக்கும் முருகனிடம் அவர் அழகின் தத்துவத்தையே கண்டார். வள்ளலாரிடம் எல்லையற்ற ஈடுபாடு என்றாலும் இயற்கை வழிபாட்டைத் தான் அவர் தமது எழுத்தாலும் சொல்லாலும் வலியுறுத்தினார்.

ஆனால் எழுத்திலே அவர் ஒரு நெறியை உறுதியாக மேற்கொண்டார். அது வாழ்க்கைக் குறிப்பாக இருக்கட்டும், அருள் வேட்டலாகட்டும் அல்லது எட்வர்ட் மன்னன் முடி துறந்த வரலாறாகவும் இருக்கலாம். அவர் மேற்கண்ட

சாது எவன்?

......உலகுக்கு உழைக்கத் தன்பாலுள்ள குறைகளை அறவழியில் போக்கிக் கொண்டவன் சாது; மனிதனை விலங்காக்கி அலைக்குந் தீய நீர்மைகளினின்றும் விடுதலையடைந்தவன் சாது; பிறர்க்கு உழைப்பவன் சாது; முழுக் குண நலனுடைய ஒருவனைச் சாது என்று சுருங்கக் கூறலாம். சாது எக்கோலமும் கொள்ளலாம்; எந்நிலையிலும் இருக்கலாம். ஜனகன் வாழ்வு சாது வாழ்வுக்கு ஓரிலக்கியம் போன்றது. மனிதன் பிறந்து முயன்று முயன்று கற்பதும் கேட்பதும் வாழ்வதும் எற்றுக்கு? ஒரு காலத்தில் சாது நிலை எய்துதற்கன்றோ?......மனித வாழ்க்கையின் முடிந்த நிலையே சாதுநிலை. சாதுநிலை என்பது தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் ஒன்றென்க.

— **திரு. வி. க.**

மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்

கொள்கை ஒன்றேதான். அது 'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு' என்பது.

இத்தகைய ஆன்ம நேய ஒருமைப் பாட்டை அவர் தமது வாழ்க்கையின் எல்லாத் துறையிலும் பின்பற்றினர். எந்தக் கூட்டத்தில் எந்தப் பொருளைப் பற்றிப் பேசினலும் அதன் அடிப்படைக் கொள்கை அன்பு. பிற உயிர்களில் தம்மையும், தம்மில் பிற உயிரையும் கண்ட அரசியல்வாதி. வட நாட்டில் காந்தி அடிகள், தென்னட்டில் திரு. வி. க. என்று துணிவாகக் கூறலாம்.

தமிழ் நாட்டில் ஒரு நல்ல விமரிசகர் வாழ்கிருர். அவர் ஒரு நல்ல எழுத்தாளரும் கூட. ஏழு மேலை மொழிகள் அவருக்குத் தெரியும். பல நெடுங்கதைகளையும், நிலைத்து நிற்கக்கூடிய சிறு கதைகளையும் அவர் எழுதியிருக்கிருர். அவர் யாருடைய எழுத்தையும் தரமுள்ளது என்று ஏற்றுக் கொள்ளமாட்டர். இன்றைய இலக்கிய உலகில் அவருக்கு எதிரிகள் தாம் அதிகம்.

அத்தகைய பிரமுகர் திருவாரூர் முனிவரது எழுத்தைத் திறனய்வு செய்யும் காலை, 'அவரைப்போல ஒரு பக்கமாவது எழுத வராதா என்று ஏங்குகிறேன்' என்று வரைகிருர்.

கொலையுண்ட ஜூலியஸ் ஸீஸரின் சடலத்தின் முன்பு அவருடைய உயர் குணங்களை விவரித்துக் கூறிய ஸீஸரின் நண்பனன மார்க் ஆண்டனி, "ஸீஸரின் பகைவரும் கூட நான் கூறிய புகழ் மொழிகளை அவர் குறித்துக் கூறுவர்" என்று மொழிகிருன்.

முனிவரது யோக சாதனையாக விளங்கிய அவருடைய எழுத்துக்களைப் பற்றி நான் என் புன்மைச் சொற்களால் என்ன கூறிப் புகழ்ந்துவிட முடியும்?

வளர்ச்சி

வளர்ச்சி என்பது ஒருவித தத்துவம். உயிர்கள், சமூகம், உலகம் வளர்ந்துகொண்டே போகின்றன. கண்ணுக்குப் புலனகும் வளர்ச்சியும் உண்டு; புலனகாத வளர்ச்சியும் உண்டு.

— திரு. வி. க.

துறவும் பாசமும்

எஸ். கிருஷ்ணமூர்த்தி

ரயில் சிதம்பரம் வந்து சேர்ந்த போது பிற்பகல் மணி ஒன்று இருக்கும். பதை பதைக்கும் வெயில். முத்துசாமி ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தார். ரயிலிலிருந்து இறங்கிய கூட்டத்தை ஜட்கா வண்டிக்காரர்கள் முற்றுகையிட்டுக் கொண்டிருந்தார்கள்.

"டவுனுக்குத் தானே போகணும்? ஏறுங்க சாமி, ஒரு ரூவா தான்," என்று சொல்லிக் கொண்டே முத்துசாமியிடம் வந்தான் ஒரு வண்டிக்காரன்.

முத்துசாமி தயங்கினர். வெயிலில் பசிக் களைப்புடன் நடப்பது கஷ்டந்தான். ஆனால் அதற்காக ஒரு ரூபாய் கொடுக்க முடியுமா? டவுன் இரண்டு மைல் கூட இல்லையே!

வண்டிக்காரன் பேசாமல் நகர்ந்துவிட்டான். இவர் எங்கே வண்டியில் ஏறப் போகிறார் என்று நினைத்தான் போலிருக்கிறது!

"நான் ஒரு தாலுகா ஆபீஸ் குமாஸ்தா என்பதை இவன் கூட எப்படியோ தெரிந்துக் கொண்டு விட்டானே!" முத்துசாமி தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டார். அச் சிரிப்பில் வேதனையும், நிராசையும் கொப்பளித்தன. ஏழைமையைப் பறைசாற்றிக் கொண்டிருந்த தன்னுடைய தோற்றத்தைப் பார்த்துவிட்டுத் தானே ஒரு பெருமூச்சு விட்டார் அவர்.

வண்ணானின் உறவே அறியாத, நீர்க்காவி ஏறிய வேட்டி. அது அகலக் கட்டையாக இருந்ததால் – முழங்காலுக்கு ரொம்பக் கீழே வரவில்லை. மேலே ஏறக்குறைய அதே நிறத்தில் ஒரு சட்டை – இல்லை, சட்டையென்பதை விடப் பை வைத்த பனியன் என்று சொல்வதுதான் பொருந்தும். தோளின்மேல் ஒரு துண்டு; குளித்தால் தலை துவட்டிக் கொள்ள உபயோகமாகும், மற்ற நேரங்களில் அது அங்கவஸ்திரம். கையில் ஒரு சாக்குப் பை. அதில் அவருடைய மனைவி பிசைந்து கொடுத்திருந்த தயிர் சாதமும் ஒரு நல்ல வேட்டியும் சட்டையும் அடங்கியிருந்தன. அந்த நல்ல வேட்டியும் சட்டையும் அன்றிரவு அவர் பிள்ளை வீட்டாரைப் பார்க்கப் போகும் போது அணிந்து கொள்வதற்காக. இந்த மாதிரிப் பரதேசிக் கோலத்திலா அவர்களைப் பார்க்கப் போக முடியும்?

முக அலங்காரத்தின்
முக்கிய சாதனங்கள்

ஐடெக்ஸ்
கண் மை

GP.

அரவிந்த் பிந்தி
(குங்கும வாசனை சாந்து)
இது கண்ணைக் கவரும்
ஆறு கலர்களில் கிடைக்கும்.

அரவிந்த் லாபரட்டரீஸ்.,
P. B. 1415....மதராஸ்-17.

முத்துசாமி மறுபடி ஒரு பெரு மூச்சு விட்டார். பிறகு துண்டை இரண்டாக மடித்துத் தலைமேல் போட்டுக்கொண்டு டவுனை நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

சபாநாயகர் கோயிலை அவர் அடைந்தபோது ஜனசந்தடியே இல்லை. ஆயிரக்கால் மண்டபத்தில் மட்டும் சில யாத்திரீகர்கள் படுத்துக் கொண்டிருந்தார்கள். அதைக் கடந்து வந்து சிவகங்கைக் கரையில் உட்கார்ந்த போது முத்துசாமிக்கு நடந்து வந்த களைப்பால் மூச்சு வாங்கியது. அவர் அங்கேயே கொஞ்ச நேரம் உட்கார்ந்து இளைப்பாறிவிட்டு ஸ்நானம் செய்தார். ஈரத் துண்டை இடுப்பில் கட்டிக் கொண்டு வேட்டியை உலர வைத்துவிட்டு ஜப தபங்களை முடித்துக்கொண்டார். பிறகு சாதப் பொட்டலத்தைப் பிரித்தார். பசிக்கும், வெயிலுக்கும் அந்தத் தயிர் சாதம் அமிர்தமாயிருந்தது. பிறகு நடந்த களைப்பும், உண்ட களைப்பும் தீர ஆயிரக்கால் மண்டபத்தில் துண்டை விரித்துக்கொண்டு படுத்தார்........

* * *

அவர் பெண் சரோஜாவின் கல்யாண விஷயமாகத்தான் வந்திருந்தார் அவர். சரோஜா பெயருக்கேற்ப நல்ல அழகி. அவளுடைய பெயர்ப் பொருத்தம் இன்னொரு விஷயத்திலும் இருந்தது. தாமரை சேற்றில் பிறப்பதுபோல் அவள் பிறந்த குடும்பமும் வறுமைச் சேற்றில் உழன்றது. ஆகவேதான் அவளுடைய கல்யாணத்திற்கும் தடையாக இருந்தது. அவள்

எஸ். எஸ். எல். சி. வரை படித்திருந்தாள். அவளுக்குப் படிப்பு நன்ருகத்தான் வந்தது. ஆனால் விரைவில் கல்யாணத்தை முடித்துவிட வேண்டுமென்ற எண்ணத்தில் முத்துசாமி அவளை மேலே படிக்கவைக்கவில்லை. சரோஜாவின் படிப்பை நிறுத்தியதுமே அவர் வரன் வேட்டையில் இறங்கிவிட்டார். அதாவது சுமார் இரண்டு வருடங்களாக வரன் தேடிக் கொண்டிருக்கிருர். இதுவரை வரனிருக்குமிடம் தெரியவில்லை. இந்த இரண்டு வருடங்களில் உலகமே வெறுத்துவிட்டது அவருக்கு. தன்னுடைய பெண்ணின் அழகுக்கும், புத்திக்கும் யாராவது செலவேயில்லாமல் கல்யாணம் செய்துகொண்டு போய் விடுவான் என்ற நம்பிக்கை என்ரே இடிந்து போய் விட்டது.

இந்த சமயத்தில்தான் பத்திரிகையில் வந்த விளம்பரம் ஒன்று அவருடைய கண்ணில் பட்டது. —''அழகான பெண் தேவை. வரதக்ஷிணை வேண்டாம்.'' அவருடைய மனத்தில் நம்பிக்கை துளிர் விட்டது. அவருடைய நல்ல காலம், பெண்ணின் ஜாதகம் பொருந்தி யிருப்பதாகப் பிள்ளை வீட்டாரிடமிருந்து கடிதம் வந்து சேர்ந்தது. பையன் நல்ல உத்தியோகத்திலிருந்தான். லௌகிக விஷயங்களைப் பேசுவதற்கு நாள் குறித்து அனுப்பியிருந்தார்கள் பிள்ளை வீட்டார். அதற்காகத்தான் சிதம்பரம் வந்திருக்கிருர் முத்துசாமி......

"பஜகோவிந்தம் பஜகோவிந்தம்
பஜகோவிந்தம் மூடமதே!
ஸம்ப்ராப்தே ஸன்னிஹிதே
காலே
நஹி நஹி ரக்ஷதி டுக்ரிஞ்
கரணே!''

முத்துசாமி தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்டார். அவரருகில் யாரோ ஒருவர் உட்கார்ந்து கொண்டு 'பஜகோவிந்தம்' சொல்லிக் கொண்டிருந்தார். அவருடைய முகம் வேறு புறம் திரும்பியிருந்ததால் அதை முத்துசாமி பார்க்கமுடியவில்லை. ஆனல் அந்தக் குரல் ரொம்பப் பழக்கப்பட்ட குரலாக இருக்கிறதே!......

முத்துசாமி எழுந்து உட்கார்ந்து அந்தப் பெரியவரைக் கவனித்தார். முத்துசாமியைப் போலவே அவரும் நீர்க்காவியேறிய வேட்டியைக் கட்டிக் கொண்டிருந்தார். அவருடைய முகத்தின் பெரும் பாகத்தை நீண்ட தாடி மறைத்தது. அவர் கழுத்திலே உருத்திராட்சம், பக்கத்திலே ஒரு துணிப்பை, அவ்வளவுதான்.

சுலோகம் சொல்லிக் கொண்டிருந்தவர் கண்களைத் திறந்து முத்துசாமியைப் பார்த்தார். அடுத்த கணம் அந்தக் கண்களில் வியப்பு பிரதிபலித்தது...

"முத்துசாமி!'' என்று வியப்பு மேலிடக் கூவினர் அவர்.

"அண்ணு!'' என்று அவரைக் கட்டிக்கொண்டார் முத்துசாமி. ஆமாம், அது அவருடைய தமையன் சுந்தரம் தான்!

சுந்தரம் தேசாந்தரியாகக் கிளம்பி எவ்வளவோ வருடங்களாகிவிட்டன. அதற்குப் பிறகு

BEST FOR

SOUTH INDIAN DISHES

MADRAS HOTEL

HOTEL & RESTAURANT

Connaught Circus,
New Delhi - I.
Phone : 40595

அண்ணனும் தம்பியும் ஒருவரையொருவர் பார்க்கவேயில்லை. அண்ணா வீட்டை விட்டுப் போன பிறகு அவரை நினைத்து எவ்வளவோ நாட்கள் கண்ணீர் விட்டிருக்கிறார் முத்துசாமி. அவர் மட்டும் கூட இருந்திருந்தால் தனக்கு எவ்வளவு ஆதரவாக இருந்திருப்பார் என்று ஏங்கியிருக்கிறார்.

முத்துசாமியின் மனத்தில் அடங்கிக்கிடந்த துக்கமெல்லாம் இப்போது அண்ணனைக் கண்டதும் பீறிட்டுக் கொண்டு வெளியே வந்தது. "நீங்கள் என்னைத் தனியாக விட்டுவிட்டு வந்து விட்டீர்களே, அண்ணா!" என்று விம்மி விம்மி அழுதார் அவர்.

"அசடே, அழாதே! உலகத்தில் யாருக்கு யார் துணை? அகத்தில் எல்லாரும் சௌக்கியமா? குழந்தை சரோஜா நன்றாக இருக்கிறாளா?"

"எல்லாரும் சௌக்கியந்தான், ஆனால் சரோஜா இப்போது குழந்தையில்லை. அவளுக்கப்புறம் மூன்று குழந்தைகள் இருக்கிறார்கள். இப்போது அவள் கல்யாணத்துக்கு நிற்கிறாள்."

"சரோஜா அவ்வளவு வளர்ந்து விட்டாளா! ஆமாம் ஆமாம். நான் இப்படிக் கிளம்பியே பத்து வருடங்கள் ஆகிவிட்டனவே. அப்போது அவளுக்கு வயது ஏழு, இல்லையா?"

காலந்தான் எவ்வளவு வேகமாக ஓடிவிட்டது!.........பத்து வருடங்கள்!

* * *

சுந்தரத்துக்கும் முத்துசாமிக்கும் பத்து வயது வித்தியாசம். முத்துசாமி பிறந்த சில நாட்களிலேயே அவர்களுடைய தாய் இறந்து போய்விட்டாள். அதற்குப் பிறகு நான்கைந்து வருடங்கள்தான் அவர்களுடைய தந்தையும் உயிரோடிருந்தார். அவர் இறக்கும்போது பதினைந்து வயது நிரம்பிய சுந்தரத்தைக் கட்டிக் கொண்டு அழுதார். "உன்னை அனாதையாக விட்டு விட்டுப் போவதுமல்லாமல் உன் தம்பியின் பாரத்தையும் உன் மேல் போட்டு விட்டுப் போகிறேனே, அப்பா!" என்று.

வறுமையின் மடியிலேயே வளர்ந்த சுந்தரத்துக்கு அந்த வயதிலும் தன்னம்பிக்கையும் பொறுப்புணர்ச்சியும் நிரம்ப

இருந்தன. வாழ்க்கையில் நிரம்ப அனுபவப்பட்டவன் போல அவன் தன் தந்தைக்கு ஆறுதல் கூறினான். "கவலைப்படாதீர்கள் அப்பா! தம்பியைப் படிக்க வைத்து ஆளாக்குவது என்னுடைய பொறுப்பு."

தந்தையின் மரணத்துக்குப் பிறகு முத்துசாமியின் வாழ்வு தான் சுந்தரத்தின் குறிக்கோளாக ஆயிற்று. அவன் தன் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு ஒரு வேலையைத் தேடிக் கொண்டான். குறைந்த சம்பளந்தான். ஆனால் முத்துசாமிக்கு எவ்விதக் குறைவும் வைக்கவில்லை. காலையில் சமையல் செய்து முத்துசாமிக்குப் போட்டு அவனைப் பள்ளிக்கு அனுப்பி விட்டுத் தன் வேலைக்குச் செல்வான் சுந்தரம். மாலை திரும்பி மறுபடி சமையல். தம்பிக்கு ஆறிய சாதம் போட இஷ்டமில்லை.

விடா முயற்சியாலும், உழைப்பாலும் சுந்தரத்தின் வேலை யுயர்வு ஏற்பட்டது. வருமானம் பெருகிக் கொஞ்சம் பணம் சேமிக்கவும் முடிந்தது. அப்போதும் அவர் தன் கல்யாணத்தைப்பற்றிச் சிந்திக்கவேயில்லை. தம்பிதான் அவருடைய உலகம். அவருடைய நண்பர்கள் அவரை மணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தினால் அவர் சிரித்துக் கொண்டே, "எனக்கு ஏனப்பா அந்த வம்பு! வருகிறவள் என் தம்பியை எப்படி நடத்துவாளோ! அவன் படிப்புக்காக நான் பணம் செலவு செய்யக் கூடாது என்று கூடச் சொன்னாலும் சொல்வாள். யார் கண்டது, நான் கூட அவளுக்கு அடங்கி நடக்க ஆரம்பித்தாலும் ஆரம்பித்து விடுவேன். எதற்கு இந்த விஷப் பரீக்ஷை?"......

ஆனால் நண்பர்கள் சுந்தரத்தைக் கடைசி வரை பிரம்மசாரியாக இருக்க விடவில்லை. "எவ்வளவு நாட்கள்தான் இப்படிச் சமைத்துக் கொண்டிருப்பாய்? தாயன்பையே அறியாத முத்துசாமிக்குத் தாயாக ஒரு பெண்ணை மணந்து கொள்" என்றெல்லாம் வற்புறுத்தி லக்ஷ்மியை அவருக்கு மணம் செய்து வைத்தார்கள்.

நல்ல வேளை, லக்ஷ்மி ஒரு தெய்வப் பிறவியாக வந்து வாய்த்தாள். முத்துசாமியைத் தன் குழந்தை போல நேசித்தாள் அவள். முத்துசாமிக்குத் தாயில்லாக் குறையே மறந்து போய்விட்டது.

With best Compliments

from

SUGANDH STORES

Provision and General Merchants,

4/75, Krishna Market,

Karolbagh, New Delhi - 5.

ஆனால் முத்துசாமிக்குப் படிப்பு மட்டும் வரவில்லை. சுந்தரமும் லக்ஷ்மியும் பரீட்சை சமயத்தில் இரவு பூராவும் கண் விழித்து முத்துசாமிக்கு டீ போட்டுக் கொடுத்ததுதான் மிச்சம். பல தடவை பரீட்சை எழுதியும் இன்டர் தேறவில்லை. நாம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான் என்று சுந்தரம் தன் மனத்தைத் தேற்றிக் கொண்டு முத்துசாமிக்குத் தாலுகா ஆபீசில் ஒரு வேலை செய்து கொடுத்தார். ஒரு கல்யாணமும் செய்து வைத்தார்.

அண்ணனும் தம்பியும் ஒற்றுமைக்கு எடுத்துக் காட்டாக இருந்து வந்தார்கள். சுந்தரம் சொந்தமாக ஒரு வீடு கட்டி விட்டார். அண்ணனும் தம்பியும் ஒன்றாக இருந்தாலும் சுந்தரம் வீட்டுச் செலவுக்காகத் தம்பியிடம் பணம் எதிர்பார்ப்பதில்லை. முத்துசாமிக்குச் சொற்பச் சம்பளம். அவரோ நிறையச் சம்பாதித்தார். அவருக்குக் குழந்தைகளும் இல்லை. அவர் யாருக்காகச் சேர்த்து வைக்க வேண்டும்!

முத்துசாமிக்கு ஒரு பெண். குழந்தை சரோஜாவை சுந்தரமும் லக்ஷ்மியுந்தான் வளர்த்தார்களென்று சொல்ல வேண்டும். சரோஜாவுக்கும் பெரியப்பா, பெரியம்மாவிடம் ரொம்ப ஒட்டுதல்......

இந்த சமயத்தில் தான் ஒரு எதிர்பாராத சம்பவம் நடந்து விட்டது. காய்ச்சல் லக்ஷ்மியின் உயிரைப் பறித்துச் சென்றது.

லக்ஷ்மியின் மரணத்துக்குப் பின் சுந்தரம் அடியோடு மாறிப் போய்விட்டார். அவருடைய வாழ்வில் ஒரு சூனியம் ஏற்பட்டு விட்டது. லக்ஷ்மி தன் வாழ்வில் எவ்வளவு தூரம் ஒன்றிப் போயிருந்தாள் என்பது அவள் இறந்த பிறகுதான் சுந்தரத்துக்குத் தெரிந்தது. கனவிலும் நனவிலும் அவருக்கு அவள் நினைவுதான்.

பாசத்தின் மடியில்தான் வைராக்கியத்தின் வித்து இருக்கிறது என்பது எவ்வளவு உண்மை! சுந்தரத்துக்கு இப்போது வாழ்வில் அலுப்புத் தட்டிவிட்டது. சாப்பிடுவது, வேலைக்குப் போவது போன்ற அன்றாட நிகழ்ச்சிகளில் அவரது மனம் செல்லவில்லை. அவர் கொஞ்சங் கொஞ்சமாகத் தன்னுள்ளே சுருங்க ஆரம்பித்தார், ஆமை ஓட்டுக்குள் தன் தேகத்தை இழுத்துக் கொள்வது போல. வேதாந்த பரமான புத்தகங்களை வாசிக்க ஆரம்பித்தார். பிறகு வேலையையும் விட்டு விட்டார். அவர் உண்டு, அவரது அறை உண்டு, அவரது புத்தகங்கள் உண்டு. வெளியுலகை அவர் அநேகமாக மறந்து விட்டார்......

ஆனால் அவரால் உலகை முற்றிலும் மறக்க முடியவில்லை அதற்குக் காரணம் குழந்தை சரோஜாவின்மீது அவருக்கிருந்த பாசந்தான். இந்தப் பாசம் நாளாக ஆக அதிகரித்ததே தவிரக் குறையவில்லை. குழந்தையின் குறுகுறுப்பான முகத்திலும், அன்புப் பேச்சிலும் ஒரு அலாதி இன்பங் கண்டார் சுந்தரம்.

With the best compliments of

AMRUTANJAN LTD.,

MAKERS OF

AMRUTANJAN

Pain Balm

ANOLEUM

INHALER

&

GRIPE MIXTURE

FOR

LATEST DESIGNS OF

GOLD & STONE SETUP JEWELS

★

VISIT OR CONTACT

RADHAKRISHNA JEWELLERY

JEWELLERS & DIAMOND MERCHANTS

BIG BAZAAR, COIMBATORE.

Phone No. 2140.

Prop: S. T. RADHAKRISHNAN.

HINDUSTAN LEVER

SERVES THE HOME

HINDUSTAN LEVER LIMITED · THE SEAL OF QUALITY

Makers of quality

Soaps, Vanaspati and Toilet preparations

HLL. 8-610

அவர் இப்படி வேலையை விட்டுப் பித்துப் பிடித்தவர் போல வீட்டிலேயே உட்கார்ந்திருப்பது முத்துசாமியின் மனைவி கல்யாணிக்குக் கொஞ்சங் கூடப் பிடிக்கவில்லை. கல்யாணி நல்ல பெண்தான். தன் கணவனுக்காக சுந்தரமும், லக்ஷ்மியும்பட்ட கஷ்டங்களெல்லாம் அவளுக்குத் தெரியும். இருந்தாலும் அவள் மனிதப் பிறவிதானே! சுந்தரம் வேலை பார்த்து சம்பாதித்தால் அந்த பணம் அவளுடைய குடும்பத்துக்குத்தான் உபயோகப்படப் போகிறது. அவர் வேலையை விட்டதால் அந்த வருமானம் போய்விட்டதே என்று நினைத்தாள். சுந்தரம் ஏதோ சம்பாதித்தார்; அதற்காக ஆயுள் பூராவும் அவரை உட்கார்த்தி வைத்துச் சாப்பாடு போட முடியுமா?

முத்துசாமி இருக்கும்போது கல்யாணி தன் உணர்ச்சிகளை வெளிக் காட்டிக் கொள்ளவில்லை. அவர் ஆபீஸ் போன பிறகு தன் தோழிகளிடம் சுந்தரத்தின் காதுகளில் விழும்படி தன் அலுப்பை வெளியிட்டுக் கொண்டாள்.

சுந்தரம் முதலில் இதையெல்லாம் பொருட்படுத்தவில்லை. ஆனால் வெகு நாட்கள் அப்படியே இருக்க முடியவில்லை...

அவர் சரோஜாவின்மீதுவைத்திருந்த பாசமே கடைசியில் அவரை துறவியாக்கியது......

சரோஜாவுக்குச் சில நாட்கள் ஜுரமாயிருந்து அப்போதுதான் குணமாகியிருந்தது. மாலையில் அவளைக் கூட்டிக்கொண்டு உலாவப் போயிருந்தார் சுந்தரம். வழியெல்லாம் தின்பண்டக் கடைகள். விதவிதமான தின்பண்டங்கள் அழகாக அடுக்கப்பட்டுக் கண்ணாடி பீரோக்களில் வைக்கப்பட்டிருந்தன. சரோஜா தின்பண்டம் வேண்டுமென்று பிடிவாதம் செய்தாள். சுந்தரத்துக்கு வாங்கிக் கொடுக்க இஷ்டமில்லை. இப்போதுதான் ஜுரத்திலிருந்து எழுந்திருக்கிருள். கண்டதைத்தின்ருல் உடம்புக்கு ஆகுமா? ஆனுல் சரோஜா விடவில்லை. அவளுடைய கெஞ்சுதலை மீற முடியாமல் சுந்தரம் அவளுக்குத் தின்பண்டம் வாங்கிக் கொடுத்தார்.

கடைசியில் அவர் பயந்தபடியே நடந்து விட்டது. கடையில் வாங்கித் தின்றது சரோஜாவுக்கு ஒத்துக்கொள்ளவில்லை. வீடு போனதும் வாந்தியெடுத்து விட்டாள். கல்யாணிக்கு வந்த கோபத்துக்கு அளவில்லை. பிள்ளை பெற்றிருந்தால் தானே பிள்ளை யருமை தெரியும் என்ருள் அவள். உலகத்தை வெறுத்த வைராக்கியசாலிகளுக்கு இந்தப் பாசம் மட்டும் எதற்கு என்று கத்தினுள்......

கல்யாணி தன்னை ஏசியது சரிதான்என்று பட்டது சுந்தரத்துக்கு. ஆமாம் உண்மைதானே! வாழ்வை வெறுத்த பிறகு அவர் ஏன் இப்படி இங்கே ஒட்டிக் கொண்டிருக்க வேண்டும்? அவருடைய வாழ்க்கையைத் தன் இஷ்டப்படிஅமைத்துக்கொள்ள அவருக்கு உரிமை இருந்தது. ஆனுல் பிறர் வாழ்வில் அவர் எப்படிக் குறுக்கிடலாம்?...... இரவு பூராவும் யோசனை செய்து அவர் ஒரு முடிவுக்கு வந்தார்...

கல்விமுறை

இளைஞர் இந்நாளில் பயின்று வரும் கல்விமுறையில் ஒரு பெரும் மாறுதல் உறுதல் வேண்டுமென்பது எனது வேட்கை. இதற்குக் குருகுலக் கல்வி இன்றியமையாதது. ஆங்காங்கே குருகுலம் அமைக்க அறிஞர் முயல்வாராக.

— திரு. வி. க.

அவர் தனது முடிவைத் தம்பியிடம் சொல்லிய போது முத்துசாமி திடுக்கிட்டுப் போனார். "என்ன சொல்கிறீர்கள், அண்ணு! எதற்காக நீங்கள் எங்களை விட்டுப் போக வேண்டும்? இங்கே இருப்பதில் உங்களுக்கு என்ன கஷ்டம்?" என்றெல்லாம் வாதாடினார்.

ஆனால் சுந்தரத்தின் முடிவு மாறவில்லை. "நான் இனி ஒரு வெம்பின காய் மாதிரி. எனக்குக் குடும்ப வாழ்க்கை ஒட்டாது அப்பா" என்று தீர்மானமாகச் சொல்லி விட்டார்.

அவர் தன் வீட்டைத் தம்பிக்கு எழுதி வைத்தார். க்ஷேத்ராடனம் செய்து காலத்தைக் கடத்துவது என்பது அவர் முடிவு. பாங்கியில் தன் பெயரில் இருந்த பத்தாயிரம் ரூபாயில் பாதியைத் தான் எடுத்துக் கொண்டு பாக்கியைத் தம்பியிடம் கொடுத்து விட்டுக் கிளம்பிப் போய்விட்டார்......

அதன் பிறகு நடந்த பத்து வருடக் கதையை அண்ணனிடம் விவரமாகச் சொன்னார் முத்துசாமி.........

சுந்தரம் போன பிறகு முத்துசாமியின் குடும்பம் பெருகியது. அதற்கேற்றாற் போல் வருமானம் உயரவில்லை. சுந்தரம் அவரிடம் கொடுத்திருந்த பணம் எப்போதோ கரைந்து போய் விட்டது. வீட்டின் பேரிலும் கடன் வாங்கியாகிவிட்டது. இப்போது சரோஜாவுக்குக் கல்யாணம் செய்வதென்றால் வீட்டை விற்பதைத் தவிர வேறு வழியில்லை. அதிலும் இரண்டாயிரம் ரூபாய்க்கு மேல் தேறாது. அதற்குள் கல்யாணத்தைச் செய்து முடிக்கவேண்டும்.

முத்துசாமி சொன்னார், "அண்ணு, நீங்கள்தான் எல்லாவற்றையும் துறந்து விட்டீர்கள் நான் இன்னும் இந்த சம்சாரத்தில் அகப்பட்டுக் கொண்டு திண்டாடுகிறேன்."

"நானு! துறந்து விட்டேனு!" சுந்தரம ஒரு வறண்ட சிரிப்புச் சிரித்தார். "நான் ஒன்றையுமே துறக்கவில்லையப்பா. துறக்க முயன்றேன், துறந்துவிட்டதாக நினைத்து என்னை நானே ஏமாற்றிக் கொண்டிருக்கிறேன் ...... இதோ பார், என்னுடைய பந்தங்களை......" கையிலிருந்த பையைத்திறந்து ஒரு பாங்கி 'பாஸ்' புத்தகத்தையும், ஒரு 'செக்' புத்தகத்தையும் வெளியிலெடுத்துப் போட்டார் சுந்தரம்.

"இன்று பிள்ளை வீட்டாரைப் பார்க்க நீங்களும் வருகிறீர்களா? நீங்கள் வந்தால் எனக்கு எவ்வளவோ தெம்பாக இருக்கும்," என்றார் முத்துசாமி.

"இல்லையப்பா, நீயே போய் வா. நான் வருவதால் உனக்கு இடைஞ்சலே ஒழிய நன்மை யிருக்காது. என் பரதேசிக் கோலத்தைப் பார்த்து விட்டு யாராவது கல்யாணப் பேச்சை எடுப்பார்களா ?"

"அண்ணு, ஒன்று சொல்கிறேன், கேட்பீர்களா ?" முத்துசாமி தயங்கிக் கொண்டே சொன்னுர்.

"என்ன, சும்மா சொல்லு."

"பத்து வருடங்களுக்குப் பிறகு உங்களைப் பார்க்கிறேன். எனக்குத் தாயும் தந்தையுமாக இருந்தவர் நீங்கள். உங்களுக்கு வாழ்க்கையில் பற்றில்லை. இருந்தாலும் கடவுள் தான் இப்போது உங்களைக் கொண்டு வந்து சேர்த்திருக்கிறுர். எங்களுடன் வந்து கொஞ்ச நாட்களாவது இருக்கிறீர்களா? சரோஜா நீங்கள் வளர்த்த பெண். அவள் திருமணம் நடப்பதையாவது பார்த்து விட்டுப் போகலாம்."...

"அதைப் பற்றிப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். இப்போது நீ புறப்படு. உனக்கு நேரமாயிற்று," என்ருர் சுந்தரம்.

* * *

முத்துசாமி சென்ற பிறகு சுந்தரம் சிவகங்கையில் மாலைக் கடன்களை முடித்துக் கொண்டு கோயிலுக்குப் போனுர். ஆனல் இன்று அவர் மனதில் அமைதியில்லை. பத்து வருடங்களுக்குப் பிறகு தம்பியைச் சந்தித்தது அவருடைய மனதில் சலனத்தை எழுப்பியிருந்தது. இவ்வளவு காலமாக அவர் தன் தம்பியைப் பற்றி விசாரிக்காமலல்லவா இருந்து விட்டார்! 'பாவம், எவ்வளவு கஷ்டப்படுகிருன் முத்துசாமி !"...

முத்துசாமி சென்றிருந்த காரியம் என்ன ஆயிற்று என்பதை அறிந்து கொள்ளும் ஆவலில் அன்று அவர் சீக்கிரமாகவே ஆயிரக்கால் மண்டபத்துக்குத் திரும்பி வந்து விட்டார்.

கொஞ்ச நேரத்தில் முத்துசாமி திரும்பி வந்தார். காரியம் நடைபெறவில்லை யென்பது அவருடைய நடையின் தளர்ச்சியிலேயே தெரிந்து விட்டது சுந்தரத்துக்கு. இருந்தாலும் தன் பரபரப்பை வெளிக் காட்டிக் கொள்ளாமல் முத்துசாமி பேச ஆரம்பிப்பதை எதிர் பார்த்து உட்கார்ந்து கொண்டிருந்தார்.

தில்லித்

தமிழ்ச் சங்கத்திற்கு

வாழ்த்துக்கள்

★

வி. டி. ராஜன்,

வி. டி. ராஜன் பிரஸ்,

177-D, கமலா நகர்,

தில்லி – 6.

"வழக்கமான பல்லவிதான்! எல்லாம் கடைசியில் பணத்தில் தான் முடிகிறது!" முத்துசாமி பெருமூச்சு விட்டார்.

"அவர்கள் வரதட்சிணை கேட்கவில்லையென்று சொன்னாயே," சுந்தரம் கேட்டார்.

"ஆமாம். இப்போதும் அவர்கள் வரதட்சிணை கேட்கவில்லையே. நிறைய பாத்திரங்கள் வேண்டுமாம். வெள்ளியும், எவர்சில்வரும் மட்டும் ஆயிரம் ரூபாயாகும். அவர்களுடைய தகுதிக்கேற்றாற்போல் விமரிசையாகக்கல்யாணம் செய்யவேண்டுமாம். எல்லாமாகச் சேர்த்துக் குறைந்தது நாலாயிரம் ரூபாயாவது ஆகும். அதற்கு எங்கு போவது? எல்லாம் நாம் கொடுத்து வைத்தது அவ்வளவு தான்!"

முத்துசாமிக்கு இம்மாதிரி ஏமாற்றங்கள் புதிதல்ல. ஆகையால் அவர் அடியோடு இடிந்து போய்விடவில்லை. அண்ணனும் தம்பியும் இரவு வெகுநேரம் வரை ஏதேதோ பேசிக்கொண்டிருந்தார்கள். கடைசியில் படுத்துக் கொள்ளப் போகுமுன் முத்துசாமி அண்ணனிடம் கூறினார், "அண்ணா, நாளைக்கு நீங்களும் என்னுடன் வருகிறீர்கள், ஞாபகமிருக்கட்டும்."

"சரி, சரி, தூங்கு. நேரமாகி விட்டது என்றார் சுந்தரம்.

முத்துசாமி எழுந்திருந்த போது நன்றாக விடிந்துவிட்டது. முதல் நாளிரவு வெகுநேரம் விழித்திருந்ததால் அன்று அயர்ந்து தூங்கி விட்டார். அவர் பக்கத்தில் சுந்தரத்தைக் காணோம். சுந்தரத்தின் பை மாத்திரம் கிடந்தது. அவர் முன்னாலேயே எழுந்திருந்து ஸ்நானத்துக்குப் போயிருக்கிறார் போலிருக்கிறது என்று நினைத்து அங்கேயே காத்திருந்தார் முத்துசாமி. வெகுநேரமாகியும் சுந்தரத்தைக் காணோம்.

முத்துசாமிக்குத் 'திக்'கென்றிருந்தது. அவரெங்கே? பையை வைத்துவிட்டு எங்கே போய் விட்டார்? பத்து வருடங்களுக்குப் பிறகு பார்த்த அண்ணன் மறுபடியும் மறைந்து விட்டாரா?......

முத்துசாமி சுந்தரத்தின் பையை எடுத்துப் பார்த்தார். அதில் மேலாக ஒரு காகிதத் துண்டு கிடந்தது. அதை எடுத்து பரபரப்புடன் பிரித்துப் பார்த்தார்.

சுந்தரம் எழுதியிருந்தார், "முத்துசாமி! என்னை மன்னித்து விடு. நான் உன்னுடன் ஊருக்கு வரவில்லை. உலக பந்தங்களிலிருந்து விடுதலை பெற விரும்புகிறவன் மறுபடி வலைக்குள் நுழைந்தால் முடிவு விரும்பத் தக்கதாக இருக்காது. சரோஜாவின் மீது எனக்கு முன்பிருந்த பாசம் இன்றும் அப்படியே இருக்கிறது. என் மனத்திண்மையில் எனக்கே நம்பிக்கையில்லை. ஆகையால் நான் வரவில்லை......

"நான் இதுவரை வைராக்கியம் பெறத் தவறான வழியைப் பின்பற்றிக் கொண்டிருந்தேன் என்பதை இப்போது உணர்கிறேன். மடியில் பணத்தைக் கட்டிக்கொண்டு துறவைக் கடைப்பிடிப்பது கழுத்தில் விஷப்பாம்பைச் சுற்றிக்

கொண்டு, சாவிலிருந்து தப்ப முயற்சிப்பதுபோல் முட்டாள்தனமான காரியம் என்பது எனக்குத் தெரிகிறது. எனக்கு இந்த அறிவு வருவதற்குக்கூட சரோஜாதான் காரணம். அவள் மூலந்தான் எனக்கு உண்மை வைராக்கியம் கிட்டவேண்டுமென்பது இறைவன் திருவுளமென்று நினைக்கிறேன்......

"இத்துடன் ஒரு 'செக்' வைத்திருக்கிறேன், பாங்கியில் என் கணக்கில் பாக்கியிருக்கும் மூவாயிரம் ரூபாய்க்கு, இதைக் கொண்டு கல்யாணத்துக்கு ஏற்பாடு செய். இதையும் வீட்டை விற்றுக் கிடைக்கும் பணத்தையும் கொண்டு இந்த சம்பந்தத்தையே முடித்துவிடு......

"நான் இனிமேலாவது உண்மைத் துறவியாக இருக்க முயலுகிறேன். இதுவரை எனக்கிருந்த பணப்பற்றை இத்துடன் விட்டுவிட்டேன். ஆனால் நான் சரோஜாவிடம் கொண்டுள்ள பாசம் மறைந்துவிடுமா? தரியாது. ஆனால் அதையும் மறக்க முயலுகிறேன். அவளுக்கு என்னுடைய ஆசீர்வாதம்"......

சிலையாக உட்கார்ந்திருந்தார் முத்துசாமி. ○



திருவிளக்கு

சொக்கு சுப்பிரமணியன்

★

இன்பமுடைப் பொழுதினிலும் ஒருவன் தேவை;
  ஈர்க்கின்ற துன்பத்தில் துணையும் தேவை;
வன்புடையார் மனம்மாற்ற ஒருவன் தேவை;
  வாழ்க்கையிலே மூன்றும்ஆள் மகனும் தேவை;
என்பதனை நீர்காட்ட ஒருவன் தேவை
  எள்ளுடனே நீர்வார்க்கத் தேவை என்பர்;
மன்பதையின் புகழ்காக்கும் ஒருவ னுன
  மாண்புடைய குடிகாக்கும் மைந்தன் தேவை!

மான்சிந்தும் கண்ணழகைப் பெற்றி ருப்பான்;
  மலர்க்கூட்டம் உடலாகக் கொண்டி ருப்பான்;
கான்சிந்தும் அழகெல்லாம் ஒருங்கு கொண்டு
  கலையரசன் வடித்தசிலை போலி ருப்பான்;
ஆன்சிந்தும் பாலாக மழலை தந்தே
  அன்புதரும் திருமகவாய் இலங்கி நிற்பான்;
தேன்சிந்து திருவாயால் முத்தம் ஈந்தே
  திருவிளக்காய் குடிக்கமைவான் புதல்வன் கண்டீர்!

சின்னவனின் விழிகளிலே அழகு விஞ்சும்;
  சிங்காரப் பாட்டிசைத்து வாயும் கொஞ்சும்;
அன்னமலர்த் தூவியெனும் உடலம் பஞ்சே;
  அதைத்தொடவே மிகக்குளிரும் பெற்றோர் நெஞ்சே;
கன்னலையும் வென்றிடுமே இனிமைச் சொற்கள்;
  கன்னங்கள் ஒளிசிந்தும் சிவப்புக் கற்கள்;
சின்னதொரு குடிசையிலும் ஒளியைக் கூட்டச்
  சிற்றகலாம் ஒருகுழந்தை தோன்றுமன்றோ?

"பாசம்"

"மாயாவி"

மாஜிஸ்டிரேட் சிவஞானம் எங்கள் ஊருக்கு மாற்றப்பட்டு வந்த பிறகுதான் உறங்கிக் கொண்டிருந்த எங்கள் இளைஞர் சங்கம் புத்துயிர் பெற்று எழுந்தது.

சிவஞானம் எங்களைப் போன்ற இளைஞர் அல்லர். ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர். ஆயினும் இளைஞர்களை விட அதிகமான புத்துணர்ச்சியும், சுறுசுறுப்பும் அவரிடம் இருந்தன. தாம் ஒரு மாஜிஸ்டிரேட் என்பதையோ, வயசானவர் என்பதையோ கருதாமல் எங்களுடன் சகஜமாகப் பழகினர். எவ்வித நிகழ்ச்சிகளும் இன்றி பூட்டிக் கிடந்த சங்கக் கட்டடத்தைத் திறந்து வைக்கச் செய்தார்.

"வருங்காலத்தில் நம் நாட்டை ஆளவேண்டிய நீங்கள் இப்படிச் சோம்பிக் கிடக்கலாமா? திறவுங்கள் உங்கள் சங்கத்தை; கூடுங்கள் நாள்தோறும் அங்கே. நாட்டில் நடப்பவைகளையும், நடக்க வேண்டியவற்றையும் பற்றிச் சர்ச்சை செய்யுங்கள். தீர்மானங்களை நிறைவேற்றுங்கள். அவற்றை நமது அரசாங்கத்துக்கு அனுப்புங்கள்" என்று எங்களைத் தட்டி எழுப்பினர்.

நாள்தோறும் சங்கத்துக்குத் தவருமல் வந்து, பற்பல பயனுள்ள விஷயங்களையும், தமது அநுபவங்களையும் கூறி எங்களை உற்சாகப்படுத்தினர்.

அவருக்கு மனைவி – மக்கள் யாரும் இல்லை. சமையல் செய்து போட ஒரு கிழவனை மட்டும் வைத்துக் கொண்டு ஆடம்பரமின்றி வாழ்ந்து வந்தார். சமத்துவ நோக்கும், தயாள உள்ளமும் அவருடைய வேறு சில வசீகரமான குணங்கள்.

* * *

அன்ருெரு நாள் நாங்கள் சங்கத்தில் கூடி 'பாசம்' என்ற பொருளைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தோம். அப்போது சிவஞானம் அங்கே வந்தார். விவாதத்தில் அவரும் கலந்து கொண்டார். நாங்கள் பேசிக் கொண்டிருக்கையில் அவருடைய சமையற்காரக் கிழவன் அங்கே வந்து சிவஞானத்துடன் சிறிது நேரம் ஏதோ வீட்டு அலுவலைப் பற்றிப் பேசிவிட்டுப் போனுன்.



a time-tested
REMEDY
for Coughs & Colds
Sualin
Clinical observation of decades has established the efficacy of SUALIN in bronchial and congestive affections. It has a marked relieving action on cough centres and provides an excellent medium for controlling even the severest cough.
Hamdard
DELHI - Kanpur - Patna
Sualin

அவனை அனுப்பிவிட்டு வந்ததும், "நாம் விவாதித்துக்கொண்டிருக்கும் பொருளுக்கு இதோ போகிறேனே, இந்த மருதை ஒரு நல்ல உதாரணம்" என்றார் சிவஞானம்.

"எப்படி?" என்று நாங்கள் கேட்டோம். ருசிகரமான கதை ஏதோ வரப் போகிறது என்று எங்களுக்குத் தெரியும்.

"சொல்கிறேன் கேளுங்கள். சில ஆண்டுகளுக்கு முன் மருதநாயகம் என்ற பிரசித்தி பெற்ற கொள்ளைக்காரன் ஒருவன் இருந்தானே, அவனைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?"

"ஆமாம்."

"அவன்தான் இந்த என் சமையற்காரக் கிழவன்!"

நாங்கள் வியப்பால் திகைத்தோம். அவர் தொடர்ந்து சொன்னார்:

* * *

அப்பொழுது நான் என் சொந்த ஊரிலே மாஜிஸ்டிரேட்டாக இருந்தேன். இப்பொழுது போல் அப்பொழுதும் காலையிலும், மாலையிலும் உலாவப் போவேன். அப்படி ஒருநாள் உலாவி விட்டுத் திரும்பிக் கொண்டிருக்கையில் கடைவீதியில் இவன் மயங்கி விழுந்திருந்ததைக் கண்டேன். பரதேசி போல் மீசையும், தாடியும் ஒட்டி உலர்ந்த உடலுடன், பசிக்களைப்பால் மயக்கமடைந்திருந்த அவனுக்கு அந்தக் கடைவீதி மகாஜனங்கள் உதவத் தயங்கியதைக் கண்டு, அவனை ஒரு வண்டியில் தூக்கிப் போடச் செய்து என் வீட்டுக்குக் கொண்டு வந்தேன். சிறிது உணவளித்துக் களைப்பைப் போக்கியதும் அவன் எழுந்து அமர்ந்தான்.

"யாரப்பா நீ? உனக்கு எந்த ஊர்?" என்று கேட்டேன்.

அவன் கட-கட வெனச் சிரித்துக் கொண்டே வெறிக்கப் பார்த்தான்.

எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. "எங்கிருந்து வருகிறாய் அப்பா?" என்று மறுபடியும் கேட்டேன்.

அவன் மௌனமாகத் தனது வலக்கையை நீட்டினான். அதில் கைதிகளுக்கு அடையாளமான எண் பொறிக்கப்பட்டிருந்ததைக் கண்டதும், எனக்கு மேலே ஏதும் கேட்கத் துணிவு வரவில்லை.

"உன் உடல்நிலை சரியாகும் வரையில் இங்கேயே இரு. பிறகு உன்னைத் தகுதியான வேலை ஒன்றில் சேர்த்துவிட முயலுகிறேன்" என்று கூறிவிட்டு என் அலுவல்களைக் கவனிக்க எழுந்து சென்று விட்டேன்.

சிறிது நேரத்துக்குப் பிறகு கோர்ட்டுக்குப் போக வெளியே வந்தபோது அவன் இருந்த இடம் காலியாக இருந்தது. "புத்திகூடப் பேதலித்திருக்கும் போல் இருக்கிறது அவனுக்கு" என்று நினைத்துக் கொண்டு கச்சேரிக்குச் சென்றேன்.

மாலையில் கச்சேரியிலிருந்து திரும்பியதும் வழக்கம்போல்

ஸ்வஸ்திக்

வேதாரண்யம் புகையிலை

○

பிளாஸ்டிக்
15 நயா பைசா பொட்டலங்கள்
தனிச்சிறப்பு வாய்ந்தவை.

○

ஸ்வஸ்திக் புகையிலைத் தொழிற்சாலை,
வேதாரண்யம்.

உலாவப் போனேன். வழியில் சந்தித்த நண்பர் ஒருவர், "மாஜிஸ்டிரேட் சார்! உங்கள் கோர்ட்டுக்கு நாளைக்கு ஒரு புதிய கேஸ் வரப் போகிறது" என்றார்.

"மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்கு இந்தக் காலத்தில் கேஸ்கள் வருவதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?" என்றேன்.

"ஆனால் இது சாதாரணக் கேஸ் இல்லை, சார். மிகவும் துணிகரமான கேஸ். ஸப்-இன்ஸ்பெக்டர் சந்தானத்தின் குழந்தையைப் பட்டப் பகலில் ஒருவன் தூக்கிக் கொண்டு போய், அது அணிந்திருந்த நகைகளைக் கழற்றிக் கொள்ள முயன்றிருக்கிறான். நல்லவேளையாகப் பிடிபட்டு விட்டான்."

"என்ன? சந்தானத்தின் குழந்தையையா?"

"ஆமாம்; அவருடைய பெண்ணையேதான். இன்று அந்தக் குழந்தைக்கு ஐந்தாவது ஆண்டு நிறைவாம். அதனால் நிறைய நகைநட்டுக்களை அணிவித்திருக்கிறார்கள். உறவுகாரர்களுக்கு விருந்துகூட நடந்தது போலிருக்கிறது. விருந்தினரை உபசரிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்த சந்தானத்தின் மனைவி, குழந்தை வெளியே போய்விட்டதைக் கவனிக்கவில்லை. அவர் வீடுதான் தெருக்கோடி ஆயிற்றே! திருடனுக்கு அது வசதியாகப் போயிற்று. யாருக்கும் தெரியாமல் குழந்தையைத் தூக்கிக்கொண்டு கம்பி நீட்டி விட்டான்.

"சிறிது நேரத்துக்குப் பிறகு தாய் குழந்தையைத் தேடியிருக்கிறாள். காணவில்லை. பக்கத்து வீடுகளுக்கெல்லாம் போய்ப் பார்த்திருக்கிறாள். அங்கும் அது இல்லை. உடனே மூலைக்கு ஒருவராக பலபேர் ஊர் முழுவதும் தேடத் தொடங்கினர்.

"கடைசியில் ஊர் எல்லைக்கு அப்பால், ஆள் நடமாட்டமற்ற ஓரிடத்தில் திருடனையும் குழந்தையையும் கண்டனர். நகைகளைக் கழற்றுவதற்குச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தான் போலிருக்கிறது. இவர்கள் போனபோது அவன் குழந்தைக்கு ஆடிப்பாடி விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தானும். பாவம், அது என்ன கண்டது? அவனுடன் சேர்ந்து சிரித்துக் கொண்டிருந்ததாம்.

"தெய்வச் செயல் என்றுதான் சொல்ல வேண்டும். சந்தானத்துக்கு இன்று குழந்தை திருப்பிக் கிடைத்தது. சிறிது நேரம் சென்று வந்திருந்தால் அவன் நகைகளைக் கழற்றி எடுத்துக் கொண்டு, அதைக் கொன்று போட்டிருந்தாலும் போட்டிருப்பான்" என்று அறிவித்தார் அந்த நண்பர்.

"அப்படியா? மிகவும் துணிச்சலான வேலை செய்திருக்கிறனே திருடன்! பட்டப் பகலில் போலீஸ் இன்ஸ்பெக்டர் குழந்தையையே......" என்று வியப்புடன் சொன்னேன் நான்.

"அது பெரிது இல்லை சார்; பிடிபட்ட பிறகு அவன் என்ன சொல்லுகிறனும், தெரியுமா?

murphy radio
delights
the home!

Sole Distributors for South India:

Mohamed Ebrahim & Co., Pte. Ltd.,

MADRAS - BANGALORE - HYDERABAD.

'என் குழந்தை ஏன் எடுத்துப் போகிறீர்கள் ?' என்று அதட்டுகிறுனும் ; அழுகிறுனும்; கதறுகிறுனும். எப்படிப் பார்த்தீர்களா ?"

"ஆமாம் ஐயா ; உலகத்தில் சூதும் வாதும் பெருகிப் போய் விட்டன. திருடர்களும் இப்போது முன்னைவிடத் துணிச்சல்காரர்கள் ஆகி விட்டார்கள்."

"அதிலேயும் இவன் பெரிய திருடனும். அவனைப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு சென்றபோது பார்த்த ஒருவன் அவன் சின்னப்பட்டிச் சிறைச்சாலையிலிருந்து இரண்டு மூன்று நாட்களுக்கு முன் விடுதலையாகி வந்தவன் என்று சொன்னுராம்.

சிறைச் சாலையிலிருந்து விடுதலையாகி வந்தவன் என்றறிந்ததும் எனக்குக் காலையில் சந்தித்த கைதியின் நினைவு வந்தது. திருடன் யாரென்று பார்க்கும் ஆவல் எழுந்தது. உடனே போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனேன்.

நான் அங்கே போன போது போலீஸார் அவனை உயிர்போக அடித்துக் கொண்டிருந்தனர். "என்னை அடிக்காதீர்கள் ! என்னை அடிக்காதீர்கள் ! நான் குழந்தையைத் திருடவில்லை !" என்று அவன் கதறிக் கொண்டிருந்தான்.

"கைதேர்ந்த திருடன் சார் ; வீட்டு வாசலில் நின்றிருந்த என் மகளைத் தூக்கிக் கொண்டு மறைந்துவிட்டுப் பிடிபட்டவுடன் பைத்தியம் போல் நடிக்கிருன், ராஸ்கல் !" என்று கையிலிருந்த பிரம்பால் அவனை விளாசினுர் சப்-இன்ஸ்பெக்டர் சந்தானம்.

அடி தாங்காமல் சுருண்டு கிடந்த திருடனின் முகத்தை நான் கூர்ந்து நோக்கினேன். அவன், காலையில் நான் வீட்டுக்கு அழைத்து வந்த கைதியே தான் !

என்னை அடையாளம் கண்டு கொண்ட அவன், "ஐயா! ஐயா! என்னை அடிக்கச் சொல்லாதீர்கள். நான் உண்மையைச் சொல்லி விடுகிறேன்" என்று என் காலடியில் சாய்ந்தான்.

அவனைத் தூக்கி உட்கார்த்தி விட்டு, "உன் பெயர் என்ன அப்பா?" என்று கேட்டேன்.

"மருதை" என்றுன் அவன்.

"முழுப் பெயர் என்ன ? மருதைநாயகமா ?"

"ஆமாம், ஐயா."

"அது சரி, குழந்தையை ஏன் திருடிக் கொண்டு போனுய்?"

"ஐயோ ! நான் திருடவில்லை, சார். என் குழந்தை என்று நினைத்துத் தூக்கிச் சென்று விட்டேன்."

சந்தானம் 'கபக்' கென்று சிரித்தார், "பார்த்தீர்களா மிஸ்டர் சிவஞானம்? இவன் பெரிய ஆள், சார் !" என்று மறுபடியும் பிரம்பை ஓங்கினுர்.

அவரைத் தடுத்து விட்டு, "சட்டமும் குண்டாந்தடியும் எப்போதும் நம் கையில் இருக்கின்றன. ஆனல் எதையும் அலசிப் பாராமல் அவற்றை ஒருவர் மீது பிரயோகிப்பது

WHO made the first motor cycle in India?
ENFIELD INDIA - They started the progressive manufacture some four years ago. So far, they have turned out several thousand motor cycles and 3-wheelers. For 1962 they have set the target as 7,000 motor cycles.
Shortly they will be commencing the production of Scooters, and Villiers Engines - prime movers for a variety of industrial and agricultural equipment.
Behind all this progressive move, there is the vast experience and technical know-how of their foreign collaborators - The Enfield Cycle Co., Ltd., U. K., and The Villiers Engineering Co., Ltd., U. K.
KEEPING PACE WITH THE NATION
ON THE ROAD TO PROGRESS
ROYAL ENFIELD
THE ENFIELD INDIA LIMITED
TIRUVOTTIYUR
MADRAS-19

பெரிய தவறு. அவன் என்ன சொல்லுகிருன் என்பதை முதலில் கேட்போம்'' என்று சொன்னேன். பிறகு மருதையாவிடம், "உன் குழந்தையா? எங்களுக்கு விளங்கவில்லையே! விவரமாகச் சொல்'' என்றேன்.

அவன் சொன்ன கதை இது தான்:

*　　*　　*

மதுரை மாவட்டத்தில் சிறுவயல் என்ற கிராமத்தில் பிறந்தவன் மருதை. குழந்தைப் பருவத்திலே பெற்ருேரை இழந்துவிட்ட அவனை, தாய் மாமன் செல்லையா எடுத்து வளர்த்தான். செல்லையாவுக்குப் பொன்னி என்று ஒரே மகள். வேறு ஆண் குழந்தைகள் கிடையாது. ஆதலால் அவன் மருதையை மகனைப் போலவே வளர்த்து வந்தான். பொன்னியை அவனுக்குத் திருமணம் செய்து கொடுத்துக் கண் குளிரக் காண வேண்டுமென்ற அவா செல்லையாவுக்கு.

பொன்னி அழகி. கவர்ச்சியான குணங்கள் உடையவள். 'அத்தான்—அத்தான்' என்று மருதையிடம் உயிராயிருப்பாள். ஆகவே வயது ஆக ஆக இருவர் மனமும் ஒன்றிவிட்டது.

அவர்களது திருமணத்தை மிகச் சிறப்பாக நடத்த விரும்பினுன் செல்லையா. நிலங்களைக் குத்தகைக்கு எடுத்துப் பிழைத்து வந்த அவன், அவர்களது திருமணத்துக்குத் தேவையான பணத்தை ஒரே ஆண்டில் சேமிக்கும் நோக்கத்தோடு, அந்த ஆண்டில் தான் வழக்கமாகப் பயிரிட்டு வந்த நிலங்களுடன், அவ்வூர்ப் பெரிய பண்ணை முத்துவின் நிலங்கள் அனைத்தையும் குத்தகைக்கு எடுத்தான்.

ஆசை பெரிதாக இருந்தது; ஆனுல் தெய்வத்தின் இச்சை வேறு விதமாகப் போய்விட்டது. எதிர்பாராதபடி அவ்வாண்டில் வானம் கண் திறக்க மறுத்துவிட்டது. கைப் பணத்தையெல்லாம் போட்டு உருவாக்கியிருந்த பயிர்கள் நீரின்றி பட்டுப் போயின. ஊரில் இதர நில உடைமைக்காரர்கள் தங்கள் குத்தகைக்காரர்களுக்கு, குத்தகைப் பணத்தைத் தள்ளிக் கொடுத்தார்கள். ஆனுல் முத்து அவ்வாறு செய்யவில்லை. ஒப்பந்தப்படி தனக்குரிய பணம் முழுவதும் வந்துவிடவேண்டுமென்று கோர்ட்டில் வழக்குத் தொடுத்தான். குத்தகைப் பத்திரத்தில் கண்டிருந்த நாலாயிரம் ரூபாயையும் கொடுத்துவிட வேண்டும் என்று கோர்ட்டில் தீர்ப்பாயிற்று.

திடீரென்று நாலாயிரம் ரூபாய்க்குச் செல்லையா எங்கே போவான்? நாலாயிரம் காசுகள் கூட அன்று அவனிடம் இல்லை. மாமனும் மருமகனும் முத்துவிடம் சென்று, அவனுடைய கடனை அடுத்த போகத்திலிருந்து சிறிது சிறிதாகச் செலுத்தி விடுவதாகக் கூறினர். ஆனுல் அவன் ஒரே பிடிவாதமாக இருந்தான். பணத்தை ஒரு மாதத்துக்குள்ளாகக் கட்டவில்லையென்ருல், செல்லையாவின் ஒரே சொத்தான வீட்டை ஜப்தி செய்வதோடு, அவனை வாரண்டில் பிடித்து உள்ளே வைத்து விடுவதாகப் பயமுறுத்தினுன்.

MORE PEOPLE
SMOKE SIMLA THAN ANY
OTHER FILTER CIGARETTE

ISSUED BY
THE IMPERIAL TOBACCO COMPANY OF INDIA LIMITED

செல்லையா மனமுடைந்து போனான். மருதை அடைந்த வருத்தத்தையோ அளவிட முடியாது. தன் பொருட்டுத்தானே, தங்கள் திருமண நிமித்தத்தினால் தானே, மாமன் இத்தகைய சங்கடத்தில் வந்து மாட்டிக் கொள்ள நேர்ந்தது என்று எண்ணிய அவன், எப்படியாவது அவருடைய கடனை தானே அடைத்துவிடத் துணிந்தான். அவன் என்ன பொற்குவியலா வைத்திருந்தான் நாலாயிரம் ரூபாய்களை அதிலிருந்து அள்ளி வந்துவிட? அவன் மனசில் ஒரு விபரீதத் திட்டம் உருவாயிற்று. எங்கேயேனும் திருடி மாமனின் கடனை அடைத்து விடுவதுதான் அவன் போட்ட திட்டம்.

ஆனால் திருடுவதற்கும் ஒரு தனித் திறமை வேண்டும் என்பது அவனுக்குப் பிறகு தான் தெரிய வந்தது. உள்ளூரில் மற்றொரு பணக்காரரின் வீட்டில் அவன் கன்னம் வைத்து நுழைந்து, பணப் பெட்டியிலும் கை வைத்துவிட்ட பிறகு பொல்லாத தும்மல் ஒன்று வீட்டுக்காரர்களை எழுப்பி விட்டது. நல்ல வேளையாக மருதை பிடிபடாமல் தப்பி ஓடி விட்டான். ஆயினும் திருட வந்தவன் அவன் தான் என்பது அவ்வீட்டுக்காரர்களுக்குத் தெரிந்துவிட்டது.

இனி அவன் எப்படி மாமன் முகத்தில் விழிக்க முடியும்? கண்ணியமே உருவான செல்லையாவின் கடனை அடைக்க வழி தேடி கடைசியில் அந்தக் கண்ணியத்துக்கே உலை வைத்துவிட்டானே! வெளியே தலை காட்டினால் தனக்குச் சிறைவாசம் தப்பாது என்பது அவனுக்குத் தெளிவாகியிருந்தது. தான் விரும்பிய பணத்தைத் திருடி அதை முத்துவின் முகத்தில் வீசியிருந்தாலும் அவன் சிறைவாசத்தைப் பொருட்படுத்தியிருக்க மாட்டான்.

மருதை மறுபடியும் சிந்தித்தான். கடைசியில், தன்னை இனிமேல் திருடனாகவே மாற்றிக் கொண்டு விடுவது என்று முடிவு செய்தான். மறுபடியும் எங்கேயாவது திருடி, மாமனின் கடனை அடைக்கத் தேவையான பணத்தைப் பெற்றுவிட வேண்டுமென்று தீவிரமாக முயன்றான்.

ஆனால் அவனுடைய முயற்சி கைகூடி வருமுன் காரியங்களெல்லாம் தலைகீழாக மாறிவிட்டன. உயிரைப் போல் நேசித்து வளர்த்த மருமகன் திருடனாகி விட்டான் என்ற செய்தி செல்லையாவைப் படுவேகமாகத் தாக்கி ஒரே மாதத்தில் கொன்று விட்டது. இந்தத் தருணத்தில் முத்து, அவர்கள் குடியிருந்த வீட்டுக்கு ஜப்தியைக் கொண்டு வந்தான். பொன்னியைத் திருமணம் செய்து வைத்தால் ஜப்தியைப் பின்வாங்குவதாக அவன் கூறியபோது பொன்னியும், அவள் தாயும் அதை ஒப்புக்கொண்டே ஆக வேண்டியதாயிற்று. இல்லாவிட்டால் அவர்கள் ஆதரவற்றவர்களாகத் தெருவில் அல்லவா நிற்க வேண்டி வந்துவிடும்?

என்றைக்குத் தன்னைத் திருடனாகவே மாற்றிக் கொண்டானோ, அன்று முதல் மருதை

★

With the best compliments of

WHEELS INDIA LIMITED

MADRAS

★

பொன்னியை அடையும் ஆசையை விட்டுவிட்டான். ஆயினும் அவள் முத்துவின் மனைவியாகி விட்டாள் என்ற செய்தி அவனை மிக மிக வருத்தியது. தங்கள் எல்லோருடைய வாழ்க்கையும் இப்படி அலங்கோலமாக முத்துவே அடிப்படைக் காரணம் என்பதால் மட்டும் அவன் வருந்தவில்லை. முத்துவின் குணங்களும் கெட்டவைகளாக இருந்ததே அவனுடைய வருத்தத்துக்கு முக்கிய காரணம். முத்து பெரிய பெண்கிறுக்கு. பக்கா குடிகாரன். நெஞ்சிலோ ஈவு இரக்கம் கிடையாது. "பாவம்! பொன்னி எப்படித்தான் அவனுடன் வாழப் போகிறாளோ?" என்று வருந்தினான் மருதை.

இரண்டோர் ஆண்டுகளில் மருதை பெரிய கொள்ளைக்காரனாகி விட்டான். பல சகாக்கள் அவனுக்கு. அவர்கள் கூட்டமாகச் சென்று பணக்காரர்களைக் கொள்ளையிட்டார்கள். கிடைத்தவற்றைப் பங்கு வைத்துக் கொண்டார்கள்.

இப்பொழுது மருதையைச் சுற்றிப் பொன்னும், மணியும் இரைந்தன. ஆனால் அவற்றால் இனி அவனுக்கு என்ன சுகம்? என்ன இன்பம்? என்ன பயன்? எப்போது அவை தேவையாக இருந்தனவோ அப்போது கிட்டவில்லை. அவன் மாமி கூட இப்போது இறந்துவிட்டாள். இருப்பதெல்லாம் பொன்னிதான். ஆனால் அவளுக்கு இன்று ஒரு திருடனின் பணம் எதற்கு? அவள்தான் பெரிய பணக்காரனின் மனைவி ஆகிவிட்டாளே!

பொன்னியின் நினைவு தோன்றும் போதெல்லாம் அவளை ஒரு முறை பார்த்துவர வேண்டுமென்ற ஆவல் மருதைக்கு ஏற்படும். நாள் ஆக ஆக, அந்த ஆவல் அளவு மீறிப் போய், ஒரு நாள் இரவு அவனை அவளைத் தேடிச் செல்லச் செய்துவிட்டது.

மருதை பொன்னியைச் சந்தித்தான். எந்நிலையில்? கணவனை இழந்து கைக்குழந்தையுடன், நோய்வாய்ப்பட்டுச் சாகும் நிலையில் கண்டான்.

முத்துவின் குடிகூத்துத் திருவிளையாடல்களுடன் சூதாட்டமும் சேர்ந்து கொண்டது. சொத்து முழுவதும் இரண்டே ஆண்டுகளில் கரைந்துவிட்டது. உடலிலும் சரும நோய் ஏற்பட்டது. பொன்னிக்கு ஒரு பெண் குழந்தையைப் பாரமாக வைத்துவிட்டுக் கண்களை மூடிவிட்டான் முத்து கணவனிடமிருந்து பெற்றுக் கொண்ட நோய் முற்றி இன்றோ நாளையோ என்று சாவை எதிர் நோக்கிக் காத்திருந்த பொன்னியைத்தான் மருதை சந்தித்தான்.

அவனைக் கண்டதும், தனது பரிதாபக் கதைகளைக் கூறிக் கண்ணீர் விட்டாள் பொன்னி. இறுதியாகத் தனது ஒரு வயதுப் பெண் குழந்தையை அவனிடம் ஒப்படைத்துவிட்டு இறந்து போனாள் அந்தப் பேதைப் பெண்.

அந்தக் குழந்தையுடன் திரும்பி வந்தான் மருதை.

everybody's
favourite
choice
Co-optex
HANDLOOM
FABRICS
for dress and furnishings
THE TAMIL NADU (MADRAS STATE)
HANDLOOM WEAVERS' CO-OPERATIVE SOCIETY LTD.
34/1-A, Pantheon Road, Egmore, Madras-8.
'Co-optex' Sales Emporia at New Delhi:
No. 22/B, Khan Market,
New Delhi-11.
No. 10174, Gurudwara Road,
Karolbagh, New Delhi-5.

'பொன்னியின் பரிதாப முடிவுக்கு நீயே காரணம்' என்று மனச்சாட்சி அவனை வாட்டி எடுத்தது. இருந்தாலும், தன்னை வளர்த்து ஆளாக்கியவர்களின் வழித் தோன்றலாகிய ஒரு குழந்தையை வளர்க்கும் வாய்ப்பாவது தனக்குக் கிடைத்ததே என்று அவனுக்கு ஒரு மன ஆறுதல். அவனிடமிருந்த பொன்னுக்கும் மணிக்கும் இப்போது தேவை ஏற்பட்டு விட்டது. அவை இன்று ஓர் உயர்ந்த லட்சியத்துக்குப் பயன்பட போகின்றன. பொன்னியின் குழந்தையைத் தனக்குச் சமையல் செய்து போட அமர்த்தியிருந்த கிழவியின் உதவியுடன் மருதையே வளர்த்தான். மூன்று ஆண்டுகளில் அக்குழந்தை அவனுடைய பாசத்தை யெல்லாம் தன்னிடம் இழுத்துக் கொண்டது.

* * *

இப்படியே எல்லாம் கடைசி வரையில் நடந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஆனால் —

மருதையும், அவனுடைய கூட்டத்தாரும் ஒருநாள் போலீசார் கையில் சிக்கிக் கொண்டனர். 'தான் திருடன்; என்றாவது ஒருநாள் பிடிபட்டுத் தண்டனை அடைவது நிச்சயம்' என்று மருதை உணர்ந்தே இருந்தான். ஆனால் தான் பிடிபட்டு விட்டால் குழந்தையை யார் காப்பாற்றுவார்கள் என்பதைப் பற்றி அவன் சிந்திக்கவே இல்லை.

இன்று பிடிபட்ட பிறகுதான் அந்தக் கவலை அவனிடம் எழுந்தது. போலீசார் அவனுடைய மறைவிடத்தைக் கண்டுபிடித்து தான் சேமித்து வைத்திருந்த பொருள்களையெல்லாம் கைப்பற்றி விட்டனர் என்று அவன் தெரிந்து கொண்டான். ஆனால் குழந்தையும், கிழவியும் என்ன ஆனார்கள் என்பதைப்பற்றி ஒரு தகவலும் தெரியவில்லை.

பாப்பாவைப் பற்றிய கவலை அவனை நிலைகுலையச் செய்து விட்டது. எப்போதும் அதே நினைவு; அதே ஏக்கம். "பாப்பா என்ன ஆனாள்? பாப்பா என்ன ஆனாள்?" இந்த ஏக்கத்தினால், பதினான்டுகள் தண்டனை பெற்று, சிறைச் சாலைக்குச் சென்றபோது மருதையின் அறிவு பேதலித்துவிட்டது.

தண்டனைக் காலத்தை அந் நிலையிலே தள்ளிவிட்டு விடுதலையடைந்து வந்தான் மருதை. அவன் உடலில் எலும்புதான் இருந்தது. ஒரு நாளா? இரண்டு நாட்களா? பதினான்கு ஆண்டு காலத்து ஏக்கமல்லவா? அவன் கண்முன் நின்ற பாப்பாவின் குழந்தைத் தோற்றம்; அவளை எங்கேயாவது காண்போம் என்ற நப்பாசை, ஆகியவை தாம், அவனைப் பசி, தாகம், உறக்கம் யாவற்றையும் மறந்து ஊர் ஊராகச் சுற்ற வைத்தன.

அன்று காலையில் என் வீட்டில் உணவு உண்டு, களைப்பு நீங்கியதும், அவன் குழந்தையைத் தேடிக் கிளம்பிவிட்டான். இன்ஸ்பெக்டர் சந்தானத்தின் பெண்ணை, மருதை அவருடைய வீட்டு வாசலில் பார்த்தான். அந்தக் குழந்தை பாப்பாவை உரித்து வைத்ததுபோல் இருந்த

WHEN YOU BUY

GEEP



YOU BUY

CONFIDENCE

EVERY DAY COMPANION

A FRIEND IN NEED

* GEEP TORCH WITH ITS BRIGHT LIGHT NEVER BETRAYS YOUR CONFIDENCE
* GEEP TORCH WITH ITS PRECISION SWITCH NEVER LETS YOU DOWN

GEEP TORCH

SHERVANI ENTERPRISE

GEEP FLASHLIGHT INDUSTRIES LIMITED, ALLAHABAD-1

தால், அவளைத் தன் குழந்தை என்றெண்ணித் தூக்கிச் சென்றுவிட்டான். 'பதினாறு ஆண்டுகள் ஆகிவிட்டனவே. பாப்பா இன்னும் அதே குழந்தைத் தோற்றத்துடன் இருப்பாளா?' என்பதைப் புரிந்து கொள்ளும் நிலையில் அவன் இருக்கவில்லை.

* * *

சிவஞானம் இப்படிக் கூறி வந்தபோது எங்களில் ஒருவன் குறுக்கிட்டு, "இவையெல்லாம் மருதை சொல்லத்தானே உங்களுக்குத் தெரியவந்தன?" என்று கேட்டான்.

"ஆமாம்" என்றார் அவர்.

"ஆனால் அந்தப் பிறவித் திருடனின் வாய்மொழியை நீங்கள் எப்படி நம்பினீர்கள்? சந்தானந்தான் எப்படி நம்பினார்?" என்று கேட்டான் மற்றொருவன்.

"நீங்கள் நினைப்பது போல் சந்தானம் அதை நம்பிவிடவில்லை. ஆனால் நான் நம்பினேன். பாசத்தின் ஆழமும் அதன் மூலம் உண்டான சித்தப்பிரமையும் மனிதரை இடைக்காலத்தை மறக்கச் செய்துவிடும் என்பதையும், மருதை எந்தக் குழந்தையைத் தூக்கிச் சென்றானோ, அதன் தாயே—அதாவது இன்ஸ்பெக்டர் சந்தானத்தின் மனைவியே மருதையால் வளர்க்கப்பட்ட பாப்பா என்பதையும், அவன் தன் பெயரைச் சொன்னதுமே நான் தெரிந்துகொண்டு விட்டேன்."

"எப்படி?" என்று நாங்கள் வியப்புடன் கேட்டோம்.

"ஆம்; மருதையைப் பிடித்துத் தண்டனை பெறச்செய்த இன்ஸ்பெக்டர் சேகர முதலியார் என் ஆப்த நண்பர். திருடர்கள் வசித்து வந்த இடத்தைச் சோதனையிடச் சென்றபோது அவர், சமையற்காரக் கிழவியையும், பாப்பாவையும் கண்டார். குழந்தையைப் பற்றிய விவரங்களைக் கிழவி அவரிடம் அறிவித்தாள். சேகர முதலியாருக்குக் குழந்தைகள் கிடையாது. ஆகவே அழகாகவும், துருதுருவென்றும் இருந்த பாப்பாவைத் தாமே கொண்டு போய் வளர்க்கத் தீர்மானித்து அவ்வாறே செய்தார். குழந்தை ஒரு திருடனால் வளர்க்கப்பட்டவள் என்று தெரிந்தால், பிற்காலத்தில் அவள் வாழ்க்கைக்கு அது ஒரு பெரிய களங்கமாக மாறிவிடலாம் என்று பயந்து, எவரிடமும், – ஏன்? அந்தக் குழந்தையிடங்கூட – அவர் அதைச் சொல்லவில்லை. தமது உறவினர் ஒருவரிடமிருந்து சுவீகாரம் செய்து கொண்ட குழந்தையென்றே வெளியுலகை அவர் நம்பச் செய்தார். எனினும், அவருடைய உயிருக்குயிரான நண்பன் என்ற முறையில், என்னிடம் மட்டும் ஒரு சந்தர்ப்பத்தில் அந்த ரகசியத்தை வெளியிட்டார்."

"கடைசியாக நீங்கள் அன்று அதை எல்லோருக்கும் கூறி அவர்களை ஒன்றுசேர்த்து வைத்தீர்களாக்கும்" என்று நாங்கள் கேட்டோம்.

"இல்லை; நானும் அதை வெளியிடவில்லை."

"வெளியிடவில்லையா? பாவம், ஏன் சார், அப்படி இருந்து விட்டீர்கள்? இன்றுவரையில் மருதைக்குக்கூட இந்த இரகசியம் தெரியாதே?"

"இல்லை; மருதைக்கு அது தெரியும். ஆனால் நான் சொல்லி அல்ல. அதற்கு முன்பே அவன் அதைத் தெரிந்து கொண்டுவிட்டான். அது தெரிந்ததால்தான் அவனுடைய சித்தப் பிரமையே தெளிவடைந்தது. அதன் பிறகுதான் அவன் தன் கதையை எங்களுக்குச் சொல்ல முடிந்தது. ஆயினும், நான் எந்தக் காரணத்தை முன்னிட்டு அதை வெளியிடாதிருந்தேனோ, அதே காரணத்துக்காக அவனும் அதை வெளியிடவில்லை. அதன் மூலந்தான் அவனுடைய பாசத்தின் மேன்மையை நான் உணர்ந்தேன்."

"எப்படி? விவரமாகச் சொல்லுங்கள்" என்று நாங்கள் குழப்பத்துடன் கேட்டோம்.

"மருதையை அவன் திருடிச் சென்ற சந்தானத்தின் குழந்தையோடு பிடித்து வந்தார்கள் அல்லவா? அப்பொழுதும் அவன் அதைத் 'தன் குழந்தை—தன் குழந்தை' என்று பிரலாபித்துக்கொண்டிருந்தான் என்று சொன்னேனே, நினைவிருக்கிறதா? அந்தப் பைத்தியக்கார நினைவு. போலீசார் கொடுத்த உதையிலும், வேறு சில சம்பவங்களாலும் விலகிப் போயிற்று. முதலாவதாக, குழந்தையை ஆவலுடன் எதிர்நோக்கியிருந்த இன்ஸ்பெக்டர் சந்தானத்தின் மனைவியை அவன் அவர்கள் வீட்டு வாசலில் பார்த்தான். ஏதோ ஒன்று அவனை, மீண்டும் மீண்டும்

Distributors for Northern Zone:

CRYSTAL COMPANY,

23, Narindra Place, Parliament Street, New Delhi-1.

அவளை நோக்கச் செய்தது. உடனே மற்ளெரு சம்பவமும் நடந்தது. குழந்தையை வாங்கிக் கொள்ள ஓடி வந்த மனைவியிடம் சந்தானம், "கமலம், இன்றைய நிகழ்ச்சி உனக்கு ஒரு படிப்பினை. இனியாவது குழந்தைத் தனியே வெளியே போக விடாதே" என்று சொன்னார். 'கமலம்' என்ற பெயர் மருதையின் நினைவை உடனே சரி செய்துவிட்டது. தான் தூக்கிச் சென்ற குழந்தை, தன்னால் வளர்க்கப்பட்ட கமலத்தின் மகளே என்று உணர்ந்துவிட்டான்."

"கமலாவா? பாப்பா என்று அந்தக் குழந்தையை அழைத்து வந்ததாக அல்லவோ மருதை உங்ககளிடம் சொன்னான்?" என்று நாங்கள் கேட்டோம்.

"ஆமாம்; ஆனால் கமலம் என்பதுதான் பொன்னி தன் குழந்தைக்கு இட்டிருந்த பெயர். அதே பெயரால்தான் மருதையும், இன்ஸ்பெக்டர் சேகர முதலியாரும், மற்றுமுள்ளோரும் அவளை அழைத்து வந்தனர். அவளைத் தான் 'பாப்பா' என்று அழைத்து வந்ததாக மருதை சொன்னானே, அதுதான் பொய்.

"கடைசியாக மருதை குற்றமற்றவன் என்று இன்ஸ்பெக்டர் சந்தானத்துக்கு விளக்கி, அவனை விடுவித்து அழைத்து வந்தேன். வீட்டுக்கு வந்ததும் மருதையிடம் இதுபற்றிக் கேட்டேன்.

"அவன் சொன்னான்: 'என் பாசத்துக்கு அப் பெண்ணின் வாழ்வைப் பலியிட விரும்பவில்லை. இன்று ஓர் இன்ஸ்பெக்டர் மனைவியாகவும், முதலியார் குலத்தவளாகவும் இருக்கும் அவள், வேறு குலத்தைச் சேர்ந்தவள்; திருடனால் வளர்க்கப்பட்டவள் என்பவை தெரிய வந்தால், அவளுடைய வாழ்வு எவ்வாறு பாதிக்கப்படுமோ? யார் கண்டார்கள்? எனவே, அவள் மீது நான் கொண்டிருந்த பாசம், உண்மையான பாசமாக இருக்க வேண்டுமானால், அவளுக்கும் எனக்கும் இருந்த உறவை வெளியிடா திருப்பதே நலம் என்று முடிவுறுத்தினேன். ஆதலால்தான், அடி பொறுக்க முடியாமல் குழந்தையைத் தூக்கிச் சென்ற காரணத்தைச் சொல்ல நேரிட்டபோது அவளுடைய பெயரை 'பாப்பா' என்று மாற்றிச் சொன்னேன்" என்றான் அவன்.

"என்னுடன் இருந்தால், தன் கமலத்தையும், அவளுடைய குழந்தையையும் அடிக்கடி பார்த்து ஆறுதல் அடையலாம் என்று தன்னை ஒரு வேலையாளாக எடுத்துக் கொள்ளும்படி என்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டான். அப்படியே இன்று வரையில் இருந்து வருகிறான். இப்பொழுது சொல்லுங்கள், மருதையின் பாசம் உயர்ந்ததா, இல்லையா?" என்று முடித்தார் சிவஞானம்.

'அவனுடைய பாசம் தன்னலமற்றது' என்ற உண்மையை எப்படி எங்களால் ஒப்புக்கொள்ளாமல் இருக்க முடியும்? நீங்கள்தான் சொல்லுங்களேன்!

சிரித்ததாம்!

— மதி ஒளி —

மொட்டு முதல் இதழ் விரித்து
　　முல்லை சிரித்ததாம்! - அதில்
மொண்டு மொண்டு தேன்குடித்து
　　வண்டு சிரித்ததாம்!
சொட்டுச் சொட்டு மழைத்துளியை(ச்)
　　சொந்தம் என்றதாம்! - அந்தச்
சொந்தம் கொண்டே இந்தமண்ணும்
　　துவண்டு நின்றதாம்!

நீலவானில் வந்த நிலவு
　　நீந்திச் சிரித்ததாம்! - அதை
நின்று பார்த்து விண்ணின்மீனும்
　　நெகிழ்ந்து சிரித்ததாம்!
பாலை அள்ளித் தெளித்ததனால்
　　பாரும் சிரித்ததாம்! - இதைப்
பார்த்து மகிழ்ந்து சோற்றையுண்டு
　　பிள்ளை சிரித்ததாம்!

கறுத்த மேகம்கண்டு தோகை
　　களிப்பில் விரித்ததாம்! - மயில்
கண்கள் பலவும் கொண்ட தோகை
　　கண்ணைப் பறித்ததாம்!
குறுத்து வாழை வளர்ந்து நின்று
　　குலையும் சிரித்ததாம்! - எங்கும்
கொஞ்சும் அழகைக்கண்டு குருவிக்
　　கூட்டம் சிரித்ததாம்.

ஈழம் வழங்கும் தமிழ்

கனகசவுந்தரி இளந்திரையன்

ஈழ நாட்டின் பேச்சுத் தமிழில் பல சிறப்பு இயல்புகள் உண்டு. தமிழகத்தில் நெல்லைத் தமிழ், தஞ்சைத் தமிழ், சென்னைத் தமிழ்...... என்ற வேறுபாடுகள் இருப்பது போலவே, ஈழத்தில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலைநாடு ஆகிய பகுதிகளுக்குத் தனித்தனி இடமொழிகள் உண்டு. நாம் அந்த வேறுபாடுகளில் புகாமல், பொதுவாக ஈழ(த்துப் பேச்சு)த் தமிழில் உள்ள சிறப்பியல்புகளை மட்டும் சில சொற்களைக்கொண்டு காண்போம்.

ஈழத் தமிழரின் பேச்சு முறையில் சிறிது மலையாள ஒலிமுறை கலந்திருக்கிறது ஆகையால் தென்நெல்லை — கன்னியாகுமரி மாவட்டங்களில் வாழும் தமிழர்களைப் போலவே ஈழத் தமிழர்கள் பல சொற்களை உச்சரிக்கின்றார்கள். மழை – **மளை**யாகவும், பழம்–**பள**மாகவும், ஜனங்கள் – **சனங்க**ளாகவுமே தென்நெல்லைத் தமிழர் வாயில் தவழ்வதைப் பார்க்கலாம், ஈழத்தின் நிலையும் இதுவே. தமிழகத்துக் காப்பி ஈழத்தில் **கோப்பி**யாகிறது; இங்கே, ஆமாம் என்போம்; அங்கே, **ஓமோம்** என்பார்கள். டாக்டர் –**டொக்ரர்** ஆகிறார்; ஆர்டர் – **ஓடர்** ஆகிறது. இவ்வாறே பல ஆங்கில, தமிழ்ச் சொற்களில் நமது ஆகாரம் அவர்களுக்கு ஓகாரமாகிறது.

பொதுவாக (மாலா, சீதா என்பன போன்ற) ஆகார ஈற்று வடமொழிச் சொற்களை, ஐகார ஈற்றுச் சொல்லாக்கி, (மாலை, சீதை என்று) வழங்குவது தமிழ் மரபு. ஈழத்தார் அத்துடன், அண்ணாவை **அண்ணை**யாக்கியும் பேனாவைப் **பேனை**யாக்கியும் வழங்குகிறார்கள்! அம்மாவை அம்மை என்றே சொல்லும் வழக்கம் தமிழகத்தில் சில இடங்களில் இன்னும் இருக்கிறது.

படித்தல், பாடுதல் என்னும் சொற்களுக்குப் பொருள் வேறுபாடு உண்டு. பாடம் படிக்க வேண்டும்; பாட்டுப் பாடவேண்டும்.

With the Compliments

of the makers of

Delbis

BREAD

THE BRITANNIA BISCUIT COMPANY LIMITED

RAM BAGH ROAD, DELHI

JWTBC 5341

தென் தமிழகத்தில் பாட்டையும் படிக்கவே செய்வார்கள். "நல்லாப் பாட்டு படிக்கிறுள்" என்றே சொல்லுவார்கள். இந்தச் சொல்வழக்கு பாரதியார் பாட்டிலே கூட ஒட்டிக் கொண்டது. 'திரா த விளையாட்டுப் பிள்ளை' என்று தொடங்கும் பாட்டில், 'அமுது – பொங்கித் ததும்பும்நற் கீதம் படிப்பான்' என்றே பாடுகிறுர் பாரதியார். ஈழமும் பாட்டைப் பாடுவதில்லை; படிக்கிறது.

தமிழகத்தில் சில இடங்களில் அம்மா, அக்கா, அண்ணன் முதலியவர்களை மரியாதையாக 'அவர்கள்' என்று குறிப்பார்கள். வேறு சில இடங்களில் தந்தை, மாமா முதலியவர்களைக்கூட 'நீ' என்று ஒருமையில் (ஏகவசனத்தில்) குறிக்கும் வழக்கம் உள்ளது, ஈழத்தமிழர்கள் தங்கள் குழந்தைகளிடம் கூட 'மரியாதையாக' வாருங்கள், சொல்லுங்கள் என்று பேசுகிறுர்கள். இந்த வழக்கம் எப்படி ஏற்பட்டது என்று தெரியவில்லை.

ஆனுல் இதுபற்றிச் சிலர் சுவையான விளக்கம் கொடுக்கின்றுர்கள் : "குழந்தை நம்மிடமிருந்தே பேச்சுப் பழகுகிறது. நாம், " வா " என்றுல் அதுவும் நம்மை " வா " என்றே அழைக்கிறது. நம்மை மட்டுமல்ல, நம் வீட்டுக்கு வரும் மற்றவர்களையும் குழந்தை ஒருமையிலேயே அழைக்கத் தொடங்கிவிடுகிறது. இந்தத் தொட்டில் பழக்கம் பல குழந்தைகளிடம் பெரிய வயதுவரை நீடிப்பதைத் (தமிழகத்தில்) பார்க்கிறேம். குழந்தையிடம் மரியாதைச் சொல்லால் நாம் பேசத் தொடங்கிவிட்டால் அதுவும் அப்படியே பேசக் கற்றுக் கொள்ளுகிறது. இதற்காகத்தான் ஈழத்தார் இப்படிப் பேசுகிறுர்கள்" – இந்த விளக்கம் நன்றுகவே இருக்கிறது. ஆனுல் பெண்களை, அவர்கள் எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும், "அவ(ள்)" என்றே ஈழத்தார் சொல்லி வருகின்றுர்கள் !

தென் தமிழகத்தாருக்கு ஆண் குழந்தையும் பிள்ளைதான்; பெண் குழந்தையும் பிள்ளைதான். ஆம்பிளைப்பிள்ளை, பொம்பிளைப் பிள்ளை (ஆண்பிள்ளை, பெண்பிள்ளை) என்று அடுக்கிக் கூடச் சொல்லுவார்கள். ஈழத்தின் வழக்கும் இதுவே. பெண்ணைப் பெட்டை என்பது ஈழத்து வழக்கு. நெல்லை வழக்கும் இதுவே. ஆனுல் சொல்லின் உருவம் "பொட்டை" என்று மாறுகிறது.

படம் வரைதல் என்பதைப் படம் போடுதல் என்றும் படம் கீறுதல் என்றும் ஈழத்தார் சொல்லுகிறுர்கள்.

Where quality counts...



One of the good things in life

Brooke Bond Tea

FRESH and GOOD

"அறையும் ஆடரங்கும்பட பிள்ளைகள்
தறையில் கீறிட, தச்சரும் காய்வரோ?"

என இச் சொல்லைக் கம்பன் எடுத்தாண்டுள்ளான். தென் தமிழகத்தில் படம் போடுதல் என்ற வழக்கு உள்ளது. ஓர் உள்ளங்கை அளவை ஒரு **சிறங்கை** என்பது தென்தமிழ் வழக்கு. 'சிறுங்காய்' என்பது தஞ்சைத் தமிழ். 'மூக்நாழி முச்சிறங்கை நெல் அளந்து கொடு வா' என்று மீனாட்சியம்மை குறத்திலும் வருகிறது. ஈழத்தார் இச்சொல்லைப் பேணி வருகிறார்கள்.

மறியல் என்றால் சிறை என்று பொருள். இதிலும் தென் தமிழகத்தோடு தோளோடுதோள் நிற்கிறது ஈழம். வாங்கினேன் என்பதை **வேண்டினேன்** என்றும், தொல்லையைக் **கரைச்சல்** என்றும், தாள் என்பதை **கடதாசி** (கடுதாசி) என்று சொல்வதிலும் ஈழத்தாரும் தென்தமிழகத்தாரும் ஒன்றுபட்டு நிற்கிறார்கள்

கோயில் என்பதைச் சில இடங்களில் 'கொயில்' என்பார்கள். இராமநாதபுர மாவட்டத்தில் சில இடங்களில் இந்த வழக்கு இன்றும் இருக்கிறது. புகையிலை தமிழகத்தில் "போயிலை"யாகி, ஈழத்தில் **பொயிலை**யாகிறது. 'உங்க அப்பன்'என்பதை, வெறுப்போடு (அல்லது அதிக அன்போடு) சொல்லும்போது "ங்கொப்பன்" என்பது தென்தமிழக வழக்கு; இதுவே ஈழத்தில் "**கொப்பன்**" என்று வழங்குகிறது.

ஒரு வீட்டுக் குழந்தை, சிலகாலம் தங்கியிருக்கும் எண்ணத்துடன், உறவினர் வீட்டுக்குப் போயிருந்தால், "இன்னார் வீட்டில் **நிற்கிறான், நிற்கிறாள்**" என்று இந்த வீட்டார் சொல்லுவார்கள். 'இன்னாரைச் சந்தையில் பார்த்தேன்' என்பதை, "இன்னாரைச் சந்தையில் **வைத்துப் பார்த்தேன்**" என்பார்கள், இவை தென் தமிழகப் பேச்சு முறைகள். ஈழம் இவற்றை அப்படியே ஏற்றிருக்கிறது.

ஈழத்தில் வழங்கும் நல்ல தமிழ்ச் சொற்கள், புதிய சொற்கள் ஆகியவற்றையும் குறிப்பிடவேண்டும். தயார் என்பதை **ஆயத்தம்** என்றே சொல்லுகிறார்கள்; நோயை **வருத்தம்** என்றும், முடிவு என்பதை **முற்று** என்றும், கற்பித்தல் அல்லது சொல்லிக் கொடுத்தல் என்பதைப் **படிப்பித்தல்** என்றும் சொல்லுகிறார்கள். இத்தனை மணி முதல் இத்தனை மணிவரை என்பதை இத்தனை மணி **தொடக்கம்**...... என்றே தொடங்குகின்றார்கள். நமது 'கேலி'யும்

இண்டலும், "நையாண்டி"யும் அவர்களுக்குப் **பகிடி;** நமது சாக்குப் போக்கு ஈழத்தார்க்குச் **சாட்டு;** நாம் **கவனிக்கிறோம்,** அவர்கள் **அவதானிக்கிறார்கள்;** நாம் பேசுகிறோம், அவர்கள் **கதைக்கிறார்கள்;** நாம் விரைவில் செல்லுகிறோம், அவர்கள் **கெதியில்** செல்லுகிறார்கள். நமது 'ஆபீஸ்' காரியாலயமாகி, அலுவலகமாகியுள்ளது; ஈழத்தில் **கந்தோர்;** ஒரு கவிஞர் "எமனது கந்தோரில்......" என்று கவிதையே பாடியுள்ளார். 'இனி மேலும் இங்கே இருப்பது உசிதமில்லை' என்பதை......, 'இருப்பது **புத்தியில்லை**' என்று ஈழத்தார் சொல்லுகிறார்கள். விற்பனை அங்கு **விற்பனவு** ஆகிறது. 'ரெஸ்ட் அவுஸ்' என்னும் ஆங்கிலத் தொடரை **வாடிவீடு** என்று தமிழ்ப்படுத்தியுள்ளார்கள் இப்படியே 'டிபார்ட்மெண்ட்' என்பதைத் **திணைக்களம்** என்றும் 'டிபாசிட்' என்பதைக் **கட்டுக்காசு** என்றும் சொல்லுகிறார்கள். வேடிக்கை என்னும் பொருளில் **'முஸ்பாத்தி'** என்ற சொல் சாதாரணமாக வழங்குகிறது. இது எந்த மொழிச் சொல்லோ?...

வினைமுடிபுகளிலும் வேற்றுமை உருபுகளைச் சேர்ப்பதிலும் கூடச் சில புதுமைகள் உண்டு. சந்து வழியே போவோம்

MOUNT METTUR PHARMACEUTICALS
PRIVATE LIMITED

Manufacturers of Pharmaceuticals

3, GREENWAYS ROAD, P. B. No. 902, MADRAS-28.

Telegrams: PHARMLAB

Telephone: 73170

MANUFACTURERS OF

VITAMINS INJECTIONS
ETHICAL RESTORATIVE TONICS AND ELIXIRS
HOUSEHOLD REMEDIES - TRANSFUSION FLUIDS
TABLETS COMMON INJECTIONS.

SUPPLIERS TO

Government Hospitals, Nursing Homes, Members of Medical Profession, also Chemists and Druggists in the States of Andhra Pradesh, Madras, Kerala and Mysore.

என்பதைச் **சந்தாலே போவோம்** என்கிறார்கள்; ஒரு மாதத்தில் கிடைக்கும் என்பதை **ஒரு மாதத்தால்** கிடைக்கும் என்கிறார்கள். வீட்டுக்குப்போவோம் என்பதை **வீட்டைப் போவம்** என்கிறார்கள். **போவம்** (போவோம்), **கேட்டன்** (கேட்டேன்) என்பவை சாதாரணம். அத்துடன் கொடுத்தேன் என்பது **கொடுத்தனான்** என்றும், கொடுத்தாய் என்பது **கொடுத்தனீ** என்றும், கொடுத்தான் என்பது **கொடுத்த அவன்** என்றும் கொடுத்தார்கள் என்பது (கொடுத்தஅவிய) **கொடுத்தஅவர்கள்** என்றும் வழங்குவது புதுமையாக உள்ளது. இதே போல் **வருகினம், போகினம்** என்றால் வருகிறார்கள், போகிறார்கள் என்று பொருள்.

கிளம்புதல் அல்லது புறப்படுதல் என்று நாம் சொல்வதை **வெளிக்கிடுதல்** என்று ஈழத்தார் சொல்லுகிறார்கள். 'மைல்' (ஆங்கிலச் சொல்) சிறிது காலத்துக்கு முன்புவரை "ஒரு நாழிகை வழி" என்றும் ஒரு கல் என்றும் தமிழில் வழங்கியது. இப்போது ஆங்கில மைல் தமிழ் மைலும் ஆகிவிட்டது. ஈழத்தில் ஒரு **கட்டை** என்றால் ஒரு மைல் தூரம் என்று பொருள்.

"பனாட்டு", "பனங்கட்டி" – இரண்டும் ஒன்று என்றுதான் நம்மில் பலர் எண்ணுகிறோம். பனைமர ஜில்லா என்று பெயர் பெற்ற நெல்லை கூட இதற்கு விதிவிலக்கில்லை. ஈழத்தில் பதனீரைக் காய்ச்சி எடுப்பது **பனங்கட்டி;** பனம்பழத்தைப் பிழிந்து வெயிலில் உலர வைத்துத் தயாரிப்பது **பனாட்டு.**

ஒரு வீட்டுக்குப் போய் விடைபெற்றுக் கொள்ளும்போது, "நான் வருகிறேன்," அல்லது "போய் வருகிறேன்" என்று சொல்லுகிறோம். ஈழத்தில் **வரப்போகிறேன்** என்று சொல்லுகிறார்கள்!

அவர்கள் வெளிக்கிடுவதும் வரப்போவதும் வேடிக்கையாக இல்லை? நம்முடைய பேச்சில் எதெது அவர்களுக்கு முஸ்பாத்தியாக இருக்கிறதோ!

இதுவரை நாம் பார்த்தவை, எங்கள் சூறாவளிச் சுற்றுப் பயணத்தில் அங்கங்கே காதில் விழுந்த சொற்களே. தேடிச் சேகரித்து ஆராய்வதற்கு ஈழத்தின் பேச்சுத் தமிழில் இன்னும் எத்தனையோ புதுமைகள் உண்டு.



காகம்

சாம்பல் கறுப்பு நிறங்கொண்டேன் – காலை
தன்னில் எழுந்து கரைந்திடுவேன்
வேம்பின் பழத்தை மிகஉண்பேன்
வேளை குளித்தே தூங்கிடுவேன்

உண்ணப் பலரைக் கூட்டிடுவேன் – கழிவு
உணவுப் பொருளை உண்டிடுவேன்
கண்ணைச் சாய்த்துப் பார்த்திடுவேன் – கூடு
கட்டி முட்டை இட்டிடுவேன்

ஊரில் எங்கும் திரிந்திடுவேன் – தண்ணீர்
உண்டு தாகம் தணிந்திடுவேன்
பாரில் பறவை இனமாவேன் – நீயும்
பகராய் எந்தன் பெயரைத்தான்.

— 'வண்ணமுத்து.'

தூரத்துப் பச்சை

ராஜம் ராமச்சந்திரன்

"கேரம் ஆட்டத்தின் காய்கள் சடார் சடாரென்று அடிபட்டுக் கொண்டிருந்தன.

"ஏய் சாரு! தப்பாட்டம் ஆடறே"

"நான் ஒன்றும் தப்பாட்டம் ஆடவில்லை."

"பின்னே கட்டை விரலாலே பக்கவாட்டாக ஏன் காயின்ஸை அடிச்சே?"

"ஏன்? தம்மிங் அடிக்கிற வழக்கம் உண்டாக்கும்! இது தெரியாத முட்டாள் பெரிசா ஆட வந்து விட்டான்!"

"தம்மிங்காவது கிம்மிங்காவது! வெறும் பட்டிக்காடு மாதிரி ரூல்ஸ் தெரியாமல் பேசாதே. போருத குறைக்கு நான் முட்டாளாம்! நீதான் வெறும் மட்டி!"

"நீ ரொம்ப பட்டணத்தான்! பட்டிக்காட்டு மட்டி இல்லையா? நான் ஜயிக்கிறேனே என்று வயிற்றெரிச்சலில் வாயில் வந்தபடி பேத்தறே"

"ஏய் சாரு! ஜாக்கிரதையாகப் பேசு. பேத்தறத்துக்கு நான் ஒன்றும் பைத்தியம் இல்லை. சின்னப்பவே இருந்து நீதான் அழுகுணி ஆட்டமாக ஆடி, ஜயித்தேன் என்று துள்ளறே"

"ஆமாம்! நான் சின்னவாளயிருந்தப்போ நீதானே எனக்கு பால் போட்டி வளர்த்தே! என்னை விட இரண்டு வயசு சின்னவனேல்லியோ? உனக்கு நான் விளையாடினது நன்னுத் தெரியும். நீதான் குழந்தையிலேருந்து சண்டிமாடா வளர்ந்தே"

"ஏய் கழுதை! என்னையா மாடு என்கிறே நீதான் மாடு ஆடு எருமை எல்லாம்"

சாருவுக்கு கண்ணில் தண்ணீர் வந்து விட்டது.

"அம்மா! அம்மோவ் இந்த சனியன் பிடித்த பாலுவைப்



KOMPLEX

AMMONIA REFRIGERATING COMPRESSORS

AVAILABLE EX-STCOK

- Light equipment with high output
- High efficiency
- Low space requirement
- Economical operation

The Compressors are built according to most up-to-date and modern design

These are suitable for various fields of Chemical Industry, Fruit & Vegetable Refrigeration Plants and Dairy Plants etc.

No import licence required

Following sizes available to actual users against essentiality certificate at controlled prices.

Type	Output at	Tons of Refrigeration
2E-150	— 10°C/ + 25°C	33.3
	— 15°C/ + 45°C	19.7
2E-180	— 10°C/ + 25°C	66.6
	— 15°C/ + 45°C	39.4
4E-180	— 10°C/ + 25°C	123.0
	— 15°C/ + 45°C	74.0

Other sizes also available against actual users import licence.

Sole Agents & Concessionaires :

RAI & SONS
PRIVATE LIMITED

9-A, CONNAUGHT PLACE, NEW DELHI
PHONES : 42616.44029 GRAMS : ARAISONS

20-B, PARK STREET, CALCUTTA
PHONES : 234177.238076 GRAMS ARAISONS

POST BAG 41, BIVAR ROAD, SHILLONG
PHONE · 627 GRAMS : ARAISONS

AARC2

பாரேன்! என்னைக் கன்னு பின்னுவென்று பேசறுன்''

அம்மாவின் குரல் சமையலறையிலிருந்து அதட்டலாக வந்தது. "ஏண்டா பாலு! காலேஜ் படிக்கிற பையனு லட்சணமா இல்லாமல் கல்யாணத்துக்கு நிற்கிற பெண்ணேடு சண்டையிட வெக்கமாயில்லே?''

"போம்மா! உனக்கு பெண் தான் எப்பவும் ஒசத்தி. தப்பாக ஆடாதேடி என்றல் அவள் என்னைக் கண்டபடி பேசறு. அதெல்லாம் உன் காதிலே விழுகிறதா பார். உன் கல்யாணத்துக்கு நிற்கிற பெண்ணும் நீயும்.

"அடி சாரு! உனக்கென்னடி இத்தனை வயசுக்கு விளையாட்டு?''

சாரு என்னைப் பார்த்து அழகு காட்டினுள். நான் பதிலுக்கு சாரு மோரு என்று கத்த ஆரம்பிக்கவே அம்மா கூடத்துக்கே வந்து விட்டாள். "பாழாய்ப்போன ஞாயிற்றுக்கிழமை ஏன்தான் வரதோ? குட்டிச்சுவருக்கு ஆகிற மாதிரி வயசான பசங்கள் இப்படி சண்டைப்போடறதைப் பாத்து நாலு பேர் சிரிப்பா! உள்ளே போடி சாரு. அவனுக்கு சரியாய் பதில் பேசிண்டு இப்படி இருப்பவள் எப்படித்தான் ஒருஇடத்தில்போய் குப்பைக் கொட்டுவாயோ? இந்த சண்டையைப் பார்த்தா எப்படாப்பா இந்தப் பெண்ணுக்கு கல்யாணத்தை பண்ணி வீட்டை விட்டு அனுப்பிக்கப் போருமா என்று தோன்றுகிறது. கொஞ்சம்கூட நிம்மதியில்லை'' என்று கடுகடுத்தாள்.

சாரு "பாலு வாலு'' என்று முணு முணுத்துக் கொண்டே போனுள். நான் "அம்மா! உன் அழகான பெண் போற இடத்திலே நடுவீட்டிலேயே குப்பையைக் கொட்டிவிடுவாள். நீ அவள் எப்படி குப்பைக் கொட்டுவாள் என்று விசாரப்படாதே'' எனச் சொல்லிவிட்டு வேகமாக வந்து விட்டேன். அங்கே நிற்க பைத்தியமா பிடித்திருக்கிறது?

நான்பாட்டுக்கு சொல்லிக் கொண்டேன். "சனியன் பிடித்த சாரு. தொலைந்தாளானல் நல்லது நான் பாட்டுக்கு ஹாய்யாக இருப்பேன்!''

2

சாருவுக்கு கல்யாணமாகி அன்று புக்கம் செல்லப்போகிறுள். இரண்டு மாசமாக கல்யாணக் காரியங்களுக்கு ஓடியாடிய அலுப்பு. வீட்டுக்கு ஒரே பிள்ளையான நான்கூட ஒத்தாசை செய்யாவிட்டால் அப்பா எப்படி ஒண்டியாக அலைவார்? ஆனல் சாருவின்

ORIENTAL'S

FOR

QUALITY & TASTE

- Building Construction
- Metal Grille & Aluminium Doors & Windows
- Sanitary Electrical Installation
- Furnishing & Interior Decoration

——(*Consult*)——

Oriental Building & Furnishing Co. Pvt. Ltd.

'M' BLOCK, CONNAUGHT CIRCUS
NEW DELHI

Telephones: 48202, 47944, & 48222.

Grams: "DECORATION"

கல்யாணத்துக்கு நான் இப்படி அலைந்தது அம்மாவுக்கு வியப்புதான். என் அறையில் வந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தேன்.

அத்திம்பேரும் சாருவும் சொல்லிக் கொண்டு போக வந்தார்கள். "போய் வருகிறோம் பாலு, அடிக்கடி லெட்டர் போடு" என்றார் அத்திம்பேர்.

"போய்ட்டு வரேண்டா பாலு"

இது என்ன சாருவின் குரல் தடைப்படுகிறதே!

என் இயற்கையான குறும்புத்தனத்துடன் "குஷியாகப் போய் வா சாரு. பாவம் அத்திம்பேர் அகப்பட்டுக் கொண்டார், இனிமேல் உன்னோடு சண்டை போட, அத்திம்பேரே, என்னுடைய அனுதாபங்கள் உங்களுக்கு" என்றேன்.

வெளியே நின்ற என் அம்மா சிடுசிடுத்தாள். "என்னடா இது பாலு, மாப்பிள்ளை எதிரில் அவளை மட்டம் தட்டுகிறாய்! புக்காத்துக்கு போகிற பெண்ணைப் பார்த்து இப்படியா உளறுவாய்?"

சிரித்துக்கொண்டே மாப்பிள்ளை "அதெல்லாம் இப்போ அப்படித்தான் சொல்வான். பத்து நாள் போனால் அக்காவை பார்க்க வேண்டுமே என்று ஏக்கம் வந்து விடும்" என்றார்.

நிஜந்தானா அது?

ஒரே வாரத்தில் வீட்டில் இருக்கவே எனக்குப் பிடிக்காமல் போயிற்று. கேரம் போர்டைப் பார்த்தாலே பிடிக்கவில்லை. வீடே வெறிச்சென்றாகி விட்டது. அம்மாவிடம் "சாரு இல்லாமல் வீடு நன்றாகவே யில்லையம்மா" என்றேன்.

"வந்தயா வழிக்கு! அவள் இருக்கும் போது தினம்

வாழ்க்கை

காலையிலே எழுந்துலவிக் கடன்க ளாற்றிக்
கதைபேசித் தொழில்புரிந்து காசு தேடி
மாலையிலே களித்துறங்கல் வாழக்கை யாமோ
மக்கள்நிலை அவ்வளவில் மாய்ந்தோ போகும்
மேலையுமே தொடர்ந்துசெலும் மேன்மைத் தன்றோ
விரியுலகில் விளம்பரமே விரும்பா தென்றுங்
காலடியில் தலைசாய்த்துக் கருத்தை வைத்துக்
கடன்கள்செய அருள்புரிவாய் கருணைத் தேவே.

— திரு. வி. க.

வெட்டி மடிந்து கொண் டிருந்தே. இப்ப பார்'' எனச் சிரித்தாள்.

3

ஆறு மாதம் கழித்து சாரு வருவதாகத் தகவல் வந்தது. ரெயில் வர இரண்டு மணி நேரத்துக்கு முன்பாகவே ஸ்டேஷனுக்கு போய் விட் டேன். ரயிலிலிருந்து இறங் கியவளைப் பார்த்ததுமே சாரு! எனக் கத்திக்கொண்டு ஓடினேன் மகிழ்ச்சியுடன். அவளும் ''பாலு நீயாடா!'' என்று பிளாட்பாரம் என் பதைக்கூட மறந்து கூவினுள். ஏ அப்பா, சாரு என்ன அழகாய் மாறி விட்டாள்!

ஒரு வாரத்துக்குபின்....

''ஏ சாரு! தாயம் போடா மல் இந்தக் காயை இந்த இடத்தை விட்டு நகர்த்தக் கூடாது!''

''என்னடா இது! பழக்கட் டத்துக்கு வந்தாகிவிட்டது. இப்போதுதான் ஆரம்பம் மாதிரி தாயம் போடணு மாமே தாயம்!''

''அதெல்லாம் இல்லே. ஆட ஆரம்பிக்கும் முன்பே நான் சொல்லியிருக்கிறேன். பழத்துக்கு வந்தால்கூட தாயம் போட்டுதான் ஆக வேண்டும்.''

''போறுண்டா, உனக்கு தாயம் ஆடவே தெரிய வில்லே. எங்கே உன் காயை வெட்டி விடுவேனே என்று அடாவடியடிக்கிறே.''

''ஐயோ! நீதான் சகலகலா வல்லி! என்றைக்குமே தப் பாட்டக்காரிதானே நீ!''

''நீ ரொம்ப யோக்கியன்! எதிராளி ஜயித்துவிட்டால் வயிற்றை எரிகிறது. எப்ப வுமே சண்டைக்கார பாலு தானே நீ, வெறும் வாலு!''

''நீதான்! சாருவாம் சாரு குரங்கு மூஞ்சி சாரு பேரைப் பார் பேரை.''

''என்னடா அப்பா, திரும் பவும் உங்கள் சண்டையை ஆரம்பித்து விட்டீர்களா? எல்லாம் தூர இருக்கும்வரை தான் ஆசையும் பாசமும். நாலு நாள் பழகவே பழைய கறுப்பனுகை மாறி விட்டீர் களாக்கும். போடி சாரு நீ, உள்ளே. ஒரு குழந்தைக்கு அம்மாவாகிற வயசுக்கு நன்னு அவனோடு சண்டை போட்டே. போடா அப்பா புண்ணியவானே! இப்ப அவ ளோடு சண்டை போடாதே. நாளைக்கு பிறக்கப் போறது பார் உனக்கு மருமான்! அதோடு போடு உன் சண் டையை!'' என்ருள் அம்மா.

நானும் சாருவும் கவிழ்ந்த தலையை நிமிர்த்தவே யில்லை.


PHILIPS
FOR
LIGHT
AND
RADIO
PHILIPS
PHILIPS INDIA LIMITED

say how you will....

HANDLOOMS, the National Heritage—cherishing the consummate artistry of an ancient craft,

HANDLOOMS, a Vital Link in India's Economy—remembering the diligent industry of self-employed crores, or

HANDLOOMS for Everyone, for All—superb creations seeking patronage.

the fact remains
HANDLOOMS ARE DURABLE, DECORATIVE, DISTINCTIVE

ALL INDIA HANDLOOM BOARD

பாரதியின் கவிதை

எஸ். மைதிலி

கவிதை காலத்தில் பூக்கும் பருவ மலர். அந்தந்தக் காலத்திற்கேற்ப உள்ளத் தடத்தில் ஊற்றெடுத்துப் பொங்கும் ஆர்வத்திற் பிறப்பது இயற்கவிதையாகும். கவிதை கவிஞனின் கற்பனை, கனவு இவை இரண்டின் உருத்தோற்றம். ஆயினும், கவிஞன் தன்னுடைய கற்பனை உலகத்திலேயே வாழ்ந்திருந்தால் அவனுடைய கவிதை பரிபூரணத்துவம் அடைய முடியாது. உலகத்தின் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு உலகத்தை ஒட்டி எழுதும் கவிதையே உயர்ந்த கவிதையாகத் திகழும். இம்முறையில் இயற்றும் அரும் கவிதைகளில் மாந்தர் அறிந்து உய்தற்குரிய விழுமிய உண்மைகள் காணப்படும் இத்தகைய கவிதைகளின் மொழிகளில் ஒளியும், இனிமையும் நிரம்பித் ததும்பும். இவற்றில் சில தன்னகத்தே கொண்டுள்ள பொருள் நயத்தினால் கால வெள்ளத்தைக் கடந்து நிற்கக் கூடிய ஆற்றல் பெற்று மிளிரும். இத்தன்மை பொருந்திய பல அரும்பெரும் கவிதைகளை நம் தமிழ் இலக்கியத்திற்குப் பலகவிஞர்கள் அருளிச் செய்திருக்கிறார்கள். இவர்களுள் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி பீடத்திலே வீற்றிருக்கும் பாரதியார் முதன்மையாகக் குறிப்பிடத் தக்கவர்.

இருபதாம் நூற்றாண்டில் இந்திய நாடெங்கும் ஒரு புது உணர்ச்சி வேகம், உரிமை வேகம், விடுதலை தாகம் வெள்ளம் போல் பெருக்கெடுத்து வந்த பொழுது நம் தமிழ் நாடு செய்த தவப் பயனாய் பாரதியார் தோன்றி, அருந் தமிழுடன் ஆரியமும், ஆங்கிலமும் பயின்றும், "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்" என்று கூறி இனிய தமிழ்ப் பாட்டுக்களைத் தன்னரிய ஆர்வத்தால் தான் வாழ்ந்த காலத்திற்கேற்ப சுதந்திர உணர்ச்சியை, விடுதலை வேட்கையைத் தூண்டும் வகையில் புனைந்து மக்கட் கவிஞராகவும், தேசியக் கவியாகவும் திகழ்ந்தார். காலத்தைக் கடந்து நிற்கக் கூடிய கவிதைகளை இயற்றியதன் மூலம் இலக்கியப் புலவராகவும் திகழ்கின்றார். அவருடைய கவிதைகள் இலக்கிய நயத்துடன் இயங்குவதை நாம் காணலாம்.

பாரதியார் காலத்தில் தமிழ் நாட்டில் தாய் மொழிப் பற்று மங்கியிருந்தது. அந்நிலையில்

The Sree Meenakshi Mills, Ltd.,

Madurai, Manaparai and Paravai.

Manufacturers of:

SINGLE YARN IN COUNTS 16s TO 30s AND CONE YARNS FOR WEAVING AND HOSIERY FACTORIES AND MULLS, LONGCLOTH, GADA, Etc.

CAPITAL

Authorised	... ...	Rs. 60,00,000
Subscribed & Paid-up	... ...	Rs. 48,81,240

SPINDLES

Madurai	... ...	40,084
Manaparai	... ...	30,140
Paravai	... ...	37,900
Power Looms at Madurai	...	144

Managing Agents:

THIAGARAJA CHETTY & CO.,

Tirupparankundram Road, Madurai.

South India.

Phone No. 3211 (5 Lines) Telegrams: KARUMUTTU

Post Box No. 1

காலத்திற்கேற்ற விஷயம், விஷயத்திற்கேற்ற உணர்ச்சி, உணர்ச்சிக்கேற்ற தெளிவு, தெளிவுக்கேற்ற திண்மையுடன் வறுமையும், அனுதரவும் சூழ்ந்த வாழ்க்கையினிடையே பல சிறந்த கவிதைகளை இயற்றினர். வறுமை என்னும் உரம் போட்டுக் கவிதைப் பயிரைப் பேணி வளர்த்தார் பாரதி.

இந்நிலையில்தான் அவருடைய சிறந்த கவிதைகள் பிறந்தன. கண்ணனிடம் காதல் கொண்டு "கண்ணன் பாட்டும்", வியாசரின் சபா பருவத்தைப் படித்து இனிமையும், அழகும், உணர்ச்சியும் பொருந்திய "பாஞ்சாலி சபதமும்" குயில் பாட்டும், பழம் பெருமை வாய்ந்த தமிழகத்தின் அறிவையும், ஆண்மையையும் பிரதிபலித்துக் காட்டும் பல கவிதைகளையும் இயற்றினர்.

இலக்கியம் நயத்துடன் திகழ்வதற்கு பாரதியாரே இலக்கணம் கூறுகின்ருர்: "எதுகை மோனைகளுக்காக சொல்ல வந்த பொருளை மாற்றிச் சொல்லும் மனிதன் சரஸ்வதியின் கடாட்சத்தை இழந்து விடுவான்; யமகம், திரிபு முதலிய சித்திரக் கட்டுக்களை விரும்பி, சொல்லுக்குத் தக்கபடி பொருளைத் திரித்துக் கொண்டு போகும் கயிறு பின்னிப் புலவன் வாணியின் திருமேனியை நோகும்படிச் செய்கிருன். அவசியமில்லாத அடைமொழி கோப்போன் அந்த தெய்வத்தின்மீது புழுதியைச் சொரிகிருன். உலகத்தாருக்குப் பொருள் விளங்காதபடி இலக்கியம் செய்வோன் அந்த சக்தியைக் கரித்துணியாலே மூடுகிருன். இலக்கியத்திற்குத் தெளிவும் உண்மையுமே உயிரெனலாம். இவ் உயிருடைய வாக்கே அருள் வாக்கு என்று சொல்லப்படும்" இத்தகைய நோக்கத்தைப் பின்னணியாகக் கொண்டு பாரதியார் இயற்றியகவிதைகள் இலக்கிய நயமுடன் இலங்குகின்றன. மேலும் "எளிய பதங்கள் எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொது மக்கள் விரும்பும் இசை" இவைகளே அவர் கவிதா இலட்சியமாக இருந்தது எளிமையே பாரதியாரின் கவிதைக்கு உயிர் நாடியாக அமைந்து விட்டது.

பாமரர் வியக்கக் கவிதை பாடுவதே அவர் கொண்ட இலக்கு. நல்ல கவிதை கால நிலையை நிழலிடும் என்பதற்கேற்ப காலத்திற்கேற்ற எளிய நடையுடன் கூடி வேகம், ஆண்மை என்ற இரு சிறப்பியல்புகளைக்கொண்டு இனிமையை முதல் உறுப்பாகக் கொண்டு அழகும், உணர்ச்சியும் நீதியும், அறிவும் மெய்ஞானமும் இலக்காகக் கொண்டு கவிதைகளை இலக்கிய நயத்துடன் இயற்றினர். உதாரணமாக, பாஞ்சாலி சபதத்தில் பெண்மைக்கும் ஆண்மையூட்டும் அளவில் ஆண்மை இரத்தத்தைப் புகுத்தியிருக்கின்ருர். கண்ணனின்நினைப்பிலே திரௌபதி "உட்சோதியிற் கலந்து, உலகத்தை மறந்து ஒருமையுற்று" பிரார்த்தனை செய்வது பாரதியாரின் வாயிலிருந்து முழு வேகத்துடன் வெளிவருகிறது. பின்பு "மேவி இரண்டுங் கலந்து ......குழல் முடிப்பேன் யான் —

இது செய்யு முன்னே முடியேன் என்று சபதம் செய்யும்பொழுது பாஞ்சாலியின் ஆண்மை, வீரம் இரண்டும் நன்கு வெளிப்படுகிறது. நமது நெஞ்சமும் "அறம் வாழ்க" என்று கூவுகிறது. இந்நிகழ்ச்சி அவருடைய இலக்கிய நயத்தை நன்கு வெளிப்படுத்துகிறது.

வெள்ளைக் கமலத்தே வீற்றிருக்கும் கலைமகளைப் பாரதியார் போற்றும் முறை சாலச் சிறந்ததாகும். பாரதியின் "அச்சமில்லை" பாடல் வீர உணர்ச்சியைத் தட்டி எழுப்ப வல்லதாயுள்ளது.

கண்ணன் பாட்டில் கண்ணனைத் தோழனாகவும், தாயாகவும், தந்தையாகவும், சேவகனாகவும், குழந்தையாகவும், காதலனாகவும், காதலியாகவும் பாவித்து, நட்பு, காதல், பாசம், அன்பு ஆகிய உணர்ச்சிகளை அலைமோத விட்டிருக்கின்றார். நடை மெருகும் உணர்ச்சி வேகமும், அமைதியும், கம்பீரமும், குதூகல நிறைவும் செறிந்து காணப்படுகின்றது. நாயக நாயகி பாவத்தோடு துதித்து எழுதிய "கண்ணம்மா என் காதலி" என்ற பாட்டில் பாரதியார் வர்ணிக்கும் "சுட்டும் விழிச் சுடர்தான் கண்ணம்மா" வில் ஒவ்வொரு அணியும் மனதைக் கொள்ளை கொள்கின்றனவாய் அமைந்துள்ள ஒரு தெய்வீகத் திருவுருவை, ஒரு ஜீவ சித்திரத்தை நம் கண் முன் காண்கின்றோம்.

"ஞானரதம்" சொல்லினைத் தேனிற் குழைத்து இழைத்த சிங்கார மண்டபமாக அழகும். இனிமையும் நிறைந்துள்ளது.

பாரதியாரின் தேசியப் பாடல்களில் நாம் காணும் தாய்நாடு உலக மக்கள் அனைவரும் இலட்சியமாய்க் கொள்ளத்தக்க ஒரு கற்பனையுலகமாய் விளங்குகின்றது.

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி யிருந்ததும் இந்நாடே" என்று தொடங்கும் மனோதர்மமும், உணர்ச்சிச் செறிவும் கொண்ட பாடல் இதற்குச் சான்று பகரும்.

"தனியொருவனுக்குணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்ற உலகினுக்கே எச்சரிக்கை புரியும் பாடல் இணையற்ற புதுமையாகும்.

ஆகவே, 'தேமதுரத் தமிழ் ஓசை உலகமெல்லாம் பரவச் செய்ய' தன்னுடைய உயரிய இலட்சியங்கள் பரவும் வகையில் பாரதியார் எழுதிய இலக்கிய நயம் கொண்ட கவிதைகளில் வாழ்வை உய்விக்கும் வேதாந்தமும், தேசிய வெள்ளக் கொந்தளிப்பின் எதிரொலியும், ஒளியையும், நிழலையும் சேர்த்துப் பின்னிய மனோலய சித்திரங்களும் ஒன்றோடொன்று இழைந்து நிற்கின்றதை நாம் காண்கின்றோம். தன்னுடைய பாட்டுத் திறத்தாலே தமிழுக்கும், தமிழ் நாட்டிற்கும், தமிழ் இலக்கியத்திற்கும் பாரதியார் செய்த தொண்டிற்கு நாம் என்றென்றும் கடப்பாடுடையோம்.



TATA-FISON *are happy to be with you this evening*

SOLVE YOUR PROBLEMS

THROUGH

SAVINGS

• • •

FOR

- THE EDUCATION OF YOUR CHILDREN
- THE MARRIAGE OF YOUR DAUGHTER
- BUILDING A HOUSE
- RETIRING IN COMFORT

Cultivate the habit of regular saving by opening a Recurring Deposit account with the Indian Bank Limited. The Bank can also help you in other ways to plan for specific long range objectives. Consult any branch of the bank.

24 LOCAL OFFICES IN MADRAS CITY
121 BRANCHES IN INDIA & ABROAD

G. S. SUNDARAM
Secretary.

The Indian Bank Ltd.

Registered Office :
INDIAN CHAMBER BUILDINGS, MADRAS - 1.

அமரத்வம்!

மஞ்சேரி எஸ். ஈஸ்வரன்

நமக்கெல்லாம் புஸ்தகங்கள் என்றால் தனி ருசி. புஸ்தக ரூபத்திலிருக்கும் மற்றவற்றையும் விரும்புகிறவர்கள் இருக்கிறார்கள். முதலில் சொன்ன வகையிலே, திடுக்கிடச் செய்யும் அனுபவங்களடங்கிய துப்பறியும் நாவல்களில் மூழ்கித் திளைப்பவர்கள் இருக்கிறார்கள்; காமசாஸ்திரத்தை விழுந்து விழுந்து படிப்பவர்கள்; வேதாந்த தத்துவதர்சிகள்; புராண இதிகாசங்களை விரும்புகிறவர்கள்; விஞ்ஞான புஸ்தகங்களை உருப்போடுகிறவர்களுங்கூட உண்டு. இரண்டாவது சொன்ன வகையிலோ ஏலக் கம்பெனி விற்பனை ஜாபிதா, மருந்து 'காட்லாக்' 'டெலிபோன் டயரெக்டரி','டயரி', பஞ்சாங்கம் முதலியன அடங்கும். இந்த புஸ்தக (ரூப)ங்களில் படித்து ரசிப்பதற்கு என்ன இருக்கிறது? இதைத்தான் நானும் விமர்சகர்களைக்கேட்கிறேன்? இருந்தாலும் இந்தப் புஸ்தகங்களை ரசித்து ரசித்துப் படிப்பவர்களும் இருக்கிறார்கள்.

வெகு காலத்துக்கு முன்பே இறந்துபோன சில ஆசிரியர்களைப் பற்றியே இலக்கிய விமர்சகர்கள் தர்க்கம் செய்யக் கிளம்பி விடுகிறார்கள். அந்த ஆசிரியர்கள் சிரஞ்சீவிகளா, அல்லவா என்பது பற்றித்தான் தர்க்கம். இப்படியிருக்க, இன்று உயிரோடிருக்கும் ஆசிரியர்களை அவர்கள் சும்மா விடுவார்களா? இன்றைய ஆசிரியர்களில் யார் யார் அமரத்துவம் அடையப் போகிறார்கள் என்று சோதிடம் கூறுவதிலும் அவர்கள் முனையத்தான் முனைகிறார்கள். ஆனால், பழைய ஆசிரியர்களின் விஷயத்திலேயே 'ஒற்றுமைப்படாத இந்த இலக்கியப் 'பூசாரிகள்' புதிய ஆசிரியர்கள் விஷயத்தில் ஒற்றுமைப்படுவார்கள் என்று நாம் நம்பத் துளியும் இடம் கிடையாது. இன்றைய கலையின்மீது தீர்ப்புக் கூறக்கூடியவன் காலதேவன் தான். ஆனால், அந்தக் கால

ராம்கோ குழு தொழில் ஸ்தாபனங்கள்

இராஜபாளையம் (தென்னிந்தியா)

❖❖❖

ராஜபாளையம் மில்ஸ் லிமிடெட்

இராஜபாளையம்

(நவீன நூற்பு ஆலை)

ஜெயராம் மில்ஸ் லிமிடெட்

இராஜபாளையம்

(பழுப்பு காடா தயாரிப்பாளர்கள்)

தி ராமராஜு
சர்ஜிகல் காட்டன் மில்ஸ் லிமிடெட்

இராஜபாளையம்

(கிருமிநாசன பஞ்சு, துணி தயாரிப்பாளர்கள் & உரிமையாளர்கள்)

சுதர்சனம் ஸ்பின்னிங் மில்ஸ்

கௌரி ஹவுஸ் மெட்டல் ஒர்க்ஸ்

இராஜபாளையம்

(மர ஸ்க்ருக்கள் & இரும்பு ஆணிகள் தயாரிப்பாளர்கள்)

மதராஸ் ஸிமெண்ட்ஸ் லிமிடெட்

இராஜபாளையம்

போர்ட்லண்ட் ஸிமெண்டு உற்பத்தியாளர்கள்,

தொழிற்சாலை :

துலுக்கப்பட்டி. (சாத்தூர் தாலுகா)

இந்திய தொழில் அபிவிருத்திக்கு எமது சேவை

P. A. C. *ராமசாமி ராஜா*

(ஸ்தாபகர்)

தேவனின் காரியத்தை 'நாங்களே செய்து விடுகிறோம்' என்று இந்த இலக்கியப் 'பூசாரிகள்' தங்கள் தலையிலே அட்சதையைப் போட்டுக் கொண்டு கிளம்பி விடுகிறார்கள். ஆனால் பெரும்பாலும் இந்த இலக்கியப் 'பூசாரிகள்' சொல்லும் குறியெல்லாம் தவறியே போகிறது.

இலக்கிய விமர்சனம் என்பது ஒரு ரசமான விளையாட்டேயாகும். இலக்கியத்தினால் எத்தனையோ விதமான பொழுதுபோக்குகளுக்குவழி ஏற்படுகிறது. அப்படிப்பட்ட பல பொழுதுபோக்குகளில், மூளைக்கு உற்சாகம் கொடுக்கக் கூடிய ஒன்று இலக்கிய விமர்சனம். ஆனால் இலக்கிய விமர்சனத்தை அந்தரங்க சுத்தியான திட நிச்சயத்தோடு எழுத வேண்டும். அது அப்படி என்றாவது நம் நாட்டில் எழுதப்பட்டதுண்டா? கவிஞர் பாரதியார் இப்பொழுது உயிர் பெற்றுத் திரும்பி வந்தாரானால், இந்த விஷயத்தை அவரைக் கேட்கலாம். கேட்டால் அவர் சொல்லக்கூடிய கதை மிக்க ரசமாயிருக்கும். இப்பொழுது விமர்சகர்கள் கம்பனின் சிரஞ்சீவித் தத்துவத்தை ஸ்தாபிக்கும் வேலையில் முனைந்திருக்கிறார்கள். நல்ல வேளை! கம்பன் இறந்து பல நூறு வருஷங்கள் ஆகி விட்டன. விமர்சகர்கள் கையில் இலக்கியம் படும் பாடு இது.

புஸ்தக ரூபகத்திலிருக்கும் மற்றொரு வகையைப் பற்றிப் பார்ப்போம்.

எனக்குத் தெரிந்தவர் ஒருவர் இருக்கிறார். அவருக்கு இரயில்வே கால அட்டவணை என்றால் தேவ விசுவாசம், முட்டாள்தனமான பக்தி என்று வேண்டுமானால் கூடச் சொல்லிக் கொள்ளுங்கள். அதை அவர் பாராயணம் செய்து உருப் போடுவது போல, புராணங்களைக் கையில் விரித்த மகாப்பெரிய பக்தர்கள் கூடச் செய்ய மாட்டார்கள்.

கால அட்டவணை கையிலேறியதும் இவரும் ஒரு கவியாகி விடுவார். ஊருக்குள் வரும், வெளியே போகும் ரெயில்களின் தூரத்துக்குத் தகுந்தாற்போல் இவருடைய கவிதா சக்தி இதயவீணையை இசை மீட்டிவிடும். வெகு தூரம் போகும் ரெயிலா, நீண்ட கவிதைப் பிரவாகம் ஊற்றெடுக்கும். பக்கத்து ஊருக்குப் போகும் ரெயிலா, சீட்டுக் கவிதான் துள்ளிக் குதிக்கும்.

ரெயில் ஊருக்குள் வருவதையும், கிளம்பிப் போவதையும் குறிக்கும் கால அட்டவணையின் ஒவ்வொரு மணி, நிமிஷமும் முக்கியமானவை. அவை நண்பரின் தேக

நரம்புகளை இசைத்து, இசை அலைகளை அவரது உள்ளத்தில் எழுப்பி விடுகின்றன. இந்த ஸ்டேஷனில் 4-17 க்கு வந்த ரெயில் நண்பரின் காதல் மனைவியை அவரிடம் கொணர்ந்து சேர்த்தது. 11-21க்குப் புறப்பட்ட வண்டி இவருடைய ஆப்த நண்பரை இவரிடமிருந்து பிரித்து உலகின் மறுகோடிக்கு இழுத்துச் சென்றது. இத்தியாதி, இத்தியாதி ஆஹா! ரெயில்வே கால அட்டவணையின் பெருமைதான் என்னே! பிரிவினையையும், சேர்த்தியையும் அது எப்படிக் காட்டுகிறது? உண்மையாகச் சொல்லப் போனால் மரணம், ஜனனம், வேலை, ஓய்வு, சுகம், துக்கம் இவையாவுமே காலத்தின் விளைவுகளல்லவா? ரெயில்வே கால அட்டவணை புத்தகத்தின் நீண்ட பத்திகளில் உள்ள மணி, நிமிஷங்கள் எத்தனை பேருக்கு சந்தோஷத்தைத் தந்திருக்கின்றன. எத்தனை பேருக்குத் துக்கத்தையும் தந்திருக்கின்றன! அந்தப் பத்திகள் தமக்கென்றே ஒரு தனிப் பாஷையும், பேச்சும் கொண்டுள்ளன.

'புஸ்தகங்கள்' என்ற பெயரில் எத்தனையோ குப்பை கூளங்கள் இந்த நாளில் வெளியாகின்றன. விமர்சகர்களும் ஜனங்களும் அவற்றை புஸ்தகங்கள் என்றே மதிக்கிறார்கள். இப்படிப்பட்ட காலத்தில் ரெயில்வே கால அட்டவணைதான் ஒப்பற்ற, அமரத்துவம் பெறத்தக்க இலக்கியப் பொக்கிஷம் என்று இந்த நண்பர் சொல்கிறார். இதைப் புஸ்தகக் கம்பெனிக்காரர்கள் ஒப்புக் கொள்வார்களா? இதற்கு இலக்கியப் 'பூசாரி'களின் விமரிசனம் என்னவோ !!

பெண்மை ஒளி

காமவெறிக் கடல்கடந்து காதற்கரை நண்ணிக்
காணாத நெறிகாணக் கண்அளித்த கண்ணே
சேமமுற ஒருத்தியுடன் சிலஆண்டு வாழ்ந்து
சேயடைய அன்புபெறச் செம்மைபுரி அறமே
தேமொழியர் ஒளியினிலே திகழ்தாய்மை நுட்பம்
சிந்தையினில் படியவைத்துச் சிக்கறுத்த பதியே
காமமெனப் பெண்ணுலகைக் கருதாத கல்வி
காசினியில் பெருகிவரக் கடவுளருள் செய்யே.

— திரு. வி. க.



DALMIA CEMENT (BHARAT) LIMITED
DALMIAPURAM (TIRUCHIRAPALLI)

With the best Compliments of

Interads,

4/5 B, ASAF ALI ROAD,
NEW DELHI.

Grams : INTERADS

Phone No. 226482

பரதன் ஏந்திய பாதுகை

A. V. குப்புஸ்வாமி

'அவலம் ஈது' என எழுதியதோர் படிவமே போன்ற மேனியுடன், சித்திரகூடத்திற்குக் கால் கடுக நடந்து வந்த பரதனைக் கண்ட இராமபிரான், முன்சென்று தம்பியைத் தழுவிக் கொள்ளுகின்றான். இராகவன் தன் அழுகணீர் அருவி, தம்பியின் சடைமுடியை நனைத்துக் கீழ் வழிந்தோடுகின்றது. தன் அருமைத் தந்தை விண்ணகம் எய்தினர் என்ற துக்கச் செய்தியை அப்போதே அறிகின்றான் தாசரதியும். பிதாவின் பிரிவு கேட்டுச் சுழலும் கறங்கு என மனம் துவள்கின்றான் ரகுநந்தனன். "நந்தாவிளக்கு அனைய நாயகனே", இனி, வாய்மைக்கு மற்று யார் உளரே, எனப் புலம்புகின்றான். இடி விழுந்த கருநாகமென கலங்கி வீழ்ந்த இராமபத்திரனை, வசிட்டனும், சுமந்திரனும் தேற்றி மற்றும் புனலாட்டுவித்துச் செய்ய வேண்டிய நீர்க்கடன்களைச் செய்து வைக்கின்றனர்.

மறுநாட் காலை, அயோத்தியினின்றும் சித்திரகூடம் வந்துள்ள அனைவரும், பர்ணசாலையின் முன்பு துக்கக் கடலென அமர்ந்துள்ளனர். எல்லோருடைய மனமும் மத்தியிலே நிற்கும் சக்ரவர்த்தித் திருமகனிடம் லயித்து நிற்கின்றன. நிலவிய நிச்சப்தத்தைக் குலைக்க வசிட்ட முனிவருக்கும் துணிவு பிறக்கவில்லை. பரதன் கண்களும் அண்ணன் திருவடிகளிலே பதிந்து கிடக்கின்றன. காலம் தாழ்வது கருத்தில் ஊன்றவே, பச்சைமாமலையின் தாழ்வரையை நோக்கிக் கார்முகில் செல்லும் காட்சியை நினைவூட்டும் வகையில், கோதண்டம் கைபிடித்து நிற்கும் காகுத்தன் முன் மண்டியிட்டு அமர்ந்து, இராமபத்திரனது இரு தாள்களையும் கைகளால் பற்றிக்கொண்டு, தழு தழுத்த மொழிகளில் பகர்கின்றான் பரதன் :—

உந்தை தீமையும்,
உலகு உறுதநோய்
தந்த தீவினைத்
தாய் செய் தீமையும்

எந்தை! நீங்க, மீண்(டு)
அரசு செய் கென
சிந்தை யாவதும்
தெரியக் கூறினன்,

அதற்குப் பதில் இராமன் கூறுவது என்ன?

"உந்தை சொல் மரபினால் உடைத் தரணி நின்னது; சக்ரவர்த்தி அயோத்தியின் அரியாசனத்தை உனக்கு நல்கினார். ஆதலின் நீ அரசாள்வதே ஒழுங்கு," என்கிறான் இராகவன்.

ஆனால் பரதன் அதற்குக் கூறும் சமாதானம் ஒருபடி மேலே செல்கிறது.

... ..."பார் என்னது
ஆகில், யான் இன்று தந்தனென் மன்ன! போந்து நீ
மகுடம் சூடு," என!

"ஏழிரண்டாண்டுகள் தான் வனவாசம் செய்து முடிக்காவிட்டால் தந்தையின் வாய்மைக்குப் பழுது வரும். தந்தைக்குத் தான் அளித்த உறுதிக்கும் குறைவு ஏற்படும்," ஆகவே நாடு திரும்புதல் சரியன்று என்று தருமநெறியைப் பகர்கின்றான் திருமகள்கேள்வன். அதுபோது தேவர்கள் விசும்பில் தோன்றினர்.

"தாதை சொல்புரக்கும் கடமையுள்ளான் இராமன்; ஆகலின் ஆத்த ஆண்டு ஏழினொடு ஏழும் அங்கிலம் காத்தல் உன் கடன்," என்று அந்தரத்தினின்றும் அமரர் மொழிந்தனர். அதைச் செவிமடுத்தான் பரதன். "நீ என் ஆணையை மறுக்கலாமோ, சொன்னது செய்தி," என்று தமையனும் ஏவலிடுகின்றான். தேவரும் பணியிடுகின்றார்கள். நானோ, அயோத்தியினின்றும் இங்கு பயணமானபோது, "தமையன் திரும்பினால் அன்றித் தலைநகருக்குள் திரும்பவும் நுழைய மாட்டேன், என்று விரதம் பூண்டு புறப்பட்டிருக்கிறேன். இந்தத் தரும சங்கடமான நிலையில் என்ன செய்வேன்", என்று பரதாழ்வான் ஏங்குகின்றான். தாய் உரைகொண்டு தாதை உதவிய தரணி தன்னைத் தீவினை என்ன நீத்தபோது தன் மரபோர் புகழெல்லாம் தன்புகழ் ஆக்கிக் கொண்ட தருமவீரன் அல்லவா அவன்?

திரும்பவும் மௌனம் நிலவுகின்றது. பரதன் மனம் என்னென்னவோ எண்ணமிடுகிறது. இருதலைக் கொள்ளியினின்றும் தப்பப் பதைக்கும் எறும்பு போலத் திகைக்கின்றான் பரதன். பதினான்கு ஆண்டுகளேயானாலும், கோசலத்தை ஆள நான் ஒப்புக்கொள்வது என் விரதத்திற்கு இழுக்கன்றோ? அரசு வேண்டாம் என்ற எனக்கு இந்த ஏற்பாடு இளவரசு தருவதுபோல் அல்லவோ முடிகின்றது! இந்தக் கட்டினுக்குள் பிணிபட என் மனம் எங்ஙனம் ஒப்பும்? இளவரசுக்குரியவன் இலக்ஷ்மணனேயன்றோ?

என்னினும் அவன் ஒருநாள் சிறியனே என்ருலும், அவனே இரண்டாம் பட்ட மகிஷியின் குமாரன், மகவு அளிக்கும் வேள்வியில் தோன்றிய தூய நற்சுதையைக் கோசலைக்கு முதலில் பகிர்ந்து அளித்த மன்னர் மன்னவன், அடுத்து அதை அளித்தது சுமித்திரையின் கரத்தில் அல்லவா? (வால்மீகம் காண்க.) ஆகவே பதினான்காண்டுகள் இராமபிரானின் பிரதிநிதியாக அரசு நடத்துவதும் இந்த இளையபெருமாளின் பிறப்புரிமை. இவனே கோசல தேசத்தின் இன்றைய இளவரசு. ஆயின், இவனோ, இன்று அண்ணன், அண்ணி இவர்களின் வன வாழ்க்கையில் தோன்றக்கூடிய துன்பங்களைத் துடைக்கக் கங்கணம் பூண்டு உடன் வந்துள்ளான். ஆகவே, இலக்குவனை விளித்து "நீயே சென்று பதினான்காண்டுகள் நாடு காப்பாய், என்று எப்படிக் கூறுவேன் யான்? மற்றும் இவனிடத்தை அடவியில் நான் ஏற்கலாம் என்ருலும் இலக்குவன் திறம் எனக்குண்டோ?" என்றெல்லாம் எண்ணமிட்டுத் திகைப்புத் தோன்றக் காணப்பட்டான் பரதன். அவன் கண்கள் இதற்கு ஒரு வழி தேடுவது போல் வட்டமிட்டன. அப்போது இராகவன் சமுகத்திலே அடுக்கி வைக்கப்பட்டிருந்த அபிஷேக சாமக்கிரியைகள் மீது பரதன் பார்வை விழுந்தது. அண்ணனுக்குச் சித்திரகூடத்திலேயே பட்டாபிஷேகம் நடத்தி விடுவது என்ற ஏற்பாட்டுடன், முடிசூட்டு விழாவிற்குத் தந்தை முன்பு சேகரித்துத் தயாராக

சீக்கிரமாக தீங்கில்லாமல் நிவாரணம்

மூலநோய்

ரத்தக்குழாய் வீக்கம், ரத்தக்கசிவு, வெடிப்புகளினின்றும் நிவாரணம்.

ஹெடன்ஸா சீக்கிரமாக ரத்தக்குழாய்களை சுருங்கச் செய்து, ரத்தக்கசிவை நிறுத்தி, வலி, மற்றும் நமைச்சலினின்றும் உடனடி நிவாரணம் தருகிறது. எல்லாம் ரண சிகிச்சை ஏதுமில்லாமலேயே! இந்த பிரபல ஜெர்மன் ஔஷத மெழுகு நீடித்த நோயாக இருப்பினும் துரிதமாகப் பயனளிக்கிறது.
ஹெடன்ஸா கறையுண்டாக்காது. உபயோகிப்பதும் சுலபம். இதில் உணர்வழிக்கும் மருந்து ஏதுமில்லை. உங்கள் உபத்திரவம் மூலநோய் தான் என்ருல் அதற்கு ஒரே விடை ஹெடன்ஸாதான். இன்றே ஹெடன்ஸா உபயோகித்துப் பாருங்கள். குழாயுடன் (கான்னுலா) கிடைக்கும். இப்பொழுது இந்தியாவில் தயாரிக்கப்படுகிறது.

இந்தச் சின்னம் உள்ளதே அசல தயாரிப்பு.

ஹெடன்ஸா

DZ-1362 TM.

வைத்திருந்த எல்லாச் சாமான்களையும் கூடவே கொணர்ந்திருந்தான் பரதன். திருமஞ்சனத்தின்போது அணிவதற்கென பாதுகையும் அப்பொருள்களிலே ஒன்று. தங்கக் குமிழ் கட்டப்பட்டு மஞ்சள் ஒளி விசும் அம்மிதியடிகளின் மீது பரதன் பார்வை விழுந்த அந்தக் கணமே அவனது மனதில் ஓர் எண்ணமும் உதயமாயிற்று. அப்பாதுகைகளைப் பரதன் பக்தியுடன் எடுத்தான். ''இலக்ஷ்மணா நீயே பாக்கியசாலி'' என மனதில் போற்றினன். அவைகளை இராமச்சந்திரன் சந்நிதியிலே பணிவுடன் வைத்தான்.

''மன்ன! நும்பணி இதுவேல் செம்மையின் திருவடித்தலம் தந்தீக.'' என்று கண்ணீர் பெருக இறைஞ்சி நின்றான்.

பரதன் மனத்தே ஊடுருவிய எண்ண வெள்ளத்தை உன்னி உணர்ந்தான் அண்ணலும் ஒரு கணத்தே. சரியெனத் தலையசைத்து, ''எம்மையும் தருவன''வான அந்தப் பாதுகைகள் இரண்டினையும் இராகவன் பரதன் கைத்தலத்து நல்கவும் விண்நின்ற இமையவர், ''நிலக்கொடி இனித்துயர் நீத்தனள்'', என்று கூறிக் களித்தனர். ஏன்? இராமன் அயோத்தி திரும்பியிருந்தால் இராவணன் முடிவு ஏற்படாதல்லவா?

''சென்றால் குடையாம்; இருந்தால் சிங்காதனமாம்
நின்றால் மரவடியாம்; நீள்கடலுள்—என்றும்
புணையாம் மணிவிளக்காம், பூம்பட்டாம், புல்கும்
அணையாம் திருமாற் கரவு.''

இப்பாசுரத்திலே பொய்கை ஆழ்வார், அதிசேடன், மகாவிஷ்ணுவுக்குப் பாதுகைகளாகவும் பணி செய்வதை அழகாகச் சித்திரிக்கின்றார். பாற்கடலின் மேல் அறிதுயில் கொள, விரிகொள் பாயலாகப் பணியாற்றும் அதிசேடனே இளையபெருமாள் என்பதை நன்குணர்ந்த பரதனும், இலக்ஷ்மணனைப் பிரதிநிதியாட்சி ஏற்று அயோத்தியை ஆளவேண்டும் என்று விண்ணப்பித்துக் கொள்ள நினைத்தபோது அந்த எண்ணத்தைப் பூர்த்தி செய்து வைக்க ஸ்ரீராம பாதுகைகள் கைகொடுத்துக் காத்தன.

''நந்தியம் பதியிடை நாதன் பாதுகம்
செந்தனிக் கோல் முறை செலுத்த சிந்தையான்
இந்தியங்களை அவித்து இருத்தல் மேயினன்
அந்தியும் பகலும் நீர் அருத கண்ணினன்''

தெய்வநாயகன் இராமபிரான் அளித்த பாதுகங்களைத் தலைமீது ஏந்தி, கங்கைக் கடந்து அயோத்திக்கு வெளிப்புறத்துள்ள நந்திக் கிராமத்திலே அவைகளை அரியணை மீது ஏற்றி, தானும் தவத்திலே நின்று, இலக்ஷ்மணாழ்வாரின் உருவமான அப்பாதுகைகளின் பணியாளனாகப் பரதன் பதினான்கு ஆண்டுகள் நாட்டின் பரிபாலனத்தை நடத்தினன். பாதுகா ராஜ்யம் ஓர் உலக அதிசயம்.

PREVENT CHAPPING OF

PRETTY FACE!

LOVELY HAND!!

★

USE

ALMOND BENZOIN

GLYCERINE

HANDLOTION

★

BLISS & COTTON

DISPENSING & FAMILY CHEMISTS

12-E, CONNAUGHT PLACE,

NEW DELHI

PHONE 42170

With Best Compliments

of

GOLDEN TOBACCO COMPANY PRIVATE LTD.

TOBACCO HOUSE :: VILE PARLE

BOMBAY - 56.

"INDIA'S LARGEST NATIONAL ENTERPRISE OF ITS KIND"

திருமறம்

பேராசிரியர், வித்துவான்
பாலூர் கண்ணப்ப முதலியார், M.A., B. O. L.

சீடும் எடுப்பும் அற்ற நந்தம் இன்றமிழ் சிறந்து விளங்குதற்குப் பற்பல காரணங்கள் உண்டு. அவற்றுள் ஒன்று, இஃது ஒப்புயர்வற்ற பொருள் இலக்கணம் என்ற ஓர் அமைப்பினைப் பெற்று இலங்குவதாகும். இதனை உட் கொண்டே பரஞ்சோதியார் "இலக்கண வரம்பிலா மொழி போல் எண்ணிடப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ" என அறைகூவி அறிவிப்பார் ஆயினர்.

இத்தகைய பொருள் இலக்கணம், அகப்பொருள், புறப் பொருள் என இருபாலாகி இயங்கும். ஒவ்வொரு பகுதி யிலும் பல துறைகள் உள. மறம் என்னும் துறை புறப் பொருளைச் சார்ந்தாகும். இம்மறத்துறை பல வகையாகக் கூறப்பெறும். அவை எருமைமறம், தானைமறம், தேர் மறம், யானைமறம், குதிரைமறம் என்பன. எருமைமறம் இன்னது என்று இலக்கணம் வகுக்க வந்த இடத்தில் புறப் பொருள் வெண்பாமாலை,

> வெயர்பொடிப்பச் சினம்கடைஇப்
> பெயர்படைக்குப் பின்னின்றன்று

என்று கூறி விளக்கும் நிலையில்,

> "கடுங்கண் மறவன் கனல்விழியாச் சீறி
> நெடுங்கைப் பிணத்திடை நின்ருன் – நடுங்கமருள்
> ஆள்வெள்ளம் போகவும் போகான்கை வேலூன்றி
> வாள்வெள்ளம் தன்மேல் வர"

என்று எடுத்துக் காட்டையும் இயம்பிச் செல்கிறது. இதில் வீரனது மறம் பேசப்படுதல் காண்க. தானை மறத்தைப் பற்றிப் பேசுகையில்,

தாம்படைத் தலைக்கொள்ளவும்
ஓம்படுத்த உயர்புகூறின்று

என்று காட்டி இவ்விலக்கணத்திற்கு இலக்கியமாகக்

கழுதார் பறந்தலைக் கண்ணுற்றுத் தம்முன்
இழுதார்வேல் தானை இகலில் – பழுதாம்
செயிர்காவல் பூண்டொழுகும் செங்கோலார் செல்வம்
உயிர்காவல் என்னும் உரை.

என்று கூறி, இதில் மறத்து அறம் காட்டப்பட்டதைக் காண்க.

தேர்மறமாவது,

'முறிமலர்த்தார் வயவேந்தன்
செறிமணித்தேர்ச் சிறப்புரைத்தன்று'

என்பது. அதாவது தேரின் சிறப்பை உணர்த்துவது. இதனை,

"செருமலி வெங்களத்துச் செங்குருதி வெள்ளம்
அருமுரண் ஆழி தொடர – வருமரோ
கட்டார் கமழ்தெரியல் காவலன் காமர்தேர்
ஒட்டார் புறத்தின்மேல் ஊர்ந்து"

என்ற பாட்டில் அறியவும். யானைமறம் இன்னது என்பது,

'எழும்அரவக் கடல்தானையான்
மழகளிற்றின் மறங்கிளந்தன்று'

என்ற கொளுவால் கொளக் கிடைக்கிறது, இது யானையின் வீரத்தை உணர்த்துவது, யானையின் வீரம்,

அடக்கரும்தானை அலங்குதார் மன்னர்
விடக்கும் உயிரும் மிசையக் – கடல்படையுள்
பேயும் எருவையும் கூற்றும்தன் பின்தொடரக்
காயும் கழலான் களிறு'

என்று சிறப்பிக்கப்படுதலை ஓர்க.

குதிரைமறம் இன்னது என்பதையும் பார்ப்போம். இஃது இன்னது என்பது,

எறிபடையான் இகல்அமருள்
செறிபடைமான் திறம்கிளந்தன்று

என்ற அடிகளால் அறியலாம். அதாவது குதிரையின் வீரம் பற்றிப்பேசப்படுவது. இலக்கியம்கொண்டு காணவேண்டின்,

murphy radio

Distrioutors for Northern India:

LAKHANPAL PRIVATE LIMITED

Asaf Ali Road, (Near Delhi Gate)

NEW DELHI.

WHATEVER
THE SEASON
YOU WILL BE
COMFORTABLE...

ACCAIRE
AIR-CONDITIONERS
ACCOOLER
WATER COOLERS

DISTRIBUTORS:

Also available for Embassies:

FRIGIDAIRE
REFRIGERATORS
and
AIR-CONDITIONERS

KOOLAIRE
PRIVATE LTD.
44 Janpath, New Delhi.
Phone: 43923

குந்தம் கொடுவில் குறுதிவேல் கூடாதார்
வந்த வகைஅறியா வாள்அமருள் – வெந்திறல்
ஆர்கழல் மன்னன் அலங்குளைமா வெஞ்சிலை
வார்கணையின் முந்தி வரும்'

என்ற பாடலைப் பார்க்கவும். இந்த அளவில் மட்டும் குதிரைமறம் கூறப்பட்டிலது. மேலும், அக்குதிரையின் வீரத்தைச் சிறப்பிக்கும்போது, குதிரை மதிலில்பாயும் தனிச் சிறப்பையும் இப்பெயர் தந்தே நம் நூல்கள் குறிப்பிடு கின்றன.

'ஏமாண்ட நெடும்புரிசை
வாம்மானது வகையுரைத்தன்று'

என்று கூறுதல் அறிக. இதற்குரிய இலக்கியமாகத்

தாங்கல்மின் தாங்கல்மின் தானை விறல்மறவீர்
ஓங்கல் மதிலுள் ஒருதனிமா – ஞாங்கர்
மயிர்அணியப் பொங்கி மழைபோன்று மாற்றார்
உயிர்உணிய ஓடி வரும்

என்னும் பாடல் திகழ்தல் காண்க.

தொல்காப்பியர் இம்மறம் பற்றிய குறிப்பினை மூன்றின் மேல் ஏற்றி,

'தானை யானை, குதிரை என்ற
நோனார் உட்கும் மூவகை நிலையும்'

என்று கூறிப் போந்தனர்.

மேலும்,தொல்காப்பியம் பாசிமறம் என்னும் ஒரு துறையையும் கூறுகிறது. அது, "அதான்று ஊர்ச் செருவீழ்ந்த மற்றதன் மறனும்" என்று புறத்திணை இயலில் பதினேராம் நூற்பாலில் வருதல்காண்க. இவ்வடிக்குப் பொருள்விளக்கம் செய்த உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர். "அம் மதில்புறத்தன்றி, ஊரகத்துப் போரை விரும்பிய அப்பாசி மறம்" என்று எழுதினார். மேலும், விளக்குங்கால் "பாசி என்றார், நீரில் பாசிபோல் இருவரும் ஒதுங்கியும், தூர்ந்தும் பொருதலின்!" என்று விளக்கினார். இதற்கு எடுத்துக் காட்டாக,

மறநாட்டும் தங்கணவர் மைந்தறியும் மாதர்
பிறநாட்டுப் பெண்டிர்க்கு நொந்தார் – எறிதொறும்போய்
நீர்ச்செறி பாசிபோல் நீங்காது தம்கோமான்
ஊர்ச்செரு உற்றாரைக் கண்டு

என்ற பாடலைக் காட்டினர். இதனை மறனுடைப் பாசி என்று வெண்பாமாலை கூறி இதற்கு விளக்கம் தருங்கால்,

மறப்படை மறவேந்தர்
துறக்கத்துச் செலவுரைத்தன்று

என்று கூறி, உதாரணமாக,

பாயினர் மாயும் வகையால் பலகாப்பு
மேயினர் ஏய இகல்மறவர் – ஆயினர்
ஒன்றி யவர்அற ஊர்ப்புலத்துத் தார்தாங்கி
வென்றி அமரர் விருந்து

என்ற பாடலைக் காட்டுகிறது. அதாவது இன மன்னர் வீர சுவர்க்கத்துப் போன போக்கினைச் சொல்வது இத்துறை என்பது. இதுவே, இளம்பூரணர் கருத்து என்பது பாசிமற னுக்கு அவர் மேலே காட்டிய வெண்பாவையே எடுத்துக் காட்டியதால் அறிந்து கொள்ளலாம்.

மறம் என்ற சொல்லாலேயே ஓர் உறுப்புக் கலம்பகம் என்னும் பெயரிய நூற்களில் பேசப் பெறும். அங்கு மறம் எனப்படுவது மறக்குடியில் பிறந்த பெண் ஒருத்தியை மணம் செய்துகொள்ள எண்ணிய அரசனிடம் இருந்துவந்த தூத னைப் பார்த்து, அப்பெண்ணின் தந்தையாகிய ஒரு மறவன் கூறுவது என்பதாகும். இப்பொருட்டாதலை எல்லாக் கலம்பக நூற்களிலும் காணலாம். இதற்கு எடுத்துக்காட் டாகக் கீழ்வரும் பாடல்களைக் காண்க.

விற்ற தார்கலை பாதியோடுவ னத்தி லேஅழ விட்டதார்
வெஞ்சி றைப்புக விட்டதார் துகில் உரிய விட்டுவி ழித்ததார்
உற்ற தாரமும் வேண்டும் என்றினி மன்னர் பெண்கொள
ஒண்ணுமோ
உமிய டாமணம் என்ற வாய்கிழித் தோலை காற்றில் உருட்டடா
வெற்றி ஆகிய முத்தி தந்தருள் வேங்கை மாநகர் வேடர்யாம்
விமல ரானவர் எமைஅ டுத்தினி தெங்கள் மிச்சில்மி சைந்தபின்
பெற்ற வேலர்த மக்கு யாம்ஒரு பெண்வ ளர்ப்பினில் ஈந்தனம்
பெற்ற பிள்ளை கொடுப்ப ரோஇதென் பேய்பி டித்திடு தூதனே

என்பது வெங்கைக் கலம்பகம்.

வையம்முழு தொருங்கீன்ற விடப்பாகர் ஆனந்த வனத்தில் வாழும்
வெய்யதறு கண்மறவர் குலக்கொடியை வேட்டரசன் விடுத்ததூதா
கையில்அவன் திருமுகமோ காட்டுஇருகண் தொட்டுமுட்டைக்
சுதையால் தாக்கிச்
செய்யகொடி றுடைத்துஅகல்வாய் கிழித்துஅரிவோம்
நாசியொடு செவியும் தானே

என்பது காசிக் கலம்பகம்.

பேச வந்த தூத செல்ல ரித்த ஓலை செல்லுமோ
பெருவ ரங்கள் அருள்அ ரங்கர் பின்னை கேள்வர் தாளிலே
பாசம் வைத்த மறவர் பெண்ணை நேசம் வைத்து முன்னமே
பட்ட மன்னர் பட்ட தெங்கள் பதிபு குந்து பாரடா
வாச லுக்கி டும்படல்க வித்து வந்த கவிகை மா
மகுட கோடி தினைஅ ளக்க வைத்த காலும் நாழியும்
வீசு சாம ரம்கு டில்தொ டுத்த கற்றை சுற்றிலும்
வேலியிட்ட தவாகள் இட்ட வில்லும் வாளும் வேலுமே

என்பது அரங்கக் கலம்பகம்.

இவ்வாறு கலம்பகங்களில் வரும் மறம் என்னும் உறுப்பைக் காண்கிறபோது, மறம் என்னும் பொருளுக்கே உரிய மறவரது அஞ்சாமையினையும் ஆண்மையினையும் நன்கு உணர்கின்றோம்.

இதுவரை மறம் என்பது இன்னது என்பதையும், அஃது எவ்வெவ்வாறு இலக்கியங்களில் எடுத்துப் பேசப்பட்டது என்பதையும் அறிந்தோம். இவ்வாறு தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பா மாலை ஆகிய இவ்விரு இலக்கண நூல்களை ஆய்ந்த வழி, பல்வேறு மறத் துறைகளைக் கண்டோமே அன்றித் திருமறம் என்னும் துறையைப் பற்றித் தெரிந்தோம் இல்லை. ஆகவே, திருமறம் என்பது ஒரு தனிச்சிறப்புடையதாதலை அறிதல்வேண்டும்.

இத்துறை புதிதாக இரு பெரும் பேரறிஞர் பெருமக்களால் இயம்பப்பட்டதாகும். இதனை எடுத்து இயம்பியவர்கள் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனாரும், "கல்லாடம் படித்தவர்களோடு மல்லாடாதே" என்ற பழமொழிக்குக் காரணரான கல்லாடம் என்னும் நூலைச் செய்த கல்லாடனாரும் ஆவார். இவ்விருவர்களும் திருமறம் என்னும் துறையினைச் செயற்கருஞ் செயல்புரிந்த ஒரு பெருமகனார் வரலாற்றோடு இணைத்து இத்துறையினைப் புகுத்தியுள்ளனர். அப்பெருமகனார் யாவர்? அவரே கண்ணப்ப நாயனார். அப்பெருமகனார் மறம் ஏனைய மறங்களைப் போன்றதன்று. அஃது ஒப்புயர்வற்ற மறம். அதனால்தான் நுண்மாண் நுழைபுலப் புலவர்களாம் நக்கீரரும் கல்லாடரும், திருமறம் என அவரது அரும் பெரும் வீரச் செயலைக் குறிப்பாராயினர். திருக்கோவை என்றால் எங்ஙனம் ஏனைய கோவைகளை உணர்த்தாமல், திருக்கோவையார் ஒன்றையே உணர்த்துமோ, அதுபோலத் திருமறம் என்றதும் திண்ணனாராம் கண்ணப்பரது திருமறத்தையே உணர்த்தும். ஆகவே,

தான் நக்கீரனாரும் கல்லாடனாரும், திருக்கண்ணப்ப தேவர் திருமறம் என்றே தலைப்புக் கொடுத்து அவரது திருமறத்தை விளக்கத் தனித்தனி நூலே இயற்றிவிட்டனர். திரு என்பதற்குப் பொருள் கூறவந்த பேராசிரியர், "கண்டாரால் விரும்பப் படும் தன்மை" என்று எழுதிப் போந்தார். கண்ணப்பரும் கண்டாரால் விரும்பப்படுபவர் ஆதலின், திருக்கண்ணப்ப தேவர் என்றும், அவரது மறச்செயலும்தி ருமறம் என்றும் நன்கு நுணிகி ஆய்ந்து இருபெரும் செம்மை சான்ற புலவர்கள் ஒருமிக்க இங்ஙனம் தாம்பாடிய நூலுக்கு இத் தலைப்பினைத் தந்தனர். இங்கு இவ்விருவரும் பாடிய திருக் கண்ணப்ப தேவர் திருமறம் என்னும் நூல்களுள் கல்லாடனார் பாடிய திருக்கண்ணப்ப தேவர் திருமறத்தைப் பற்றிச் சிறிது ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கம் ஆகும். இந்நூல் முப்பத்தெட்டு அடிகளே உடையது. நக்கீரரது திருமறம் நூற்றைம்பத்தேழு அடிகளுடன், ஒரு வெண்பாவையும்கொண்டு திகழ்வது.

கல்லாடனார் திருமறம் இணைக்குறள் ஆசிரியப்பாவால் ஆனது. இணைக்குறள் ஆசிரியப்பா என்பது முதல் அடியும் இறுதி அடியும் நான்கு நான்கு சீர்களால் அமைந்து இடையே இருசீர் அடிகளும், முச்சீர் அடிகளும் நாற்சீர் அடிகளும் கொண்டு வருவது, யாப்பருங்கலக்காரிகை "காமருசீர் இடைபல குன்றின் இணைக்குறள்" என இதற்கு இலக்கணம் கூறியதைக் காண்க. இவ்விலக்கண அமைப்பு, கல்லாடர் பாடிய திருமறம் நூலில் இருக்கக் காணலாம்.

இனித் திருக்கண்ணப்பரது திருமறம் எங்ஙனம் எடுத்து இயம்பப்படுகிறது என்பதைக் காண்பாம். கல்லாடனார் தம் பாட்டுடைத் தலைவரது செயலைத் திருமறம் என்றாரேனும் ஈரமும் உடையார் என்பதை நாம் நன்கு உணரத் தாம், நூலைத் தொடங்கும் போதே "பரிவின் தன்மை உருவு கொண்டனையவன்" என்கிறார். என்னே முரணுடைக் கருத்து! ஆனால், இது முரணுடைக் கருத்தன்று; அறனுடைக் கருத்தே. வீரமுள்ள இடத்தில்தான் ஈரமும் நன்கு துலங்கும். இது குறித்தே திருவள்ளுவப் பெருந்தகையார்

'அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை'

என்றனர்.

'Help us to help you'

"Cleanliness is next to Godliness" according to an old adage. Clean surroundings radiate joy. More than that they help in controlling diseases. On Railway Platforms, in Waiting Rooms and in Carriages, etc., where people gather, it is of paramount importance to maintain proper hygienic conditions, to preserve the health of the passengers. You can help the Railways in this fight against diseases by:

EXTENDING YOUR CO-OPERATION FOR KEEPING THE SURROUNDINGS CLEAN AND BY AVAILING OF THE SERVICES OF SANITARY STAFF PROVIDED AT STATIONS WHENEVER REQUIRED.

NORTHERN RAILWAY

With the Best Compliments of

M/s Cardboard Box Manufacturing Co.,

38, COLOOTOLA STREET,

CALCUTTA - 7.

★

CARDBOARD BOX BEST IN THE FIELD
OF PACKAGING

நாம் எங்கே வீரம் உள்ள இடத்தில் ஈரம் இராது எனப் பிறழ உணர்ந்து விடுவோமோ என்ற கவலேயினுல்தான், செந்நாப் போதார் இங்ஙனம் செப்பிச் சென்ருர். இதனை விளக்கிக் காட்டவே தெய்வப் புலவர் சேக்கிழார் பெருமானும்

ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணியலா தொன்றிலார்
ஈரம் அன்பினர் யாதும் குறைவிலர்
வீரம் என்னல் விளம்பும் தகையதோ

என்றனர்.

அடுத்த காட்சியாக ஆசிரியர், அன்பு மறவரது தோற்றப் பொலிவை நம் கண்முன் கட்டவிழைகிருர். வீரர், செருப்பு உடைவாள் அரைக் கச்சு, முதலானவற்றைப் புனைந்த தோற்றத்தினை,

போழ்வார் போர்த்த காழகச் செருப்பினன்
குருதி புலராச் சுரிகை எஃகம்
அரையில் கட்டிய உடைதோல் கச்சையன்
தோல்நெடும் பையில் குறுமயிர் திணித்து
வாரில் வீக்கிய வரிக்கைக் கட்டியன்

என்று சொல்லால் எழுதிக் காட்டியுள்ளனர்.

மார்பகத்தும், நெற்றி மீதும் முடி மீதும் இலங்கினவை எவை என்பதைக் காட்டவந்தபோது,

உழுவைக் கூன் உகிர் கேழல்வெண் மருப்பு
மாறுபடத் தொடுத்த மாலேஉத் தரியன்
நீலப் பீலி நெற்றி சூழ்ந்த
கானக் குஞ்சிக் கவடி புல்லினன்
முடுகு நாறு குடிலே யாக்கையன்

என்று பாடிக் காட்டினர்.

இறைவன் பல்வேறு சமையங்களில் வெற்றி கண்டு வாகை சூடியவன். அவற்றுள் ஒன்று தாருகாவனத்து இருடிகள் விடுத்த வேங்கையினை வென்று வாகை சூடியதாகும். இறைவனைப் போலவே திண்ணனும், காட்டகம் புகுந்து, வேட்டையாடி வாகை சூடியவர். இவரது வேட்டையின் சிறப்பைப் பெரிய புராணத்தும், திருக் காளத்திப் புராணத்தும் பரக்கக் காணலாம். இதனைச்

சுருங்கிய முறையில் "வேங்கை வென்று வாகை சூடிய சங்கரன் தன்னினத் தலைவன்" எனக் கல்லாடர் ஈண்டுக் குறிப்பிட்டுள்ளார்.

திண்ணனார் வில்லில் அம்பினைத் தொடுத்து விலங்கின் மீது எய்யின், அது தவறாது அதனை வீழ்த்துதல் வேண்டும். அது குறித்தே இவர் தேர்ந்த வில்லும் அம்பும் கொண்டு சென்றார் என்பார் "வில்லும் அம்பும் நல்லன தாங்கி" எனப் பாடினார். திண்ணனார் மலைக் காட்டகத்து இயங்கி வேட்டையாடியதை "ஏற்றுக் கல்வளம் காற்றில் இயங்கி" என்ற அடி விளக்குகிறது. இவரது வேகமான இயக்கத்திற்கு இதனினும் ஏற்ற உவமை காண இயலாது. காற்று, காடு முழுதும் பரவியது போலத் திண்ணனாரும் காட்டகம் முழுதும் இயங்கி வேட்டை ஆடியதால் இவ்வுவமை கூறப்பட்டது.

திண்ணனார் திருக்காளத்தி அப்பருக்கு உணவு தயாரித்த விரைவினை ஆசிரியர்

> **கணையில் வீழ்த்துக் கருமா அறுத்துக்,**
> **கோலில் ஏற்றிக் கொழுந்தீக் காய்ச்சி**
> **நாரில் வைத்த நாட்போ னகமும்"**

என்றனர். இதனினும் சில்வகை எழுத்தில் பல்வகைப் பொருளைச் செறித்து இனிது காட்ட இயலுமோ? இவ்வாறு தான் அரும் பெரும் நிகழ்ச்சிகளைச் சுருக்கமாகச் சொல்லி முடிப்பர் பேரறிவுபடைத்த மாபெரும் புலவர்கள். அப்பர் பெருமானார்க்கு அப்பூதியார் ஆட்கள் அறிவித்த முறையினைச் சேக்கிழார் செப்பும்போது,

> **துன்றியநூல் மார்பரும்இத் தொல்பதியார் மனையின்கண்**
> **சென்றனர்இப் பொழுதுஅதுவும் சேய்த்தன்று**
> **நணித்தென்றார்**

என்று பாடி இருப்பதைக் காண்க. "கருமா" என்னும் சொல்லை இடைநிலை விளக்கணியாக அமைத்து, கருமா வீழ்த்தும் என்றும் கருமா அறுத்தும் என்றும் பாடி அணிநலம் அமைத்திருப்பதையும் ஈண்டு உணரவும். இறைவரது பூசனைக்கு வேண்டுவனவற்றையும் கொண்டு வர எண்ணிய திண்ணனார், தம் தலையில் மலர் மாலையினைச் சொருகிக் கொண்டும், குளிப்பாட்டுதற்குரிய நீரைத் தம் வாயில் முகந்துகொண்டும் வந்தார் என்பதைக் கூறும் இடத்து,

> **தன்தலை சொருகிய தண்பள்ளித் தாமமும்**
> **வாய்க்கல சத்து மஞ்சன நீரும்**

என்று கூறியுள்ளார். மலரைத் தலையில் தாங்கி என்னுது "சொருகி" என்றதன் நயம், தம் தலையில் நன்கு பதிய வைத்து வந்தனர் என்பது புலனுதல் காண்க. தாங்கி என்னில் குடலில் வைத்த மலரைத் தாங்கி என்று பொருளாகி விடும் அன்றே!

இங்ஙனம் திண்ணனர் பூசைக்குரியன கொணர்ந்தார். இவர்க்கு முன்பு சிவகோசரியார் இட்ட மலர்களைத் தம் செருப்புக் காலால் நீக்கினர். பிறகு தாம் கொண்டு வந்த வாய் நீரை உமிழ்ந்து, தலை மலர்களை இறைவன் தலையில் சூட்டினர். இதனை "முடியில் பூசை அடியால் நீக்கி" என்று ஆசிரியர் சுருக்கமாகக் கூறினர். இந்த அரியக் காட்சியினை மணிமொழியார்

பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்க்கலசம் ஊன் அமுதம்
விருப்புற்று வேடனர் சேடறிய மெய்குளிர்ந்து

எனத் தம் வாசகத்தில் தீட்டிக் காட்டினர்.

திருஞான சம்பந்தரும், "வாய் கலசமாக வழிபாடு செயும் வேடன்" என்றனர். திருநாவுக்கரசரும் "காப்பதோர் வில்லும் அம்பும், கையதோர் இறைச்சிப் பாரம் தோற் பெரும் செருப்புத் தொட்டுத் தூயவாய்க் கலசம் ஆட்டி" என்றும், "குவப்பெரும் தடக்கை வேடன் கொடும் சிலை இறைச்சிப் பாரம் துவர்ப் பெருஞ் செருப்பால் நீக்கித் தூய வாய்க் கலசம் ஆட்ட" என்றும் நவின்றுள்ளார்.

இத்தகைய பூசை ஐந்து நாட்கள் காளத்தி அப்பருக்கு நடந்துள்ளது. இப்பூசனையின் இயல்பைத் தினமும் கண்ட சிவகோசரியார், மலினங்களை நீக்கித் தமது பூசனையினை விடாது செய்துவந்தனர். இதனல் இவரைக் கல்லாடனர் "நீங்காக் குணத்துக் கோசரி" என்றனர். சிவகோசரியார் என்பது முதற்குறையாகவும், கடைக்குறையாகவும் அமைந்து கோசரி என நின்றது.

சிவகோசரியார்க்கு வேடனர் செய்யும் பூசை அனுசித பூசையாக இருந்தது. அவர் அது குறித்து வருத்தமே உற்றூர். இவ்வருத்தத்தை நீக்கித் திண்ணனரின் அன்பினை அவர்க்கு உணர்த்த இறைவர் எண்ணினர் என்பதை அறிவிக்க ஆசிரியர்

கோசரிக் கன்றவன் கோசம் காட்ட
முக்கண் அப்பனுக் கொருகணில் உதிரம்
தக்கணத் திடை இழிதர

என்று கூறியுள்ளனர், இந்நிலையில் திண்ணனுர் உற்ற நிலையினை ஆசிரியர் "அக்கணம் அழுது விழுந்து தொழுது எழுந்து அரற்றி" என்று பாடிக்காட்டி அறிவிப்பா ராயினர். இதனினும் திண்ணனுர் உற்ற துன்புறு நிலையினை இத்துணைச் சுருங்கிய அளவில் காட்ட இயலுமோ? இதனி னும் சொல்லவும் வேண்டுமோ ?

"இங்ஙனம் திண்ணனுர் செய்ததா மறம்? அதுவும் திருமறமா ?" என்று சிலர் எண்ணலாம். திண்ணனுரது மறத்தினைத் தொடக்கத்தில் ஆசிரியர் முன்பே குறிப்பாகவும் வெளிப்படையாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

> **வேங்கை வென்று வாகை சூடிய**
> **சங்கரன் தன் இணைத் தலைவன்**

என்று குறிப்பாகவும், 'கணையில் வீழ்த்துக் கருமா அறுத்து" என வெளிப்படையாகவும் குறித்துள்ளனர். இவை வெறும் மறச் செயலைக் குறிப்பன. இவை திருமறம் ஆகா. ஆனுல், இறைவரது கண்ணில் குருதி கண்டு அதனை நிறுத்துதற்குச் செய்த செயலே திருமறமாகும், இது திருமறச் செயல் என்பதை ஆசிரியர்

> **புரைமருந் தாற்றப் போதா தென்று**
> **தன்னை மருந்தென்று மலர்க்கண் அப்ப**

என்று கூறியிருத்தலைக் காண்க. இந்த அளவோடு திண்ண ணுரின் திருமறம் நின்றுவிட்டதோ? இல்லை. இறைவர் தமது மற்றொரு கண்ணிலும் செந்நீர் சிந்தக் காட்டினுர். அது கண்டு அஞ்சாத திண்ணனுர் தமது திருமறச் செயலை இனிது நிலைநாட்டச் செய்த செயலை

> **ஒழிந்தது மற்றை ஒண் திரு நயனம்**
> **பொழிந்த கண்ணீர்க் கலுழி பொங்க**
> **அற்ற தென்று மற்றைக் கண்ணையும்**
> **பக்தித் தலையால் அகழ**

என்று அறிவித்துள்ளனர் ஆசிரியர். இத்தகைய செயற் கரும் மறச் செயல் அன்ருே திருமறம் என ஈண்டுக் கூறப் பட்டது. இதனை வியந்தன்ருே "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை" என்றனர் திருவாதவூரர்.

இங்ஙனம் தமது இரண்டாவது கண்ணையும் திண்ணனுர் தோண்ட முயன்றபோது, தரித்திலர் தேவதேவர். அவரை அவ்வாறு செய்யாது தடுத்தனர். அத் தடைச் செயல் எங்ஙனம் நிகழ்ந்தது என்பதை "ஆண்டகை ஒருகையாலும்

Chentex

HANDLOOM FABRICS

in the world market

Recipients of the Govt.
FIRST PRIZE AWARDS
from 1955 to 1960

fine quality
fancy designs
fast colours
fair price



Bed Sheets
Furnishing Fabrics
Towels
Table Covers
Household Linen

Also available at all Co-optex Emporia & Handloom Houses in India & abroad (Aden, Colombo, Kolalampur, Singapore, Bankok)

THE CHENNIMALAI WEAVERS' CO-OPERATIVE SOCIETY LTD.,
CHENNIMALAI S. INDIA

GRAMS: "CHENTEX" PHONE: 32 & 30

CROWN BRAND

Serves the Nation . . .

We make Roof Water Tanks of various capacities, Caution Boards, Alarm Signal Boards, 'Seat Capacity' and 'Coach Number' plates, Name plates, Water Troughs, Inspection Covers, Reflectors Washers, Lotah Shelf, Lavatory Chutes Louvres, Armature Fans, Portable Ladders and other furnishing components, Counter Shunk Washers, Eyelets, Toilet Paper Boxes, Handholds, etc. for the Railways.

We make Carding Cans, Separators, Barrels, Doffing Cans, Can inserts, Bobbin holders, Spools, etc. for the Textile Industry.

Our Aluminium Utensils and other household articles are used in millions of homes with entire satisfaction.

It is a sheer joy to possess Crown Thermic Jug Delux, or "Crown" Brand Picnic Tiffin Carriers and Convenient Tiffin Carriers.

Any Specification, Any Size, Any Quantity

If it is of ALUMINIUM, you can rely on us

JEEWANLAL (1929) LIMITED

CROWN BRAND HOUSE

23, Brabourne Road, Calcutta - I.

ADEN : BOMBAY : DELHI : MADRAS : RAJAHMUNDRY

இருகை பிடித்து'' என்ற அடியில் காட்டினுர் ஆசிரியர். ஒரு கையால் இரு கை பிடிக்க எவ்வாறு இயைந்தது என்ற ஐயம் நம்மனேர்க்கு எழாதிருக்கவே, "ஆண்தகை'' என்ற சொல்லினை ஆசிரியர் பெய்தனர் என்க. ஒருகை இருகை என்ற முரண்தொடை அழகையும் ஈண்டுக் காண்க. இறைவர் திண்ணனுரது திருக் கரங்களைப் பிடித்ததோடு நின்றிலர். தம் கண்களில் குருதி நின்றதையும் காட்டி, "ஒல்லை நம்புண் ஒழிந்தது பாராய்'' என்றும் கூறினுர். அந்த அளவிலும் சொல்லி நின்றிலர் இறைவர். திண்ண னுரை நல்லை நல்லை என இருமுறை கூறிப் பாராட்டியும் பேசினுர்.

இவ்வாறு திண்ணனுர் செய்த அரும் பெருஞ் செயலையும், அதற்கு இறைவர் செய்த அருளையும், சமயாசாரியர்கள் நன்கு போற்றிப் பாடியுள்ளனர். "கான் அலைக்கும் அவன்கண் இடந்து அப்ப நீள்வான் அலைக்கும் தேவு வைத்தார்'' என்றும், வேடன் மலர் ஆகும் நயனம் காய் கணையினுல் இடந்து ஈசன் அடிகூடும் என்றும். திருஞான சம்பந்தரும், தீப்பெரும் கண்கள் செய்ய குருதிநீர் ஒழுகத் தன்கண் கோப்பதும் பற்றிக் கொண்டார் குறுக்கை வீரட்டனுரே''என்றும், "உவப்பெரும் குருதி சோர ஒருகணை இடந் தங்கப் பத்தவப் பெருந்தேவு செய்தார் சாய்க்காடு மேவினுரே'' என்று அப்பர் பெருமானுரும் அருளியது காண்க. சுந்தரர் இவரைக் "கலைமலிந்தசீர் நம்பிக் கண்ணப்பர்'' என்று போற்றிப் புகழ்ந்தனர். 'கலைமலிந்த' என்று சிறப்பித்ததன் காரணம்,

> புனமருந்து ஆற்றப் போதாது என்று
> தன்னை மருந்தென்று மலர்க்கண் அப்ப

என்றதனுல் என்க.

இறைவர் இங்ஙனம் திண்ணனுராம் கண்ணப்பருக்கு அருள் செய்ததும் போதும்! இதனுல் புலவர் பெருமக்களால் வஞ்சப் புகழ்ச்சியாகப் பாடப்பட்டதும் போதும்!

> முக்கண்ணன் என்றரனை முன்னேர் மொழிந்திடுவர்
> அக்கண்ணற் குள்ள தரைக்கண்ணே — மிக்க
> உமையாள்கண் ஒன்றரைமற் றூன்வேடன் கண்ஒன்
> றமையும் இதனுல் அறி.

குண்டைக் கொருத்தனைக் கூத்தாடும் பித்தனைக்
குண்டுணியைக்
கண்டக கறுப்பனைப் பிள்ளையைத் திண்ணியைக் காணஅயன்
மண்டைக் கரத்தனைக் கண்ணப்பன் எச்சிலை வாரியுண்ட
பண்டைப் பறையனையோ தேவன் என்று பகருவதே

என்று பலபட்டடை சொக்கநாதப் புலவரும்

தாண்டி ஒருத்தி தலையின்மேல் ஏறுளோ
பூண்டசெருப் பால்ஒருவன் போடானோ – மீண்டொருவன்
வையானோ வில்முறிய மாட்டானோ தென்புலியூர்
ஐயாநீ ஏழையா னல்

கண்ணன் இடுங்கறியும் கூட்டுசிறுத் தொண்டன்பின்
பண்ணுசிறு வன்கறியும் பற்றுதோ – தண்ணேடு
மட்டியையும் சோலை மருதீசரே பன்றிக்
குட்டியை ஏன்தீர்த்தீர் குறித்து.

கல்லால் அடித்ததற் கோகாலால் உதைத்த தற்கோ
வில்லால் அடித்ததற்கோ வெட்கினீர் – சொல்வீரால்
மஞ்சுதனைச் சூழும் மதில்ஆனைக் காவாரே
நஞ்சுதனைத் தின்றதென்முன் நாள்,

வில்லால் அடிக்கச் செருப்பால் உதைக்க வெகுண்டொருவன்
கல்லால் எறியப் பிரம்பால் அடிக்கக் காசினியில்
அல்லாற் பொழில்தில்லை அம்பல வாணற்கோர் அன்னைபிதா
இல்லாத தாழ்வல் லவோஇங் ஙனேஎளி தானதுவே.

என்று காளமேகமும்

மான்பிடித்தீர் முயல்மிதித்தீர் எவரும் காண
மன்றுதனில் ஆடெடுத்தீர் மகத்தில் வந்த
ஊன்பெருத்த யானையைக்கொன் றுரித்தீர் இப்பால
உரப்பான தலைக்கறிக்கும் உவந்தீர் ஐயா
மீன்பொதிந்த விழிமடவாட்கு ஒருபங் கீந்தீர்
மேலான வேடன் எச்சில் மிகவே கொண்டீர்
கான்பொதிந்த வேதகிரி நாதாஉம்மைக்
கழுக்கள்வந்து சுற்றுவதும் காணத் தானே.

என்று நமச்சிவாயப் புலவரும்

வஞ்சகர்பால் நடந்தலைந்த காலில் புண்ணும்
வாசல்தொறும் முட்டுண்ட தலையில் புண்ணும்
செஞ்சொல்லை நினைந்துருகும் நெஞ்சில் புண்ணும்
தீரும்என்றே சங்கரன்பால் சென்றேன் அப்பா
கொஞ்சமல்ல பிரம்படியின் புண்ணும் வேடன்
கொடுங்காலால் உதைத்தபுண்ணும் கோபமாகப்
பஞ்சவரில் ஒருவன்வில்லால் அடித்த புண்ணும்
பார்என்றே காட்டிநின்ருன் பரமன் தானே

என இராமச்சந்திரக் கவிராயரும் பாடிப் பரவசமுற்றதைப் பார்மினோ பார்மின்.

இவ்வளவு பழிக்கு இறைவர் ஆளானாராலும் கண்ணப்பர் தம் அன்பினைக் காளத்தியார் அறிவார்; காளத்தியார் பெருமையினைக் கண்ணப்பர்தாம் அறிவார். இதனைச் சைவ சித்தாந்த சாத்திர நூலாம் திருக்களிற்றுப் படியார்,

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை என்றமையால்
கண்ணப்பன் ஒப்பதோர் அன்பதனைக் – கண்ணப்பர்
தாம்அறிதல் காளத்தி யார்அறிதல் அல்லதுமற்
றியாம்அறியும் அன்பன் றது.

என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறிவிட்டது. மேலும் இந்நூல் திருக் கண்ணப்ப தேவரது திருமறத்தினை வல்வினை என்று கூறுகிறது. இவ்வல்வினை சிவதன்மமாகும். இதனையும்

மெல்வினையே என்ன வியனுலகில் ஆற்றரிய
வல்வினையே என்ன வருமிரண்டும் – சொல்லில்
சிவதன்மம் ஆமவற்றின் சென்றதிலே செல்வாம்
பவகன்மம் நீங்கும் படி

என்று கூறுகிறது அந்நூல். ஆகவே, சிவதன்ம வல்வினையைத் திருமறம் என்று கூறல் பொருத்தம் அன்றோ? இத்திருமறச் செயல்புரிந்த அண்ணலாராம் திருக்கண்ணப்பரைப் போற்றிப் புகழ்ந்து அவரை வந்தித்து வணங்கல் எல்லோருடைய கடமையும் அன்றோ?

வாளால் மகவரிந் தூட்டவல் லேன்அல்லேன் மாதுசொன்ன
சூளால் இளமை துறக்கவல் லேன்அல்லேன் தொண்டுசெய்து
நாளாறில் கண்ணிடந் தப்பவல் லேன்அல்லேன் நானினிச்சென்
றுளா வதெப்படி யோதிருக் காளத்தி அப்பருக்கே

என்று பட்டினத்தடிகள் பாடிப் போற்றியதைக் காண்க.

சகத் குருவான ஆதிசங்கரரும் இவரைப் போற்றிப் பரவிப் பணிந்துள்ளார். இங்ஙனம் திருக் கண்ணப்பரைப் பணிவதன் பயன் யாது? இவ்வினாவிற்குரிய விடையினைக் கல்லாடரைக் கடாவினால் அன்றோ அவர் தக்க இறையினை இறுப்பார். இதோ அவர் தரும் விடையினைக் காண்மினோ காண்மின்.

திருவேட் டுவர்தம் திருவடி கைதொழக்
கருவேட் டுழல்வினைக் காரியம் கெடுமே

என்பது அவ்விடை.

கல்லாடர் இயற்றிய திருமறத்தில் சில அரிய குறிப்புக்கள் விடுபட்டுள்ளன. காளத்தி அப்பருக்கே கண்ணை ஈந்தனர் கண்ணப்பர் என்பது எவரும் அறிந்த உண்மை. ஆனால் இந்நூல் "முக்கண் அப்பன்" என்று குறிப்பிட்டுள்ளது. இறைவர்க்கு இறைச்சியை ஊட்டினார் என்பது பேசப்படவில்லை. "நாவில் வைத்த நாட்போனகம்" கொணர்ந்தார்" என்பது மட்டும் பேசப்பட்டுள்ளது. திண்ணனார் என்றோ, கண்ணப்பர் என்றோ ஒரு பெயரும் காட்டப்பட்டிலது. திருவேட்டுவர் என்றுதான் இந்நூல் குறிப்பிடுகிறது.

இந்நூலில் ஓர் அரிய போக்குக் காணப்படுகிறது. பெற்றோர் பெயர்களையோ, கன்னி வேட்டைச் செயலையோ, உடன் சென்ற நாணன், காடன் என்பவர்களைப் பற்றியோ மற்றும் பெரிய புராணத்தும், சீகாளத்திப் புராணத்தும் பாரித்துரைக்கப்பட்டவைகளோ கூறப்படவில்லை. மிகச் சுருங்கிய அளவில் இக்காலத்தில் (Synopsis) என்று கூறப்படும் முறையில் கண்ணப்பர் வரலாறு கூறப்பட்டுள்ளது. இதனால் நம் செந்தமிழ்ப் புலவர்கட்கு ஒன்றைச் சுருக்கவோ பெருக்கவோ இயலும் என்பது புலனாகின்றதன்றோ!

இத்தகைய அரிய பெரிய கருத்துக்களைத் தன்னகத்துக் கொண்ட திருக்கண்ணப்பர் தேவர் திருமறம் யாண்டுளது? இது சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள், பதினோராம் திருமுறையில், ஒரு நூலாகத் திகழ்ந்துகொண்டிருக்கிறது. ஆகவே, திருமறைகளை வெறும் சமய நூல் என எண்ணாது, எச்சமயத்தவரும் படித்தறியவேண்டிய இலக்கிய நூல் என்பதை நாம் அறிதல் இன்றியமையாததாகும்.

FOR · ALL · CONSTRUCTION JOBS
BE · THEY BIG OR SMALL
ALWAYS USE

SANKAR BRAND

PORTLAND CEMENT

for Soundness Strength and Stability

•

Our earlier plan to reach the target of 5 lakhs of tons has already been achieved. We are now planning our next. We shall never rest, ever be on the move for more and more of targets of Sankar Brand Portland Cement, so vitally needed building material.

•

MANUFACTURERS :

THE INDIA CEMENTS LIMITED

FACTORY:

Sankarnagar, Tirunelveli District.

REGISTERED OFFICE :

Dhun Building, 4th Floor, 175/1, Mount Road,
Madras - 2.

Sold and Distributed by :

The Cement Marketing Company of India Limited.

எல்லோரா எழில்!

ஹா. கி. வாலம்

***

எல்லோரும் சென்று பார்க்கும்
இவ்வுலகத்தெழிலார் சோதி
எலலோரா காணச் சென்றேன்;
இன்ப மெலாமொருங்கு வாய்ந்த
பல்லோரும் புகழும் வெற்றிப்
பார தத்தின் சிகரமான
கல்லோ வியத்தைக் கண்டேன்
கல்மனம் கனிந்து நின்றேன். (1)

உயரத்தை அளக்கப் போமோ?
உலகெலாம் பிரமித்து நோக்கும்
அயர் விலாக்குகையின் நீளம்,
ஆழத்தை மதிக்கலாமோ?
உயர்வுற்று, உறுதிபெற்று,
உம்பர் நாடளாவி நிற்கும்
சிகரத்தைச் சொல்லப் போமோ?
சிற்பத்தை நினைக்கலாமோ! (2)

மலையினைக் குடைந்து தோண்டி,
மதியினுல் கலவை செய்து,
விலை மதிப்பற்ற தேனும,
கரும்புடன், பாலும், சேர்த்து,
அலகிலா அமுதக் கூட்டால்
அமைந்ததோர் கலை என்பேனே?
தலையினுல் வணங்கல் அல்லால்
தமியனேன் என்ன செய்வேன்! (3)

புத்தரின் சிலைகள் எல்லாம்
புத்தொளி வீசி நிற்கும்;
அத்தனை சிலைகள் கண்ணும்
அருளையே பொழிந்து நிறகும்;
நர்த்தனச் சிலைகள் எல்லாம்
நாட்டிய பாவம் காட்டிப்
பித்தமே ஊட்டுதம்மா,
பேசவும் இயலவில்லை. (4

கமலத்தில் அமர்ந்த புத்தர்.
கைகளை மடித்த புத்தர்.
நிமலனாய் நிற்கும் புத்தர்,
நிலை எழில் தெறிக்கும் புத்தர்,
அமலனாம் தியான புத்தர்,
அங்கை செங்கமலப் புத்தர்;
சமரஸ பாவப் புத்தர்;
சமாதியில் அமர்ந்த புத்தர்; (5)

அப்சரஸ் ஆடலுக்கும்
அசையாத ஆண்மைப் புத்தர்;
கொத்து மாமுடிகள் வேய்ந்த
கோமள ராஜப் புத்தர்;
முத்து மாமுடி துலங்கும்
மோனமா முனிவர் புத்தர்;
எத்தனை புத்தரம்மா?
எழிற் கடற்கு வமையுண்டோ!! (6)

அழகுக்கு அழகு செய்யும்,
ஆண்மைக்கு ஆண்மையூட்டும்,
விழாவுக்கு விழாவெடுக்கும்
வித்தைக்கும் வித்தையூட்டும்,
பழகிய தந்தை போலப்
பண்புட னெதிரே நிற்கும்
எழில்மிகு புத்தர் தோற்றம்
எல்லோராக் குகையுளம்மா! (7)

கல்லினைக் கனிய வைத்தார்
கலையினைப் பேசவைத்தார்
மெல்லிய உருவினாலே
மேலவர் மருள வைத்தார்
சொல்லினை ஊமையாக்கிச்
சிலையினைப் பேசவைத்தார்
எல்லோராக் குகையின் உள்ளே
இனிமையைக் கொட்டிவைத்தார்! (8)

எல்லோரா கண்டபின்பே
எல்லோரும் சாக வேண்டும்!!
வல்லோரும் மாட்டார் தாமும்,
வந்தங்கு காணவேண்டும்!
நல்லோரும் பிறரும் யாரும்
நற்கலை காண வேண்டில்
எல்லோரா மலைக்குச் செல்வீர்,
ஏதென்று கேட்டிடாமல்! (9)

A GOLDEN OPPORTUNITY

FOR

BOYS & GIRLS, EMPLOYED AND UNEMPLOYED

MATRICS-UNDERMATRICS-INTERMEDIATES-GRADUATES

You can get a job of Rs. 125 to 500 per month after passing one of the GOVERNMENT RECOGNISED EXAMINATIONS or other ENGINEERING/TECHNICAL/COMMERCIAL Courses given below. Suitable courses are available for Graduates, Intermediates, Matrics, Undermatrics and Primary pass students. Science and Drawing not compulsory for admission. (These subjects are taught to the required standard free of charge). Courses are taught in English, Hindi, Panjabi, Marathi, Gujarati, Bengali, Assamese and other regional languages. Separate classes for girls for Telephone Operator, Tracer, Draftsman, Architect and Radio Mechanic Courses.

OTHER UNIQUE FACILITIES PROVIDED BY THIS INSTITUTE: Students can study these courses at our Training centres without any residential restriction. There is no restriction of age for admission. Employed or Unemployed candidates of any age can get admission and qualify for Recognised Engineering Diplomas and Degrees. Students unable to attend classes personally can take up POSTAL TRAINING COURSE and study at their homes. They will be given FREE PRACTICAL TRAINING in our centres. Books/Printed lessons are supplied *FREE* as per rules. MORNING Classes for un-employed, PART-TIME EVENING Classes arranged for Employed persons. Employment Assistance on passing the Examination. Free Training to Failures. Fees most moderate and payable in easy instalments. Personal relations and homely atmosphere during and after training. Hostel available (Approx. expenses Rs. 50/60 p. m.) Many other facilities not provided elsewhere. (Note: It is not compulsory to live in Hostel).

Training Centres already exist at 21-Daryaganj. DELHI; Club Road, LUDHIANA; 111/306-L, Ashok Nagar, KANPUR; Sitabuldi Main Road, NAGPUR; Nakodar Road, JULLUNDUR City; Arrangements are in hand to start shortly new centres at KAROL BAGH, DELHI/AHMEDABAD/BANGALORE / BOMBAY / CALCUTTA / GAUHATI / JABBULPORE / HYDERABAD / MADRAS / MYSORE/PATNA / PATIALA/SHILLONG and other important towns of India.

Note: 1. Schools, Institutions, Organisations of individuals interested to run these classes in any town may write to Technical Promotion Department of this Institute, for further details.

Note: 2. Limited seats are available in each course hence students are advised to reserve their seats immediately by sending Rs. 5/- M.O. / P.O. to Head Office. Postal Students can get admission at any time.

Note: 3. Please do not forget to write your name and address (*CLEARLY*) in all the letters/M.O. Coupons sent to this office. ALL enquiries should be addressed to Head Office and 15 nP. stamps should be enclosed for reply. PLEASE REMEMBER "ASIA ENGINEERING INSTITUTE IS ASIA'S LARGEST LOCAL-CUM-POSTAL TRAINING INSTITUTE".

JOIN EARLY AND MAKE YOUR FUTURE BRIGHTER —

SHORTEST TERM COURSES–MINIMUM FEES–MAXIMUM FACILITIES.

PRINCIPAL, ASIA

Head Office: Asia House,

COURSES OF STUDY

A.M.I.E. (India): Recognised by Govt. of India and Union Public Service Commission equal to B. E. Degree in Civil/Mechanical/Electrical/Chemical/Mining/Telecomm. Engineering, (Duration for Matrics four years and for I Sc. or B.Sc. or Engg. Diploma Holders - three years) Apprenticeship arranged.

GRAD I.T.E. (India) Recognised by Govt. of India, equal to Degree in Telecommunication Engg. Matrics. Higher Secondary, Intermediates, Graduates admitted.

G. D. ARCHITECT COURSE: Recognised by Govt. of India. Students can get a starting salary of Rs.350/- p.m. Matrics, Intermediates, and Graduates admitted. (Details in Prospectus).

CITY & GUILDS ELECTRICAL ENGG. COURSE: Recognised by Govt. of India. Duration Two Years for Matrics, with any subjects or Division. One Year for I.Sc. & B.Sc. or Matrics working in Electrical Departments of workshops.

LCE. LME. LEE. LAE: Government of India recognised. Diplomas in Civil, Mechanical, Electrical, Automobile Engg. (Duration Two Years - Details in Prospectus).

GOVT. OF INDIA MINISTRY OF LABOUR, I.T.I.: Examinations for Draughtsman (Civil/Mechanical) Surveyor, Electrician, Radio Mechanic. Motor Mechanic, Fitter, Turner, Welder and many other Trades (Details in Pros.)

GOVT. ELECTRICAL SUPERVISOR EXAMINATION (Duration Six Months).

PRINTING TECHNOLOGY COURSES: Composing, Proof Reader Copy Holder, Distributor, Machineman, Rubber Stamp Maker.

DIPLOMA COURSES: In Civil/Mechanical / Electrical / Automobile/Radio/Structural Engg./Refrigeration Servicing/Foundry Practice/Overseer Buildings & Road Overseer Irrigation/Overseer Mechanical/Overseer Electrical/DRAUGHTSMAN (Civil/Mechanical) (Covering City & Guilds (London) or Madras & Andhra Govts. Syllabi) Duration ONE/TWO YEARS Matrics, Intermediates, Graduates admitted.

TECHNICIANS COURSES: (Duration SIX MONTHS each) 5th & 6th Class pass or undermatrics can get admission in Motor Mechanics, Radio Mechanic, Turner, Fitter, Diesel Enginc Mechanic, General Mechanic, Electrician Courses.

SHORT TERM COURSES: (Duration 4 to 12 weeks) Transistor Pocket Radio), Mechanic, Tracer, Welder, Wireman, Die Fitter, Battery Charger, Armature Winder, Driver, (for Truck, Bus, Car, Auto-rickshaw) Scooter driving, Cyclostyling/Duplicating on Hand Electric-Machines, Telephone Operator, Telegraphist. Necessary arrangements are in hand to start courses in Television Servicing Cinematography, Photography, Tape Recording.

COMMERCIAL COURSES: Bookkeeping, Accountancy. Commercial Correspondence, Salesmanship, Advertising, Journalism & Short Story writing, Business Management, Business Administration, Managership, Secretaryship, Real Estate Operator and Insurance Agent etc. (Duration 3 to 12 Months). (Details in Prospectus).

BUILDING INDUSTRY COURSES: Building Contractor, Master Builder, Consulting Builder Financier Buildings & Lands [Duration 9 months each].

For further details please study prospectus which can be had from Head Office on cash payment or by sending Re. 1.25 nP.

ENGINEERING INSTITUTE

21, Daryaganj, DELHI - 6.

ஸபாரி

அணிந்து குளிர்ச்சியான
சுகத்தை அனுபவியுங்கள்

பின்னியின்

புதிய "ட்ரிப் ட்ரை" புஷ்கோட் துணி

பின்னியின் புதிய பக்ளின் முறையில் தயாரித்த ஸபாரி, புஷ் கோட்டுக்கும் ஸ்லாக் ஷர்ட்டுக்கும் சிறந்தது. பக்ளின் முறை, பருத்தித் துணிகளுக்கு கசங்காத் தன்மை யளிக்கிறது; உடைகள் எப்போதும் புதுப் பொலிவுடன் விளங்குகின்றன. "ட்ரிப்-ட்ரை" (பிழியாமல் உலரும் தன்மை) துணிகளுக்கே உரித்தான எல்லா நன்மைகளும் சௌகரியங்களும் ஸபாரியில் உள்ளன. ஸபாரியாலான உடுப்புகளை நீங்களே வீட்டில் சுலபமாக சலவை செய்யலாம். அவை விரைவில் உலருகின்றன. மடிப்புக் கலைவதில்லை. அடிக்கடி இஸ்திரி போட வேண்டிய அவசியமில்லை.

பக்ளின் முறையில் தயாரித்த துணிகள் பலவிதத்தில் சிக்கனமளிக்கின்றன; லாண்டிரிச் செலவு குறையும்.

ஸபாரி - பக்ளின் முறையில் தயாரித்த ஒரு 'ட்ரிப்-ட்ரை' துணி

WE STOCK

QUALITY FABRICS

BINNY & CO. (MADRAS) LTD.

உங்களுக்கு தேவையான பின்னி துணிகளை இந்த அடையாளம் காணும் அனுமதி பெற்ற கடைகளிலிருந்து கண்ட்ரோல் விலைக்கே வாங்குங்கள்.

பக்கிங்ஹாம் & கர்னாடிக்
கம்பெனி லிமிடெட்
பின்னி & கம்பெனி (மதராஸ்)
லிமிடெட் ஸ்தாபனத்தின் ஒரு கிளை

JWT/BC/SF/1871a

* பொதுமை வாழ்த்து

உருவமில் இறைவன் ஒருவன் என்றே
அருளிய **மகம்மது** பெருநபி வாழி
உன்னற் கரிய உருவமில் ஒருவனை
உன்னற் குரியனாய் உதவ உடலளி
கன்னி இயற்கை அன்னை வாழி
'நேசி பகைவரை' என்று பேசி
ஆணி அறைந்த மாணில ரிடத்தும்
இரக்கங் காட்டிப் பரக்கச் சிலுவையில்
நின்ற **கிறிஸ்து** அன்பு வாழி
கொலையர சோங்கிய நிலையில் தோன்றி
'அஹிம்ஸா பரமோ தர்மா' என்றும்
'தயா மூல தர்மா' என்றும்
அருளறம் வளர்த்த **அருகன்** வாழி
சீலமே திரண்ட கோலங் கொண்டு
போதியி னடியில் சோதனை செய்து
ஒருமையில் நின்று தருமமுணர்த்திய
சத்திய ஞானப் **புத்தன்** வாழி
பாரதப் போரிடைச் சாரதி யாகிப்
பயன்கரு தாத வியன்திருப் பணியாம்
பாதை காட்டும் கீதையை ஓதிய
கொண்டல் வண்ணக் **கண்ணன்** வாழி
நாதக் கொடியும் போதவிந் தூர்தியும்
ஞான வேலும் மான இச்சா
சத்தியும் எல்லா சித்தியும் உடைய
அமரன் அழகுக் **குமரன்** வாழி
காமனைக் காய்ந்து காலனைக் கொன்று
முப்புரம் எரித்தே அப்புர முள்ள
கல்லா லடியில் சொல்லா மற்சொலும்
மோனம் வாழி சாந்தம் வாழி
சன் மார்க்கம் வாழி இனிதே.

*ஆசிரியர் திரு. வி. க. அவர்களின் 'பொதுமை வேட்ட'லினின்று எடுத்தது.

சிறந்த ஆற்றல்... உயர்ந்த திறமை



இந்தியாவிலேயே மிகப்பெரிய அளவில் ஸைக்கிள்கள், ஸைக்கிள் உறுப்புகள், ERW எஃகு குழாய்கள், ஸைக்கிள் செயின்கள், ஸைக்கிள் ஸீட்டுகள் முதலியவை டி.ஐ. தொகுதி கம்பெனிகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த கம்பெனிகள் வளர்ச்சியுற்று இன்றுள்ள தலைமைப் பதவிக்கு வந்திருப்பதின் காரணம் இங்கு செய்யப்படும் பொருள்களின் உயர்ந்த தரம் தான். அதனால்தான் எல்லோரும் இப்பொருள்களையே எப்போதும் விரும்பிக் கேட்கின்றனர்

சிறந்த பலன்களை அளித்திருக்கும் கூட்டுறவு

இன்று டி.ஐ. ஸ்தாபனம் தலைமைப் பதவி கொண்டிருப்பதற்கு முக்கிய காரணம், சென்னை முருகப்பா & ஸன்ஸுக்கும், (இங்கிலாந்து) பர்மிங்க்ஹாமிலுள்ள ட்யூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்துக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டிருக்கும் சிறந்த கூட்டுறவு தான். ட்யூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெடின் வருங்கால திட்டத்தின்படி, மிக விரிவான அளவில் ஸைக்கிள் பாகங்கள், டைனமோ விளக்குகள், தொழிற்சாலைகளுக்கு வேண்டிய செயின்கள், கோல்ட் ரோல்ட் எஃகு தகடுகள் (cold rolled steel strips) ஹைபிரஷர் காஸ் சிலிண்டர்கள் முதலியவை உற்பத்தி செய்யப்படவிருக்கிறது.

ட்யூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட்

52/53 ஜஹாங்கீர் தெரு, மதராஸ்-1

பின்வரும் கம்பெனிகளின் உரிமையாளர்கள்: டி. ஐ. ஸைக்கிள்ஸ் ஆப் இந்தியா—'ஹெர்குலிஸ்', 'பிலிப்ஸ்' ஸைக்கிள்கள், 'பிராம்டன்' ஸைக்கிள் உறுப்புகள் தயாரிப்பாளர்கள். ட்யூப் பிராடக்ட்ஸ் ஆப் இந்தியா—ட்ரூ-வெல் (TRU-WEL) ERW எஃகு குழாய்கள் தயாரிப்பாளர்கள்; ரைட் ஸாடில்ஸ் ஆப் இந்தியா—ஸைக்கிள் ஸீட் தயாரிப்பாளர்கள்.

உதவி கம்பெனிகள்: டி.ஐ. டைமண்ட் செயின் லிமிடெட்—ஸைக்கிள்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் வேண்டிய செயின்கள் தயாரிப்பாளர்கள்; டி. ஐ. மில்லர் லிமிடெட்—ஸைக்கிள்களுக்கான டைனமோ விளக்குகள் தயாரிப்பாளர்கள்



JWT/TI/1524a

தாய்மையும் பேய்மையும்

சமய அமைப்பான ஒரு சங்கத்தின் ஆண்டு விழா. அதற்குத் தலைவர் திரு. வி. க. மாலை ஐந்து மணி. தலைவர் முன்னுரை நிகழ்கிறது. பெண்கள் இருந்த பகுதியில் ஒருகுழந்தை வீறிட்டு அழுகின்றது. தாய் எவ்வளவோ முயன்றும் அழுகை நிற்கவில்லை. மற்றப் பெண்கள் அந்தத் தாயை வெறுத்த நோக்குடன் பார்க்கிறார்கள். ஆண்களின் கண்கள் எல்லாம் அந்தப் பக்கம் திரும்பி ஆத்திரம் அடைகின்றன. திரு. வி. க. முகத்தில் அன்பே தவழ்கிறது. முன்னுரையை நிறுத்திவிட்டுக்குழந்தை பக்கம் திரும்பினார். குழந்தையை ஏந்த விரும்பியவை போல கைகளும் அந்தப் பக்கமே நீண்டன. குழந்தையின் அழுகை குறைந்து வந்தது.

'தாய்மார்களுக்கு ஓர் விண்ணப்பம்' என்றார் அவர். ஓர் அமைதி ஏற்பட்டது. அவர் சொன்னார்: "குழந்தையை வளர்ப்பதுதான் பெரிய திறமை; அரிய தொண்டு. அதைவிட உயர்ந்த பேறு இல்லை. குழந்தை நம்முடைய முருகன். நம்முடைய கண்ணன். குழந்தையைக் கைவிட்டுவிட்டு எந்தச் சமயமும் வளரவேண்டியதில்லை. என் முன்னுரையை விட, அந்தக் குழந்தையின் வாழ்வே எனக்குச் சிறந்தது. ஒரு குழந்தையின் அழுகையைப் பொறுத்துக் கொண்டு அதைத் தேற்றத் தெரியாதவர்களுக்கு முருகன் அருள் செய்ய மாட்டான்; கண்ணன் கருணை புரியமாட்டான். அவர்களுக்குக் கடவுள் ஏன்? அறம் எற்றுக்கு? சங்கம் ஏன்? விழா எற்றுக்கு? இந்தக் குழந்தையின் தாயை நான் மனமாறப் போற்றுகிறேன்; சங்கக் கூட்டத்திற்கு வரும்போதும் குழந்தையை விடாமல் எடுத்துக் கொண்டு வந்த அம்மையாரை பாராட்டுகிறேன். நம் சகோதரிகளில் சிலர் சினிமாவுக்குச் செல்லும்போது குழந்தையைதனியே வீட்டில் விட்டுச் செல்கிறார்கள். அது தாய்மையல்ல; பேய்மை. மறுநாள் என்ன ஆகும்? குழந்தைக்கு சுரம் அடிக்கும். குழந்தை தனியேஇருந்து அலறி அழுத கொடுமை வாளா விடுமா? அதுதான் சுரம் ஆனது. டாக்டர் வருவார். டெலிரியம் என்பார். ஊசி ஏற்ற வேண்டும் என்பார். அந்தோ! அந்தோ! அதுதான் பேய்மை; தாய்மையல்ல. அந்தத் தாய் தான் டெலிரியம். கொடுநோய், எமன் எல்லாம். கொடுமை! கொடுமை! போலி நாகரிகம் தாய்மையை – நம் நாட்டுத் தாய்மையை – தெய்வத் தாய்மையை – கொல்வதை நாம் பார்த்துக் கொண்டிருத்தல் தகுமா? தாய்மார்களே! எண்ணிப் பாருங்கள்!"

தாய்மார் உள்ளமெல்லாம் உருகின. பெண்களைப் புகழும் திரு. வி. க. பெண்களைக் கடிந்து திருத்தவும் வல்லவர் என்பதற்கு வேறு என்ன சான்று வேண்டும்?

இது ஒரு துறை. ஒவ்வொரு துறையிலும் இப்படி ஆராய்ந்தால் தான் அவர் பெருமை விளங்கும் அவர் தமிழ் நாட்டுக்குச் செய்த தொண்டு விளங்கும்.

– பா. இராசேசுவரி அம்மாள்

திரு. வி. க. மணி மடலில் 'தமிழர் தலைவர்' என்ற கட்டுரையில் ஒரு பகுதி.

பொது மொழியும் தமிழ் மொழியும்

திரு. வி. க.

ஒரு நாட்டுக்கு ஒரு பொதுமொழி வேண்டற்பாலதே. பண்டைக் காலத்தில் ஒரு போது பிராகிருதமும், மற்றொரு போது பாலியும், இன்னொரு போது சமஸ்கிருதமும் பொது மொழிகளாக இந்தியாவை ஆண்டன. இவை நாட்டுக்குரிய மொழிகள்...

நமது நாட்டுக்குரிய இயற்கைக் கல்விப் பீடத்தின் மீது ஆங்கில மாதை மட்டுமின்றிப் பிற மாதர்களையும் இருத்தி வழிபடலாம். சாத்தும் மனோமலர் மட்டும் நம்முடையதாயிருத்தல் வேண்டும். ஆதலால், காந்தியடிகள் இந்திய நாட்டில் பெரும்பான்மையோர் பேசும் மொழியாகிய இந்தியைப் பொதுமொழியாக்க முயன்றது உலகறிந்த தொன்று. இந்தி பொது மொழியாக வேண்டுமென்று அறிவுறுத்திய அடிகள், அவ்வந்நாட்டு மொழிகளைக் குலைத்துவிடுமாறு அறிவுறுத்தினாரில்லை. அவ்வந்நாட்டு மொழிகளும் வளர வேண்டும் என்பது காந்தியடிகளின் அடிப்படையான கொள்கை. காந்தியடிகள் அறிவுறுத்திய சுதேசியம் இத்தன்மையதே. பொது மொழி எனக் கொள்ளப்பட்ட ஆங்கிலத்துக்குப் பதிலாக நாட்டின் ஒற்றுமைக்கும் உலகியல் நடைமுறைக்குமே இந்தியைப் பொது மொழியாகக் கோடல் வேண்டுமென்பது காந்தியடிகளின் உள்ளக் கிடக்கை. அவ்வந்நாட்டுக்குரிய மொழிகளைக் கொன்று, இந்தியை வளர்க்கவேண்டும் என்று காந்தியடிகள் கூறினாரில்லை. அங்ஙனே நேருமாயின், இந்தி வேண்டாமென்று அடிகள் சொல்லியிருப்பார்.

தமிழ் நாட்டின் மொழியாகிய தமிழ் மிகத் தொன்மையானது. தமிழிலுள்ள திருக்குறள், கலித்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, திருக்கோவை, பெரிய புராணம், கம்பராமாயணம் போன்ற இலக்கியங்கள் வேறு பலமொழிகளில் இல்லையென்றே கூறலாம். மற்ற மொழிகள் நூல்கள் தொகையில் பெருகியிருக்கலாம். இயற்கைத் தேவி கோயில் கொண்ட நூல்கள் நம் பழந்தமிழ் நூல்கள். இயற்கை வழியே மனித வாழ்வைக் காண வேண்டுமானால், தமிழ் நாட்டில் தமிழனாகப் பிறந்து தமிழ் மொழி பயிலல்வேண்டும். இயற்கை இனிமையன்றோ நங் கன்னித் தமிழ்? எம்மொழி பொதுமொழியாக வரினும் இவ்வழகிய கன்னியை எவ்வாறு விலக்கல் முடியும்? எவ்வாறு நீக்கல் முடியும்? பொதுமொழியாக இந்தியும் சிறப்பு மொழிகளாக ஆங்காங்குள்ள மொழிகளும் வழங்கப்படல் வேண்டும் என்னுங் கருத்தைக் காந்தியடிகள் கல்வியைப்பற்றிப் பேச நேர்ந்தபோதெல்லாம் உள்ளங்கை நெல்லிக் கனிபோலத் தெள்ளத் தெளிய வெளியிட்டுவந்தனர்...

தமிழ் மக்களே! ஒருங்கள் தமிழின் தொன்மை என்ன? தமிழ் மக்களின் வனப்பென்ன! மயிர் சிலிர்க்கிறது. மிகத்

தொன்மை வாய்ந்த ஒருபெருந் தனிமொழியன்றோ நந்தமிழ்! தமிழனாகப் பிறந்து தமிழ்ச்சுவையுணர்ந்த ஒருவன் வீடு பேற்றை யும் காதலியான். அவனுக்கு வீடு பேறு தமிழ்மொழி இன்பமே யாகும். அவன் மீண்டும்மீண்டுந் தமிழ் நாட்டில் தமிழனாகப் பிறந்து தமிழ்ச்சுவை மாந்தி இன்புறவே விரும்புவான்...

காந்தியடிகள் தென்னாப்பிரிகாச் சிறையனுபவத்தில் செம் மொழிகளை ஈண்டு எடுத்துக் காட்டுகிறேன் :

> "இப்போரில் தமிழ் மக்கள் புரிந்த துணையைப் போல வேறெவ்விந்தியரும் புரியவில்லை. அவர்கட்கு நன்றியறிதல் காட்ட அவர்கள் நூல்களைப் பயில வேண்டு மென்று நினைத்தேன். அப்படியே அவர்கள் மொழியைப் பயில்வதில் மிக ஊக்கமாக ஒரு திங்கள் கழித்தேன். அம் மொழியைப் பயிலப் பயில அதன் அழகை உணரலானேன். அதுமனங் கவரும் ஓர் இனிய மொழி."

ஒரு திங்கள் தமிழ்ப் பயிற்சி காந்தியடிகளை இவ்வாறு கவர்ந்த தெனில், முழுப் பயிற்சி அவரை என்ன செய்திருக்கும்? சபர்மதி யினின்றும் அவரைத் துரத்தித் தாமிரபரணியிலன்றோ கொணர்ந்து சேர்த்திருக்கும்!

காந்தியடிகள் கதர் நிதி திரட்டுதற்கெனத் தமிழ்நாடு போந்த போது அவர்க்குப் பல இடங்களில் வரவேற்பு அளிக்கப்பட்டது. தூத்துக்குடியில் அளிக்கப்பெற்ற வரவேற்பறிக்கை (12-10-'27) அடிகளைத் தமிழ் மொழி மீதும், திருக்குறள் மீதும் கருத்துச் செலுத்துமாறு தூண்டிற்று. அவ்வறிக்கைக்கு அடிகள் இறுத்த விடையின் ஒரு பகுதி வருமாறு :

> "திருக்குறளைப் பற்றிச் சில செம்மொழிகள் உங்கள் வரவேற்பில் மிளிர்கின்றன. இருபதாண்டுகளுக்கு முன் னரே யான் தமிழ் பயிலத் தொடங்கியதற்குக் காரணம், திருககுறள் மூலத்தையே நேராகப் படித்தல் வேண்டு மென்று என்னுள்ளத்தெழுந்த அவாவேயாகும். தமிழ் மொழியில் புலமை பெருவதற்குரிய ஓய்வு எனக்கு ஆண்ட வன் அருளினானில்லை. அதுகுறித்து யான் உறும் வருத்தத் துக்கோர் அளவில்லை. அவரவர் அவரவர்க்குரிய தாய் மொழி வாயிலாகவே கல்வி பெறல்வேண்டும். தமிழ் மக்கள் தங்கள் தாய்மொழியாகிய தமிழ் பயில வேண்டு வது அவர்களது இன்றியமையாக் கடமை."

இந்தி பொது மொழி எனப் பேசப்பட்டபோது அது குறித்து எவ்விதக் கிளர்ச்சியும் எழவே இல்லை. காங்கிரஸ் ஆட்சியில் இந்தி யைப் பொதுமொழியாக்கும் முயற்சி அரும்பிய போதே அதற்கு மாறுபட்ட கிளர்ச்சி எழுந்தது. இனி இந்தியாவின் பொதுமொழி எது ஆகும் என்று அறுதியிட்டுக் கூறுதல் இயலவில்லை. இந்திய இயற்கை எதை ஏற்கிறதோ அஃதாகும்.

— '**மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்**'

LET YOUR SAVINGS GROW

THROUGH

IOB'S RECURRING DEPOSIT SCHEME

Deposits are accepted in multiples of Rs. 5/ upto a maximum of Rs. 500/-

	Monthly Deposits of:			
	Rs. 5	Rs. 10	Rs. 50	Rs. 100
	Will grow to:			
In 34 months	Rs. 180	Rs. 360	Rs. 1,800	Rs. 3,600
In 46 months	Rs. 250	Rs. 500	Rs. 2,500	Rs. 5,000
In 85 months	Rs. 500	Rs. 1,000	Rs. 5,000	Rs. 10,000

The Indian Overseas Bank Limited

Central Office :

151, Mount Road, Madras - 2.

BRANCHES IN DELHI :

(i) Post Box No. 1139, 1332, Chandni Chowk, Delhi-6.

(ii) Post Box No. 125, "Malhotra Buildings", Janpath, Queensway, New Delhi-1.

(iii) Post Box No. 2511, 10223, Gurudwara Road, Karol Bagh, New Delhi-5.

M. Ct. Muthiah,
Chairman.

C. P. Doraikannu,
General Manager.

தில்லித் தமிழ்ச் சங்கம்

செயற்குழு – 1962

தலைவர் :	திரு கே. வி. வெங்கடாசலம்
துணைத் தலைவர் :	திரு வை. ஆறுமுகம்
நிர்வாக துணைத்தலைவர் :	திரு சாலை இளந்திரையன்
செயலாளர் :	திரு ஆர். எஸ். வெங்கடேசன்
இணைச் செயலாளர் :	திரு சேது. கிருஷ்ணமூர்த்தி
பொருளாளர் :	திரு ஆர். விசுவநாதன்
நூலக நிர்வாகிகள் :	திரு சி. என். ரங்கநாதன்
	திரு எம். பாலசுப்பிரமணியன்
	திரு ஏ. என். நாகராஜன்
	திரு சூரி. கிருஷ்ணமூர்த்தி
உறுப்பினர்கள் :	திரு அ. வி. குப்புசுவாமி
	திரு எஸ். ஸ்ரீநிவாசன்
	திரு எம்.என். சுப்பிரமணியன்
	திரு சொக்கு சுப்பிரமணியம்
	திரு வி. என். எஸ். மணியன்
	திருமதி ஹா. கி. வாலம்
கணக்குத் தணிக்கையாளர்கள் :	திரு டி. வி. நாராயணசுவாமி
	திரு வே. பார்த்தசாரதி
'சுடர்' நிர்வாக ஆசிரியர்:	திரு தி. கோ. அனந்தசுவாமி

❋ எங்கள் சங்கப் பணிகள் ❋

- தலைநகரில் வாழும் தமிழ் அன்பர்களை ஒன்றுகூட்டி, உரைகள், நிகழ்ச்சிகள் மூலம் முத்தமிழ்க் கலைகளை அனுபவிக்கச் செய்கிறது.
- தமிழ்க் கவிஞர்களையும் ஏனைய பெரியோர்களையும் விழாக்கள் மூலம் போற்றுகிறது.
- பொங்கல், புத்தாண்டு போன்ற தமிழ் விழாக்களைச் கொண்டாடுகிறது.
- ஸ்ரீ சத்தியமூர்த்தி நினைவு நூல் நிலையம், இலவச வாசக சாலை, இலக்கிய வகுப்புகள் ஆகியவற்றை நடத்துகிறது.
- ஆண்டுதோறும், '**சுடர்**' மலரை உயர் கலை மலராக வெளியிடுகிறது.
- தலைநகர மக்களுக்கு நல்ல தமிழ் நூல்கள் கிடைக்க வசதி செய்கிறது.

நன்றி...

நமது ''சுடரி''ன் பதினென்ருவது மலர் 'திரு. வி. க.' மலராக வெளிவருகிறது. அதற்கேற்ப 'திரு. வி. க.' அவர்களைப் பற்றியும் அவர்கள் ஆற்றிய அருந் தொண்டுகளைப் பற்றியும் பல பெருமக்கள் வழங்கிய கருத்தோவியங்கள் மலரில் அடங்கி யுள்ளன. வேறுபல கட்டுரைகள், கவிதைகள், கதைகள் மலரை நிறைவுபடுத்துகின்றன. உள்ளூர், வெளியூர் அன்பர்கள் பலர் தங்கள் கருத்தோவியங்களால் மலருக்கு மணம் அளித் துள்ளனர்.

திரு. வி. க வின் தமையஞர் திரு. உலகநாத முதலியாரும், திரு. வி. க. வும் சேர்ந்து தோன்றும் புகைப்படத்தைத் தந்து உதவியவர் திரு. வி. கண்ணபிரான். இந்தப் படம் இதுவரை வெளிவராத பொக்கிஷம்.

அரசாங்கத்தினரும், வணிகத் துறைப் பெருமக்களும், ஏனைய தொழில் துறையினரும் விளம்பரங்கள் வழங்கிச் 'சுடர்' வெளியீட்டை ஊக்குவித்துள்ளார்கள்.

'சுடர்' விளம்பரங்கள் சேகரிப்பதற்கும் 'சுடர்' உருவாவ தற்கும் பல அன்பர்கள் பெரும் உதவி புரிந்தார்கள். திரு. பாலன், திரு. இராமசுவாமி ஆகியோரின் உதவி குறிப் பிடத்தக்கது.

தமிழ்ச் சங்கப் பணியைத் தமது வாழ்வின் ஒரு கடமை யாகக்கொண்ட முதுபெரும் அறிஞர் திரு. தி. கோ. அனந்த சுவாமி அவர்களும், திரு. கே. எஸ். ஜம்புநாதன் அவர்களும் இந்தச் 'சுடர்' வெளியீட்டில் எடுத்துக்கொண்ட முயற்சி மிக மிகப் பெரிதாகும்.

'சுடரை'த் தமது சொந்த வெளியீடாகவே கருதி, அழகுற அச்சிட்டுத் தந்து உதவியவர், 'இமயப் பதிப்பக'த்தின் உரிமை யாளரான திரு. டி. என். ராமச்சந்திரன் அவர்கள்.

'சுடரு'க்கு எழுத்தோவியங்கள் தேர்ந்தெடுப்பதற்கும், 'மலர்' உருவாவதற்கும், பல வகைகளில் உதவி புரிந்தவர்கள் 'சுடர்' ஆசிரியர் குழுவைச் சேர்ந்த ஹா. கி. வாலம், திரு. சாலை இளந்திரையன், திரு. எஸ். ஸ்ரீநிவாசன் ஆகியோர்.

இந்தத் தமிழ்ப் பேரன்பர்கள் அனைவரின் ஊக்கத்தையும் முயற்சியையும் நயந்து பாராட்டுகிறோம். எங்கள் இதயங் கனிந்த நன்றியை அவர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

எங்களது எல்லா முயற்சிகளுக்கும் ஊக்கம் தந்து உதவி வரும் தமிழ்ச் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும், வாசகப் பெருமக்களுக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றி.

— தில்லித் தமிழ்ச் சங்கச் செயற்குழு.

"SERVICE BEFORE SELF"

AIR ROUTES TO CHOOSE ROMANTICALLY!
SEA PASSAGES IN COMFORT
HANKERS
ONE & ALL AND
KINDLES THE
TRAVEL SOPHISTICATES TO AVAIL OUR
REPUTABLE
AUTHENTIC
VALUABLE
ELEGANT AND
LAUDABLE
SINCERE SERVICES!

FOR ALL YOUR

AIR - SEA - RAIL - HOTEL

RESERVATIONS

CONSULT

"ASHOK TRAVELS"

"INDIA HOUSE"
TRICHY ROAD, COIMBATORE - 1.

Dial: 4514

Telegrams: JETTAVELS

INDEX TO ADVERTISERS

A. I. Handloom Board ... 142
A. I. Handloom Fab. Socy. 87
Amrutanjan ... 99
Anantaswami, T. G. ... 14
Arvind Laboratories ... 94
Ashok Travels ... 195
Asia Eng. Institute 184 & 185
B. & C. Mills ... 186
Balussery ... 72
Bapalal & Co. ... 3
Bliss & Cotton ... 159
Brittania ... 128
Brooke Bond ... 130
Cardboard Mfg. ... 170
Central News Agency ... 85
Chanana Sales Corpn. ... 22
Chennimalai Weavers Socy. 175
Dalmia Cements ... 153
DGL (P) Ltd. ... 60
Hadensa ... 157
East Asiatic ... 88
Elgi Equipts. ... 62
Enfield India ... 114
Escorts Blades ... 124
Foton Films ... 200
Geep ... 122
Gemini ... 1
Ginger Tonic Fourth Cover
Golden Tobacco ... 160
Hamdard ... 108
Harvey A & F Second Cover
Hindustan Lever ... 100
Imaya Pathippagam ... 37
Imperial Tobacco ... 116
Inba Nilayam ... 67
India Cements ... 181
Indian Bank ... 148
Indian Overseas Bank ... 192
Indo-Swiss Synthetics ... 199
Interads ... 154
Jayant Paper ... 34
Jay Engg. ... 105
Jeewanlal (1929) Ltd. ... 176
Kalaimagal ... 80
Koolaire ... 164
Lakhanpal ... 163
Madras Hotel ... 96
Madras State Handloom... 120
Madras Stores ... 197
Mahalakshmi Chit ... 197
Mahindra & Mahindra ... 56
Meenakshi Mills ... 144
Mettur Chemicals ... 70
Modern Coffee House ... 78
Mohd. Ebrahim & Co. ... 112
Mount Mettur ... 132
N. E. I. Ltd. ... 40
Northern Railway ... 169
Nutrine Sweets ... 69
Orientals ... 138
Parle's Biscuits ... 82
Pathy & Co. R. S. ... 198
Philips ... 141
Radhakrishna Jewellery... 99
Rai & Sons ... 136
Rajan V. T. ... 103
Ramco Group ... 150
Somasundaram Chettiar... 53
Steelsons Third Cover
Sugandh Stores ... 97
Swastik Tobacco ... 110
Tata-Fison Ltd. ... 147
Textool ... 40
Thiru Arooran ... 2
T. I. Cycles ... 188
Union Dairy ... 58
Wheels India ... 118
White Horse Soap ... 26

திரு. வி. க. வின் நூல்கள் கிடைக்குமிடம்:

முருகவேள் புத்தகசாலை,

15, மாதவப் பெருமாள் கோவில் தெரு,
மைலாப்பூர், சென்னை - 4.

Mahalakshmi Auction Benefit Chit Fund 'Pvt.' Ltd.,

Regd. Office :
6/90 W.E.A, Karolbagh,
New Delhi-5.
Phone No.. 51412

1962 SERIES
(4th Sunday Auction)
Last date for admission
24-10-1962
First date of auction
28-10-1962

Branch Office:
3, Main Market, Lodhi Road,
New Delhi-3.
Phone No. 611381

1962 SERIES
(2nd Sunday Auction)
Last date for admission
10-10-1962
First date of auction
14-10-1962

20 Months — 20 Members

Class	Subscription	Chit Value
A	Rs. 100/- p. m.	Rs. 2000/-
B	,, 50/- ,,	,, 1000/-
C	,, 25/- ,,	,, 500/-
D	,, 15/- ,,	,, 300/-

Free copy of our Rules will be sent on request.
Name and address may please be legibly written.

By order of the Board,
N. Viswanathan,
Managing Director.

SAVE MONEY – BENEFIT YOURSELF.

QUALITY & SERVICE : OUR MOTTO

MADRAS STORES (REGD.)

(Estd. 1932)

96, Baird Road, Gole Market
(Head Office)

12A/30 W.E.A., Karolbagh,
(Branch Office)

NEW DELHI.

●

FOR ALL YOUR REQUIREMENTS OF

QUALITY PROVISIONS
TOILETS MEDICINES
COTTON & SILK SAREES & DHOTHIES

UTENSILS BRASS, SILVER STAINLESS STEEL.
GIFTS AND LUXURY ARTICLES

Please Ring Up 43632 for Free Home Delivery Service.

R. S. PATHY MARUNTHU

(REGD.)

இந்த சீல் கிழியாமல்
இருக்கிறதா என்று
பார்க்கவும்.

For use for Fever, Cold,

Headache etc.

A

CHEAPEST

MEDICINE

FOR

ALL

PEOPLE

Price Per Bottle 82 nP.

(Including All Taxes)

MARYRAM TOOTH POWDER

Price Per Tin 39 nP.

Ask for Free Catalogue for our other preparations
WRITE, CALL OR CONTACT

R. S. PATHY & CO.,

(Estd. 1909)

214 & 215, West Masi Street,

MADURAI.

Phone : 4085. Post Box No. 99. Tel. SIDDHER

Our Sole Canvassing Agents for India (Except Madurai Town)

SUKUMARI AGENCIES,

POST BAG No. 172, MADURAI - 1.

Tel. Address : MARUNTHU.

Towards India's Prosperity

The only Synthetic Gem Factory

in the whole of Asia

*

Manufacturers of:

ROUGH SYNTHETIC GEM STONES

CORUNDUM & SPINEL

IN VARIOUS COLOURS

*

Grams: INDOSWISS

Phone: Office: 136, Factory: 127

The Indo - Swiss Synthetic

Gem Manufacturing Company Ltd.

11/326, Main Road, Mettupalayam,

Coimbatore District.

*

SOLE DISTRIBUTORS:

G. S. & COMPANY, 6, Jaffersha St., Trichy.

G. S. & COMPANY, Rasta Gopalji, Jaipur.

now

FOTON

MADE IN POLAND

BRIGHTER WHITE PHOTOGRAPHIC PAPER

13821

- RICH CONTRAST
- PACKED IN FOIL SEAL PACKING
- FOTOPAN SUPER ROLL FILMS
  with Extraordinary latitude of exposure
  to ensure sure snaps

INSIST ON FOTON For Photographic Requirements

For further Particulars, please contact:

CHOKSI BROTHERS PRIVATE LTD.

Western India House
P. M. Road, Fort, Bombay-1.

66, Ganesh Ch. Avenue,
Calcutta-13.

5/17, Mount Road,
Madras-2.

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்.

A joy to ride - to own a pride

It is smooth riding all the way, when you mount a **STEELSONS,** for every one of these superb cycles is thoroughly tested in our factory - to give you maximum pleasure and comfort.

You ride safest of all on a STEELSONS because it is covered by a "FREE SERVICE GUARANTEE"

Steelsons

India's Quality Bicycle

STEELSONS BICYCLE
ALL STEEL DE-LUXE MODEL
STEELSONS PRODUCT

STEELSONS PRIVATE LTD., Govindpuri, Modinagar (U.P.)

S/16

Yes Madam
it is superb
for a cheerful lift

MOHUN'S

Ginger Tonic

Non - Alcoholic

This delicious and sparkling ginger beverage gives you the appetite to eat heartily and aids digestion. Enriched with Vitamins it revitalises your health and helps you feel fine and fit. Once tasted always wanted.

DMB-NP-304

DYER MEAKIN BREWERIES LTD. Mohan Nagar (U. P.)

Cover Printed at Gnanodaya Press, Madras-1